வெளியீடு 06-03-2000

Issued 06-03-2000

406/2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 6, 1999 - தொகுதி 79 - எண் 1

Thursday, 6th May, 1999—Volume 79 - No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

…ssembly Secretariat, Fort St. George,

Chennai - 600 009

[Price Rs. 3.00

V24, 31'N99. N99.79.1.
221810

## 6–05–1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | ix-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| *1.* **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-42 |
| *2.* **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| சந்தனக் கடத்தல் வீரப்பன் வனக் காப்பாளர்கள் மூவரைக் கடத்தியது | 42-54 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 43 |
| *திரு. நா. பெரியசாமி | 44-45 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 45-46 |
| திரு. ஜி.கே. மணி | 46-47 |
| *திரு. வா. சந்தானம் | 47-48 |
| திரு. டி. மணி | 48-49 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 49-54 |
| *3.* **கவன ஈர்ப்பு--** | |
| ஜவ்வாது மலையில் காவலூர்-மந்தாரக்குட்டை வனப்பாதை பழுதடைந்துள்ளது | 54-57 |

| | பக்கங்கள் |
|---|---|
| 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி. | |
| (அ) கோரிக்கை எண் 12 - 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்துசமய-அறக் கட்டளைகள் சட்ட நிருவாகம்<br>(ஆ) கோரிக்கை எண் 51 - தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 58-160 |
| *மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் | 58,65,69,83, 85-86,90, 106,125-154 |
| *திரு. ப. மோகன் கந்தசாமி | 70-73,74, 75-77 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 74-75,91-92, 93,103-104 |
| *திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார் | 78-82 |
| திரு. சி. வேலாயுதன் | 62,69,82-87 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 62,87-91, 93-95,156 |
| திரு. ஜி. பழனிசாமி | 60,66-67,92-93, 155,158 |
| திரு. இ.ஏ.பி. சிவாஜி | 95-99 |
| திரு. ஜி. நிஜாமுதீன் | 60,67,90, 99-102,103, 104,155,158 |
| திரு. க. மணிவர்மா | 104-108 |
| [illegible] ராசேந்திரன் என்கிற திரன் | 108-113, 155,159 |


221810




| | பக்கங்கள் |
|---|---|
| 4. மானியக் கோரிக்கைகள், 1999 2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி | |
| திரு. கே. சுந்தர் | 114-116 |
| *திரு. ஜே.கே. வேதரத்தினம் | 116-119 |
| *திரு. பி.என். வல்லரசு | 119-122 |
| *திரு. ந. கருப்பண்ண உடையார் | 61,68,122-125, 155,159 |
| 5. அறிவிப்பு-- | |
| உறுப்பினர்களுக்கு திருக்கோயில்கள் பிரசாதம் வழங்க ஏற்பாடு | 70 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 160 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. கல்வி அமைச்சர் : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. வருவாய்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன் :**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு :**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

13. **தொழிலாளர்**



**நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃபு).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :**
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**
கால்நடைப் பராமரிப்பு

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25 கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani :**
Municipal Administration, Community Development Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture. Agricultural Engineering. Agro Service Co-operatives. Horticulture. Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works. Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport. Nationalised Transport. Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language. Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:** Food. Price Control and Civil Supplies. Public Distribution System. Co-operation and Statistics

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development. Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour. Census. Employment and Training. Iron and Steel Control. Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law. Courts. Prisons. Legislation on Weights and Measures. Registration of Companies. Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms. Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes. Most Backward Classes and Denotified Communities. Indians Overseas. Refugees and Evacuees.

17. **Minister for Forest** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest. Cinchona. and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing. Rural Housing Development. Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries. Registration and Stamp Act and Nutritious Meals.

| | |
|---|---|
| 20. **Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity. Film Technology and Cinematography Act. Stationery and Printing and Government Press |
| 21. **Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare. Beggars Home. Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare. Hill Tribes and Bonded Labour |
| 24. **Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. **Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board. Bhoodan and Gramdan. |
| 26. **Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. சி.டி. தண்டபாணி

டாக்டர் காஞ்சனா கமலநாதன்

திரு. பெ. ஆசையன்

டாக்டர் ஆ. ஞானசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. வை. சிவபுண்ணியம்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திரு. வெ. இரா[illegible]ராமன், பி.எஸ்சி., பி.எல். | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி அனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| 4. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | குழு அலுவலர் |
| 7. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| 8. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| 9. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | துணைச் செயலாளர் |
| 10. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 11. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 12. | திரு. க. ராஜகுரு | குழு அலுவலர் |
| 13. | திரு. சௌரி அய்யாத்துரை | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 14. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| 15. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 18. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 19. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் |
| 20. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 23. | திரு சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 24. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸசி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | தலைமை நிருபர் |
| 30. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | தலைமை நிருபர் |
| 31. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | தலைமை நிருபர் |
| 32. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 35. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | தலைமை நிருபர் |
| 36. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர் |
| 37. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ.,பி.எல். | தலைமை நிருபர் |
| 38. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | தலைமை நிருபர் |
| 39. | திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ.பி.எல். | சார்புச் செயலாளர் |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | புவனகிரி |
| 5. | அபதுல் லத்தீப், திரு. ம. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | பவானிசாகர் |
| 18. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | ஆலங்குளம் |
| 20. | ஆவுடையப்பன், திரு. இரா. | அம்பாசமுத்திரம் |

21. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
30. இராமசாமி, திரு கே.ஆர். .. திருவாடானை
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
38. இராஜுரெட்டி, திரு. ச .. தளி
39. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
41. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்



43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
45. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
50. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சி. வெ. .. வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. .. மேட்டூர்
63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

53-77-2a

66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
71. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
72. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
73. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
75. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
76. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
84. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
86. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



88. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
89. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
90. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
91. சுந்தரம், திரு. சு. .. பொன்னேரி (செ.வ.)
92. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
93. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
94. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
95. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
96. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
97. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
100. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
102. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
103. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
104. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
107. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
108. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
109. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

| | | |
|---|---|---|
| 110. | சொக்கர், திரு. ஆர். | .. சிவகாசி |
| 111. | சொக்கலிங்கம், திரு. ஜி. | .. திருப்போரூர் (செ.வ.) |
| 112. | ஞானசேகரன், டாக்டர் ஆ. | .. மேல்மலையனூர் |
| 113. | ஞானசேகரன், திரு. சி. | .. வேலூர் |
| 114. | டேவிட் செல்வின், திரு. எஸ். | .. ஸ்ரீவைகுண்டம் |
| 115. | தங்கமணி, திரு. கே. | .. மானாமதுரை (செ.வ.) |
| 116. | தங்கம் தென்னரசு, திரு. | .. அருப்புக்கோட்டை |
| 117. | தங்கவேலன், திரு. சுப. | .. கடலாடி |
| 118. | தங்கவேல், திரு. அ. ல. | .. சேலம் -2 |
| 119. | தண்டபாணி, திரு சி. டி. | .. கோயம்புத்தூர் மேற்கு |
| 120. | தமிழ்க்குடிமகன், முனைவர் மு. | .. இளையான்குடி |
| 121. | தமிழ்ச்செல்வன், திரு. ஆர். | .. அரக்கோணம் (செ.வ.) |
| 122. | தமிழ்மணி, திரு. வீ. | .. செங்கல்பட்டு |
| 123. | தளபதி, திரு. கோ. | .. சேடப்பட்டி |
| 124. | தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. | .. சேலம்-1 |
| 125. | தனபால், திரு. வி. ஜி. | .. குடியாத்தம் |
| 126. | தாமரைக்கனி, திரு. இரா. | .. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127. | திசைவீரன், திரு. உ. | .. பரமக்குடி (செ.வ.) |
| 128. | திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | .. பேராவூரணி |
| 129. | திருநாவுக்கரசு, திரு. எஸ். | .. அறந்தாங்கி |
| 130. | திருவேங்கடம், திரு. பெ.சு. | .. கலசப்பாக்கம் |
| 131. | துரைசாமி, திரு. பா. | .. வரகூர் (செ.வ.) |
| 132. | துரை, திரு. கே. | .. திருவெறும்பூர் |
| 133. | துரைமுருகன், திரு. | .. காட்பாடி |



| | | |
|---|---|---|
| 134. | தெய்வநாயகம், திரு. எ. | .. மதுரை மத்தி |
| 135. | தேவராஜன், டாக்டர் மு. | .. பெரம்பலூர் (செ.வ.) |
| 136. | நடராசன், திரு. ஆ. | .. பேரூர் |
| 137. | நடராஜன், திரு. த. | .. செஞ்சி |
| 138. | நயினா முகமது, திரு. கோ. | .. கடையநல்லூர் |
| 139. | நன்னன், திரு. கொ. வீ. | .. செங்கம் (செ.வ.) |
| 140. | நாகரத்தினம், திரு. ச. | .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 141. | நாஞ்சில் கி. மனோகரன், திரு. | .. திருவல்லிக்கேணி |
| 142. | நிஜாமுதீன், திரு. ஜி. | .. நாகப்பட்டினம் |
| 143. | நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. | .. நெல்லிக்குப்பம் |
| 144. | நேரு, திரு. கா.நா. | .. லால்குடி |
| 145. | பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. | .. சிவகங்கை |
| 146. | பத்மா, டாக்டர் | .. நன்னிலம் (செ.வ.) |
| 147. | பரணிகுமார், திரு. பா. | .. திருச்சிராப்பள்ளி-1 |
| 148. | பரிதி இளம்வழுதி, திரு. | .. எழும்பூர் (செ.வ.) |
| 149. | பழனிசாமி, திரு. ஜி. | .. திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 150. | பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். | .. மதுரை மேற்கு |
| 151. | பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. | .. குறிஞ்சிப்பாடி |
| 152. | பன்னீர்செல்வம், திரு. மு. | .. சீர்காழி (செ.வ.) |
| 153. | பாண்டுரங்கன், திரு. ந. | பெரணமல்லூர் |
| 154. | பாலகிருஷ்ணன், திரு. சோ. | .. முதுகுளத்தூர் |
| 155. | பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். | .. பவானி |
| 156. | பாலசுப்பிரமணியன், திரு. ப. | .. பட்டுக்கோட்டை |

157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175 மணி, திரு. டி. .. விளவங்கோடு
176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
178. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
180. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. . புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ் .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192 முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன, திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன கந்தசாமி, திரு. ப. பொங்கலூர்
198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 202. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 203. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 204. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 205. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 206. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 207. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 210. லட்சுமணன், திரு வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 211. வல்லரசு, திரு. பி.என் | .. | உசிலம்பட்டி |
| 212 வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 213. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 214. விஜயன், திரு. டி.சி | .. | திருவொற்றியூர் |
| 215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 216. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 217. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 220 வெங்கடேசன், திரு ச.கு. | .. | மதுராந்தகம் |
| 221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 222. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 224. வேதாத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 225. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 226. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 227. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 229. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. ஜூன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |
| 234. வெற்றிடம் | .. | திருவட்டாறு |
| 235. வெற்றிடம் | .. | நத்தம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 23, பிரமாதி—திருவள்ளுவர் ஆண்டு 2030**
**1999 மே 6, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறையென்று வைக்கப் படும்."

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 641, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**641—**

### தனியார் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு

***14318—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் கல்லூரிகளில், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தனியார் கல்லூரிகளில் உதவி பெறும் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் மொத்த இடங்களில் 90% மாணவர் சேர்க்கை அரசின் இட ஒதுக்கீட்டு விதிப்படியும், சுயநிதிக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் 50% மாணவர் சேர்க்கை இட ஒதுக்கீட்டு முறைப்படியும் நடைபெற வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதிக் கல்லூரிகளில் 50 விழுக்காடு மாணவர் சேர்க்கை என்ற இட ஒதுக்கீட்டு முறை கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. இந்த இட ஒதுக்கீட்டு அளவை 75 விழுக்காடு அளவிற்கு உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 50 விழுக்காடு இடங்கள் அரசு முறைப்படி சேர்ப்பதற்காக அல்லது அரசு விதிப்படி சேர்ப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட, இதை எதிர்த்து உயர் நீதிமன்றத்திலே வழக்கு போட்டு, சில விதிமுறைகள் தவறு என்று உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது. அதுபற்றி இப்போது ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த விழுக்காட்டை உயர்த்துகிற ஒரு நிலை இன்றைக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகள் மற்றும் அரசுக் கல்லூரிகளில்கூட, ஒரு மாவட்டம் என்று எடுத்துக்கொண்டால், அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாணவர்களுக்கு முழுமையாகக் கிடைப்பதற்கு வாய்ப்பே இல்லாமல், வெளி மாவட்டங்களிலிருந்து வந்து படிக்கக்கூடிய மாணவர்களுக்குத்தான் வாய்ப்பு அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய கிருத்துவ மருத்துவக் கல்லூரியைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், அங்கே மிசோரம் போன்ற வெளி மாநிலங்களிலிருந்துதான் மாணவர்கள் வருகிறார்களே தவிர, நம்முடைய தமிழகத்தைச் சார்ந்தவர்கள், குறிப்பாக வேலூர் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள், 5, 6 பேர்கள்கூட வருவது கிடையாது. ஆகவே அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மாணவர்களுக்கு அங்கே இடம் கிடைப்பதற்கு ஏதாவது தனியாக ஒரு





சட்டத்தைக் கொண்டு வந்தாவது, அந்தந்தப் பகுதி மாணவர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் C.M.C. மருத்துவக் கல்லூரியை அரசுக் கல்லூரிகளோடு ஒப்பிட்டுக் கருதக் கூடாது. அது ஒருவகையிலே சொல்லப்போனால், ஒரு மாநிலத்திற்கு உட்பட்ட அமைப்புக்கூட அல்ல. அது இந்த மாநிலத்திலே அமைந்துள்ளதால் அது ஆற்றுகிற பணிகளைத்தான் நாம் வரவேற்க வேண்டும். அந்த அமைப்பில் இடம் பெறுகிறவர்கள், ஜிப்மர் கல்லூரியிலே எப்படி இடம் பெறுகிறார்களோ, அதைப்போன்று சில முறைப்படி இடம் பெறுகிறார்கள். அரசுக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் அந்தந்தக் கல்லூரி இருக்கிற பகுதியிலே உள்ள மாணவர்களுக்கு சில வகையில் முன்னுரிமை வழங்குவது ஒரு சாதாரண நடைமுறைக் கொள்கையாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவர்களைச் சேர்க்கிறபோது கல்லூரி முதல்வர், மூத்த பேராசிரியர், ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஆகிய மூன்று பேர் கொண்ட குழு பொறுப்பேற்றுக் கொண்டு செயல்படுகிறது. அதிலே கூடுமான வரையில் அந்த வட்டாரத்து மாணவர்களுக்குத் தகுதி சமமாக இருக்குமானால் முன்னுரிமை வழங்குகிற வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதிக் கல்லூரிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகமாகப் பெருகி வருகின்ற இந்தக் காலகட்டத்தில், இக்கல்லூரிகளின் தரத்தை, இக்கல்லூரிகளின் செயல்முறையினைக் கண்காணிப்பதற்கு உயர்மட்டக் குழு அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அதே நேரத்தில் சரியாக, முறையாகச் செயல்படாத சுயநிதிக் கல்லூரிகளின் அங்கீகாரத்தை, இந்தக் குழுவைப் பயன்படுத்தி இரத்து செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவியல், கலை தொடர்பான பொதுவான படிப்புகளைக்கொண்ட சுயநிதிக் கல்லூரிகள், கல்லூரிக் கல்வி

[1999 மே 6

இயக்குநருடைய மேற்பார்வையில் இயங்குகின்றன. அந்தக் கல்லூரிகள் இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநர் மூலமாக அவ்வப்போது ஆய்வு செய்யப்படுகின்றன. ஏதேனும் திட்டவட்டமான குறைகள், குற்றச்சாட்டுகள் வருமானால், விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கலாம். சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளை அவ்வப்போது தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் மேற்பார்வை செய்யக் கடமைப்பட்டிருக்கிறார். அவர் அதற்காக அவ்வப்போது குழுக்களை அமைத்து, அந்தக் குழுக்கள் மூலமாகவும் ஆய்வு செய்கின்றார். அதுபற்றியும் ஏதேனும் திட்டவட்டமான குறைகள், குற்றச்சாட்டுகள் வருமானால் விசாரித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களுக்கு 15 விழுக்காடு தர வேண்டுமென்று அரசு வரையறுத்து இருக்கிறது. இந்த விதியைத் தனியார் கல்லூரிகள் கடைபிடிக்கின்றனவா? கடைபிடிக்கின்ற முறைகளை அரசு அறிவிக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்வி, மருத்துவக் கல்வி, அதுபோல உயர்தர தொழில் கல்விகளுக்கு மாநில அளவில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒற்றைச் சாளர முறை மூலமாக அனைத்துக் கல்லூரிகளுக்கும் அந்தந்த மாணவர்களுடைய விருப்ப அடிப்படையிலே, அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்குகிற காரணத்தால், அவைகளிலே கிராமப்புற மாணவர்களுக்கு 15 விழுக்காடு என்று பிரித்து வழங்குவதன் மூலமாகத்தான் பிற்பட்ட பின்தங்கிய பகுதிகளைச் சார்ந்த, இன்னும் சொல்லப்போனால், பின்தங்கிய பகுதிகளில் உள்ள பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. மற்ற கல்லூரிகளைப் பொறுத்தவரையில், திருத்தணி கல்லூரி அல்லது குடியாத்தம் கல்லூரி அல்லது திருப்பத்தூர் கல்லூரி என்று இருக்குமானால், அந்தக் கல்லூரிகளே கிராமங்கள் சூழ்ந்திருக்கிற வட்டாரத்திலே இருக்கிற காரணத்தால், கிராமப்புற மாணவர்கள் உரிய அளவுக்கு இடம் பெறுவார்கள். ஆகவே அங்கே வகுப்புவாரி முறைப்படி இட ஒதுக்கீடு பின்பற்றப்படுகிறது.



1999 மே 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியே கொஞ்சம் குழப்பமாக இருப்பதுபோல எனக்குத் தோன்றுகிறது. தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என்று சொல்லும்போது இரண்டு வகையாக வருகின்றன. இட ஒதுக்கீட்டை அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதை எப்படி அந்தக் கல்லூரிகளில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதைச் சொல்ல அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகள் என்பதில் உதவி பெறுகிற கல்லூரிகளும், (Aided Colleges) இருக்கின்றன. சுயநிதிக் கல்லூரிகளும் (Self-financing Colleges) இருக்கின்றன. எனவே இதற்கு விளக்கம், உதவி பெறுகிற Aided Colleges பொறுத்தவரையில் 90 சதவிகித இடங்களை நம்முடைய விதிமுறைப்படி, இட ஒதுக்கீட்டு முறைப்படி சேர்க்க வேண்டும். சுய நிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் மாணவர்களிடத்திலே கட்டணம் பெற்றுச் சேர்க்கிற காரணத்தால் — Self-financing institutions without aid from the Government — அவர்களுக்கு ஓரளவுக்கு உரிமை வழங்கி 50 சதவிகித இடங்களை அரசு இட ஒதுக்கீட்டுக் கொள்கைப்படி சேர்க்க வேண்டும் என்ற முறை வைக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 642, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**642—**

## மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடம்

***15336—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி வட்டம், ஆலத்தம்பாடி மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருத்துறைப்பூண்டி தாலுகா, ஆலத்தம்பாடி மேல்நிலைப் பள்ளிக்கு 2 வகுப்பறைகளுக்கான கட்டடங்கள் கட்டிக் கொடுக்க ரூ. 4.4 இலட்சம் நிதி ஒதுக்கீடு, அரசாணை நிலை எண் 278, பள்ளிக் கல்வி, நாள் 24--7--1998-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முன்பே போடப்பட்ட கேள்வி. அந்தப் புதிய கட்டடங்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, அந்தப் பணிகள் முடிவடைந்து அது சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 643, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**643—**

### மருத்துவமனைக்குக் கூடுதல் வசதிகள்

***14867—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, செந்துறை அரசு மருத்துவமனைக்கு படுக்கை மற்றும் அவசர ஊர்தி ஏற்படுத்தித் தரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் தொகுதி, செந்துறை அரசு மருத்துவமனை, பெரிய மருத்துவமனையாக மாற்றப்பட்டு ஓராண்டுக்கு மேல் ஆகிறது. இருந்தும்கூட அங்கு அடிப்படை வசதிகள் ஏதுமில்லை.





குறிப்பாக படுக்கை வசதிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் போன்ற இடங்கள்கூட நிரம்பக் காலியாக இருக்கின்றன. ஏதேனும் ஒரு பிரச்சினை வருகிறபோது, அவசர ஊர்தி இல்லாத காரணத்தால் நிலைமை மோசமாகிறது. எனவே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மேம்படுத்தப்பட்ட அந்த மருத்துவமனைக்கு மேற்சொன்ன வசதிகளைச் செய்து தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் தொகுதியில் உள்ள செந்துறையில் ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்ததை மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கு இணங்கத்தான் இந்த அரசு அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தியது. அதற்குப்பிறகு முதற்கட்டமாக 6 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக அது செயல்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இப்போது அதை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகச் செய்வதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. எங்கே 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை இருக்கிறதோ அங்கே மட்டும்தான் இப்போது அவசர ஊர்தி வசதி செய்து தரப்படுகின்றது. எனவே 30 படுக்கைகள் வந்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயம் இந்த அரசாங்கத்தால் நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 644, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**644—**

### ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

***16629— திரு. மீ.அ. வைதியலிங்கம்.**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்டம், பீர்க்கன்கரணை ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[1999 மே 6

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புனித தாமஸ் ஊராட்சி ஒன்றியத்தில் பீர்க்கன்கரணை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. இவ்வொன்றியத்தில் பிரதான மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்படுவதால் பீர்க்கன்கரணை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீர்க்கன்கரணை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும், மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் கிட்டத்தட்ட 13 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தின்மூலம் கிட்டத்தட்ட 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே அருள்கூர்ந்து இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றுள்ள நிதிநிலையைக் கருத்திற்கொண்டு இப்போதைக்கு அதைத் தரம் உயர்த்துவதற்கான வாய்ப்பு இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி தொகுதி, திருமக்கோட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் சிறப்பாகச் செயல்படுகிறது. குறிப்பாக அதற்கு 14 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டடம் கட்டப்பட்டு, 7 இலட்சம் ரூபாய் அரசின நிதியும், 7 இலட்சம் ரூபாய் தனியார் — பொன்னுசாமி, கந்தரேசன் என்ற இரண்டு சகோதரர்கள் — மூலமாக வழங்கப்பட்டு, கட்டடம் கட்டப்பட்டு சிறப்பாகச் செயல்படுகிறது. அதை 24 மணி நேர மருத்துவமனையாக ஆக்க வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையாக இருக்கிறது. ஆகவே இதை சிறப்புத் திட்டத்தின் மூலமாக 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1999 மே 6]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு 1996-97-ல் 125 ஆரம்ப சுகாதார நிலையங்களும், அதற்குப்பிறகு 1997-98-ல் 125 ஆரம்ப சுகாதார நிலையங்களும் தரம் உயர்த்தப்பட்டு 24 மணி நேர மருத்துவமனைகளாகச் செயல்பட்டு வருகின்றன. இன்னும் 130 ஆரம்ப சுகாதார நிலையங்களை 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது. ஆனால் நிதிநிலை காரணமாக இந்த ஆண்டு அதைச் செய்ய இயலவில்லை. முடிந்தால் அடுத்த ஆண்டு மீதியிருக்கின்ற 130 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அப்போது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் பாலரங்கபுரத்தில் அமைந்துள்ள மருத்துவமனையில் ஒரு சில பிரிவுகளே இருந்து வருகின்றன. இன்னும் சில பிரிவுகள் வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அது நிச்சயமாக ஏற்படுத்தப்படும் என்ற உறுதியை அளித்தார்கள். ஆனால் இதுவரையிலும் ஏற்படுத்தப்படவில்லை. குழந்தைகள் நலம், எலும்பு முறிவு, E.N.T., பிரசவம் போன்ற பிரிவுகள் அங்கே இல்லாத காரணத்தால், அவற்றை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு மதுரையிலே இருக்கின்ற அந்த மருத்துவமனை பற்றி எந்த அளவுக்கு அக்கறை இருக்கிறதோ அதைப்போல மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அதிக அக்கறையோடு அதிலே கவனம் செலுத்தி, மாதத்திற்கு 2, 3 தடவையாவது எங்களை நேரிலே அழைத்துப் பேசி, அந்த மருத்துவமனைக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டுமென்பதில் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய பெருமுயற்சியால் இப்போது அங்கே C.T. Scan வழங்கப்பட்டிருக்கிறது. கோபால்ட் தெரபி வேண்டுமென்று கேட்கப்பட்டு, அதை மத்திய அரசாங்கத்திலே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக

இருக்கின்ற திரு. தலித் எழில்மலை அவர்களிடம் தெரிவித்து, அவர்களும் விரைவிலே அதற்கான ஏற்பாட்டைச் செய்து தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல M.R.I. கருவி இரண்டு வாங்கி, ஒன்றைச் சென்னைக்கும், ஒன்றை மதுரைக்கும் வழங்குவது என்று இந்த அரசாங்கம் முடிவெடுத்து, நிதிநிலை காரணமாக அதை உடனடியாக அமல்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதித் துறைச் செயலாளர் அவர்களும் தனியார் மூலமாக நிதி ஏற்பாடு செய்து, அவர்கள் மூலமாக வாங்க முடியுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதையும் மருத்துவ சேவைக் கழகம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பிரச்சினை முடிந்தவுடன் நிச்சயமாக இந்தக் கருவிகளெல்லாம் வாங்கித் தரப்படும்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 645, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**645—**

### தீயணைப்பு நிலையத்திற்கு நிலம்

***15075—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறையில் தீயணைப்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்ட நிலம் கேட்டு அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றது.



(ஆ) கோரப்பட்டுள்ள புறம்போக்கு நிலம், மயானப் புறம்போக்கு என்னும் வகையில் வகைபாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வகைபாடு தடை செய்யப்பட்ட இனம் என்பதால், உரிய நடைமுறைகளை அனுசரித்து, முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என மாவட்ட வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறையில் தீயணைப்பு நிலையம் அமைத்துக் கொடுத்ததற்கு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த இடத்திலே தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக நிலம் கேட்டு விண்ணப்பித்திருந்தேன். அந்த விண்ணப்பத்தின் அடிப்படையிலே முழுமையான தகவலைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், அவர்களுடைய உதவியாளர் சின்னி கிருஷ்ணன் அவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு இந்தநேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மயானப் புறம்போக்காக இருந்தாலும், அங்கு தேவையான அளவிற்கும் அதிகமாக இடம் இருக்கிறது. எனவே தீயணைப்பு நிலையத்திற்கு இடம் கொடுப்பதற்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து, விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வருவாய் அலுவலரின் அறிக்கையைப் பெற்று, நில நிர்வாக ஆணையரின் கருத்தினையும் பெற்று, நில வகை மாற்றம் குறித்து அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 646, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**646—**

### நகரப் பேருந்துகள் இயக்குதல்

***8705—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மே 6

(அ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகரத்திற்குள் இதுவரை நகரப் பேருந்துகள் இயக்கப்படாததால், நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் செல்லுமாறு நகரப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை நகர எல்லையிலிருந்து இயக்கப்பட்ட அனைத்து நகரப் பேருந்துகளையும் திருவண்ணாமலை மத்தியப் பேருந்து நிலையம் வரை நீட்டித்து, திருவண்ணாமலை நகரின் அனைத்துப் பகுதி மக்களும் பயன்பெறும் வண்ணம் இயக்கப்பட்டு வருகின்றன.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திருவண்ணாமலை பெரிய நகரமாக, மாவட்டத்தின் தலைநகராக இருக்கின்றது. மேலும் திருவண்ணாமலைக்கு ஆன்மீக பக்தர்கள் ஏராளமாக வந்துகொண்டு இருக்கிறார்கள். பள்ளிகளுக்குச் செல்கின்ற மாணவர்கள் மற்றும் வெளியூர் பயணிகளெல்லாம் திருவண்ணாமலை நகரத்தின் ஒரு பகுதியிலேயிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்வதற்குப் பெரிய சங்கடமான நிலையிலே இருக்கிறார்கள். குறிப்பாக ஆட்டோக்களை அணுகினால், அவர்கள் 20 ரூபாய், 30 ரூபாய் என்ற அளவிற்குக் கேட்டு, பயணிகளையும், மாணவர்களையும், மற்றவர்களையும் துன்புறுத்துகிறார்கள். ஆகவே நகரத்திற்குள்ளாகவே, ஒரு பகுதியிலேயிருந்து இன்னொரு பகுதிக்கு, வேங்கைக்காலிலிருந்து கலைக் கல்லூரி வரையிலும் அல்லது கலைக் கல்லூரி மற்றும் தியாகி அண்ணாமலை நகர் போன்ற பகுதிகளுக்கு நகரப் பேருந்து இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகரத்தைப் பொறுத்தவரையிலே அங்கே நான்கு, ஐந்து பேருந்து நிலையங்கள் இருக்கின்றன. திருவண்ணாமலையிலிருந்து திருக்கோவிலூருக்குச் செல்வதற்கு எல்லைப் புறத்திலே ஒரு பேருந்து நிலையம்; அதேபோல திருவண்ணாமலையிலிருந்து திண்டிவனம் செல்வதற்கு ஒரு பேருந்து



1999 மே 6]

நிலையம் இருக்கிறது. அங்கே உள்ள பேருந்து நிலையங்களிலிருந்துதான் நகரப் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருந்தன. அவையெல்லாம் மத்தியப் பேருந்து நிலையம் வரை வர வேண்டும் என்று பணித்ததன் மூலமாக திருவண்ணாமலையிலே இருக்கிற பயணிகளுக்கு அது ஓரளவிற்கு உபயோகமாக இருந்தது. அதேநேரத்திலே கடந்த காலத்திலே நகரத்தைச் சுற்றி ஒரு பேருந்து விடப்பட்டது. அதனுடைய வசூல் ரூ. 200-க்குக் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் நிறுத்தப்பட்டது. மேலும் அந்தப் பேருந்தை மீண்டும் விடவேண்டும் என்ற மாண்புமிகு அமைச்சர் பிச்சாண்டி அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மீண்டும் அந்தப் பேருந்து விடப்பட்டது. இப்போது ஒரு பேருந்து நகரத்தினுடைய எல்லையைச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கிறது. நீங்கள் குறிப்பிட்ட கல்லூரிகள் போன்றவற்றையெல்லாம் இணைக்கிற வகையிலே அந்தப் பேருந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 647, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**647—**

### புறநகர் மின்தொடர் வண்டிகளில் கூடுதல் பெட்டி

***15854—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் புறநகர் மின்தொடர் வண்டிகளில் கூடுதலாக மேலும் ஒரு பெட்டியை இணைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

சென்னைப் புறநகர் மின்தொடர் வண்டிகளைப் பொறுத்த அளவில் கூடுதலாக ஒரு பெட்டியை இணைக்க, குறுகிய இரயில் பாதையில் செல்லும் இரயில் வண்டிகளில் வாய்ப்புகள் இல்லை எனவும், அகல இரயில் பாதையில் செல்லும் இரயில் வண்டிகளில் வாய்ப்புகள் உள்ளன எனவும் தென்னக இரயில்வே தெரிவித்துள்ளது.

[1999 மே 6

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகல இரயில் பாதைகளில் செல்கின்ற மின்தொடர் வண்டிகளில் பெட்டிகள் இணைப்பதற்கு வாய்ப்பு உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். கும்மிடிப்பூண்டி முதல் சென்னை வரை, அரக்கோணம் முதல் சென்னை வரை அகல இரயில் பாதை இருக்கிறது. ஆனால் தாம்பரத்திலிருந்து சென்னை கடற்கரைக்கு வரக்கூடிய இரயில்கள் குறுகிய இரயில் பாதையிலே ஓடிக்கொண்டிருக்கின்றன. அதிலே வாய்ப்பு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அகல இரயில் பாதைகளிலே மேலும் கூடுதல் பெட்டிகளை இணைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தென்னக இரயில்வேயை வற்புறுத்துவார்களா என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் சென்ற ஆண்டு சென்னை கடற்கரை முதல் தாம்பரம் வரை அகல இரயில் பாதையில் ஓடிக்கொண்டிருந்த மின்தொடர் வண்டி தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் இயக்குவதற்கு தென்னக இரயில்வேயை வற்புறுத்துவார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*(முற்பகல் 9-50*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னக இரயில்வே கொடுத்திருக்கிற குறிப்பின் அடிப்படையில் சென்னை கடற்கரையிலிருந்து தாம்பரம் செங்கற்பட்டு வரை குறுகிய இரயில் பாதையில் 335 தடவைகள் இரயில்கள் இயக்கப்படுகின்றன. மேலும் அகல இரயில் பாதையிலே சென்னை கடற்கரையிலிருந்து தாம்பரம் வரை இயக்கப்பட்ட 14 வண்டிகள் 3-5-1998 முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. சென்னை கடற்கரையிலிருந்து திருமயிலை வரை 71 தடவைகள் இரயில்கள் விடப்படுகின்றன. சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து சூளூர்பேட்டை வரை 12 இரயில்களும், சென்னை கடற்கரை முதல் திருத்தணி வரை 1 இரயிலும், சென்னை சென்ட்ரலிலிருந்து திருத்தணிக்கு 14 இரயில்களும் இயக்கப்படுவதாக இந்தக் குறிப்புகளில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அகல இரயில் பாதையில் செல்லும் இரயில்களில் கூடுதல் பெட்டிகள் இணைக்க வாய்ப்புகள் உள்ளன என்றும், மேலும் கூடுதல் பெட்டிகள் மற்றும் பாதைகள் அதிகரிக்கும்போது அதற்கேற்றவாறு இரயில் போக்குவரத்து அதிகரிக்கும் என்றும் தென்னக இரயில்வே தெரிவித்திருக்கிறது. ஆகவே பயணிகளின் அடர்வைப் பொறுத்து அவர்கள் கூடுதல் பெட்டிகளை விடுவார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி அடர்வு அதிகமாக இருக்குமானால் நாம் தென்னக இரயில்வேயை வற்புறுத்த இயலும்.



1999 மே 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது அகல இரயில் பாதையில் செல்வதற்கு பெட்டிகள் இணைக்கப்படும் என்று சொன்னார்கள். குறுகிய இரயில் பாதையில் தற்போது பெண்களுக்கு என்று தனியாக ஒரு வண்டியை இயக்குகிறோம். அந்த வண்டியை இயக்குகிற நேரத்தில் 30 நிமிடங்களுக்கு பொதுவாக அனைவரும் செல்வதற்கான வேறு வண்டிகள் எதுவும் வருவது கிடையாது. இதற்கு முன் மே மாதம் வரை இரண்டு broad gauge வண்டிகள் காலையிலே சென்று கொண்டிருந்தன அதையாவது இந்த நெரிசல் நேரத்தில் விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தென்னக இரயில்வேயை வற்புறுத்துவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையை எழுதிக் கொடுத்தால் நிச்சயமாக அதை அரசு பரிசீலித்து தென்னக இரயில்வேக்கு அனுப்பி வைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 648, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**648—**

**சாலையை அகலப்படுத்துதல்**

***16847—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் முதல் தெ. கள்ளிகுளம், சமூகரெங்கபுரம், மன்னார்புரம் விலக்கு, சாத்தான்குளம் வழியாக திருச்செந்தூர் செல்லும் சாலையை அகலப்படுத்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளியூரிலிருந்து தெற்கு கள்ளிகுளம், சமூகரெங்கபுரம், இட்டமொழி, சாத்தான்குளம், விஞ்ஞானபுரம் வழியாக திருச்செந்தூர் செல்லும் சாலை மிக முக்கியமான சாலை. கிட்டத்தட்ட 60 கிலோ மீட்டர் தூரமுள்ளது. இது திருச்செந்தூர்-கன்னியாகுமரி கடற்கரைச் சாலையை இணைக்கிறது. மேலும் திசையன்விளையைச் சுற்றி கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் இருப்பவர்கள் இந்தச் சாலையின் வழியாகத்தான் செல்கிறார்கள். கடற்கரையில் பிடிக்கின்ற — கூட்டப்புளி, கூத்தம்புளி, இடிந்தகரை, பெருமணல், பெரியதாழை போன்ற பகுதிகளிலுள்ள — மீன்கள் எல்லாம் அந்த வழியாகத்தான் செல்கின்றன. கடந்த 15-4-1999 முதல் 21-4-1999 வரை passenger-car-unit, அதாவது போக்குவரத்து எவ்வளவு இருக்கிறது என்பதைக் கண்டறிந்தபோது traffic intensity எடுத்துப் பார்த்தபோது, 6,525-க்கு மேல் P.C.U. அங்கே இருக்கிறது. ஆகவே அந்தச் சாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக மறுபரிசீலனை செய்து திருச்செந்தூர்-வள்ளியூர் சாலையை-widening and strengthening-அகலப்படுத்தி, உறுதிப்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளியூர் முதல் தெ. கள்ளிகுளம், சமூகரெங்கபுரம், மன்னார்புரம் விலக்கு, சாத்தான்குளம் வழியாக திருச்செந்தூர் செல்கிற சாலையைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இது மொத்தம் 65.60 கிலோ மீட்டர் நீளமிருக்கிறது. இது பெரும்பாலும் பெரிய மாவட்டச் சாலையாக M.D.R. அமைந்திருக்கிறது. இந்தச் சாலைகளை பகுதி-2 திட்டத்தின் கீழேதான் எடுத்துச் செய்ய முடியும். பகுதி-2 திட்டத்தில் ஆண்டுதோறும் குறைந்த அளவுதான் நிதி ஆதாரம் கிடைக்கிறது. இந்தச் சாலையை மாண்புமிகு உறுப்பினர் கேட்பதைப் போல அகலப்படுத்தி, உறுதிப்படுத்துவதற்கு கிட்டத்தட்ட 10 கோடியே 68 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே நிதி ஆதாரத்தைக்





கருத்தில் கொண்டு வருங்காலத்தில் இதுகுறித்துப் பரிசீலிக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு துணைக் கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்தான் பதில் சொல்லிவிட்டாரே, பிறகு என்ன துணைக் கேள்வி இருக்கிறது? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்திலே இரப்பர் சாலைகளை அமைக்கவிருக்கிறார்கள். அதில் முதற்கட்டமாக 1,200 கிலோ மீட்டர் தூரத்திற்கு எடுப்பதாக நான் அறிகிறேன். முதற்கட்டமாக கன்னியாகுமரி மாவட்டத்திலே அந்தப் பணி தொடங்க இருப்பதாகவும் அறிகிறேன். ஆகவே அதை ஒட்டியிருக்கிற இராதாபுரம் தொகுதியில் உள்ள வள்ளியூரிலிருந்து மன்னார்புரம் வழியாக திசையன்விளை, உடன்குடி வரை செல்லும் சாலையையாவது இரப்பர் சாலையாக அமைத்துத் தருவதற்கு முன்னுரிமை அளிப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரப்பர் சாலை அமைப்பதாக இருந்தாலும், தார்ச் சாலை அமைப்பதாக இருந்தாலும், concrete சாலை அமைப்பதாக இருந்தாலும், எல்லாம் நிதியாதாரத்தைப் பொறுத்துதான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இரப்பர் சாலை அமைப்பதற்கு உடனடியாக நம்மிடத்தில் திட்டம் ஏதும் இல்லை. இதுகுறித்து ஆவன செய்வதற்கு நெடுஞ்சாலை ஆய்வு மையத்தில் இப்போதுதான் பணி தொடங்குவதாக இருக்கிறது. இரப்பர் சாலை போடலாமா, போடக்கூடாதா என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 649, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**649—**

## மாநில நெடுஞ்சாலையாக மாற்றுதல்

***19785—திரு. தங்கம் தென்னரசு:**

*மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அருப்புக்கோட்டையிலிருந்து பார்த்திபனூர்வரை செல்லும் சாலையை மாநில நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு சற்று திருத்திய விடையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அருப்புக்கோட்டையிலிருந்து கமுதி வழியாக பார்த்திபனூர்வரை செல்லும் சாலையை மாநில நெடுஞ்சாலையாக மாற்றி அரசு ஆணை எண் 165, நெடுஞ்சாலைத் துறை (எச்.என்.1) நாள் 2-7-1998-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டையிலிருந்து கமுதி வழியாக பார்த்திபனூர் செல்லக்கூடிய சாலை மற்றும் அருப்புக்கோட்டையிலிருந்து திருச்சுழி, நரிக்குடி வழியாக பார்த்திபனூர் செல்லக்கூடிய சாலை ஆகியவைகளை மாநில நெடுஞ்சாலைகளாகத் தரம் உயர்த்தியிருப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சாலைகளைத் தரம் உயர்த்துவதற்கு எவ்வளவு ரூபாய் நிதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது? எப்போது இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படும்? இவ்வாண்டே ஒதுக்கீடு செய்யப்படுமா? இந்தப் பணிகள் எல்லாம் எப்போது தொடங்கப்படும் என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு வரையில் 5,202 கிலோ மீட்டர் மாநிலச் சாலைகளாக இருந்தது கடந்த ஆண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று மேலும் 3,469.40 கிலோ மீட்டர், மாநில நெடுஞ்சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இந்த மாநில நெடுஞ்சாலைகளை





அகலப்படுத்த உறுதிப்படுத்த அல்லது நேர்செய்ய, கோடிக்கணக்கான ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே நிதிநிலையைப் பொறுத்து ஒவ்வோராண்டும் சில மாவட்டங்களில் சில கிலோ மீட்டர் தூரம் மட்டும் தெரிவு செய்து, முக்கியமான சாலைகளை அகலப்படுத்துகிற, உறுதிப்படுத்துகிற முயற்சிகளிலே அரசு ஈடுபட்டிருக்கிறது. உடனடியாக இந்தச் சாலைகள் முழுவதையும் மேம்படுத்துவதற்கு இப்போது திட்டம் இல்லை. இருந்தாலும் பகுதி பகுதியாக ஒவ்வோராண்டும் சாலைகளை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள், பார்த்திபனூர், கமுதி, அருப்புக்கோட்டை சாலையை மாநிலச் சாலையாக மாற்றி இப்போது அரசு அனுமதித்திருக்கிறது என்று சொன்னார்கள். பார்த்திபனூரிலிருந்து சாயல்குடிக்கு கமுதி வழியாகச் செல்கிற சாலை, மாநிலச் சாலையாக ஆக்கப்பட்டதாக ஏற்கெனவே எனக்குத் தகவல் சொல்லப்பட்டது. இப்போது பார்த்திபனூரிலிருந்து அருப்புக்கோட்டைக்கு கமுதி வழியாகச் செல்கிற சாலை மாநிலச் சாலையாக வருவதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. அதேநேரத்தில் பார்த்திபனூரிலிருந்து சாயல்குடி சாலை, இந்தத் திட்டத்தில் இருக்கிறதா, இல்லையா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்த்திபனூரிலிருந்து கமுதி வரையில் மாநில நெடுஞ்சாலை; கமுதியிலிருந்து அருப்புக்கோட்டை வரையில் மாநில நெடுஞ்சாலை; மறுபடியும் அருப்புக்கோட்டை, பெருநாழி, சாயல்குடி வழியாக வருகிற அந்தச் சாலையும், வாலிநோக்கம் வரையில் — பரமக்குடி, வாலிநோக்கம் வரையில் — அந்தச் சாலையும் மாநில நெடுஞ்சாலையாக ஆக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்பது, கமுதியிலிருந்து சாயல்குடி வரையில் இருக்கிற பகுதியைக் கேட்கிறார்கள். அது இப்போது இணைக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியத்தில், புக்கம்பட்டியிலிருந்து கொங்குப்பட்டி சுமைதாங்கிவரை உள்ளது கிராம நெடுஞ்சாலை. அதில் தடம் எண் 5 என்ற நகரப் பேருந்து ஓடிக்கொண்டிருந்தது. அந்தச் சாலை தார்ச்சாலையாக இல்லாததால் அந்தப் பேருந்து நிறுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதியாண்டில், அந்தச் சாலையைப் புதுப்பிக்க, அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி மாநிலச் சாலைகளைப் பொறுத்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிராமச் சாலைகளைப் பற்றிக் கேட்கிறார்கள். அவர், இந்தச் சாலை வேண்டுமென்று கேட்கிறபோது, அதனை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாநில நெடுஞ்சாலைகள் வெறும் இரண்டு பர்லாங் தூரம் மட்டும்தான் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவோடும், நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய பெருமுயற்சியாலும் இப்போது பல சாலைகள் மாநில நெடுஞ்சாலைகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே மாநில நெடுஞ்சாலை இல்லாமல், புதிதாக இப்போது எடுத்துக்கொள்ளப்படுகின்ற காரணத்தினால் widening and strengthening என்ற தலைப்பில் தரம் உயர்த்தப்படுகிறபோது முகவை மாவட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்திற்கு என்று முன்னுரிமை தர இயலாது. இருக்கின்ற நிதி ஆதாரத்தைப் பயன்படுத்தி பரவலாக தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களிலும் இருக்கக்கூடிய மாநில நெடுஞ்சாலைகளைத் தரம் உயர்த்துவதற்காகத்தான் இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நேற்றையதினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கான ஆய்வுகளை





மேற்கொள்வதற்கு ஓர் ஆணையத்தினை நியமித்திருக்கிறார்கள். அந்த ஆணையம் இதுகுறித்தும் பரிசீலனை செய்யும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். அப்படி அந்த ஆணையம் பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரை செய்யுமானால், அப்போது முன்னுரிமை கிடைக்குமா என்று பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 650, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத். மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**650—**

**கூட்டுறவுத் துறைக்கு தனி ஆணையம்**

***6698—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுத் துறைக்கென்று தனியாக ஆணையம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 651, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**651—**

**மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் இட ஒதுக்கீடு**

***7796—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் உள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணி நியமனம் செய்யும்பொழுது இட ஒதுக்கீட்டு முறை கடைபிடிக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல பதிலைச் சொல்லியமைக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே இதேபோன்ற ஒரு கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற வாரத்திலே பதில் சொன்னார்கள். மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே பணி நியமனம் செய்யப்படும்போது இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற வேண்டுமென்று அரசு ஆணை வெளியிடப்பட்டு உள்ளதா அல்லது இனிமேல் வெளியிடப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கேள்விக்கு கடந்த வாரம் அவையிலே பதில் சொல்லியிருந்தாலும், மீண்டும் இந்தக் கேள்வி இங்கு வந்திருக்கிறது. கூட்டுறவுத் துறையின்கீழ் உள்ள தொடக்க வேளாண்மை அளவிலான வங்கிகளாக இருந்தாலும், நிலவள வங்கிகளாக இருந்தாலும் அல்லது மொத்த விற்பனைப் பண்டகசாலைகளாக இருந்தாலும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளாக இருந்தாலும், தலைமை வங்கிகளாக இருந்தாலும், அனைத்திலுமே முழுமையாக இட ஒதுக்கீட்டு முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அரசு வலியுறுத்தியிருக்கிறது. அதை முழுமையாகக் கடைபிடித்து வருகிறோம். இதுகுறித்து கடந்த வாரம் சொல்லியிருந்தோம். இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையிலே புதிதாக ஆட்களை நியமிக்கின்றபோது வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்தவர்களில் மூப்பின் அடிப்படையிலே அவர்களை நியமிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான அரசு ஆணையை இன்னும் ஓரிரு நாட்களில் வெளியிட இருக்கிறோம். இதறிடையிலே முழுமையாக, கூட்டுறவுத் துறையிலே ஆட்களைப் பணியில் அமர்த்துவதற்கு சிறு சிறு தடையாணைகளை, அந்தந்தப் பகுதிக்கு என்று நீதி மன்றத்திலே வாங்கியிருக்கிறார்கள். அதையும் நீக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவிலே தடையாணைகள்





நீங்கும். புதிதாக வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து ஆட்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். பெரியசாமி.

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் மாநிலத்தில், மத்தியக் கூட்டுறவு வங்கியின் சார்பாக தலைவராக இருந்தாலும் பல மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் ஆட்கள் எடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதுகுறித்து கூடிய விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 652, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**652—**

**விசைத்தறியால் கைத்தறித் தொழில் பாதிப்பு**

***15939—திரு. அ.வ. அப்துல் நாசர்:***

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கைத்தறியில் நெய்யப்படும் பட்டு, விசைத்தறியில் நெய்யப்படுவதால், அத்தொழில் பாதிக்கப்படுவதாக அரசிற்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கைத்தறியில் நெய்யப்படும் பட்டு ரகங்கள் விசைத்தறியில் நெய்யப்படுவதால் கைத்தறித் தொழில் பாதிக்கப்படுவதாக பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து இதுவரை புகார் எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1999 மே 6

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியே கடந்த ஆண்டு தினமணியில் வந்த ஒரு கட்டுரையின் அடிப்படையில் எழுப்பப்பட்டது. ஒரு கைத்தறி பட்டுச்சேலை நெய்வதற்கு சுமார் 7 முதல் 10 நாட்கள் வரை ஆகின்றன. ஆனால் விசைத்தறியில் ஒரு நாளைக்கு 10 சேலைகளுக்கு மேலே நெய்யப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் கைத்தறியில் நெய்யப்படும் பட்டுச்சேலைகள், விசைத்தறியில் நெய்யப்படும் பட்டுச்சேலைகளோடு போட்டிபோட முடியவில்லை. அதன் காரணமாக, பட்டு கைத்தறி நெசவு நசிந்து வருவதாக அவர்கள் கூறுகின்றார்கள். எனவே கைத்தறிப் பட்டு நெசவை உற்சாகப்படுத்துகின்ற வகையிலே அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? மேலும் கைத்தறியில் நெய்யப்படுகின்ற கைலி போன்ற ரகங்கள் எல்லாம் விசைத்தறியிலும் நெய்யப்படுகின்றன. இவற்றாலும் கைத்தறி நெசவு நசிந்து வருகின்றது. எனவே இவற்றையெல்லாம் போக்குவதற்கு அரசு என்னவிதமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது? அவர்களுடைய வாழ்வில் வளம் சேர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் பட்டு நெசவு என்பது கைத்தறியைப் பொறுத்துதான் உள்ளது. விசைத்தறிக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. அதேநேரத்திலே பஞ்சு, பருத்தி, நூல் என்ற அடிப்படையிலே நமக்கு இருக்கின்ற ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கிட்டுப் பார்க்கின்றபோது தமிழகத்திலே சேலம், ஈரோடு, திருச்செங்கோடு, மதுரை, திருப்பூர் ஆகிய 5 இடங்களில் அமலாக்கப் பிரிவு செயல்பட்டு, தற்போது மத்திய, மாநில அரசுகளுடைய குறியீடான ஓர் ஆண்டுக்கு 6,000 தறிகளைப் பார்வையிடுவது என்கிற குறியீட்டுக்குமேல் ஏறத்தாழ 24,000 தறிகளைப் பார்வையிட்டு, இந்த ஆண்டு 15 வழக்குகள் விசைத் தறியாளர்கள் மேல் போடப்பட்டுள்ளன. அதேநேரத்திலே தமிழகத்திலே பட்டு உற்பத்தியில் எக்காரணம் கொண்டும் விசைத்தறி சம்பந்தப்படுவது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டைப் பொறுத்தவரையிலே அதிலுள்ள தனிச் சிறப்பு



1999 மே 6]

என்னவென்றால், ஒரு பட்டுப் புடவை போல இன்னொரு பட்டுப் புடவை இருக்காது என்பதுதான். என்று ஒரு பேட்டியிலே இந்தப் பட்டுத் தொழிலை தன்னுடைய வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருக்கின்ற நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இந்தப் பட்டுத் தொழிலுக்காக மிகப் பெரிய அளவிலே தேவைப்படுகின்ற சரிகை வெளி மாநிலத்திலிருந்துதான் இதுவரை தருவிக்கப்படுகின்றது என்று சொல்லப்படுகிறது. அதை முழுமையாக நம்முடைய மாநிலத்திலேயே உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு என்னுடைய மானியத்திலேயே ஏற்கெனவே பதில் அளித்திருக்கிறேன். இன்னும் முழுமையாக சரிகையை உற்பத்தி செய்யக்கூடிய தகுதி நமக்கில்லை. எப்படியிருந்தாலும் வெள்ளி நூல் இழையை நாம் சூரத்திலிருந்து பெற்று, அதற்குமேல் நாம் சுத்துகின்ற பட்டு, அதற்கு மேல் தோய்க்கின்ற தங்கம் அவற்றைத்தான் நாம் இங்கே செய்ய முடியுமேயொழிய நூல் இழையான, அந்த வெள்ளி நூல் இழையை—இங்கே உருவாக்குவதற்குரிய வாய்ப்பு இல்லை. ஆகவே இப்பொழுது 5,000 மார்க் அளவிற்கு உற்பத்தி செய்யப்படுகின்ற இந்த அளவிலிருந்தே நாம் நூல் இழையைப் பெற்றுச் செயலாற்றி வருகிறோம். எதிர்காலத்திலே தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் 2,500 மார்க் அதிகமாகச் செய்யக்கூடிய வாய்ப்பை உருவாக்க உள்ளோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிக்கு 11 ரகங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கு ஒரு குழு அமைத்து கண்காணிக்கப்பட்டுவருகிறது. இன்றுவரை எத்தனை வழக்குகள் போடப்பட்டுள்ளன, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமலாக்கப் பிரிவு இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் சிறப்பாக நடைபெறுகிறது. இதுவரை நடைபெற்ற இந்த அமலாக்கப் பிரிவினுடைய ஆய்வில் 24,000 விசைத்தறிகள் பரிசோதனைக்கு ஆளாக்கப்பட்டு 15 வழக்குகள் அவர்கள்மேல் போடப்பட்டுள்ளன.

[1999 மே 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியில் நெய்யப்படும் பட்டு, விசைத்தறியில் நெய்யப்படுவதாக இதுவரையில் எந்தவிதமான புகாரும் அரசுக்கு வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கைத்தறி நெசவுத் தொழில் குறித்த பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்காக காஞ்சிபுரம் சென்றபோது, காஞ்சிபுரத்திலே நெய்யப்படக்கூடிய பட்டுச் சேலைகள் சேலம் தொகுதியிலே விசைத்தறியிலே நெய்யப்படுவதாக ஒரு முறையீடு செய்யப்பட்டது. இதுகுறித்து அமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி, அதைத் தடுக்க முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் குழுவிலே இருந்த காரணத்தினால் அந்தச் செய்தி அவருக்குத் தெரிந்திருக்கும். ஆனால் நம்முடைய Textiles Reservation Act-லேயே, மிகக் குறைந்த அளவிலேதான் விசைத்தறிக்கு பட்டுச் சேலைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சேலைகள் கர்நாடகத்திலே பெரிய அளவிலே உற்பத்தியாகின்றன. இங்கே அப்படி ஓரிரண்டு இடங்கள் இருந்தாலும், அது எந்தவிதத்திலேயும் எங்களுடைய பட்டு உற்பத்தியை பாதிக்காத காரணத்தினால் அது எங்களுடைய கவனத்திற்கு வரவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிப் பட்டு உற்பத்தியிலே சேலம் மிகச் சிறப்பாக உற்பத்தி செய்து வருகிறது. அதுவும் தரம் வாய்ந்த பட்டுச் சேலைகள் எல்லாம் அங்கே உற்பத்தி செய்யக்கூடிய இந்தநேரத்திலே கைத்தறிப் பட்டு உற்பத்தியாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டு சேலையை உற்பத்தி செய்து விற்பனைக் கேந்திரமாக சொல்லக் கூடிய காஞ்சிபுரத்திற்கு அதிக அளவு கொடுத்து வருகிறார்கள். கடனிலே கொடுக்கப்பட்டு இலட்சக்கணக்கான ரூபாய் பல ஆண்டுகளாக திரும்பப் பெற முடியாத நிலையிலே பட்டு உற்பத்தியாளர்கள் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். பல நேரங்களிலே புகார் செய்து, முறையிட்டும்கூட அதைப் பெற முடியாத நிலையிலே அந்த உறுப்பினர்கள் வாடி வதங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே அவர்களுடைய வேதனைகளையெல்லாம் போக்கக்கூடிய வகையிலே காவல் துறை உதவியை அல்லது மற்ற உதவிகளையெல்லாம் பயன்படுத்தி அரசு அவர்களுக்கு அந்தத் தொகையைப் பெற்றுத் தருவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1999 மே 6]

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் கொடுப்பதும் வாங்குவதும் அவரவர்களுடைய சொந்தத் தகுதியைப் பற்றிய செய்தியாகும். அதிலே எந்த அளவிற்கு அரசு தலையிட்டு இதைத் திருப்பித் தர முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை. கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் எந்தவொரு கடனும், எந்தவொரு Suspense Account-ம் இருக்கக்கூடாது என்பது சட்ட விதி. இதில் முறைகேடாக நடந்தால் அதற்குச் சட்ட ரீதியாகத்தான் நடவடிக்கை எடுக்க முடியுமேயொழிய, திருப்பித் தரக்கூடிய வல்லமையை உருவாக்குகின்ற சக்தி அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். பொன்முடி.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியில் நெய்யப்படுகின்ற சில ரகங்களை விசைத்தறியில் நெய்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் கைத்தறியில் அனைத்து ரகங்களையும் நெய்வதில்லை. குறிப்பிட்ட சில ரகங்களை மட்டும்தான் நெய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகங்களில், கைத்தறியாளர்கள் நெய்யாத சில ரகங்களை விசைத்தறியில் நெய்வதற்கு அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகச் சொல்லப்போனால், இப்போது ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிலைகள் குறித்து விசைத்தறியாளர்களுக்கு ஆலோசனையாகச் சொல்லி தடுத்துத்தான் வருகிறோம். தேவையற்ற பிரச்சினைகளை நாங்கள் உண்டாக்க விரும்பவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதை கவனத்தில் வைத்துக்கொண்டு பேசுகிறாரோ, அதை அரசும் தனிக் கவனத்தோடு செயல்படுத்தித்தான், இந்த அளவிற்கு அந்த அமலாக்கப் பிரிவு செயலாற்றி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.ப. ஆறுமுகம்.

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிக்கான ரக ஒதுக்கீடு குறித்து இந்த மன்றத்திலே பேசப்படுகிறது. மிகப் பெரிய அளவிலே விசைத் தறியிலே எல்லா ரகங்களையும் நெய்கின்ற மஹாராஷ்டிரா, கர்நாடகம் போன்ற மாநிலங்களில் எல்லாம் அமலாக்கப் பிரிவு வேண்டாம் என்று சொல்லுகின்ற இந்தநேரத்திலே

தமிழகத்திலே மட்டும் தீவிரமாக அமல்படுத்தினால் விசைத்தறிகள் பாதிக்கப்படும் என்பதை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள் எனவே அமலாக்கப் பிரிவு வேண்டாம் என்ற அந்த நடைமுறையை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறியாளர்களுடைய தொழிலினுடைய நலத்தைக் கருத்தில் கொண்டும், கைத்தறி நெசவாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டும் மிகச் சிறப்பாக இந்த அமலாக்கப் பிரிவு யாருக்கும் எந்தவிதமான இடைஞ்சலும் இல்லாமல், எந்தவிதமான சங்கடத்திற்கும் இடமின்றி இந்தப் பணியை நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியில் நெய்யப்படுகின்ற நெசவு போன்றே விசைத்தறியிலும் இருக்கின்ற காரணத்தினால், நுகர்வோர்களெல்லாம் ஏமாற்றப்படுகின்றார்கள். அதைத் தடுப்பதற்கு விற்பனை செய்கின்ற விற்பனை நிலையங்களிலேயே சோதனை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிப் பட்டுச் சேலைகளைப் பொறுத்தவரையில் எது கைத்தறியில் நெய்யப்பட்டது, எது விசைத்தறியில் நெய்யப்பட்டது என்பதைச் சாதாரண தாய்மார்கள்கூட அறிந்துகொள்ளக்கூடிய விதத்திலேதான் கைத்தறியினுடைய தரம் இருக்கிறது. ஆகவே நாம் அந்த அளவிற்கு சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் இதிலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 653, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**653—**

**ஜவுளி ஆலைகள் மூலம் வேலைவாய்ப்பு**

***21479—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) தமிழ்நாட்டில் ஜவுளி ஆலைகள் மூலம் வேலைவாய்ப்புப் பெறுவோரின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) வேலைவாய்ப்பு பெருகி வருகிறதா அல்லது குறைந்து வருகிறதா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில், கூட்டுறவு அமைப்பின்கீழ் இயங்கி வரும் 18 கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் 639 பணியாளர்களும், 9,684 தொழிலாளர்களும், ஆக மொத்தம் 10,323 பேர் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர். தனியார் துறையைப் பொறுத்தமட்டில், இந்திய பஞ்சாலை இணையத்தின் 1996 ஆம் வருடத்திய பஞ்சாலை புள்ளி விவரக் கையேட்டின்படி, தமிழ்நாட்டில் இயங்கிவரும் 717 ஜவுளி ஆலைகளில் 1,91,317 பேர் தொழிலாளர்களாகப் பணிபுரிகின்றனர்.

(ஆ) ஜவுளித் துறையில் நேரிட்ட நெருக்கடி நிலை காரணமாக பொதுவாக வேலைவாய்ப்பு குறைந்து வருகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கிய பங்காற்றிவரும் ஜவுளித் தொழில் நெருக்கடியில் இருக்கிறது என்பதற்கான X ray Copy-ஆகத்தான் அமைச்சர் அவர்களின் பதில் அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டின் ஜவுளித் தொழில் பாதிக்கப்படுமானால் தமிழ்நாட்டின் பொருளாதார வளத்தில் கடும் நெருக்கடி ஏற்படும் என்பதையும் அவர்களுடைய பதில் மிகத் தெளிவாகக் காட்டுகிறது. இந்தியச் சந்தைகளைக் கைப்பற்றுவதற்காக அந்நிய நிறுவனங்கள் மிகுந்த வேகம் காட்டிக்கொண்டிருக்கிற இன்றைய நிலையில் இந்தியத் தொழில்களை அழிப்பதற்கு இந்திய அரசாங்கத்தின் மூலமே அந்நிய நிறுவனங்கள் பல்வேறு நிபந்தனைகளைப் போடுவதால்தான் ஜவுளித் தொழில் இத்தகைய நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. இது புதிய பொருளாதாரக் கொள்கையிலிருந்து தோன்றிய தீங்கு ஆகும். எனவே நான் மாநில அரசிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, சொந்த நாட்டுத் தொழில்கள் வளர முடியாமல் நெருக்கடியால் செத்து விழுவதற்குரிய கொள்கைகளை வகுக்க வேண்டும் என்று மத்திய அரசை நிர்ப்பந்திக்கிற I.M.F., World Bank -னுடைய நிர்ப்பந்தத்திற்கு மத்திய அரசு இரையாகாமல் சொந்த நாட்டுத் வளங்களைக் காப்பாற்றுவதற்குப் பொருத்தமான தொழில்களை உருவாக்க வேண்டும் என்று மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-15)

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெருக்கடி நிலை என்பதை நான் மட்டும் ஒப்புக்கொள்ளவில்லை. இந்தியாவிலே இருக்கின்ற அனைவருமே, ஜவுளித் துறையிலே இருக்கின்ற அனைவருமே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அடுத்து மத்திய அரசினுடைய பணி இதில் எந்த அளவிற்கு இருக்கிறது என்பதையும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்தியாவில் இருக்கின்ற சுமார் 1,739 ஆலைகளில் தமிழகத்திலே மட்டும் 801 ஆலைகள் இருக்கின்றன. இதனுடைய சதவீதக் கணக்கு 46 ஆகும். இந்த அளவிற்கு கணக்குப் பார்த்தால்கூட நம்மை நாமே காப்பாற்றிக்கொள்வதற்கு சில வழிமுறைகளை நாம் அமைக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். காரணம் தனியார் நூற்பாலைகள் B.I.F.R.-க்குச் சென்றுவிடுகின்றன. கூட்டுறவு நூற்பாலைகள் அரசிடமிருந்து நிதியுதவி கேட்கின்றன. ஆனால் இந்த Revival package programme என்றபோது குறிப்பிட்ட காலத்திற்குள் செய்தால்தான் இது சிறப்பாக அமையும். இல்லாவிட்டால் அதுவும் பெரும் சுமையாக இந்த ஆலைக்கு வருகிறது என்பதை நான் அனுபவபூர்வமாக இப்போது உணர்ந்திருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்றால் Financial Institutions, அரசு நிர்வாகம், raw materials supply செய்பவர்கள் ஆகியவர்களோடு பேசுகின்ற பேச்சுவார்த்தையிலே ஓரளவிற்கு ஒப்பந்தம் முடிந்தாலும் தொழிலாளர்கள் தரப்பிலே போடுகின்ற ஒப்பந்தம் சற்று காலதாமதம் ஆகிறது. இந்தக் காலதாமதத்தைத் தவிர்த்து அதற்கு என்று ஒரு முடிவை எடுக்கக்கூடிய தொழிற்சங்கத் தலைவர்களுடைய கூட்டத்தை நாம் தமிழகத்திலே உடனடியாகக் கூட்டி ஒரு நல்ல முடிவை இன்றைய சூழ்நிலைக்குத் தக்கவாறு எடுத்தால் நிச்சயமாக மற்ற மாநிலங்களில் எப்படியோ, தமிழகத்திலே இந்தத் துறையில் சிறப்பாகச் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அப்படிப்பட்ட பணிக்கு நீங்கள் முழு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மத்திய அரசைக் கேட்பது. மாண்புமிகு முதலமைச்சர்தான் பதில் சொல்ல வேண்டும். மூலக் கேள்விக்கு இவ்வளவு நேரம் பதில் சொல்லிவிட்டார். அப்புறம் அடுத்த கேள்வி என்ன?



**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல் கேள்விக்கே அவர் பதில் சொல்வது கஷ்டம் (குறுக்கீடு) நீங்கள் கேளுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்லியிருக்கிற அந்தப் பதிலுக்குப் பின்னால் எது துணைக் கேள்வியாக அமையும் என்பது என் நெஞ்சில் கருக்கொண்டிருக்கிறது. அதை நான்தான் வெளிப்படுத்திச் சொல்லக்கூடிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் நெஞ்சில்தான் கேள்வி எழும். என் நெஞ்சில் உங்களுடைய கேள்வி எழாது. நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், முதல் கேள்வியே மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டியது. இதிலே மத்திய அரசை கைத்தறித் துறை அமைச்சர் எப்படி வற்புறுத்த முடியும்?

**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, நான் தெரிந்துகொள்ள விரும்புவது மாண்புமிகு முதலமைச்சர்கூட ஜவுளித் தொழில் நெருக்கடிக்காக ஒரு கூட்டத்தைக் கூட்டியிருந்தார்கள். அந்தக் கூட்டத்திலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த பொறுப்போடு ஒரு விஷயத்தைத் தெரிவித்தார்கள். நெருக்கடிக்குப் பெரும் காரணமாக அமைந்திருப்பது மத்திய அரசு என்றாலும் மாநில அரசு எதைச் செய்ய முடியுமோ அந்த விஷயங்களைச் செய்வதற்கு பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துவிட்டு, நெருக்கடியின் சுமைகளை தொழிலாளர்களின் தலையிலே சுமத்துவது சரியல்ல என்ற கருத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். இது ஒரு மாநில அரசினுடைய கருத்து என்பதை நான் அறிகிறேன். எனவே நான் தெரிந்துகொள்ள விரும்புவது, தொழிலாளர்கள் முறையிடுவதற்கு இடமேயில்லை; முதலாளிகள் அரசாங்கத்திடம் முறையிட்டு விடுவார்கள். முதலாளிகளுக்கு ஏற்படுகின்ற நெருக்கடிகளை தொழிலாளிகளின் கழுத்தைத் திருகி அவர்கள் முடித்துக்கொள்வார்கள். ஆனால் முறையிடுவதற்கு இடமே இல்லாமல் ஒரு முட்டுச்சந்தில் சிக்கிக் கொண்டு நின்றுகொண்டிருக்கிறார்கள் தொழிலாளிகள். எனவே தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற அளவிற்கு தீர்வு செய்ய அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, முதலாளிகள் முறையிட அரசு இருக்கிறது; தொழிலாளிகள் முறையிட இடமேயில்லை என்று திரு சுப்பராயன் சொல்கிறார். இதிலே உண்மை

[1999 மே 6

என்னவென்றால், நாங்களே தொழிலாளிகளாக இருக்கிற காரணத்தால் முறையிடுவதற்கு இடம் தர வேண்டிய அவசியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 654, திரு. டி. மணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**654—**

**ஈட்டி மரங்கள்**

***1908—திரு. டி. மணி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், அழகிய பாண்டியபுரம் ரேஞ்சில், தேவகிரி தோட்ட நிர்வாகம் சுமார் 20 டன் எடைக்கும் மேலான ஈட்டி மரங்களை வெட்டியது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேவகிரி தோட்ட உரிமையாளர் திரு. அருணாச்சலம் என்பவர் தெரிசனம்கோப்பு கிராமத்தில் புல எண் 614 மற்றும் அழகிய பாண்டியபுரம் கிராமத்தில் புல எண் 773 ஆகியவற்றில் உள்ள தனது சொந்த பட்டா நிலத்தில் உள்ள ஈட்டி மரங்களை வெட்ட 1960 ஆம் ஆண்டு விண்ணப்பித்ததன்பேரில் திருநெல்வேலி தெற்கு கோட்ட மாவட்ட வன அலுவலர் அனுமதி வழங்கியதன்பேரில் தேவகிரி தோட்ட நிறுவனத்தினர் 303 ஈட்டி மரங்களை வெட்டியுள்ளனர். வெட்டிய மரங்களை துண்டுகளாக்கி அதே இடத்தில் வைத்திருந்து அவற்றை அப்புறப்படுத்தி எடுத்துச் செல்வதற்கு அனுமதி கோரி 1995 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி கோட்ட மாவட்ட வன அலுவலரின் அனுமதியினைப் பெற்று அம்மரங்களை அப்புறப்படுத்தியுள்ளனர்.

முற்பகல் 10-20

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தேவகிரி தோட்டம் இருக்கின்ற பகுதி, அதனுடைய 3-4 பகுதிகள் எல்லாம் வனத் துறைக்குச் சொந்தமான இடங்களாகும். சுற்றிலும்



1999 மே 6]

வனம். இதற்கு எப்படிப் பட்டா கிடைத்தது என்பது ஒரு கேள்வி. இது ஓர் ஆய்வு நடத்த வேண்டிய பிரச்சினை. இரண்டாவது, இது 1997-ல் போட்ட கேள்வி. இதற்கு இரண்டு ஆண்டுகளை தாண்டித்தான் பதில் கிடைத்து இருக்கிறது. இதற்காக அரசுக்கு வர வேண்டிய Royalty பணத்தைத் தந்திருக்கிறார்களா? நம்முடைய அரசு பெற்றிருக்கிறதா? இந்த அரசுக்கு அது சம்பந்தம் இல்லை என்று கருதுகிறேன். இருந்தாலும்கூட அதற்கான Royalty-யை பெற்றுத்தான் கொடுக்க வேண்டுமென்று அன்று விதிமுறை இருந்தது. அந்த விதிமுறையில் இப்போது தளர்வு ஏற்பட்டிருக்கிறது. வனத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று முனைப்பாக நாம் செயல்படுகின்றோம். அந்தச் செயல்பாட்டுக்கு மத்தியிலே தனியார்கள் நம்முடைய வனத்தை அபகரிக்கின்ற ஒரு சூழ்நிலை பல பகுதிகளிலே இருக்கின்றது. 200 டன்னுக்கு மேலே வரக்கூடிய ஈட்டி மரம் என்பது பல லட்சம் ரூபாய் மதிப்பு உள்ளது. இவைகளை வெட்டிச் செல்வதற்கு அனுமதி வழங்கியிருக்கிறோம். ஆகவே இதைப் பற்றி ஒரு re-survey செய்வதற்கும்—அதுபோன்று அதனுடைய Royalty-யைப் பெற்றிருக்கிறார்களா என்பதைக் கண்டறிவதற்கும் உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கடந்த கால ஆட்சியிலே ஏற்பட்ட கோளாறு. இருந்தாலும்கூட 1960 ஆம் ஆண்டிலேயே 303 ஈட்டி மரங்களுக்கு Royalty செலுத்தப்பட்டுவிட்டது. அந்தத் தோட்டம் வனத் துறைக்கு உரிய பகுதியிலே இருக்கிறதா இல்லையா என்பதை அறிய அதிகாரிகளை வைத்து விரைவிலே அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** தலைவர் அவர்களே, சாதாரணமாக நம்முடைய அதிகாரிகளை வைத்துச் செய்வதைவிட ஒரு தனிப் பிரிவை வைத்து ஒரு Special squad வைத்து இந்த வனங்களில் வருகின்ற தோட்டங்களை Survey செய்கிறபோதுதான் நம்முடைய நிலத்தை எவ்வளவு ஆக்கிரமித்து இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய முடியும். எனவே அதைத் திரும்ப மீட்டுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற அதிகாரிகளை வைத்துக் கொண்டு அத்தனை estate-களையும் அளக்க முடியாது. இருந்தாலும்கூட

[1999 மே 6

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை விரைவில் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 655, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**655—**

### சமூகக் காடுகளில் கருவேலன் மரங்கள்

***21706—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், தருமபுரி ஆகிய மாவட்ட சமூகக் காடுகளில் வளர்க்கப்பட்ட கருவேலன் மரங்களை ஏலம் விட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையினை அளிக்கின்றேன்.

ஆம். சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் வளர்க்கப்பட்ட கருவேலன் மரங்களை ஏலம் விட முன்வந்து ஒவ்வொரு ஆண்டும் ஏலத் தேதி நிர்ணயம் செய்து, நவம்பர் முதல் ஏப்ரல் வரையுள்ள காலங்களில் ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் கடந்த இரண்டாண்டுகளாக கருவேலன் மரங்கள் ஏலமே போகவில்லை. அரசாங்கம் முதலில் டன் ஒன்றுக்கு 1250 ரூபாய் என்ற வகையிலே நிர்ணயம் செய்து இப்போது 100 ரூபாய் குறைத்து ஒரு டன்னுக்கு 1150 ரூபாய் என்று நிர்ணயித்திருப்பதால், 15 சதவீதம் காடுகள்தான் இப்போது ஏலத்திற்கு விடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதியில்லாமல் மிகவும் திண்டாடிக்கொண்டிருக்கிற இந்தநேரத்தில் இந்தக் காடுகளை மட்டும் உருப்படியாக ஏலத்தில் விட்டால் 100 கோடி ரூபாய நிச்சயமாக அரசுக்கு வருவாயாக வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அப்படியிருந்தும்கூட, ஏலம் விடாத காரணத்தினால் இந்த



1999 மே 6]

இரண்டாண்டுகளில் கருவேலன் காடுகளையெல்லாம் ஆங்காங்கு இருக்கிறவர்கள் எல்லாம் வெட்டி எடுத்து, திருடிக்கொண்டு போய்விடுகிறார்கள். இப்போது 100 கோடி ரூபாய் சொத்து அப்படியே ஏரிகளில் தேங்கிக் கிடக்கின்றது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1,150 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருப்பதை 150 ரூபாய் குறைத்து 1,000 ரூபாய் என்று நிர்ணயிக்கலாம். ஏனென்றால் புளியங்கட்டையே இப்போது டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய்தான் போகிறது. அதேபோல வேலிகாத்தான் போன்ற மரங்கள் எல்லாம் டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய்க்குப் போகிறபோது, நீங்கள் மட்டும் 1,150 ரூபாய் என்ற அளவில் வைத்திருக்கிற காரணத்தால் ஏலம் போகாமல் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து டன் ஒன்றுக்கு ரூ. 1,000 என்று வைத்தால், 100 கோடி ரூபாய் இந்த ஆண்டே முதலமைச்சர் அவர்களுக்குக் கிடைக்கும். நானும் முதலமைச்சர் அவர்களிடம் 15 கோடி ரூபாயைப் பாதாளச் சாக்கடைக்காகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இப்போது நிதியே இல்லை, இல்லையென்று சொல்லிக்கொண்டிருக்கிற முதலமைச்சர் அவர்களுக்கு, ஏன் நம்முடைய அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்களுடைய தேவைகளை எல்லாம் இந்தத் துணை வினாவிலே கொண்டுவரக்கூடாது. மூல வினாவிற்குத் தொடர்புடையதாகக் கேளுங்கள்.

(முற்பகல் 10-25

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அரசுக்கு 100 கோடி ரூபாய் வருவாய் வர வழி செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுகளில் தொழில் துறையில் ஏற்பட்ட மந்த நிலை காரணமாக, குறிப்பாக திருப்பூர், கரூர் போன்ற சாயப் பட்டறைகளுக்கு மரத்தினுடைய தேவை குறைந்து விட்டது. இப்போது மர விலை குறைவாக இருக்கிற காரணத்தால் ஏலம் அதிகமாகப் போகவில்லை. ஆகவே இப்போது 15 சதவிகிதம் குறைத்திருக்கிறோம். இப்போதுகூட குறைவாகத்தான் ஏலத்தில் போய்க் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வருங்காலத்தில் கவனிக்கப்பட்டு, ஏலங்களை விரைவாக முடிக்க இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 மே 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 656, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**656—**

**சார்பதிவாளர் அலுவலகம் அமைத்தல்**

***20131—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி மற்றும் இண்டூரில் சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி மற்றும் இண்டூரில் சார்பதிவாளர் அலுவலகம் திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிற நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இண்டூர் என்பது பெண்ணாகரம் தொகுதியில் மிக முக்கியமான பகுதி. அதைச் சுற்றிலும் ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. அந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய பொதுமக்கள் எல்லாம் பத்திரப் பதிவு செய்வதற்கு 30 கிலோ மீட்டர், 40 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தருமபுரிக்கும், பெண்ணாகரத்திற்கும் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அங்கே பல்வேறு அலுவலகங்கள் எல்லாம் இருக்கின்றன. அதைப்போலவே நல்லம்பள்ளி என்பது ஓர் ஒன்றியத்தினுடைய தலைநகரம். அந்த வட்டாரத்தில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் 40 கிலோ மீட்டருக்கு மேலாக உள்ள தருமபுரிக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே இதையெல்லாம் கருத்திற்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்



1999 மே 6]

மீண்டும் மறுபரிசீலனை செய்து இண்டூரிலும், நல்லம்பள்ளியிலும் சார் பதிவாளர் அலுவலகத்தைத் தொடங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல கடந்த ஆண்டுதான் தருமபுரி மாவட்டத்தில் மாறண்டஹள்ளியிலே புதிய சார்பதிவகம் ஒன்றை இந்த அரசு தொடங்கியிருக்கிறது. இந்த ஆண்டு பெண்ணாகரம் தொகுதியில், நல்லம்பள்ளியிலும், இண்டூரிலும் சார்பதிவகம் திறக்க வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். ஒரு சார் பதிவகத்தைத் திறப்பதற்குக் குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்கு 2,000 ஆவணங்கள் பதிவாக வேண்டும். இதற்கு ஒரு வருடத்திற்கு அரசுக்கு ஆகின்ற செலவு சுமார் 5 இலட்சம் ரூபாய் ஆகும். ஆனால் இந்த மாவட்டத்திலே இருக்கின்ற 12 சார்பதிவாளர் அலுவலகங்களிலே மொத்தம் ஆயிரத்திற்குக்கீழ் பத்திரம் பதிவாகி இருக்கிற சார்பதிவாளர் அலுவலகங்கள் 5 இருக்கின்றன. ஆக நல்லம்பள்ளி மற்றும் இண்டூரில் திறக்க வேண்டுமென்றால் தருமபுரியில் இருக்கின்ற,— Joint I, II சார் பதிவாளர் அலுவலகத்தைப் பிரித்துத் திறந்தால்தான், அதிலே இருக்கின்ற கிராமங்களைப் பிரித்தால்தான் இங்கே திறப்பதற்கான வாய்ப்பு இருக்கும். அப்படித் திறக்க வேண்டுமென்றால் தருமபுரியிலே இருக்கின்ற சார் பதிவாளர் அலுவலகங்களின்கீழ் வருகின்ற கிராமமக்களிடத்திலே கருத்து கேட்டுத்தான் அதுபற்றி அரசு முடிவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 657, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**657—**

**மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

***6119—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, குடவாசலிலுள்ள அரசு தாழ்த்தப்பட்டோர் மாணவ விடுதிக்கு அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்திலேயே புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் ஒரு வட்டத் தலைநகரம். திருவாரூர் தொகுதியிலே இருக்கக்கூடிய கொறடாச்சேரி ஒன்றியத்திலே இருந்து நிரம்ப தாழ்த்தப்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள். தொடர்ந்து 2, 3 வருட காலமாக இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. மாணவர் விடுதி கட்டுவதற்குப் போதுமான இடமும் தயாராக இருக்கிறது. மேலும் இந்தக் கோரிக்கையை வயது முதிர்ந்த ஒரு பெரியவர், நம்முடைய மாண்புமிகு முதல்வருடைய ஆரம்ப கால நண்பர்களில் ஒருவரான நாகலூர் சீனிவாசன் என்பவர் தொடர்ந்து எடுத்து வைத்துப் போராடி வருகிறார். அவருக்கு வயது 85. அவர் சொல்கிறபோது சொன்னார், 'இந்தக் கோரிக்கையை நீ வைக்கிறபோது என்னுடைய பெயரைக் கூறிச் சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டே கட்டித் தருவார்கள்' என்று. அவருக்கு மரியாதை செலுத்துகின்ற வகையில் இந்த ஆண்டு அந்த விடுதி கட்டித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களின் நண்பர் விடுதி கட்டுவதற்கு இடம் கொடுத்திருக்கிறார் என்று சொல்கிறார். நம் முதலமைச்சரின் நண்பர், பிறருக்கு இடத்தைத்தான் கொடுப்பார், பிறர் இடத்தை எடுக்க மாட்டார் என்பது நாட்டிற்குத் தெரியும். முதலமைச்சரின் நண்பர் என்ற தகுதியின் காரணத்தால் அந்த இடத்தில் விடுதி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார். நம் முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய உயிர்த் தோழன் என்றோ, உற்ற நண்பர் என்ற காரணத்தாலோ முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று விரும்ப மாட்டார். இருந்தாலும் நம் முதலமைச்சரின் நண்பர் இடம் கொடுத்திருக்கின்ற காரணத்தால், எதிர்வரும் காலங்களில் அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து, அந்த சுயமரியாதை வீரர் மனம் மகிழும் வண்ணமும், குத்தாலம் கல்யாணம் மனம் மகிழும் வண்ணமும் மாணவர் விடுதி ஒன்றைக் கட்டுவதற்கு அரசின் சார்பாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

வினா எண் 658, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**658—**

**ஆதிதிராவிடர் நல விடுதிக்குக் கட்டடம்**

***17288—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, சோழபுரம் பேரூராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் நல விடுதிக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை. வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழபுரம் ஆதிதிராவிடர் நல விடுதிக்குக் கட்டடம் கட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தோம். அந்த விடுதி நீண்ட நாட்களாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஆதிதிராவிடர் பள்ளி அந்தப் பகுதியில் இருக்கிறது. வெளியிலிருந்து மாணவர்கள் வந்து அங்கு தங்கிப் படிக்கின்றார்கள். ஆதிதிராவிட மாணவர்கள் தங்குவதற்காக அந்த விடுதியைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, கட்டிக்கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு ஆண்டுதோறும் மாணவர்கள் விடுதி கட்டப்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். ஆனால் நிதி நிலைமைகளுக்கு ஏற்ப வரும் ஆண்டில் தங்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 659, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**659—**

**சுற்றுலாத் தலங்களில் வாடகை விடு**

***15891—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் வாடகைக்குவிட வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் வாடகைக்குவிட வீடுகள் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தில் சுற்றுலாப் பயணிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு சுற்றுலாத் தலத்திலும் தினசரி வாடகைக்கு வீடுகள் கட்டி விடப்பட்டு வருகின்றன. அதுபோன்று தமிழகத்திலேயும் எல்லா சுற்றுலாத் தலங்களிலும் வீடுகள் கட்டி வாடகைக்குவிட அரசு மறுபரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சுற்றுலாத் தலங்களிலும் விடுதிகள்





இருக்கின்ற காரணத்தால், வீடுகள் கட்டத் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 660, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**660—**

**கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையம் அமைத்தல்**

***19127—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில கிராம கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எடப்பாடி நகரில் ஏற்கெனவே ஒரு கதர் அங்காடி இயங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அந்தக் கதர் அங்காடியிலே கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லப் போகிறீர்களா?

**திரு. ஐ. கணேசன்:** ஆம். நான் நன்றி சொல்கிறேன் தலைவா. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் விற்பனை நிலையத்தினை விரிவுபடுத்தி, கைவினைப் பொருட்கள் அங்கு விறகப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதற்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல, இந்தக் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களை ஊக்கபபடுத்த வேண்டும். அரசு

[1999 மே 6

சிறப்புத் திட்டங்களை எடுத்து நடைமுறைப்படுத்தியதால், மிக நஷ்டத்தில் இருந்த இந்த இலாக்கா இன்று கோடிக்கணக்கில் லாபத்தை ஈட்டியிருக்கிறது. ஆகையினால் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களை ஊக்கப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையின்கீழ் இயங்குகின்ற பனை வாரியத்திலிருந்து பனை நார்களைக் கொண்டு கைவினைப் பொருட்களைச் செய்கின்ற அந்த அலகுகளை விரிவுபடுத்துவதற்காக, அந்தத் தொழிலை மேம்படுத்துவதற்காக மும்பை கதர் ஆணையம் மூலம் சுமார் 1.25 கோடி ரூபாய் நிதியுதவி கேட்டிருக்கிறோம். கண்டிப்பாக அந்த நிதி உதவி கிடைத்தவுடன் கைவினைப் பொருட்களின் உற்பத்தி வளர்ச்சி பற்றி கருத்தில்கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### சந்தனக் கடத்தல் வீரப்பன் வனக் காப்பாளர்கள் மூவரைக் கடத்தியது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு சந்தனக் கடத்தல் வீரப்பன் வனத் துறை ஊழியர்கள் மூன்று பேரைக் கடத்தியது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், திரு. நா. பெரியசாமி, திரு. ஜி. நிஜாமுதீன், திரு. ஐ. கணேசன், திரு. ஜி.கே. மணி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. லா. சந்தானம், திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. டி. மணி மற்றும் திரு. சி. வேலாயுதன் ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களை முதலில் பேச அழைக்கிறேன். டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.



1999 மே 6]

முற்பகல் 10-35

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25 ஆம் தேதி தருமபுரி மாவட்ட வனத் துறை ஊழியர்களான பழனி, அபிமன்யூ, மகாதேவன் ஆகிய மூவரும் ஒகேனக்கல் அருகே பனப்பட்டு காட்டுப் பகுதியிலே ரோந்து சென்றபோது, வீரப்பனைச் சேர்ந்தவர்கள் கடத்திச் சென்றுள்ளார்கள் என்று கூறப்படுகிறது. மூன்று நாட்கள் கழித்துத்தான் அவர்களைக் கடத்திச் சென்ற தகவல் ஒரு கடிதம் மூலமாகவும், கேசட் மூலமாகவும் மாதனிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது காவலர்கள் உடையிலே வந்த மூவர் அதைக் கொடுத்துவிட்டுச் சென்றதாகச் சொல்லப்படுகிறது. இதுகுறித்து பிறகு மாவட்ட வன இலாக்கா அதிகாரிகளிடமும், மாவட்ட ஆட்சியரிடமும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றுவரை அந்த மூன்று பேர்களின் கதி என்ன என்று தெரியவில்லை. பொதுவாக, வனத் துறை, அலுவலர்களையும் மற்றவர்களையும் வீரப்பன் கடத்திச் செல்வதும் அது குறித்து பிறகு தகவல் அனுப்புவதும், தகவல் அனுப்பி ஒரு செய்திப் பரிமாற்றம் பெறுவதும், பிறகு விட்டுவிடுவதும் சிந்துபாத் கதைபோல தொடர்கதையாக, தினத்தந்தியிலே வருகின்ற வந்து கொண்டிருக்கிறது. இதற்கு அரசாங்கம் ஒரு முடிவுகட்ட வேண்டும். பொதுவாக வீரப்பனைப் பொறுத்தவரையிலே அது முடியாத ஒரு பிரச்சினையாக மிக நெடுங்காலமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆட்களைக் கடத்திச் செல்கின்ற படலங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு அரசு உரிய முறையிலே கவனத்தைச் செலுத்தி, தேவைப்பட்டால் Para-Military Forces என்கிற இராணுவத்தைச் சேர்ந்த படைகளை அனுப்பி, Helicopter போன்றவற்றை ஈடுபடுத்தி, இதற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், வீரப்பனைப் பொறுத்தவரையில் பல்வேறு வகைகளிலே, செய்திப் பத்திரிகைகளிலே, தொலைக்காட்சிகளிலே மிகப் பெரிய அளவிலே விளம்பரங்கள் தரப்படுகின்றன. அவருடைய பேட்டிகள் கூட ஒளிபரப்பப்படுகிறது. இங்கேயிருக்கின்ற நிருபர்கள் எல்லாம் அங்கே சுலபமாகச் சென்று சந்தித்துவிடுகிறார்கள். அப்படி இருக்கின்றபோது அவர் பிடிபடாமல் இருப்பது மிகப் பெரிய சவாலாக காவல் துறைக்கு அமைந்திருக்கிறது. ஆகவே வீரப்பனுடைய இந்தமாதிரி படலங்களை முடிக்கும்வண்ணம் காவல் துறையை முடுக்கிவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு ஓர் இறுதி விடை காண வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களை நான் கனிவுடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[1999 மே 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

* **திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25 ஆம் தேதி அன்று வனத் துறை ஊழியர்கள் மூன்று பேர் கடத்தப்பட்டது தொடர்பாக அரசின் கவனத்தை ஈர்க்கத்தக்க வகையில் ஒருசில கருத்துக்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். சந்தனக் கடத்தல் வீரப்பனால் இப்போது மீண்டும் மூன்று வன ஊழியர்கள் கடத்தப்பட்டு ஏறத்தாழ 15 நாட்கள் ஆகின்றன. ஆனால் அவர்களை சந்தனக் கடத்தல் வீரப்பன்தான் கடத்தினானா அல்லது வேறு யாராவது கடத்தினார்களா என்றெல்லாம் செய்திகள் பலவாறாக அன்றாடம் பத்திரிகைகளில் வந்தவண்ணம் உள்ளன. அரசுத் தரப்பிலேயிருந்து எந்தவிதமான தகவலும் பொதுமக்களுக்கு இதுவரையிலும் தெரிவிக்கப்படவில்லை. சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்காகவும், அந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்காகவும் அரசின் சார்பாக சில முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. 1992 ஆம் ஆண்டிலேயே அமைக்கப்பட்ட S.T.F. என்கிற அதிரடிப்படை, 7, 8 ஆண்டுக்காலத்திற்கு மேலாகச் செயல்பட்டும் இதில் ஒரு தீர்வும் வராமல் இருக்கிறது. ஒரு பக்கத்திலே வனத் துறை ஊழியர்களின், காவல் துறை ஊழியர்களின் உயிர்ப் பலியும் இதிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னொரு பக்கத்திலே பார்த்தீர்களேயானால் மலைவாழ் மக்களுக்கு ஏற்படுகின்ற இடர்பாடுகள் கொஞ்சநஞ்சமல்ல. ஏற்கெனவே ஒரு முறை இந்த மாமன்றத்திலே வெளிநாட்டிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு ஏற்படுகின்ற இடர்பாடுகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவந்தபோது தடா சட்டத்திலே கர்நாடகச் சிறைச்சாலைகளிலே தமிழர்கள் வதைபடுவது குறித்து இங்கே முதலமைச்சர் அவர்களே எடுத்துச் சொன்னார்கள். அவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களே கர்நாடக மாநில முதலமைச்சருக்குத் தெரிவித்த செய்திகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அண்மையிலே அது தொடர்பாக சிலரைச் சந்திக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பொதுவாக, S.T.F.-னுடைய அணுகுமுறையை மாற்றி அமைத்தாலொழிய இதிலே ஒரு தீர்வு ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லையென்றே நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட அனுபவம்தான் இதிலே ஏற்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் S.T.F.-னுடைய அணுகுமுறை குறித்தும், கடத்தப்பட்ட வன ஊழியர்களைத் திரும்பப் பெறுவதற்கான திட்டவட்டமான நடவடிக்கைகள் குறித்தும் எந்த அளவிற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாட்டுக்குத் தெரிவிக்கவும், இதிலே



ஏற்கெனவே ஒரு முறை கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பார்களே அதுபோல இந்த அரசு வீரப்பனுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சி எடுத்து, கடைசி நிலையிலே அது தவறிப்போய்விட்டது. அப்படிப்பட்ட ஒரு தவறு ஏற்படாமல் முழுமையான வெற்றிக்கு வழிவகுக்க அரசு என்ன திட்டத்தை வகுத்திருக்கிறது என்பதை அறிய விரும்பி, அரசின் கவனத்தை ஈர்த்து நிறைவு செய்கிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பன் கடந்த 15 நாட்களுக்கு முன்பு வனத் துறை ஊழியர்கள் 3 பேர்களைக் கடத்தியதாகக் கூறப்படுகிறது. கடந்த 10 நாட்களாக புலனாய்வுத் துறையால் அவர்கள் எங்கு இருக்கின்றார்கள், யார் யாரைக் கடத்திச் சென்றிருக்கிறார்கள் என்ற உண்மையை அறிந்து கொள்ள முடியாமல் இருப்பது அதிர்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும். இந்நிலையிலே வீரப்பன் வழக்கமாக யாரைக் கடத்தினாலும் கேசட் அனுப்புவார், தூது அனுப்புவார் என்றும், ஆனால் இதுவரை ஒன்றும் வரவில்லை என்றும் காவல் துறை ஏமாந்து இருப்பதாகக்கூட பத்திரிகைச் செய்தி வந்து இருக்கிறது. அப்படி அவர் தகவல் அளித்துத்தான் காவல் துறையினால் கண்டுபிடிக்க முடியும் என்றால் நம்முடைய புலனாய்வுத் துறை எந்த அளவுக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது? இரண்டு மாநில அரசுகள் முயற்சி செய்தும், வீரப்பன் இப்படி அடிக்கடி கடத்திச் செல்வதும், பிறகு அவர்களை விடுவிப்பதும், அதோடு வீரப்பனை விட்டுவிடுவதும் என்ற நிலை தொடர்ந்துகொண்டிருக்கின்றது. ஒரு பத்திரிகை நிருபரால் சென்று சந்திக்கக்கூடிய வீரப்பனை, பல்லாயிரக்கணக்கான காவலர்களை வைத்து இருக்கிற நம்முடைய துறை ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை? அவனைக் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பதற்கான காரணங்கள் என்ன? புலனாய்வுத் துறை இயங்குகிறதா, இல்லையா? அவன் தகவல் அனுப்பித்தான் அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்ற உண்மையை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமா அல்லது நாமாகக் கண்டுபிடிக்க முடியுமா என்ற நிலையை இந்த அரசு விளக்க வேண்டும். இப்படியே ஒவ்வொரு தடவை கடத்தும்போது தீவிரமாகத் தேடுவதும், பின்னர் அதோடு விட்டுவிடுவதும், ஒரு கேலிக்கூத்தான நிலையை இந்த நாட்டிற்கு உணர்த்துகின்றது. சாதாரண வீரப்பன் பிரச்சினையிலேயே நம் காவல் துறை முடியாத

நிலையில் இருக்கும்போது, மற்றவற்றை அது எவ்வாறு அடக்கப் போகின்றது என்ற கேள்விக்குறி இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே இதுகுறித்த விசாரணையை முடுக்கிவிட்டு, உடனடியாக உண்மையைக் கண்டறிந்து, அந்த மூவரையும் மீட்பதோடு, வீரப்பன பிரச்சினைக்கும் இத்தோடு முற்றுப்புள்ளி வைத்து, அவனைக் கண்டறிந்து சிறையில் தள்ள வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பா.ம.க சார்பில் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25 ஆம் தேதியன்று வனத் துறை ஊழியர்கள் 3 பேர்கள் வீரப்பனால் கடத்திச் செல்லப்பட்டு, இதுவரையிலே அவர்களை எங்கே வைத்து இருக்கிறான் அல்லது அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா அல்லது கொலை செய்யப்பட்டார்களா என்று பீதியுற்ற நிலையிலே அந்த 3 குடும்பங்களைச் சேர்ந்தவர்களும், உற்றாரும், உறவினர்களும், அந்தப் பகுதி மக்களும் மிக்க வேதனையோடு இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நானும் காவல் துறை அதிகாரிகளிடத்திலே பல முறை நேரிலேயும் தொலைபேசியிலும் பேசினேன். பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் என்னிடத்திலே வந்து முறையிட்டார்கள். மிக்க பாதிப்புக்கு உள்ளாகி இருக்கக்கூடிய அந்தக் குடும்பங்களினுடைய அவல நிலை என்பது, எல்லோராலும் கண்ணீர் வடிக்கக்கூடிய ஒரு துர்பாக்கிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. இச்சூழ்நிலையிலே காவல் துறை அதிகாரிகள் இரவு பகலாக தமிழ்நாட்டின் ஒகேனக்கல் காட்டுப் பகுதியிலும், கர்நாடகத்தின் எல்லைப் பகுதியிலும் தேடிக்கொண்டு வருகிறார்கள். இதற்கு முன்னாலே வீரப்பனால் கடத்திச் செல்லப்பட்டால் தகவல் வரும்; வீரப்பனிடத்திலிருந்து ஒலிநாடா வரும்; பல்வேறு செய்திகள் எல்லாம் அரசுக்கு வரும்; காவல் துறைக்கு வரும் என்று காவல் துறை அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால் இதுவரையிலே முதல்கட்டமாக ஒரு ஒலிநாடா வந்தது. அந்த ஒலிநாடாவைப் பதிவு செய்து கொடுத்தவர்கள் வீரப்பனாக இருக்க முடியாது என்ற சந்தேகத்தைக் காவல் துறையிலே கிளப்பி இருக்கிறார்கள். காரணம் என்னவென்று சொன்னால், வீரப்பனுடைய அணுகுமுறை, அவன் கடத்திச் செல்லக்கூடிய விதம், அரசுக்குச் சவால் விடும் விதம் எல்லாம் வேறுவிதமாக இருக்கும். ஆக அந்த அணுகுமுறை இதில் இல்லாத காரணத்தினால், வேறு யாராவது அவர்களைக் கடத்திச் சென்று இருக்கக்கூடுமோ என்ற ஒரு சந்தேகத்தைக் காவல் துறை





கிளப்பி இருக்கிறது. இத்தகைய செய்திகள் எல்லாம் பத்திரிகையிலே வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே வீரப்பன் கடத்திச் சென்றிருந்தாலும் சரி அல்லது வேறு யார் கடத்திச் சென்றிருந்தாலும் சரி, அவர்களைக் கண்டுபிடித்து, அந்த 3 பேர்களையும் உயிரோடு மீட்பது அரசினுடைய தலையாய கடமையாக இருக்கிறது. ஆகவே எந்த வகையிலேயாவது, அந்த மூன்று பேர்களையும் மீட்டு, அவர்களுடைய குடும்பத்தினரிடம் ஒப்படைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே இந்த 3 பேர்கள் கடத்தல் சம்பந்தமாக காவல் துறை அதிகாரிகள் தேடக்கூடிய விதம் சரியானதாகவே இருக்கிறது. இதற்கு முன்னாலே கர்நாடக அதிரடிப் படையும், தமிழ்நாடு அதிரடிப் படையும் சேர்ந்து கூட்டு நடவடிக்கை என்ற பெயராலே அந்த வட்டாரத்திலே இருக்கக்கூடிய—தருமபுரி மாவட்டத்தினுடைய எல்லையோர கிராமப் பகுதிகள், ஈரோடு மாவட்டத்தினுடைய எல்லையோர கிராமப் பகுதிகள், கர்நாடக எல்லையோரப் பகுதிகள் ஆகிய பகுதிகளில் எல்லாம் கர்நாடக காவல் துறை—ஊருக்குள் புகுந்து காட்டுமிராண்டித்தனமாக மக்களைத் தாக்குவது, பெண்களை மானபங்கப்படுத்துவது போன்ற தொடர்ச் சம்பவங்கள் எல்லாம் நடந்து கொண்டிருந்தன. ஆனால் இந்தச் சம்பவத்தில் நம்முடைய காவல் துறை அதிகாரிகள் சரியாக, முறையாக அவர்களுடைய பணிகளை மேற்கொண்டு சிறப்பாகத் தேடி வருகிறார்கள் என்ற செய்தியையும் சொல்லி, சந்தேகத்திற்குரிய நிலையிலே யார் கடத்திச் சென்றிருந்தாலும், அந்த மூவரையும் மீட்டுக் கொடுக்க வேண்டுமென்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து அமர்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25 ஆம் தேதி வனத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் 3 பேர் சந்தனக் கடத்தல் வீரப்பனால் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றார்கள் என்ற செய்தி வந்தது. அதற்குப் பின்னால் அவர்கள் என்ன ஆனார்கள், எங்கிருக்கிறார்கள் என்ற தகவல்கள் இதுவரையில் வந்து சேரவில்லை. வீரப்பனைப் பற்றிய பிரச்சினையை இந்தச் சட்டமன்றத்திலே இன்றைக்கு அல்ல, கடந்த 3 ஆண்டுகளாக நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.

[திரு. லா. சந்தானம்] [1999 மே 6

கடந்த காலத்திலே எங்களது பகுதியைச் சேர்ந்த ஓர் இளம் உதவி ஆய்வாளர் செந்தில் என்பவர் இந்த வீரப்பனால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. அப்படியிருந்தும் மிகத் திறமையாகச் செயல்படுகின்ற காவல் துறை என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், காவல் துறையினுடைய திறமையிலே சற்று ஊனம் விழுந்துவிட்டதோ என்று மக்களெல்லாம் எண்ணுகின்ற அளவிற்குக்கூட நிலைமை உள்ளது. ஒரு தனிப்பட்ட நபர், அவர் உடன் இருந்தவர்கள் எல்லாம், பல முறைகளிலே கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்கிற செய்தி வந்தும்கூட வீரப்பனை இன்றைக்கும் பிடிக்க முடியவில்லை என்பது மக்கள் மத்தியிலே கவலையை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த வனத் துறையைச் சேர்ந்த அபிமன்யூவின் மனைவிகூட எங்களுக்கு உரிய காலத்திற்குள்ளாக மீட்டுத் தரவில்லையென்றால், நாங்கள் குடும்பத்தோடு தற்கொலை செய்துகொள்வோம் என்று சொல்கிற நிலையிலே அவர்களெல்லாம் அவலமான நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இதிலே மிகுந்த அக்கறையோடு கவனம் செலுத்தி—ஓரிரு முறையல்ல, பலமுறை இதுபற்றிய விவாதம் இந்த அவையில் வந்திருக்கிறது—மிகுந்த அக்கறையோடு முதல்வர் அவர்கள் கவனத்தைச் செலுத்தி வனத் துறையைச் சேர்ந்த அலுவலர்களை மீட்டுத் தர வேண்டும். சந்தனக் கடத்தல் வீரப்பனுடைய செயல்பாடுகளுக்கும் இது ஒரு முற்றுப்புள்ளியாக அமைகின்ற அளவிற்கு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25 ஆம் தேதியன்று வனத் துறையைச் சார்ந்த 3 அதிகாரிகளை சந்தனக் கடத்தல் வீரப்பன் கடத்தியுள்ளான். சந்தனக் கடத்தல் வீரப்பன் என்று சொல்வதைவிட, இன்றைய சூழ்நிலையில் ஆள் கடத்தல் வீரப்பன் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். ஏற்கெனவே நம்முடைய காவல் துறை விஞ்ஞான நுட்பங்களை எல்லாம் பல்வேறு விதமாகக் கையாள்கிற இந்தக் காலகட்டத்தில்கூட, காவல் துறையினரால் இப்படிப்பட்ட ஒருவனைக் கண்டுபிடிப்பதிலே ஏற்பட்டிருக்கின்ற குறைபாடு அல்லது தொய்வு என்பது இன்னும் எத்தனை காலம் நீடிக்கும் என்பது சந்தேகத்திற்குரிய விஷயமாக இருக்கிறது. ஏற்கெனவே நம்முடைய நாட்டின் வடபகுதியான சம்பல் காட்டிலே, மிகப் பெரிய கொள்ளைகளை நடத்திய பூலான்தேவியோடு, அங்குள்ள அரசு சமரசம் செய்து கொள்ளும் வகையில் ஒரு முறையைக் கையாண்டார்கள். காவல் துறையினரால இந்த வீரப்பனைக் கண்டறிய அல்லது பிடிக்க



1999 மே 6] [திரு. டி. மணி]

முடியாத சூழ்நிலையில், இப்படி அரசு ஊழியர்கள், அதுபோன்று மற்றும் பல மக்கள் பாதிப்புக்குள்ளாகி வரும் சூழ்நிலையில் ஏற்கெனவே, இடைப்பட்ட காலத்தில் ஒரு பேச்சுவார்த்தைக்கு உதவக்கூடிய வகையில் பல்வேறு நிபந்தனைகள் அவனுடைய சார்பிலே வைக்கப்பட்டன. அவற்றை ஏற்றுக்கொள்வதற்குச் சாத்தியமில்லை என்ற காரணத்தைச் சொல்லி, அது கைவிடப்பட்டது. இன்றைய சூழ்நிலையில் நம்முடைய வனத் துறை அதிகாரிகள், தங்களுடைய கடமையை ஆற்றுவதற்கு எந்த அளவிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நிகழ்ச்சியிலிருந்து நாம் காண முடியும். அந்த வகையிலே வீரப்பனைப் பிடிப்பதில் நம்முடைய காவல் துறைக்கு, பலவீனம் ஏற்பட்டிருக்கின்றதா அவர்களுடைய திறமைக் குறைவா அல்லது வேறு ஏதாவது பிரச்சினை அதில் இருக்கிறதா என்பதையெல்லாம் கண்டறியவேண்டும். 3 குடும்பங்களினுடைய குடும்பத் தலைவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன ஆனார்கள் என்ற ஒரு கேள்விக் குறியினை நம்முடைய அரசிற்கு முன்னால் வைத்திருக்கின்றார்கள். அந்த வகையிலே மிகக் கவலையோடு மிக அக்கறையோடு, நம்முடைய அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, உரிய நடவடிக்கைகளை காலம் கடத்தாமல் எடுக்க அரசினுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக இராமன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பெரியசாமி அவர்களும், இந்திய தேசிய லீக் சார்பாக நிஜாமுதீன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மணி அவர்களும், ஃபார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக சந்தானம் அவர்களும், மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக மணி அவர்களும் சில விளக்கங்களை எடுத்துக் கூறி, அரசின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தாலுகா, ஒகேனக்கல் வனச் சரகத்தில் பணிபுரியும் வனக் காப்பாளர்கள் பழனி, அபிமன்யூ, மகாதேவன் ஆகிய மூவரும் 25-4-1999 அன்று ஊத்துமலைக்காடு என்ற

பகுதியில் உள்ள பண்ணப்பட்டி என்ற இடத்தில் வனச் சரகக் காப்புப் பணியிலே ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் இதுவரை வீடு திரும்பவில்லை என்பதுதான் இன்று எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைக்கே காரணம்.

இதற்கிடையில் 27-4-1999 அன்று இரவு 10 மணிக்கு அருகில் உள்ள பொடூர் கிராமத்தில் முத்தூர்பட்டியைச் சேர்ந்த இருளர் வகுப்பினர் மாதன் என்பவரை நான்கு அடையாளம் தெரியாத நபர்கள் சந்தித்து தாங்கள் வீரப்பன் குழுவைச் சேர்ந்தவர்கள் என்றும், ஊத்துமலைக்காடு, பண்ணப்பட்டி என்ற இடத்தில் வனச் சரகக் காப்புப் பணியிலே ஈடுபட்டிருந்த பழனி, அபிமன்யூ ஆகியோரையும், மகாதேவன் என்கின்ற சின்னையன் ஆகிய வனக் காவலரையும் 25-4-1999 அன்று தாங்கள கடத்திச் சென்று வைத்திருப்பதாகக் கூறி, ஓர் ஒலிநாடாவையும் நான்கு கடிதங்களையும் கொடுத்து, அவைகளை ஒகேனக்கல் வனச் சரக அலுவலரிடம் ஒப்படைக்கும்படி கூறிவிட்டுச் சென்றார்கள். இந்தக் கடிதங்களில் மூன்று, வனக்காப்பாளர் அபிமன்யூ என்பவரால் அந்த மூன்றும் எழுதப்பட்டிருக்கின்றன.

அதிலே தருமபுரி மாவட்ட வன அலுவலருக்கு ஒன்று; தருமபுரி மாவட்ட ஆட்சியருக்கு ஒன்று; முதலமைச்சருக்கு ஒன்று எழுதப்பட்டவைகளாகும். அதிலே மாவட்ட வன அலுவலருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் உள்ள விவரங்கள் வருமாறு:-

"அய்யா, 25-4-1999 ஆம் தேதி நானும் திரு. ஏ. பழனி, வனக் காவலர், திரு. மகாதேவன் ஆகிய நாங்கள் Beat-தணிக்கை செய்து வரும்போது பண்ணப்பட்டியில் எங்கள் மூவரையும் அண்ணார் வீரப்பன் அவர்கள் பிடித்து வைத்துள்ளார். தாங்கள் தயவுசெய்து எங்கள மூவரையும் காப்பாற்றும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். எந்த நேரமும் எங்கள் உயிருக்கு ஆபத்து வரலாம். எனவே தாங்கள் எங்களைக் காப்பாற்றும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறோம். அய்யா, அவர்கள் கேட்கும் பணத்தைக் கொடுத்து எங்களைக் காப்பாற்றவும். அதிரடிப் படை போலீஸ் போக வேண்டாம். நீங்கள் பணத்தைத தவிர வேறு நடவடிக்கை எடுத்தால் எங்கள் உயிர் இருக்காது. அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றி, எங்களை உயிரோடு காப்பாற்றவும். அவர்கள் சொல்லும் இடம் அனுப்ப வேண்டும். உடன் தாமதிக்காமல் எங்களைக் காப்பாற்றவும்." என்று ஒரு கடிதம். இந்தக் கடிதத்திலே நமக்கும், போலீசாருக்கும் எழுந்த சந்தேகமே அதிலே ஒரு வரி, 'அதிரடிப் படை போலீஸ் போக வேண்டாம்' என்று எழுதப்பட்டிருக்கிறது. வரவேண்டாம் என்று எழுதினால்தான் அவர்கள் ஓர் இடத்திலே இருந்துகொண்டு



இங்கே வந்துவிட வேண்டாமென்று எழுதியதாக எடுத்துக்கொள்ளமுடியும். அதிரடிப் படை போலீஸ் போக வேண்டாம் என்று கடிதத்திலே குறிப்பிட்டிருப்பதிலிருந்து இவர்கள் வேறு எங்கேயோ ஓர் இடத்திலே இருப்பதாகவும், இவர்கள் வீரப்பன் இருப்பிடத்தை நாடிப் போக வேண்டாமென்று சொல்லப்பட்டதாகவும் ஒரு கருத்தும், ஒரு சந்தேகமும் போலீஸ் புலன் விசாரணையிலே எழுந்திருக்கிறது. அந்த ஒரு குறிப்பிட்ட வாக்கியத்தை வைத்தும் விசாரணை நடத்த வேண்டிய அவசியம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

மற்றொரு கடிதம் வீரப்பன் குழுவைச் சேர்ந்த சேத்துக்குளி கோவிந்தன், அவருடைய கையெழுத்தோடு ஒரு கடிதம். அது அவருடைய கையெழுத்தா என்பது தெரியாது. அவருடைய கையெழுத்திட்டதாக இன்னொரு கடிதம். அந்தக் கடிதத்தில், பர்கூர் மலை செல்வதும் தங்கள் கோரிக்கையை கடிதம் மூலம் தெரிவிப்பதாகவும், அதை நிறைவேற்ற வேண்டுமென்றும், பண்ணப்பட்டி இருளர்களைத் தாங்கள் தேடி வந்ததாகவும், இருளர்கள் கிடைககவில்லை என்றும், அங்கே கொடுத்த தகவலின் பேரில் இந்த மூவரையும் பிடித்தோம் என்றும், அந்த இருளர் பல ஆயிரக்கணக்கான ரூபாயை வாங்கிக் கொண்டு. சாப்பிட்டுவிட்டார்கள் என்றும், D.F.O., Ranger ஆகியோரைப் பிடித்துக் கொடுப்பதாக பெரும் பணம் பெற்றுக் கொண்டு, இருளர்கள் தங்களை ஏமாற்றிவிட்டதாகவும் அதிலே எழுதப்பட்டிருந்தது.

ஒலிநாடாவில் கடத்தப்பட்ட மூவர் தங்களைக் காப்பாற்றக் கோரியுள்ளதும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(முற்பகல் 10-55

கடிதங்களையும், ஒலிநாடாவையும் பெற்ற மாதன் 28-4-1999 அன்று காலை 11-00 மணிக்கு தருமபுரி மாவட்ட உதவி வனக் காப்பாளர் முத்துசாமி அவர்கள் முன்பாக அவற்றை ஒப்படைத்தார்.

மாவட்ட உதவி வனக் காப்பாளர் முத்துசாமி இக்கடிதங்களையும், ஒலி நாடாவையும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தார். மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் தன் விலாசத்திற்கு வந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு, அதன் மீது நடவடிக்கை எடுக்க பெண்ணாகரம் காவல் துணைக் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைத்தார்.

மேற்படி கடிதம் கிடைக்கப் பெற்றவுடன் பெண்ணாகரம் காவல் துணைக் கண்காணிப்பாளரின் குறிப்பின் பேரில், பெண்ணாகரம் காவல்

ஆய்வாளர் மேற்படி காவல் நிலையக் குற்ற எண் 371/99 பிரிவு 365, இந்திய தண்டனைச் சட்டத்தின்படி வழக்கு பதிவு செய்து, விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

கடத்தப்பட்ட வனத் துறை அலுவலர்கள் மூவரைத் தேட 23 காவல் துறை குழுக்கள் அமைக்கப்பட்டு, தேடும் பணியும், தகவல் சேகரிக்கும் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. வீரப்பன் நடமாட்டம் உள்ள பகுதிகளில் இருக்கும் காவல் நிலையங்களும் உஷார்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சிறப்பு அதிரடிப் படை (Special Task Force) மற்றும் கர்நாடக அதிரடிப் படை (Special Task Force) இரண்டும் இணைந்து இந்தத் தேடுதல் பணியிலே ஈடுபட்டுள்ளன. தருமபுரி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், A.D.G.P., (Special Operations) திரு A.X. அலெக்சாண்டர், I.G.P. மற்றும் சிறப்பு அதிரடிப் படை, வேலூர் சரக காவல் துறை தலைவர் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்றிருக்கிறார்கள்.

காவல் துறைத் தலைவர் அவர்களுடைய மேற்பார்வையில் கடத்தப்பட்ட வனக் காவலர்களைப் பிடிப்பதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் தெரிவிக்கப்பட்டு, அவரும் நிலைமைகளை கூர்ந்து கவனித்து வருகிறார்.

கடத்தப்பட்ட நபர்களிடமிருந்து பெறப்பட்ட ஒலி நாடாவிலும், கடிதங்களிலும் வீரப்பனின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்கும்படி கோரப்பட்டு இருந்தாலும், இது தொடர்பான கோரிக்கை எதுவும் கடத்திய நபர்களிடமிருந்து இதுவரை பெறப்படவில்லை. வனத் துறையினரைக் கடத்திச் சென்றது வீரப்பன் குழுதானா அல்லது வேறு எவராகவும் இருக்கக் கூடுமா என்பது குறித்து விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

அந்தக் குடும்பத்திற்குத் தறகாலிக நிவாரணம் அளிக்க வேண்டுமென்று வனத் துறை அதிகாரிகள் சென்று, அவர்களுடைய அன்றாடச் செலவுகளுக்கான தொகையை வழங்கியிருப்பதோடு, இன்றையதினம் அவர்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 10 ஆயிரம் ரூபாய் அந்தக் குடும்பச் செலவுகளுக்காகத் தர வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டு, அதை நிறைவேற்றவும் அதிகாரிகள் அங்கே சென்றிருக்கிறார்கள்.





இங்கே இந்த நிலைமை, கிட்டத்தட்ட 10,12 ஆண்டுக்காலமாக தமிழகத்திலே ஒரு பெரும் பரபரப்பை ஏற்படுத்திவருகின்ற நிலை என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இந்தப் போலீசாரால் அவர்களைப் பிடிக்க முடியவில்லையே என்று சொல்லும்போது அதிலே உள்ள கஷ்டங்களையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அடர்ந்த அந்தக் காடு, தமிழகத்திலே தொடங்கி கர்நாடகம் வரையிலே பரவிப் படர்ந்து, விரிந்து கிடக்கின்ற காடாகும். அதிலே ஓர் இடத்திலே இல்லாமல், ஒரு நாள்கூட ஓர் இடத்திலே தங்காமல், ஒவ்வொரு நாளும் ஓடிக்கொண்டே தன்னுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கின்ற நபர்தான் வீரப்பன் என்ற அந்தக் கொள்ளைக்காரர். அவரைப் பிடிப்பதற்கு இடைக்காலத்திலே பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. அந்த முயற்சியிலே ஒன்றாகத்தான் நம்முடைய நண்பர் டி.மணி அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, ஒரு சமாதானப் பேச்சுகூட நடைபெற்றது. நானும், கர்நாடக முதலமைச்சரும் 2, 3 முறை சந்தித்து, அதுபற்றி விவாதித்து, அப்போது நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் கோபால் அவர்கள் மூலமாக அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அது கூடிவருகிற நேரத்தில், எல்லாம் முடிந்து, நிபந்தனைகள் எல்லாம் விதிக்கப்பட்டு, வீரப்பனும் அதற்கான சம்மதத்தை 90 சதவிகிதம் வழங்கி, அந்த ஏற்பாடுகள் எல்லாம் நடைபெற்றபோது, அதிலே அரசியல் புகுந்துவிட்டது. அதை சில அரசியல்வாதிகள் குழப்பிவிட்டு அது நடைபெற முடியாத ஒரு சூழ்நிலையை உருவாக்கி, வீரப்பனுடைய மனதிலும் சந்தேகத்தை ஏற்படுத்தி, அவர் தானாக வந்து சரணடையக்கூடிய ஒரு சூழ்நிலை அன்றைக்கு கெடுக்கப்பட்டுவிட்டது. அதற்கான அரசியல் காரணங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். அதையெல்லாம் நான் இப்போது எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. இது நேரமும் அல்ல, உகந்ததும் அல்ல என்பதால் விட்டுவிடுகிறேன். மேலும் இந்த முயற்சி நிச்சயமாகத் தொடரும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்போது ஏற்பட்டிருப்பது, இவர்கள் கடத்தப்பட்டிருப்பது வீரப்பனால்தானா அல்லது வேறு சந்தனக் கட்டை வியாபாரம் செய்து கொண்டிருக்கின்ற கடத்தல் பேர்வழிகளால் இவர்கள் கடத்தப்பட்டிருக்கின்றார்களா என்பதும் இன்னும் தெளிவாகவில்லை. இதற்கிடையிலே மழை வேறு அதிகமாக அந்தப் பகுதியிலே பெய்து, அந்தக் காரணத்தால் இந்தத் தேடுதல் வேலை தீவிரமாக, தினந்தோறும் நடைபெற முடியாத ஒரு சிக்கலும் ஏற்பட்டுவிட்டது. தொடர்ந்து இந்தத் தேடுதல் வேலையிலே தமிழகக் காவல் துறையும், கர்நாடகக்

காவல் துறையும் ஈடுபட்டு இருக்கின்றன என்பதை எடுத்துக் கூறி, விரைவில் ஒரு நல்ல முடிவைக் காண்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்யும் என்பதை எடுத்துரைத்து, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன்.

*முற்பகல் 11-00*

## 3. கவன ஈர்ப்பு

### ஜவ்வாது மலையில் காவலூர்—மந்தாரக்குட்டை வனப் பாதை பழுதடைந்துள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜவ்வாது மலையில் காவலூர்-மந்தாரக்குட்டை வனத் துறைப் பாதை பழுதடைந்துள்ளதால் மலைவாழ் மக்கள் அவதியுறுவது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வனக் கோட்டத்திற்குட்பட்ட, ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஜவ்வாது மலையில், காவலூரில் இருந்து மந்தாரக்குட்டை வரை செல்லும் வனச் சாலை 1924-25-ல் வனத் துறையால் அமைக்கப்பட்டது. காவலூர் மற்றும் மந்தாரக்குட்டை கிராமங்கள் நாற்புறமும் ஜவ்வாது மலையைச் சார்ந்த ஆலங்காயம், பூங்குளம் மற்றும் இன்னர் ஜவ்வாதி காப்புக் காடுகளால் சூழப்பட்டுள்ள பகுதியாகும். இச்சாலையின் மொத்த நீளம் 5.22 கி.மீ. அகலம் 4.0 மீ. ஆகும். இச்சாலை தற்போது மண் சாலையாக உள்ளது. இருப்பினும் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் உள்ளது.





இச்சாலையினை சரளைக் கற்கள் பரப்பிய மண் சாலையாக மாற்ற தோராயமாக ரூ.3.0 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. இவ்வாறு இச்சாலையினை சரளைக் கற்கள் பரப்பிய மண் சாலையாக மாற்றினால், துறையின் தணிக்கைப் பணிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஆனால் சாலைப் பராமரிப்பு பணிகளுக்கென துறையில் மிகக் குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறுவதால் இச்சாலையினை தற்போது செப்பனிட்டு மேம்படுத்த இயலவில்லை.

எனினும் சாலையினை சரளைக் கற்கள் பரப்பிய மண் சாலையாக மாற்றத் தேவையான நிதி ரூ.3.00 இலட்சத்தினை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் பெற மாவட்ட வன அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவரைக் கோரியும் இதுவரை நிதி ஒதுக்கீடு ஏதும் கிடைக்கப்பெறவில்லை. வனத் துறைக்கு சாலைப் பணிகளுக்காக மிகக் குறைந்த நிதி ஒதுக்கப்படுவதால், வனத் துறையினால் அமைக்கப்பட்ட எல்லாச் சாலைகளுக்கும் ஆண்டுப் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.

இதனை கருத்திற்கொண்டுதான் மேற்படி சாலையினைச் செப்பனிட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினை நிதி வழங்கக் கேட்டுக் கொள்ளப்பட்டது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிதி வழங்காத நிலையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி மூலம் இச்சாலைப் பணிக்குத் தேவைப்படும் தொகை ரூ.3.00 இலட்சம் ஒதுக்கப்படுமானால, மேற்படி சாலையினைச் செப்பனிட இயலும் என்பதனால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, ஊரக வளர்ச்சி முகமை அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றின் மூலம் 1999-2000 ஆண்டின் நிதியினைப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோரப்படும் நிதி கிடைக்கப்பெற்றால் வனத் துறை மூலம் சாலை செப்பனிடும் பணி மேற்கொள்ளப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள செய்திகளைப் பார்த்தேன். 1924 ஆம் ஆண்டு, 1925 ஆம் ஆண்டு போடபபட்ட 5.22 கிலோ மீட்டர் நீளமுள்ள மண் சாலையை, ஆறு இலட்சம் ரூபாய் இருந்தால், தார்ச் சாலையாகப் போட்டுவிடலாம். மூன்று இலட்சம் இருந்தால் ஜல்லிச் சாலையாகப் போட்டுவிடலாம். நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள்,

சென்ற ஆண்டே இதுகுறித்து, மானியக் கோரிக்கைக்கான அவர்களுடைய பதிலுரையிலே, நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்தார்கள். ஆனால் ஓராண்டு கழிந்துவிட்டது. தற்போது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே, ஏற்கெனவே வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் பணத்தை நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து கோரியிருக்கிறோம் அல்லது வேறு வகையிலே பணத்தைக் கோரியிருக்கிறோம்; அந்தப் பணம் வந்துவிடும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சந்தன மரங்கள் விற்ற வகையிலேகூட பல கோடி ரூபாய் வருவாய் வரக்கூடிய இந்த வனத் துறையில், அதேபோல, தேயிலை விற்பதிலே கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் சென்ற ஆண்டு வருமானம் பெற்றிருக்கக்கூடிய இந்த வனத் துயைில், மூன்று இலட்சம் ரூபாயைக்கூட செலவிட முடியாமல், இப்படி விட்டுவைத்திருப்பது என்பது, அரசுக்கே விடக்கூடிய ஒரு சவாலாக அமைந்து விடுவதுபோலத் தெரிகிறது.

இதுமட்டுமல்ல இன்னும்கூடப் பார்த்தீர்களென்றால், கலசப்பாக்கம் தொகுதி மற்றும் போளூர் தொகுதிகளிலே நடைபெறக்கூடிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களில், பணத்தைக் கொடுத்தாலும்கூட, சாலை போட வனத் துறை அதிகாரிகள் மறுக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், பெரியவர் திருவேங்கடம், ராஜேந்திரன் போன்றவர்களெல்லாம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்குக் கொடுத்திருக்கக்கூடிய பணத்தில் கிராமங்களிலேகூட சாலைகள் போடமுடியாமல், அந்தப் பணிகளெல்லாம் தடைப்பட்டிருக்கின்றன. வனத் துறையினர் சாலை போடுகிறவர்களையும் போட விடமாட்டோம் என்கிறார்கள், அவர்கள் கையில் வைத்திருக்கிற சாலைகளையும் அவர்களும் போடமாட்டேன் என்கிறார்கள். சாலை போட்டால், ஏதோ சந்தனக் கடத்தல்காரர்கள் எல்லாம் அந்தச் சாலை வழியாக வீறையக் கடத்திவிடுவார்கள் என்று நினைக்கிறார்கள். சந்தனக் கடத்தல்காரர்கள் பூராவும், பல நூறு கிலோ மீட்டர்கள், அவர்கள் தலையிலே சுமந்துபோய் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகத்தான் பேச வேண்டும் வீரப்பன் விஷயத்திலே பேசுவதற்கு உங்களுக்கு வாய்ப்பில்லை என்பதற்காக இப்போது பேசிக்கொண்டு இருக்கிறீர்களா? சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்படியாவது, முதலமைச்சரிடமாவது கோரி—மூன்று இலட்சம் என்பதில் வெறும் ஜல்லி சாலைதான் கிடைக்கும். ஆறு இலட்சம் ரூபாய் பெற்று, தார்ச் சாலை போட்டுத் தருவதற்கும், அதேபோல, கலசப்பாக்கம், போளூர் தொகுதிகளில் இருக்கக்கூடிய பகுதிகளில் எல்லாம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மூலம் சாலைகளைப் போடுவதற்கு வனத் துறை அதிகாரிகள் அனுமதி அளிப்பதற்கும் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின் மூலம், மண் சாலை 2036 கிலோ மீட்டரும், சரளைக்கல் பரப்பிய சாலை 695 கிலோ மீட்டரும், தார்ச் சாலை 291 கிலோ மீட்டரும், ஆக மொத்தம் 3,000 கிலோ மீட்டருக்கு மேல் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு ஆண்டுக்கு 30 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்குகிறார்கள். இந்தக் குறைந்த தொகை அவற்றைப் பழுது பார்ப்பதற்குத்தான் போதுமானதாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொகுதிக்கு ஒதுக்கிய 50 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயை ஒதுக்கினால், விரைவிலே அந்தச் சாலையை வனத் துறை மூலமாகப் போட்டுக் கொடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி என்னுடைய பகுதி என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அது மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்களுடைய வாணியம்பாடி தொகுதி. என் தொகுதி அல்ல. என்னுடைய தொகுதியாக இருந்தால் தாராளமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அந்தப் பணத்திலிருந்து கொடுத்துவிட்டிருப்பேன். ஆகவே—அப்துல் லத்தீப் அவர்கள் இன்று வரவில்லை—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலமைச்சரிடமிருந்து எப்படியாவது ஆறு இலட்சத்தைப் பெற்று தார்ச் சாலை போடுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து வேண்டுமானாலும் வாங்கி அதைப் போடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 மே 6

## 4. மானியக் கோரிக்கைகள், 1999--2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்

### (ஆ) கோரிக்கை எண் 51—தமிழ் வளர்ச்சி—பண்பாடு

### (அ) கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999-2000 ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.21,90,91,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1782, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் உள்ள வருவாயற்ற கோயில்களை புதுப்பித்து திருப்பணி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 157, திரு. ஐ. கணேசன்.



1999 மே 6]

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் உள்ள அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் கோயிலின் இராஜகோபுரத் திருப்பணிக்கு அரசு கோயில் பராமரிப்பு நிதியிலிருந்து நிதி உதவி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 649, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1591, திரு. ப. ரங்கநாதன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 697, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, பாலவாடியில் புராதன திருஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலின் கட்டடங்கள் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட்டு வெள்ளை அடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 128, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1025, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி அருள்மிகு சங்கமேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான, யாத்திரிகர்கள் தங்கும் விடுதியைச் செப்பனிட்டு, புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1712, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகூர் சிவன் கோயிலின் குளத்தினை செப்பனிட வேண்டியதன அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1550, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.



**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1136, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, குரங்காடுதுறையில் உள்ள ஈஸ்வரர் கோயிலுக்குத் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 508, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1637, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, கத்தாழை ஆதிதிராவிடர் காலனியில் உள்ள திருக்கோயிலின் திருப்பணிக்கு நிதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1366, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடியிலுள்ள மீனாட்சியம்மன் கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1104, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குழித்துறையிலுள்ள சிவன் கோயிலுக்குத் திருப்பணி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2712, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, குமார கோயில், கேரளபுரம் மாகாதேவர் கோயில் ஆகியவற்றுக்கு மகர கும்பாபிஷேகம் நடத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 380, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தண்டராம்பட்டு தொகுதி, அரடாப்பட்டில் உள்ள அனவரத தாண்டேஸ்வரர் கோயிலுக்குத் திருப்பணி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1260, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 20, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சின்னதிருப்பதி பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயிலுக்கு ராஜகோபுரம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1194, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிப்பட்டு வட்டம், கரம்பேடு கிராமத்திலுள்ள ஈஸ்வரன் திருக்கோயிலையொட்டி புதிய மணிமண்டபம் ஒன்று அறநிலையத் துறையினால் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 541, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, மடப்புரம் பத்திரகாளியம்மன் கோயிலின் நிதியைக் கொண்டு மடப்புரத்தில் ஒரு பெண்கள் கல்லூரி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1221, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் கோயிலின் உபரி நிதியிலிருந்து, அங்கு பெண்கள் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1289, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் அருள்மிகு முத்தாம்பிகா சமேத அர்த்தநாரீஸ்வரர் ஆலயத்தின் திருப்பணியினை முடித்து குடமுழுக்கு செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.21,90,91,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**(ஆ) கோரிக்கை எண் 51-தமிழ் வளர்ச்சி—பண்பாடு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 51, தமிழ் வளர்ச்சி - பண்பாடு. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.30,61,51,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1817, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் வரும் ஆண்டில் இசைப்பள்ளி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,61,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 338, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தற்போதைய தமிழ்த்தாய் வாழ்த்தில் ஒன்றுக்கு மேற்பட்ட சமஸ்கிருத சொற்கள் இருப்பதோடு கருத்து முரண்பாடும் உள்ளதால், இதனை மறு ஆய்வு செய்து பாவேந்தரின் 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்' என்ற பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்தாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,61,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 650, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,61,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1607, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் சட்டப் படிப்பு பயிலும் மாணவர்களின் நலன் கருதி சட்டப் படிப்பிற்குரிய பாட நூல்களை தமிழில் அச்சிட்டு வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,61,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 725, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கவிஞர் புதுவை சிவம் அவர்களின் கவிதைகளை நாட்டுடைமையாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,61,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 127, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,61,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1033, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்ப் புத்தாண்டு தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடும் விதத்தில் அதனைத் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,61,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1710, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழுக்கென தனிக் கொடியும் நாளும் அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,61,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1363, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,61,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2980, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழில் புதிதாகப் புத்தகம் எழுதி வெளியிடும் நூலாசிரியர்களை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,61,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 507, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் தென்னம்பாளையம், பட்டுக்கோட்டையார் நகரில் அமைந்துள்ள தாய்த் தமிழ்ப் பள்ளிக்கு மாநில அரசு உதவ நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,61,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1615, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,61,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1110, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உலகத் தமிழ் ஆராய்ச்சி மையத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு 1989 ஆம் ஆண்டு முதல் ஊதிய உயர்வினை நிலுவைத் தொகையுடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,61,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 19 திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நம்முடைய பண்பாட்டை வளர்க்கும் இயல், இசை, நாடகக் கலைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அவர்களுக்கு ஆலயங்களில் பணி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,61,51,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் மற்றும் தமிழ் வளர்ச்சி - பண்பாடு ஆகிய இரு துறைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் நான் அவற்றுக்கான விளக்கத்தை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 161 முதல் 213 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

*முற்பகல் 11-10*

## 5. அறிவிப்பு

**உறுப்பினர்களுக்கு திருக்கோயில்கள் பிரசாதம் வழங்க ஏற்பாடு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கையை முன்னிட்டு, உறுப்பினர்களுக்குப் பிரசாதம் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பிரசாதம் இன்று முற்பகல் 1¾ மணியளவில், பேரவையை ஒட்டியுள்ள பிளாசாவில் வழங்கப்படும் என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சர்க்கரைப் பொங்கல் பிரசாதம் பார்த்தசாரதி கோயிலில் இருந்தும், பஞ்சாமிர்த பிரசாதம் பழனி கோயிலில் இருந்தும் வந்திருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1999--2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள்—சட்ட நிருவாகம்-தொடர்ச்சி**

**(ஆ) கோரிக்கை எண் 51-தமிழ் வளர்ச்சி - பண்பாடு - தொடர்ச்சி**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1999-2000* ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்கிறது. மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தை திரு. ப. மோகன் கந்தசாமி அவர்கள் தொடங்கி வைப்பார்கள்.

***திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையிலே என்னைப் பேசப் பணித்த என்னுடைய இதய நாயகன் முருகனுக்கும், என்னுடைய அன்புத் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, பின் இருக்கையிலே இருந்த என்னை, முன் இருக்கைக்குக் கொண்டுவந்த தங்களுக்கும் நன்றி கூறி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். *(சிரிப்பு)*





"தென்னாடுடைய சிவனே போற்றி:
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!"

என்று சொல்லி, நம்முடைய இறைவனை, உலகளாவிய அளவிலே இப்போது சாதி, சமய பேதமற்ற ஒரு சமதர்மத்தை அமைக்கக்கூடிய அளவுக்குப் பணித்துக் கொடுத்த, இந்து சமயத்தினுடைய பெருமைகளைப் பேசுவதிலே நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் - தலைமை)*

இந்தத் துறையை நம்முடைய அரசு ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால், ஏராளமான கோயில் நிலங்களை மிக்க சிரமத்தின்பேரிலே, கடுமையான நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து, மீட்டுக் கொடுத்ததற்கு முதலிலே நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பழமையும் புதுமையும், அருளாட்சியும் மிக்க—ஏராளமான கோயில்கள்—கிட்டத்தட்ட *36,253* கோயில்கள் இருப்பதாகவும், அவற்றிலேயிருந்து சுமார் ரூ.*125.42* கோடி வருமானம் வருவதாகவும் குறிப்புகள் இருக்கின்றன ஆகவே இதுபோன்ற ஏராளமான பழமையான கோயில்களை நாம் எடுத்து திருப்பணிகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், பாடல் பெற்ற ஸ்தலங்களாக, திண்டிவனம் பக்கத்திலே இருக்கிற வக்கிரகாளி அம்மன் கோயில், என்னுடைய தொகுதியில் தென்சென்சேரி மலையில் உள்ள முருகன் கோயில் ஆகியவை உள்ளன. மேலும் திருமுருகன்பூண்டி கோயிலுக்குச் சென்று ஒரு மண்டலம், அதாவது 48 நாட்கள் இருந்தால், தீராத பைத்தியங்கள் எல்லாம் தீர்ந்து, தெளிவு பெற்று வரக்கூடிய நிலைமைகளையெல்லாம் நாம் பார்க்க முடியும். அந்தக் கோயில்களையெல்லாம் உடனடியாகச் செப்பனிட்டு, அவற்றிற்கெல்லாம் திருப்பணிகள் செய்ய வேண்டிய சூழ்நிலையை நான் இந்தநேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. பல அற்புதமான ஆற்றல் பெற்ற திருக்கோயில்கள் எல்லாம் இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் முன்னுரிமை கொடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆட்சியிலே, இதுபோன்ற திருப்பணிகளைச் செய்வதற்கெல்லாம் ஓர் உயர்மட்டக் குழுவைப் போட்டிருந்தார்கள். திரு. சிவந்தி ஆதித்தனுடைய

தலைமையிலே அந்தக் குழு அமைக்கப்பட்டது. இப்போது அந்தக் குழு இருக்கிறதா? செயல்படுகிறதா? அப்படிச் செயல்படாவிட்டால், ஆன்மீகப் பெரியவர்களாக இருக்கும் அருட்செல்வர் மகாலிங்கம் போன்றவர்களை, ஏன், நம்முடைய சபாநாயகர் அவர்களைக்கூட, அந்தக் குழுவிலே போட்டு—அவருடைய தந்தையார்தான் ஐயப்பனையே உலகுக்குக் காட்டியவர்—இதுபோன்ற ஆன்மீகப் பெரியவர்களை எல்லாம் குழுவிலே போட்டு, அத்தகைய ஏராளமான பழைய திருக்கோயில்களுக்கு, பாடல் பெற்ற கோயில்களுக்கு எல்லாம் முன்னுரிமை கொடுத்து, அவற்றிற்குத் திருப்பணி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்திலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நெருங்கிய நண்பராக இருந்த என.டி.ஆர்.—என்.டி. ராமாராவ் அவர்கள்—திருப்பதி திருநகரத்தை ஒரு வாடிகன் நகரம்போல, ஒரு தன்னாட்சி மிக்க நகரமாக ஆக்க வேண்டுமென்று சொல்லி, பெருமுயற்சி எடுத்திருந்தார்கள். துரதிருஷ்டவசமாக, அவர்கள் காலத்திலே அது செய்து முடிக்கப்படவில்லை. ஆனாலும் இப்போது திருப்பதி திருமலையில், அற்புதமான பல்வேறு திருப்பணிகள் செய்யப்பட்டு, அங்குள்ள ஏழுமலையானைத் துரிசிக்க வரக்கூடிய பக்தர்களுக்கு ஏராளமான வசதிகள் செய்து கொடுத்திருப்பதை நாம் நேரிலே காண முடிகிறது. ஆக்கிரமித்த கடைகளை எல்லாம் அப்புறப்படுத்தி மிகச் சுத்தமாகவும், மிக அருமையாகவும் அந்தக் கோயில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

*முற்பகல் 11-15*

அதேபோலத்தான் நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற பழனி திருத்தலம். அதுபோல, செந்தில் ஆண்டவர் வசிக்கின்ற திருச்செந்தூர் போன்ற கோயில்களை நாம் ஏன் எடுத்து பராமரிக்கக்கூடாது என்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் திருக்கோயில்களையெல்லாம் நாம் எடுத்து Litter Free Zone, அதாவது பரிசுத்த நகரங்களாக அறிவித்து, பராமரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தற்போது அக்னி நட்சத்திரம் நடந்து கொண்டு இருக்கிறது. இப்போதுகூட பழனியிலே ஏராளமான பக்தர்கள் அந்தத் திருக்கோயிலை வலம் வருவார்கள் அங்கே சொல்ல முடியாத அளவிற்கு ஏராளமான கடைகளும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் அகற்ற வேண்டும். அதேநேரத்தில் பழனி முருகனைப் பொறுத்தவரையில் ஒரு செய்தியை நான் இங்கே சொல்லியாக வேண்டும்.



பழனி முருகன் சிலை அற்புதமான நவபாஷாணங்களால், சித்தர்களால் செய்யப்பட்டு அருளாட்சி செய்கின்ற ஓர் அற்புதமான தலமாகும். கடந்த காலங்களிலே எப்படியோ அந்த நவபாஷாணத்தினுடைய தன்மையை அறிந்து கொண்டார்கள். அங்கே ஏராளமான வைத்தியசாலைகள் இருக்கின்றன. யார், எதைச் செய்தார்கள் என்று சொல்ல முடியாவிட்டாலும்கூட, கொஞ்சம் கொஞ்சமாக அந்தச் சிலை சுரண்டப்பட்டு, இன்று அந்தச் சிலை skeleton-ஆக இருக்கிறது. அதாவது கடந்த காலத்திலே அபிஷேகம் செய்து கொண்டு இருந்ததையெல்லாம் நிறுத்தி வைத்துவிட்டார்கள். இப்போது மூன்று முறைதான் அபிஷேகம் செய்கிறார்கள். அங்கு செய்யப்படுகின்ற அபிஷேகத் தீர்த்தத்தைக் குடித்தால் தீராத நோய்களும் தீரும் என்பதை நாம் கண்டிருக்கின்றோம். அந்த முருகனுடைய கௌபீனம் என்று சொல்லக்கூடிய அந்த உள்ளாடையை காலையிலே எடுத்துப் பிழிந்து (குறுக்கீடு)—நம்முடைய சுப்பராயன் அவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள்— அந்தக் கோவணத்தை எடுத்துப் பிழிந்து குடித்தால் நிச்சயமாக வயிற்றிலே இருக்கின்ற உபாதைகள் எல்லாம் தீர்கின்றது என்பது இன்றைக்கும் நிதர்சனமான உண்மை. ஆகவே, அப்படிப்பட்ட சிலையை எப்படிப் பராமரிக்கப் போகிறோம்? அதேபோல...... (மணியடிக்கப்பெற்றது)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மனிதனுடைய கோவணத் துணியைப் பிழிந்து குடித்தால் தீராத நோய்கள் எல்லாம் தீரும் என்பதற்கு அறிவியல் ரீதியாக ஏதாவது ஆதாரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த ஆண்டவன் சிலை நவபாஷாணத்தினால் செய்யப்பட்டது என்று சொல்கிறார்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** அறிவியல் ரீதியாக ஆதாரம் வேண்டுமென்று நண்பர் கேட்கிறார். பக்கத்திலே இருக்கின்ற திருமுருகன்பூண்டிக்குப் போய் பார்த்தால் தெரியும். 48 நாட்கள் பக்தர்கள் அங்கே சென்று தங்களுடைய மனநோயைத் தீர்த்து வருகிறார்கள். அதேநேரத்திலே அரசியல்வாதிகளுக்கு அது தீராது. அது நிச்சயமாக முடியாது.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை உறுப்பினர்களுக்கு திருமுருகன்பூண்டி பற்றித் தெரியாது. திருமுருகன்பூண்டி கோயிலுக்கு பைத்தியம் பிடித்தவர்களைத்தான் கொண்டு செல்வார்கள். எனவே அவர் திருமுருகன்பூண்டியைப் பற்றிச் சொல்கிறபோது தவறாகக் கருத வேண்டியிருக்கிறது.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கும் அற்புதமான சக்தி வாய்ந்த திருக்கோயில்களையெல்லாம் நாம் பார்க்க முடியும். பல அற்புதமான திருக்கோயில்கள் எல்லாம் இருக்கின்றன. அதைப்பற்றியெல்லாம் பின்னால் சொல்கிறேன். நம்முடைய நண்பர் என்னுடைய கவனத்தைத் திருப்பிவிட்டார்.

பழனியிலே அபிஷேகம் செய்வதற்காக செப்புச் சிலையை வைத்து இருக்கிறார்கள். அபிஷேகம் செய்யும்போது அது கசண்டு விடுகிறது. அங்கு ஏராளமான தங்கம் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே தங்கத்திலே ஒரு சிலை வைத்து—நாம் அந்தச் சிலையைப் புதுப்பிக்கும் வரை—அதற்கு அபிஷேகம் செய்தால் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதேபோல நம்முடைய....(குறுக்கீடு)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நவபாஷாணத்தால் செய்யப்பட்ட சிலையைத் தண்ணீரால் குளிப்பாட்டி, அந்த நீரைக் குடித்தால் வியாதிகள் தீரும் என்று மாண்புமிகு உறுப்பினர் மோகன் கந்தசாமி சொன்னதைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் கேள்வி எழுப்பினார். கருவேலமரம் எனப்படும் மரத்தால் செய்யப்பட்ட குவளையில் நீரை ஊற்றிக் குடித்தால் நீரிழிவு நோய் குணமாகும். அதாவது சுவாதி குவளை என்று ஒரு குவளை இருக்கிறது. ஆகவே இப்படிபட்ட குணங்கள் இருப்பதை மருத்துவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். எனவே இதிலே அதிசயம் இருக்கிறதா இல்லையா என்பதை ஆராய்ந்து சொல்ல வேண்டுமேயொழிய அவசரப்பட்டு சொல்லக்கூடாது என்பதை இந்த அவைக்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக, வியாதி தீருகிறது என்பது நவபாஷாணத்தாலா அல்லது ஆண்டவன் அருளாலா என்ற கேள்விதான் இப்போது எழுகிறது. ஆண்டவன் அருளால் என்றால் நவபாஷாணத்தைப்பற்றிப் பேசக்கூடாது. நவபாஷாணத்தைச் சுரண்டி விட்டார்கள் என்று கூறி அதனால் இப்போது ஆண்டவனுக்கு அங்கே அபிஷேகமே நடைபெறவில்லை என்று சொல்வதிலேயிருந்து இதிலே நவபாஷாணத்தினுடைய



பெருமையைத் தான் மாண்புமிகு உறுப்பினர், தமிழ் மாநில காங்கிரஸ் சார்பிலே இங்கே இந்த விவாதத்தைத் தொடங்கிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதல்லாமல் முருகனுடைய பெருமையைச் சொல்வதாகத் தெரியவில்லை. ஆகவே பெருமை நவபாஷாணத்திற்கா அல்லது முருகனுக்கா என்பதை அவர்தான் விளக்க வேண்டும்.

*முற்பகல் 11-20*

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினரைப் பேசவிடுங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக வியாதி வரும்போது நோய் பாதி, பேய் பாதி என்று சொல்வார்கள். நோயை குணப்படுத்த வேண்டும் என்றால், மனதிலே தைரியத்தைக் கொடுக்க வேண்டும்; மனதிலே நம்பிக்கை ஏற்பட வேண்டும். ஆகவே நவபாஷாணத்தால் வியாதி குணமாகின்றது என்று இருந்தாலும்கூட, பக்தி உள்ளவர்கள்தான் அதன்மீது ஒரு நம்பிக்கை வைத்து, அதனை அருந்துவதாலும் நோய் குணமாகும். ஆகவே உண்டு என்பாருக்கு உண்டு; இல்லை என்பாருக்கு இல்லை. இல்லை என்றால் இல்லை. உண்டு என்று நாங்கள் சொன்னால் உண்டு.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அப்படியானால், பழனி ஆண்டவனை சுரண்டியவர்கள் பக்தர்களா, பக்தி இல்லாதவர்களா? (சிரிப்பு)

**திரு. ப. மோகன் கந்தசாமி:** பகைவர்களுக்கும் அருளக்கூடியவன் பழனி ஆண்டவன். ஆகவே சுரண்டியவர்களுக்கும் அருள் பாலிக்கிறானேயொழிய, அவர்களைத் தண்டிப்பதில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆதீனங்களுடைய ஏராளமான சொத்துக்களையெல்லாம் நிலங்களையெல்லாம் அவர்கள் மீட்க முடியாமல் திணறுகிறார்கள். அதேநேரத்திலே வருமானம் வந்து கொண்டிருக்கின்ற ஆதீனங்களை எல்லாம் பார்க்கிறோம். பேரூர் ஆதீனம், சிறுவை ஆதீனம், குன்றக்குடி ஆதீனம் போன்ற ஆதீனக்கர்த்தாக்கள் இப்போது இறைப் பணியோடு மக்கள் பணியையும் சேர்த்து செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் பல திருமடங்கள் அதிக சொத்துக்களை வைத்துக்கொண்டு, இதுபோன்ற காரியங்களைச் செய்வதில்லை. ஆகவே அவர்களைக் கண்காணித்து,

அவர்கள் சரியான முறையிலே தங்களுடைய கடமையைச் செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கோயில்களிலே இறைவனுடைய திருநாமங்களைப் பாடக்கூடிய ஓதுவாமூர்த்திகளுடைய நிலை மிகவும் பரிதாபமாக இருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கைத்தரம் மிக மிகக் கீழே சென்று கொண்டிருக்கிறது. அவர்களுக்கு உரிய சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கிராமப்புறங்களிலே இருக்கின்ற கிராமக் கோயில்களிலே பணியாற்றக்கூடிய பூசாரிகளுக்குத் தரப்படும் ஊதியம் குறைவாக இருக்கிறது. அதையும் அதிகரித்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தமிழ்மீதுள்ள ஆர்வத்தின் காரணமாக தமிழிலே அர்ச்சனையைச் செய்ய வேண்டும் என்று சொன்னதன் காரணமாக இன்று எல்லாத் திருக்கோயில்களிலும் அற்புதமான அழகு தமிழிலே அர்ச்சனைகள் எல்லாம் செய்யப்படுகின்றன. அதேபோல கும்பாபிஷேகத்தையும் செய்ய வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். இதைப்பற்றி நான் பல சிவாச்சாரியர்களை எல்லாம் கேட்கும்போது அது சாத்தியம்தான், ஆனால் அதற்கென்று சில கிரந்தங்களையும் நம்முடைய புராண இதிகாசங்களிலேயிருந்து பாட்டுக்களை எல்லாம் எடுத்து அதை ஓர் அமைப்பாக அமைக்கும் வரையில் பொறுமையாக இருக்க வேண்டும் என்றும் நிச்சயமாக அதைச் செய்ய முடியும் என்றும் சொல்கிறார்கள். இப்போது பேரூர் மடத்திலே அந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஆகம விதிகளை எப்படியெல்லாம் எடுக்க வேண்டுமோ அப்படி எடுத்து அதை மற்ற சிவாச்சாரியர்களும் பின்பற்றக்கூடிய அளவிற்கு நம்முடைய அரசின் மூலமாக அதைப் புதுப்பித்து, பதிப்பித்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வருமானம் இல்லாத திருக்கோயிலுக்கு ஒரு கால பூஜையாவது செய்ய வேண்டுமென்று நமமுடைய அரசு கட்டளையிட்டிருக்கிறது. அந்தமாதிரி செய்கிறார்களா என அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) இது ரொம்ப முக்கியமான கருத்து. அடுத்து மருதமலை திருப்பணி மிகவும் தாமதமாக நடந்து கொண்டிருக்கிறது. இப்போது பேரூரிலே ஒரு தேர் செய்ய வேண்டுமென்று சொல்லி நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாய் இருக்கிறது. ஆனாலும் அந்த அம்மனுடைய தேர் செய்யவில்லை. அதேபோல் சோளிங்கபுரத்திலே இருக்கிற ஓர்



அற்புதமான ஆற்றல் படைத்த யோக நரசிம்ம மூர்த்தியினுடைய கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால், 1,300 படிகளைக் கடக்க வேண்டும். அதற்கு ஒரு winch அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டும் போதாது. அங்கே தேர்த் திருப்பணிக்காக 9 இலட்சம் ரூபாயை அவர்கள் கொடுத்திருக்கிறார்களாம். எனவே அதைச் செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே அமைச்சர் அவர்களிடம் சென்ற முறையும் ஒன்றைச் சொன்னேன். இப்போது ஏராளமான சேவார்த்திகள் தங்கத் தேர் செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஏனோ நம்முடைய அமைச்சர் அவர்கள் அது திருடு போய் விடும், எனவே கூடாது என்று சொல்கிறார்கள். ஏராளமான சொத்துக்களை நம்முடைய முன்னோர்கள் கோயிலுக்குக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அவை அனைத்துமா திருடு போய் விட்டது? எனவே மீண்டும் அதைப் புனராலோசனை செய்து தங்கத் தேர் செய்வதற்கு நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்று. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்டு நம்முடைய முதல்வர் அவர்களால் புதுப்பிக்கப்பட்டு, தோற்றுவிக்கப்பட்ட ஒரு நிறுவனம். ஆனால் அந்த நிறுவனத்தினுடைய இயக்குநர் கர்நாடகத்திலேயிருந்து வந்திருக்கிறார். திரு. சு. இராமர் இளங்கோ என்ற நபர் கர்நாடகத்திலேயிருந்து வந்துள்ளார். எதற்காக இந்நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டதோ அதற்கான காரியத்தைச் செய்யாமல், தன்னுடைய அலுவலர்களையும் அங்கேயிருக்கின்ற மற்றவர்களையெல்லாம் தவறாகப் பேசுவது போன்ற காரியங்களையெல்லாம் செய்துகொண்டு இருக்கிறார். அங்கே இருக்கின்ற ஊழியர்களுக்கும் சரியான முறையிலே ஊதியம் கொடுக்காமல் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறார். ஏன் நம்முடைய தமிழ்நாட்டிலேயிருந்து தமிழ் ஆராய்ச்சிக் கழகத்திற்கு இயக்குநரைப் போட முடியவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே வேறு ஒருவரை நியமித்து நல்ல முறையிலே அந்நிறுவனம் செயல்படுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

***திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகப் பொது மறையாகிய திருக்குறள் தமிழ்நாட்டில் தோன்றியதால், தமிழராகிய நமக்கும், தமிழ்நாட்டிற்கும் உலகம் உள்ளவரை பெருமை. அத்தகைய சிறந்த தெய்வத்தன்மை வாய்ந்த திருக்குறளைத் தந்த திருவள்ளுவர்,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்ற முதல் குறட்பாவின் வாயிலாக உலகத்து உயிர்களெல்லாம் இறைவனை முதற்காரணமாகக் கொண்டு தோன்றுகின்றன என்று சொல்லியுள்ளார்.

இறைவனைப் பல்வகையில் காணலாம். ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர் பேரறிஞர் அண்ணா. நமது உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்த்தாய் வடிவத்தில் இறைவனைக் காண்கிறார்கள். கலைஞர் அவர்களுடைய உயர்ந்த கொள்கைகள் மற்றும் இலட்சியங்களில் இறைவனைக் காணும் நான், என்னுடைய குலதெய்வமான பழையகோட்டை அருள்மிகு ஆரூர் அம்மன் வடிவத்தில் இறை வணக்கத்தைச் செலுத்துகிறேன். எனவேதான் மாண்புமிகு தமிழ்க்குடிமகனாரின் இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கையில் பேசுவதை சிறப்பு மிக்கதாக நான் கருதுகிறேன். அதற்கு அனுமதி வழங்கிய தங்களுக்கும், பொதுநலச் சேவை செய்ய எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய தூய நன்றியையும், வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தகப்பனார் திரு. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் அமைச்சராக இடம் பெற்றிருந்த, ஆத்திகர் ஆட்சி என்று சொல்லிக்கொண்ட காங்கிரஸ் ஆட்சியில் ஓட்டப்படாத திருவாரூர் தேரை ஓட்டிய நமது கலைஞர் அவர்கள் எப்போது ஆட்சி பீடத்தில் அமர்ந்தாலும் அது கோயில்களுக்கெல்லாம் ஒரு பொற்காலமாக அமைந்து விடுகிறது. தி.மு.க. ஆட்சியில் நூற்றுக்கணக்கான கோயில்களில் குடமுழுக்கு விழா நடைபெற்று வருவதை அனைவரும் பார்க்கிறோம். ஏன், என்னுடைய காங்கேயம் தொகுதியையே எடுத்துக்கொண்டால், கடந்த 2 ஆண்டுகளில் சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், ஊதியூர் உத்தண்ட வேலாயுத சுவாமி திருக்கோயில்,



பழம்பெருமை வாய்ந்த நத்தக்காடையூர் ஜெயம் கொண்ட ஈஸ்வரர் கோயில், சென்னிமலை ஈஸ்வரர் கோயில் ஆகிய கோயில்களில் திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. உபயதாரர்கள் உதவ முன்வந்தபோதிலும் திருப்பணி வேலைகளை முழுமையாக நிறைவு செய்வதற்கு இந்து சமய அறநிலையத் துறையின் அனுமதி மற்றும் உதவி தேவைப்படுகிறது. இதுசமயம் சிவன்மலைக் கோயில் தங்க ரதப் பணிக்காக அனுமதி வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நத்தக்காடையூர் ஜெயம் கொண்ட ஈஸ்வரர் திருக்கோயில் திருப்பணிக்காக ஆகும் செலவில் நான்கில் ஒரு பங்காக ரூ.25 இலட்சத்தையும், அதுபோல் ஊதியூர் உத்தண்ட வேலாயுத சுவாமி திருக்கோயில் திருப்பணி வேலைகள் முழுமைபெற ரூ. 5 இலட்சத்தையும், சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் வைப்பு நிதியிலிருந்து கொடுப்பதற்கு — இதற்கு முன்மாதிரி உள்ளது — அனுமதி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னிமலைக் கோயில் நீங்கலாக மேற்சொன்ன அனைத்துக் கோயில்களும், சிவன்மலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் செயல் அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ள கோயில்கள் ஆகும். ஆனால் இந்தத் திருக்கோயிலின் செயல் அலுவலர் 28-9-1998 அன்று பணி மாற்றம் செய்யப்பட்டு 7 மாதங்களாகியும் — பல இலட்சம் மதிப்புள்ள திருப்பணி வேலைகள் இந்தக் கோயில்களில் நடந்து கொண்டு இருந்தாலும் — இக்கோயிலுக்கென்று தனி செயல் அலுவலர் இன்றுவரை நியமிக்கப்படவில்லை. அதனால் திருப்பணிப் பணிகள் சற்றுப் பின்னடைவு அடைந்துள்ளன. எனவே இக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்து கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பழனி மலைக் கோயிலில் மணிக்கு 300 பக்தர்களைக் கொண்டு செல்லும் இப்போதுள்ள இழுவை ரயில்—winch—வசதி போதவில்லை என்பதால் சேவார்த்திகளுடைய நலன் கருதி ரூபாய் இரண்டு கோடி செலவில் மணிக்கு 600 நபர்களைக் கொண்டு செல்லும் புதிய கம்பி வழிப் பாதை—rope way—ஒன்று அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காகும் செலவினத்தை ஒரே வருடத்தில் கட்டணமாகப் பெற்றுவிடலாம்.

முற்பகல் 11-30

இந்து சமய அறநிலையத் துறையின் பெருமைகளைச் சொல்லும்போது அதிலுள்ள சில குறைகளையும் சுட்டிக் காட்டி, ஆக்கபூர்வமான சில கருத்துக்களைச் சொல்ல வேண்டியது அவசியமாகிறது. முதலாவதாக துறைக்குச் சம்பந்தப்பட்ட உதவிக் கோட்டப் பொறியாளர் பணி இடத்தைப் பற்றியதாகும். தற்போது மூன்று மாவட்டங்களுக்கென்று ஒரே ஒரு உதவிக் கோட்டப் பொறியாளர் உள்ளார். அவருக்குக்கீழ் பணிபுரிய மாவட்டத்துக்கு ஓர் உதவிப் பொறியாளர் இருக்கிறார். ஆனால் நான் முன்பு சொன்னதைப்போல, அதிக அளவில் திருப்பணி வேலைகள் நடைபெறுவதால் இவர்களால் உரிய நேரத்திற்குள் மதிப்பீடுகளைத் தயாரித்துக் கொடுக்க முடிவதில்லை. அதனால் திருப்பணி வேலைகளுக்கான அங்கீகாரம் பெறுவதில் அதிக காலதாமதமாகிறது. இதைப்போக்கும் வகையில், அங்கீகரிக்கப்பட்ட பொறியாளர்களின் குழுவினை—approved panel of Chartered Engineers —மாவட்டந்தோறும் ஏற்படுத்தி, அவர்கள் மூலமாக திருப்பணி வேலைகளின் மதிப்பீடுகளைத் தயார் செய்து அதனைத் துறையின் உதவிக் கோட்டப் பொறியாளர் வாயிலாக அங்கீகரிக்கச் செய்யலாம் அல்லது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் உதவிக் கோட்டப் பொறியாளரை நியமித்து, அவருக்குக்கீழ் தேவைக்கேற்ப இளநிலைப் பொறியாளர்களை நியமிக்கலாம். மதிப்பீடுகள் தயாரிப்பதில் ஏற்படும் தாமதங்களை இம்முறை தவிர்க்கும்; கோயில் பராமரிப்பு வேலைகளையும் சிறப்பாகக் கவனிக்க முடியும்.

அதேபோல் நகைகளைச் சரிபார்ப்பதற்காக மாநில அளவில் உள்ள அலுவலர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் தற்போது 8 உதவி ஆணையாளர்கள் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதை குறைந்தபட்சம் 11 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நகைகளைக் கொடுத்தபடியே வைத்துக்கொள்வதற்குப் பதிலாக, அவற்றை உருக்கி தங்கம் அல்லது வெள்ளிக் கட்டிகளாகக் கோயில்களில் வைத்துக்கொள்ள ஒரு நிரந்தர ஏற்பாட்டினையும் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கோயில் கணக்கு ஆய்வுப் பணிகள் சம்பந்தப்பட்டது. தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை 1959 ஆம் வருடத்திய சட்டத்தில், சட்டப்பிரிவு 87-ல் உட்பிரிவு 2-ன்படி, அனுமதிக்கப்பட்ட தணிக்கையாளர்களால் அறநிலையங்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு அறிக்கை தயார் செய்யப்படுகிறது.



மாவட்ட அளவில் ஒரு மண்டலத் தணிக்கை அதிகாரியின் தலைமையின்கீழ் ஓர் உதவித் தணிக்கை அதிகாரியும், தணிக்கைக் கண்காணிப்பாளரும், சில தணிக்கை ஆய்வாளர்களும் இப்பணியைச் செய்கின்றனர்.

கணக்குகள் தணிக்கை செய்யப்பட்ட பின்னர் தணிக்கைத் தடை— audit objection—அறிக்கை அந்தந்த அறநிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. அதற்கு அந்த அறநிலையத்தின் அதிகாரி பத்திவாரி பதில் அனுப்பிய பின்னர் அந்த மாவட்ட இணை ஆணையரும், மண்டலத் தணிக்கை அதிகாரியும் தணிக்கை கூட்டமர்வு, Joint sitting வைத்து அந்தத் தணிக்கைத் தடைகளில் பெரும்பாலானவற்றைத் தள்ளுபடி செய்கின்றனர். இவ்வாறு பணமதிப்பு இல்லாத தணிக்கைத் தடைகள் தள்ளுபடி செய்வதில் ஆலயத்திற்கு இழப்பு ஏதும் இல்லை. ஆனால் பண மதிப்புடைய தணிக்கைத் தடைகள் எழுப்பப்பட்ட பின்னர் அவற்றைக் கூட்டமர்வில் தள்ளுபடி செய்வதால், இந்தத் தடைகள் எந்த நோக்கத்தில் எழுப்பப்பட்டன, பின்பு ஏன் அதைத் தள்ளுபடி செய்தார்கள் என்ற நியாயமான கேள்வி எழுகிறது.

இந்த முறையில் தணிக்கை அதிகாரிகளைச் செயல்பட அனுமதிப்பது என்பது அவர்களது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ற வகையில் தவறு செய்யாதவர்கள்மீது சந்தேகம் மற்றும் அனுமானத்தின் அடிப்படையில் தணிக்கைத் தடைகள் எழுப்புவதற்கும், தவறு செய்தவர்கள்மீது தடைகள் எழுப்பாமல் இருப்பதற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித்தர வழியுள்ளது. எனவே இந்தத் தணிக்கை முறையை மாற்றி அரசுடைமையான வங்கிகளில் கணக்குகள் தணிக்கை செய்யப்படுவது போல ஆழ்ந்த குறைபாடுகள் உள்ள தவறுகளைத் தணிக்கையில் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டி சம்பந்தப்பட்டவர் நிரபராதி எனக் காட்டுவதற்கு வாய்ப்பளித்த பின்பு தவறுக்குப் பொறுப்பான நபரிடமிருந்து அறநிலையத்திற்கு ஏற்பட்ட இழப்புத் தொகையினை மீட்க தேவையெனில் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தவறான அடிப்படையில் தணிக்கைத் தடை எழுப்புவோர்மீதும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றங்களை முறைப்படி விசாரிக்காமல் அவர்மீது தண்டம் விதித்து தன்விருப்பப்படி உத்தரவு பிறப்பிக்கும் உயர் அதிகாரிமீதும் பாதிக்கப்பட்ட நபர் வழக்குத் தொடர சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும். இதனால் இத்துறைக்கு ஒவ்வொரு ஆண்டும் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். (மணியடிக்கப்பெற்றது) இரண்டே இரண்டு

கோரிக்கைகள். ஒன்று. அவினாசி அத்திக்கடவுக் குடிநீர்த் திட்டத்தைக் கொள்கை ரீதியாக நமது அரசு ஏற்றுள்ளது. அதனை விரைவில் முடித்துக் கொடுக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் குண்டடம் ஒன்றியத்தில் உள்ள மிகவும் வறண்ட பகுதிகளான செங்கடோம்பாளையம், பெருமாள்பாளையம், ஆரத்தொழுவு, புங்கன்துறை, சங்கரண்டாம்பாளையம், சிறுகிணர் ஆகிய 6 ஊராட்சிகளுக்கு பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தை விரிவுபடுத்தி தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனைகளாகவும் தொழிற்சாலைகளாகவும் மாறிவிட்ட நிலங்களின் நீரைக் கொண்டு ஏற்கெனவே பாசனம் பெறும் பகுதிகள் பாதிக்கப்படாமல், எப்படி கீழ்பவானி திட்டத்தை விரிவுபடுத்த அரசு முன்வந்துள்ளதோ, அதே வழிமுறையைக் கடைப்பிடித்து மேற்சொன்ன அனைத்துப் பகுதிகளுக்கும் விவசாயத்திற்காக நீர் கொடுக்க வேண்டும் என்று கேட்டு எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். வாழ்க கலைஞர், வளர்க அவர்தம் பணி. நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கன்னியாகுமரி மாவட்டம், செங்கோட்டை தாலுகா, 1956 ஆம் ஆண்டு தாய்த் தமிழகத்தோடு இணையும்போது ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்திலும் செங்கோட்டை தாலுகாவிலும் உள்ள 490 ஆலயங்களுக்கு தமிழக அரசு 13.5 இலட்சம் ரூபாய் வழங்கி அந்த ஆலயங்களினுடைய பராமரிப்புக்காக உதவ வேண்டும் என்று அந்த ஒப்பந்தம் போடப்பட்டது. இப்போது கிட்டத்தட்ட 2000-மாவது ஆண்டு பிறக்கப்போகிறது. இப்போதும் அதே 13.5 இலட்சம் ரூபாய்தான் வழங்கப்படுகிறது. எனவே அறநிலையத் துறைக்கு அந்த ஆலயங்களைப் பராமரிக்கவும் ஆலய ஊழியர்களுக்கு நியாயமான ஊதியம் வழங்கவும் முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே இதைக் கருத்தில் கொண்டு இப்போதுள்ள நிலவரப்படி ஒரு கோடி ரூபாயாவது கொடுத்தால்தான் அந்த ஆலயங்களை ஒழுங்காகப் பராமரிக்கவும் ஊழியர்களுக்கு



நியாயமான ஊதியம் கொடுக்கவும் வாய்ப்பு ஏற்படும். அதேபோன்று நிர்வாகப் பணியாளர்களை அரசுப் பணியாளர்களாக மாற்றவேண்டும். ஆலய ஊழியர்களுக்கு நியாயமான ஊதியம் கொடுப்பதற்கு அப்போதுதான் வாய்ப்பு ஏற்படும். காரணம் ஆலயங்களுடைய வருமானத்திலிருந்து..... (குறுக்கீடு)

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் சொல்வதில் நல்ல முரண்பாடு இருக்கிறது. ஊழியர்களுக்கு ஊதியம் கொடுப்பது என்பதில், அந்தந்த ஆலயங்களில் என்ன வருமானம் வருகிறதோ அதில் 40 விழுக்காட்டுக்கு மிகாமல் ஊதியம் கொடுக்கப்பட வேண்டுமென்ற நிலை இருக்கிறது. முதுநிலைத் திருக்கோயில் ஊழியர்களுக்கு மட்டும் ஒரே சீரான ஊதியம் வழங்கப்படுகிறது. அதேநேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஊழியர்களின் நிலை மிகவும் அவலத்திற்குரியது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் மொத்தத்தில் இருக்கிற 490 கோயில்களிலும், 1.5 கோடி ரூபாய்தான் மொத்த வருமானமே வருகிறது. அதிலே ஊழியர்களுக்கு ஊதியம் மட்டும் 84 விழுக்காடு தரப்படுகிறது என்பதை மட்டும நீங்கள் நினைவில் வைக்க வேண்டும்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த 13.5 இலட்சம் ரூபாயை 1 கோடி ரூபாயாக ஆக்கினால் ஓரளவுக்கு நியாயமாகச் செய்ய முடியும். அதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று ஊதியத்தைப் பொறுத்தவரையில், அமைச்சர் அவர்கள்கூடச் சுட்டிக்காட்டினார்கள். 30 ஆண்டுகளாகப் பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய, கோயிலைச் சுத்தம் செய்யக்கூடியவர்களுக்கு 120 ரூபாய்தான் மாதச் சம்பளம் வழங்கப்படுகிறது. அதேபோல 'சாந்தி' என்று சொல்லக்கூடியவருக்கு அதிகபட்ச சம்பளமாக 550 ரூபாய் வழங்கப்படுகிறது. இப்போதுள்ள விலைவாசி சூழ்நிலையில் எப்படி அவர்கள் நேர்மையான அளவில் நியாயமாக ஒரு குடும்பத்தை நடத்தமுடியும என்பதை நாம் கருத்தில் கொண்டு, ஆலயத்தின் வருமானம் குறைவாக இருந்தாலும் அதற்கு என்ன செய்யலாம் என்பதை மனிதாபிமான அடிப்படையில் பரிசீலித்து அவர்களும் வாழ்வதற்கான சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

அதேபோன்று கன்னியாகுமரி மாவட்டத்தில், இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத திருக்கோயில்கள் என்று இருக்கின்றன. தமிழகம்

முழுக்க ஒரே சீராக அறநிலையத் துறையின்கீழ் கோயில்கள் இருக்கும்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இப்படித் தனியாக ஒரு Board-ன்கீழ் இருப்பதால், அவர்கள் அரசு அதிகாரிகளைச் சந்திப்பதில் அல்லது நியாயமான காரியங்களைக் கேட்டுப்பெறுவதில் எல்லாம்கூட சில சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவஸ்தானங்களையெல்லாம்கூட தமிழ்நாடு அறநிலையத் துறையோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நல்ல வேளையில் ஒரு விண்ணப்பமாக வைக்கிறேன்.

கடந்த மாதம் 13 ஆம் தேதி D.M.S. சார்பில் கன்னியாகுமரி மாவட்ட ஆலய ஊழியர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அவர்களுடைய ஊதியம் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து ஒரு கோடி ரூபாய் தரக்கூடிய வகையில் சூழ்நிலை வந்தால் நிச்சயமாக நல்ல ஊதியம் கொடுக்க வாய்ப்பு இருக்கும் என்றுகூட அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே பல ஆலய சங்கங்களும் இந்தக் கோரிக்கையை வைத்து இருக்கின்றன என்பதை அரசுக்கு எடுத்துரைக்க ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியில் குமாரகோயில் என்ற ஆலயம் இருக்கிறது கேரளாவிலிருந்து அதிகமான பக்தர்கள் வருகிறார்கள். கேரள பக்தர்கள் வருவதன் காரணமாக அந்தக் கோயில் இப்போது ஒரு பெரிய சிறப்பைப் பெற்ற ஆலயமாக இருக்கிறது. அங்கே மாதத்திற்கு 80 லிட்டர் எண்ணெயை அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. ஆனால் 80 லிட்டருக்கு 1956-ல் என்ன விலை வைத்துக் கொடுத்தார்களோ அதைத்தான் இப்போதும் கொடுக்கிறார்கள். எனவே இப்போதுள்ள சூழ்நிலையைக் கருதி, தேவையை முடிவு செய்த அரசாங்கம், தேவைக்கு ஏற்படக்கூடிய காசைக் கொடுப்பதற்கு வருமானம் இல்லை என்று சொல்கிறார்கள். இருந்தாலும் என்ன நிலை எடுக்கலாம் என்று ஆலோசித்து தற்போதுள்ள சூழநிலையைப் புரிந்துகொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கோயிலில் வேல்முருகன் சேவா சங்கம் என்று ஒரு ஸ்தாபனத்தை அமைத்து இத்தகைய குறைபாடுகளை அவர்கள் ஓரளவுக்கு நிவர்த்தி செய்கிறார்கள். இதை அரசாங்கம் நிவர்த்தி செய்தால் வரக்கூடிய பக்தர்களுக்குண்டான வசதிகளை அந்த ஸ்தாபனம் கவனித்து மேலும் அதற்கு சிறப்பு சேர்க்கக்கூடிய நிலையை ஏற்படுத்த முடியும். அடுத்து எனக்கு ஒரு



மனுகூட வந்திருந்தது. ஆலயத்தினுடைய சொத்துக்கள் என்று மட்டுமல்ல, மசூதியினுடைய சொத்துக்களைக்கூட விருப்பப்படக்கூடிய அளவில் சொத்து மாற்றங்கள் செய்ய முடிகிறது. இதனால் குத்தகை பாக்கியை மற்றவர்கள் ஈடு செய்ய முடியவில்லை. இதுபோன்று பல்வேறுவிதமான பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே யார் யார் எல்லாம் ஆலயங்களுக்கு கொடுக்க வேண்டிய குத்தகையை ஒழுங்காகக் கட்டவில்லையோ அவர்களிடம் உடனே வசூலித்து அந்தந்த ஆலயங்களுக்கு நல்ல வருமானம் வரும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

முற்பகல் 11-40

அதேபோன்று பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் ஏழைகளுக்கு வீடுகள் கட்டுவதற்கு ஆலயச் சொத்துக்கள் வேண்டுமென்று சிலர் பேசும்போதுகூட சொன்னார்கள். ஆலயத்திற்குச் சொத்துக்கள் எப்படி வந்தன? முன்னர் இருந்த பெரியவர்கள் ஏதாவது நல்ல காரியங்கள் செய்ய வேண்டும் என்பதற்காக ஆலயத்திற்குச் சொத்துக்களை எழுதி வைத்திருந்தார்கள். எந்த நோக்கத்தில் அவர்கள் ஆலயத்திற்குச் சொத்துக்களை எழுதி வைத்தார்களோ அந்த நோக்கத்திற்கு ஆலயத்தினுடைய சொத்துக்கள் பயன்பட வேண்டும். இக்கருத்தை நாம் அடிப்படையாகக் கொண்டு அந்த நோக்கத்திற்குப் பயன்படக்கூடிய வகையில் காரியங்களைச் செய்ய வேண்டும். ஒருவேளை இப்போது உள்ள சூழ்நிலையிலே அந்த அளவுக்கு வருமானம் வராமல்கூட இருக்கலாம். அப்படி இருக்குமென்று சொன்னால், அது சம்பந்தப்பட்ட வாரிசுதாரர்கள் அல்லது சம்பந்தப்பட்ட ஆலய நிர்வாகிகளைக் கலந்து ஆலோசித்து, ஆலயத்திற்கு வருமானம் இல்லாததால் அந்தச் சொத்தை விலைக்குக் கொடுத்து அதன்மூலம் வரும் தொகையை வைப்பு நிதியாக வைத்து, அதனுடைய வருமானத்தைக் கொண்டாவது, அவர்களுடைய விருப்பத்தை பூர்த்தி செய்ய முடியுமா என்பதைப் பரிசீலிக்கலாமே தவிர இன்னொரு துறைக்குக் கொடுப்பது என்பது முறையல்ல.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அரசினுடைய துறைகளுக்கு மட்டும்தான் அவை தரப்படுகின்றன. வேறு எந்தத் தனியார்களுக்கும் தரப்படுவதில்லை. அதுமட்டுமல்ல. ஏற்கெனவே கொடுத்து 200 ஆண்டுகள் ஆகிவிட்டதற்கு வாரிசுதாரர்களைத் தேடிப் பிடித்து மறுபடியும் ஒப்புதல் பெற வேண்டிய தேவை கண்டிப்பாக இராது; வாரிசுதாரர்களும் இருக்கமாட்டார்கள். எப்போது அறநிலையத்திற்குக் கொடுத்து விட்டார்களோ, அப்போதே அது அறநிலையத்தினுடைய

பொறுப்பாகி விடுகிறது. சமத்துவபுரங்களுக்கு ஏராளமான இடங்களைக் கொடுத்திருக்கிறோம்; கிட்டத்தட்ட 21 இடங்களில் சமத்துவபுரத்திற்கு இடம் கொடுத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல. கிட்டத்தட்ட 24 பள்ளிகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். இதுதவிர தனியார் யாருக்கும் கொடுக்கப்படவில்லை. இந்தத் தொகை, எந்தக் கோயில் நிலம் பெறப்படுகிறதோ, அந்தக் கோயிலின் நிரந்தர வைப்பு நிதியில் போடப்பட்டு, வட்டி மட்டும்தான் பயன்படுத்தப்பட வேண்டுமென்று உறுதி செய்யப்பட்டு இருக்கிறது. அதேநேரத்தில் ஆனையடியில்கூடச் சமத்துவபுரத்திற்கு 13 ஏக்கர் கொடுப்பதாக ஏற்பாடாகி இருக்கிறது. அதை ஏன் நீங்கள் எதிர்க்கிறீர்கள் என்பதை எனக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

**திரு. சி. வேலாயுதன்:** பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே சிறப்பான முறையிலே கட்டப்பட்ட ஆலயம், அதற்கு வருமானம் ரொம்பக் குறைவாகயிருக்கிறது; சமீபத்தில் ஏராளமான சொத்துக்கள் வேறு கொள்ளை போய்விட்டது; எங்கே ஆலயத்தினுடைய அன்றாட காரியங்கள் நடக்காமல் போய் விடுமோ என்று அச்சப்படுவதாக உள்ளூர் மக்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். சமத்துவபுரத்திற்கு வழங்கி அனைத்து மக்களையும் அமைதி காத்து, ஒற்றுமையை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துவதில் அவர்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் தாங்கள் கூறியதுபோன்று அதில் இருக்கக்கூடிய வருமானத்தை இப்படிச் செய்ய முடியும் என்று சொன்னால், நிச்சயமாக எதிர்ப்பார்கள் என்று நினைக்கவில்லை. *(மணியடிக்கப்பெற்றது)* ஒரு கருத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

சமீபத்தில் திருச்சியில் பூசாரிகள் மாநாடு நடந்தது. ஏற்கெனவே நம்முடைய அரசாங்கம் 1500 பேர்களுக்கு மாதம் 500 ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படும் என்று சொல்லியிருந்தது. ஆனால் 600 பேர்களுக்குத்தான் வழங்கியிருப்பதாகவும், மற்றவர்களுக்கு வழங்கவில்லையென்றும் கூறுகிறார்கள். எனவே பாக்கி உள்ளவர்களுக்கும் நிதி உதவி வழங்குவதற்கு அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நம்முடைய தமிழ்த் துறை மூலம், இப்போது ஜாதி மதப் பிரச்சினைகள் வருவதை கவனத்தில்கொண்டு, ஆலயங்களில் செல்லக்கூடிய படிகள் இவற்றில் எல்லாம் ஜாதி மதத்திற்கு அப்பாற்பட்டு 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று சொல்லக்கூடிய வாசகங்களைப் போன்று "நாம் அனைவரும் இறைவனுடைய குழந்தைகள்"—யாரும் இன்ன ஜாதி, இன்ன மதத்தில் பிறக்க வேண்டுமென்று கேட்டுப்



பிறப்பது கிடையாது—"அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும், இதைத்தான் இறைவன் விரும்புகிறான்" என்று சொல்லக்கூடிய வாசகங்களைப் பொறித்தால் அதுவொரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தும் என்று கருதுகிறேன்.

அடுத்து பழனி கோயில். கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் வருடத்திற்கு வருகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் 13½ கோடி ரூபாய் என்று அமைச்சர் சொல்கிறார். உதாரணமாக கேரளத்தில் உள்ள குருவாயூர் கோயிலின் மூலமாக கேரள மாநிலத்தில் பலவிதமான சேவை காரியங்களை செய்கிறார்கள். அதுபோன்று ஆந்திராவில் உள்ள திருப்பதி கோயிலின் வருமானத்தின் மூலமாக தமிழகத்தில்கூட 5 ஆண்டுகள் 'இந்து தர்மரட்சண ஸமதா' என்று சொல்லக்கூடிய ஒரு தலைப்பின்கீழ் ஏராளமான பணிகளைச் செய்தார்கள். நான்கூட கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய அமைப்பாளராக 5 ஆண்டுகள் அந்தப் பணியில் இருந்தேன். இதுபோன்று நாம் மற்ற மாநிலங்களுக்குச் செயய முடியாதிருந்தாலும்கூட, அந்த அளவுக்கு வருமானம் இல்லாமல் இருந்தாலும்கூட பழனி கோயிலினுடைய வருமானத்தின் மூலமாக, நம்முடைய தமிழகத்திலும் நல்ல வழியை .போதிக்கக்கூடிய வகையில் இதுபோன்ற ஆலயங்களில் வகுப்புகளை நடத்தலாம். இதனால் அனைத்து மக்களையும் ஒற்றுமைப்படுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்படும். எனவே பழனி ஆலயத்தை முதல் நிலை என்று சொல்லக்கூடிய அளவிற்கு உயர்த்தினால் அந்த ஆலயத்தினுடைய ஊழியர்களுக்கும் இதனால் சற்று சுபிட்சமான சூழ்நிலை ஏற்படும் என்று கருதுகிறார்கள். அதையும் அரசாங்கம் கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு 'வாழிய செந்தமிழ், வாழிய நற்றமிழர், வாழிய பாரத மணித் திருநாடு, வந்தே மாதரம், வந்தே மாதரம், பாரத் மாதாகி ஜே!' என்று சொல்லி அமைகின்றேன்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பண்பாடு, அறநிலையத் துறை குறித்த மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 1968 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களால் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1970 ஆம் ஆண்டு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றுகிற பணியாளர்கள் பற்றிய செய்திகளை சென்ற ஆண்டுகூட நான் இந்த அவையில் பேசுகிற வாய்ப்பைப் பெற்றபோது எடுத்துச் சொன்னேன். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலே முப்பது பணியாளர்கள் பணிபுரிகின்றார்கள். அவர்களுக்குரிய சில அடிப்படையான பிரச்சினைகளைப்பற்றிக் கூற விரும்புகிறேன். குறிப்பாக மற்றத் துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதுபோல, இவர்களுக்கு வழங்கப்படவில்லை என்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்தை நான் தொடர்ந்து வலியுறுத்த விரும்புகிறேன். இந்தத் துறையின்கீழ் செயல்படுகின்ற இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு போன்ற நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு அத்தகைய சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் இந்த 30 பேர்களுக்கு மட்டும் வழங்க மறுக்கப்படுகிறது. இந்த நிறுவனத்தினுடைய ஆளுகைக் குழு கூட பரிந்துரைத்து வழங்கலாம் என்று சொல்லியும்கூட, இது வழங்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். சென்ற ஆண்டு நான் இதைப்பற்றி கேட்டபோது, அதற்கான விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்துள்ளார்கள். ஓராண்டு கழிந்ததற்குப் பிறகும், இதே கோரிக்கை சொல்லப்படுகிறது. ஆகவே தமிழுக்காகத் தொண்டு செய்துகொண்டிருக்கின்ற நம்முடைய அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், தமிழை உலக அளவிலே கொண்டு செல்வதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில், நம்முடைய தமிழ் மொழிக்காகச் செயலாற்றிக் கொண்டிருக்கின்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலே பணியாற்றுகிறவர்களுடைய பணிக்காலம் முடிந்து, அவர்கள் வீட்டுக்கு ஓய்வு பெற்றுச் செல்கிறபோது வெறுங்கையோடு செல்கிறார்கள் என்ற சொல்லுக்கு இடம் அளிக்காத வகையில் நம்முடைய அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் அவர்களுக்கு உரிய ஓய்வூதியத்தை வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இன்று மானியக் கோரிக்கையின் இறுதியில் அளிக்கும் பதிலுரையில் நல்ல முடிவை, நல்ல செய்தியை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சென்ற தடவை நான் பேசும்போது, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு கருத்தைச் சொன்னார்கள். இப்போது தலையிடவே இல்லை என்று சொல்கிறபோது, என்னால் இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. உண்டு என்று சொல்கிறார்களா, இல்லை என்று சொல்கிறார்களா? இந்தக் கருத்தைப் பரிசீலிக்க வேண்டும் என்பதே கேள்விக்குறியாக இப்போது இருக்கிறது.



ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தாலே திரும்பவும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலே பணிபுரிகின்ற 30 பேர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதற்கான முயற்சியை இப்போது அறிவிப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும். அதற்குரிய முயற்சிகளை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்று இந்த மானியக் கோரிக்கையின் பதில் உரையில் நல்ல செய்தியாக அறிவிக்க வேண்டுமென்ற என் கருத்தை வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து அறநிலையத் துறையின் சார்பாக பல்வேறு கருத்துக்கள் இங்கே சொல்லப்பட்டன. அறநிலையத் துறையின்கீழ் பல்வேறு சொத்துக்கள் இருக்கின்றன. அந்தச் சொத்துக்களைப் பற்றிச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருப்பதுபோல 4,91,000 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இதிலே நஞ்சை நிலம், புஞ்சை நிலம், மானாவாரி சாகுபடி என்ற அடிப்படையில் இந்த நிலங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே 4,91,000 ஏக்கர் நிலங்களிலிருந்து வரக்கூடிய வருமானங்களை வைத்துத்தான் இந்தத் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் இதிலே பல்வேறு பிரச்சினைகளும், சிக்கல்களும் தொடர்ந்து இருந்துகொண்டுதான் இருக்கின்றன. எந்த ஆட்சி வந்தாலும், மாறி மாறி இந்த நிலங்களிலிருந்து வரக்கூடிய குத்தகையையோ, வருமானங்களையோ முறையாக, சரியாகப் பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதிலும் குறிப்பாக விவசாயிகளிடத்திலிருந்து பெறுவதில் பிரச்சினை இருக்கிறது. காரணம் இயற்கைச் சீற்றத்திற்கு மாறி மாறி விவசாயிகள் ஆளாகிறார்கள். ஓராண்டு வெள்ளம் வருகிறது; மறு ஆண்டு புயல் வருகிறது; இன்னொரு ஆண்டு வறட்சி வந்துவிடுகிறது. ஆகவே வெள்ளம், புயல், வறட்சி என்று மாறி மாறி வருகிறபோது விவசாயிகளால் குத்தகையை செலுத்த இயலவில்லை. அதுதான் உண்மையான காரணம். ஆகவே மாறி மாறி வருகிற சூழ்நிலைக்கேற்ப, இருக்கிற நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இப்படிப் பாதிக்கப்பட்ட ஆண்டுகளுக்கான குத்தகைத் தொகையை அவர்களிடத்திலேயிருந்து பெறுவதற்குரிய முயற்சிகளைக் கண்டிப்பாக மேற்கொள்ளக்கூடாது. அதைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அதற்காக Revenue Court-கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

[1999 மே 6

**திரு. ஜி. நிஜாமுதீன்:** Sir, one clarification.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நீங்கள் உட்காருங்கள். நீங்களும் பேசப்போகிறீர்கள், அப்போது கேளுங்கள். என்னுடைய நேரத்தை எடுக்காதீர்கள். என்னுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், விவசாயிகளுக்கு பாதகமான தீர்வு வழங்குகிற இந்த 12 Revenue Court-களை உடனடியாக மூடவேண்டும். இதிலே எந்தவிதமான தாமதமும் இருக்கக்கூடாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்குப் பதிலாக இன்னொரு வழி செய்யலாம். நான் ஒரு மாற்று வழி...

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** திருவெண்காடு கோயிலுக்கு 1,000 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதிலேயிருந்து வருவாய் வருவதில்லை. இதற்கு என்ன செய்யலாம் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல யோசனையைச் சொல்லலாம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இந்த வருவாயைப் பெருக்குவதற்கான ஆலோசனையாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சென்ற ஆண்டு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறேன். இப்போதும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கோயில், தர்ம, மட ஸ்தாபனங்களின் நிலங்கள் எல்லாவற்றையுமே உழுது கொண்டிருக்கின்ற விவசாயிகளிடத்திலே ஒப்படைத்து, அவர்களிடத்திலேயிருந்து ஒரு தொகையைப் பெற்று, அதை வங்கியிலே Deposit செய்து அதன் மூலமாக வருகின்ற வட்டியைக் கொண்டே இந்த நிர்வாகத்தை மிகச் சிறப்பாக நடத்தலாம்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** இப்போது உழுது கொண்டிருப்பவர்களே குத்தகையைக் கொடுப்பதில்லை. இனிமேல் அவர்களிடத்திலே நிரந்தரமாக ஒப்படைத்துவிட்டால் குத்தகையைக் கொடுப்பார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

**திரு. வை. சிவபுண்ணியம்:** துணைத் தலைவர் அவர்களே, நான் குத்தகையைப் பற்றிக் குறிப்பிடவில்லை. உழுது கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்கே அந்த நிலத்தைச் சொந்தமாக்கிவிட வேண்டுமென்று நான் கோருகிறேன்.



1999 மே 6]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, நிலத்தைச் சொந்தமாக்கினால் அதற்குரிய விலையைத் தர வேண்டும். அந்த விலையை நான்கு தவணை, ஐந்து தவணைகளில் தருவதாகச் சொல்வார்கள். மூன்று தவணை முடிந்த பிறகு தவணையை இரத்து செய் என்று கொடி பிடித்துக்கொண்டு வருவார்கள். அப்படி வரமாட்டார்கள் என்று உத்தரவாதம் தருவதற்கு, அவர்களுக்காகப் பாடுபடுவதாகச் சொல்கின்ற கட்சிகள், எல்லாக் கட்சிகளும், தி.மு.க. உட்பட எல்லாக் கட்சிகளும் முன்வருவார்களா? அதற்கு உத்தரவாதம் அளிப்பார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற அந்தக் கோரிக்கையை எல்லாக் கட்சிகளுமே ஏற்றுச் செயல்படுத்த வேண்டும் என்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. குறிப்பாக நான்கு தவணைகள் அல்லது ஐந்து தவணைகள் என்ற அடிப்படையிலே வழங்கப்படுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை. அண்டை மாநிலமான கேரளத்தில் அப்படி நடைமுறைப்படுத்தப்பட்டு இப்போது சிறப்பாகச் செயல்படுகிறது. அதைப்போலவே நம்முடைய மாநிலத்திலும் செயல்படுத்தப்பட்டால், மிகச் சிறப்புக்குரிய வகையிலே நடைபெறும். இந்தப் பிரச்சினைகளே எழாது. விவசாயிகளும் பாதிக்கப்படமாட்டார்கள். நேரடியாக அவர்கள் உரிமை பெற்றவர்களாக மாறிவிடுவார்கள். ஆகவே அப்படிப்பட்ட குறைபாடுகள், பிரச்சினைகள் வராமல் தவிர்ப்பதற்குரிய வகையில் சட்ட விதிகளை மாற்றி அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கான முயற்சிகளை....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை. அதனால்தான் நான் அதைப்பற்றிக் குறுக்கிட்டுக் கேட்டேன். ஏற்கெனவே உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற ஒரு கொள்கையை, கடந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோது அறிவித்து, அதற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்தோம். இப்போது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் இங்கே குறிப்பிட்டதைப்போல இந்தக் குத்தகைதாரர்கள் அவர்களுடைய குத்தகை நெல்லை வழங்காத காரணத்தாலும், அந்தப் பணத்தைச் செலுத்தாத காரணத்தாலும் பல கோயில்கள் இன்றைக்கு நித்திய பூஜையைக்கூட நடத்த முடியாத அளவிற்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையும் இருக்கிறது. எனவே அந்தத் தொல்லையையும் அகற்றுவதற்கு, குத்தகையை ஒத்தி வையுங்கள், குத்தகை பாக்கியை ஒத்தி வையுங்கள் என்கின்ற அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன்வருவதைவிட, ஒரேயடியாக, நிலத்தை

அவர்களிடத்திலே கொடுத்து, அந்தப் பணத்தை வங்கியிலே Fixed Deposit செய்தால், அதன்மூலம் வருகின்ற வட்டியைக் கொண்டு, கோயில் விழாக்களை, பூஜைகளை நடத்திக்கொள்ளலாம் என்ற ஒரு கருத்தோடுதான் அந்தக் கொள்கையை வகுத்தோம். ஆனால் எங்களுக்கிடையில் இருந்த சந்தேகம் இதுதான். இந்தச் சந்தேகத்தை மாண்புமிகு உறுப்பினர் மாத்திரமல்ல, எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் நீக்கி, நாங்கள் உத்தரவாதத்தைத் தருகிறோம் என்று சொல்வார்களேயானால் இந்தத் திட்டத்தைப்பற்றி, அந்தக் கொள்கை அறிவிப்பைப்பற்றி, அதைத் திட்டமாக்க யோசிக்கலாம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடைமுறையில் இருக்கிற பிரச்சினைகளைத் தெளிவாக உணர்ந்து, ஆக்கபூர்வமான ஓர் ஆலோசனையை முன்வைத்திருக்கிறார்கள். இதில் ஓர் ஒத்த கருத்து, நிலை ஏற்பட வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் விரும்புவது மெத்தவும் சரி. அத்தகைய ஒத்த கருத்து, நிலையை ஏற்படுத்த, சம்பந்தப்பட்ட விவசாயச் சங்கங்கள் அனைத்தையுமே அழைத்து, ஓர் ஒத்த கருத்து, நிலை ஏற்படுவதற்குரிய கூட்டத்தை மாநில அரசே முன் முயற்சி எடுத்து நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்வருமா என்று கேட்க வேண்டியதில்லை. இது கேள்வி நேரம் அல்ல. முன்வருமா என்று கேட்க வேண்டியதில்லை. முன்வர வேண்டுமென்று கோரிக்கை வைத்தாலே, நிச்சயமாக அந்தக் கோரிக்கையை ஏற்று, அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக கோயில் நிலங்களை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்கின்ற விவசாயிகள் குத்தகை நெல்லை அளக்காமல் ஏமாற்றுகிறார்கள் என்ற கருத்துதான் அறநிலையத் துறையில் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர்கூட பல தடவை பேசுகின்றபோது இந்தக் கருத்தை வலியுறுத்தி வருகின்றார்கள். குத்தகை நெல்லை தங்களுக்கு அளககாது ஏமாற்றுகிறார்கள் விவசாயிகள் என்கின்ற நிலையைச் சொல்கிறார்கள.

ஒன்றை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். கேரளாவில் திரு. அச்சுதமேனன் எடுத்திருக்கிற அந்த நடவடிக்கையைப் போன்று தமிழகத்தில் இப்போதுகூட பல ஏக்கர்களை, நம்முடைய கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை, பள்ளிகளுக்கும், மருத்துவமனைகளுக்கும் வாங்கியிருக்கிறோம். அப்படி வாங்குகின்றபோது பல இலட்சம் ரூபாய் வருகிறது. அதை வங்கியிலே போடுகிறார்கள். அதிலேயிருந்து வருகின்ற



வட்டி, அமைச்சரவர்கள் சொல்வதுபோல பயனுள்ளதாக இருக்கிறது. ஒரு ரூபாய்கூட வருமானமே இல்லாத கோயில்கள் உள்ளன. இதை விவசாயிகள்கூட ஒத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஏனென்றால் 100 ஆண்டுகள் விவசாயம் செய்யக்கூடிய விவசாயி தனக்கு என்று ஓர் ஏக்கர் நிலம் சொந்தமாக வருகிறது என்ற ஆர்வத்திலேகூட தன்னுடைய உழைப்பின் மூலமாக இதைக் கட்டி, கடனைத் தீர்ப்போம் என்கின்ற உணர்வோடு செயல்பட வாய்ப்பு இருக்கும். அதை உறுதியாக அமைச்சர் எடுத்துக்கொண்டால், நிச்சயமாக நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறோம்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் அவர்கள் சொன்ன அதே கருத்தைத்தான் திரு. பழனிசாமி அவர்களும் வழிமொழிந்திருக்கின்றார்கள். இந்தக் கருத்து ஏற்கெனவே இந்த அரசினுடைய கொள்கையாக அறிவிக்கப்பட்டு இங்கே இது நடைமுறைச் சிக்கல் வரும் என்பதற்காகத்தான் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதேயல்லாமல் வேறல்ல. நிலங்களைப் பெற்றுக்கொண்டு, அதற்குரிய விலைகளைப் பெற்று, அந்தப் பணத்தை வங்கியிலே கட்டி, Fixed Deposit-ஆக வைத்து, அதிலே வருகின்ற வட்டியைக் கொண்டு கோயிலுக்கான தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்ற அந்தக் கருத்தைச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு சுப்பராயன் அவர்கள் இங்கே கூறியதுபோல எல்லா விவசாயத் தொழிற்சங்கங்களையும் அழைத்து அவர்களிடத்திலே பேசி ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டியிருக்கின்றது. ஒன்றைச் சொன்னார்கள். குத்தகைதாரர்கள் ஏமாற்றுவதாக அடிக்கடி அறநிலையத் துறை அமைச்சர் குற்றம் சாட்டுகிறார் என்று. குத்தகைதாரர்கள் ஏமாற்றுவதாகக் குற்றம் சாட்டவில்லை; குத்தகைக்கு விடுகின்றவர்கள் ஏமாறுகின்றார்கள் என்பதைத்தான் சொல்லுகின்றோமேயல்லாமல் இங்கே ஏமாற்றுவதாக யாரும் சொல்லவில்லை. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ.ஏ.பி. சிவாஜி.

**திரு. வை. சிவபுண்ணியம்:** துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் நேரத்தை அவர்களே எடுத்துக்கொண்டார்கள், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை. நான் சொல்ல வேண்டிய விஷயங்களைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 7 நிமிடம் ஒதுக்கினோம். அதை மீறி எல்லாம் அவர்களே நேரத்தை எடுத்துக்கொண்டார்கள். ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஏன் இவ்வளவு கோபமாகச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. நல்ல விஷயத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு சபையில் அறிவித்திருக்கின்றார்கள். எல்லோருக்கும் மகிழ்ச்சி. பக்தர்களுக்கே ஒரு மகிழ்ச்சிக்குரிய விஷயத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள் என்றுதான் கருதுகின்றேன். ஒரே ஒரு நிமிடத்தில் ஒரு செய்தியைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

அடுத்து, கல்வெட்டுத் துறை சார்பாக நம்முடைய தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு தகவலைச் சொல்லியிருக்கின்றேன். விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் பெருமுக்கம் என்ற கிராமத்திலேயிருக்கின்ற முத்தியா ஜலேஸ்வரர் என்ற மலைக்கோயிலில் கல் உடைக்கின்ற பணி தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. நம்முடைய கல்வெட்டுத் துறையின் மூலமாக வெளியிடப்பட்டிருக்கின்ற புத்தகத்திலே, சொல்லப்பட்டிருக்கிறது. 18 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் கட்டப்பட்ட கோவில் அது. ஆங்கிலேயருக்கும், பிரஞ்சுக்காரர்களுக்கும் ஏற்பட்ட யுத்தத்திலேகூட அந்தக் கோயில் பாதிக்கப்பட்டு இருப்பதாகச் செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வ்ருத்தமான செய்தி என்னவெனில், அந்த மலையிலே கல் உடைத்து விற்பனை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதாகும். அதுவும் குறிப்பாக விழுப்புரம் மாவட்டத்தினுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் சுரேஷ் மேனன் அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்திலே தடையாணை பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகச் சொல்லப்பட்டிருந்தாலும்கூட, மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் துறை அதிகாரிகளிடம், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு முறை தலையிட்டு வலியுறுத்தியும்கூட, அந்தக் கல் உடைக்கின்ற பணி நிறுத்தப்படவே இல்லை என்பதுதான் வருத்தத்திற்குரிய ஒன்று. ஆகவே அதைத் தடுத்து நிறுத்திப் பாதுகாத்து, வேலி அமைத்து, அது தொல்பொருள் இலாகாவின்கீழ் செயல்படுகின்ற கோயிலாக இருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியின் சார்பிலே இரண்டு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்றேன். ஒன்று, மன்னார்குடியிலே இருக்கின்ற பிரசித்தி பெற்ற தெப்பக்குளம் மிகவும் பாழடைந்திருக்கிறது என்பது. எனவே அதைச் சரி செய்துதர வேண்டும். அதேபோல பிரசித்தி பெற்ற கோயிலான திருராமேஸ்வரர் கோயிலுக்குக் குடமுழுக்கு விழா செய்வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.



மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோயில் தேவஸ்தானத்திற்கு எதிர்ப்புறத்திலே மிகச் சிறப்பான இடங்கள் இருக்கின்றன. அதிலே வணிக வளாகம் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி, முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ.ஏ.பி. சிவாஜி.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திலே பங்கேற்று என்னுடைய கருத்துக்களையும் பதிவு செய்கின்ற வாய்ப்பினைக் கொடுத்த உங்களுக்கும், அதற்கு வழி அமைத்துக் கொடுத்த மாண்புமிகு முதல்வர், அன்புத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், சென்னை மாநகரத் தந்தை, போற்றுதலுக்குரிய மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முரசு தானே முழங்க மூவேந்தர் கோலோச்சிய அந்தத் தங்கத் தமிழன் காலத்தினை மீண்டும் கலைஞர் ஆட்சியில் காண்பதுபோல, ஆன்மீக வழிபாட்டிலே ஆத்மார்த்தமான அன்பு கொண்டவர்கள் எல்லாம் இன்று அறநிலையத் துறையின் செயல்பாடுகள் கண்டு அகமகிழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது நிதர்சனமான நிகழ்வு. பல்வேறு கிரகங்களில், நிலை மாறும் கோள்களில்கூட, மனிதன் காலடி பதிக்கும் அளவுக்கு அறிவியல் வளர்ந்துள்ள கணினி யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நந்தன், கோயில் கருவறையிலே காலடி வைக்க அனுமதி கிடைக்காது கை அறுந்த நிலை இருந்த காலம் ஒன்று உண்டு. ஆனால் இன்று தமிழ் வழிபாடு மூலமாகத் தாய் மொழியாம் தமிழ் மொழியைக் கோயில் கருவறைக்குள் நுழைத்து, தமிழ் ஓசையை ஒலிக்கச் செய்த முதல்வர் கலைஞர் அவர்களை தமிழ் மக்கள் நெஞ்சார வாழ்த்தி, நெகிழ்ந்து, மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். முதல்வர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்தக் குறுகிய காலத்திற்குள், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் தரம் உயர்த்திட ரூபாய் 4 கோடிக்குப் பணிகள் நடைபெற உள்ளன என்பதை மனநிறைவோடு இந்த அவையிலே தெரியப்படுத்திக்கொள்கிறேன். மதிப்பீடுகள் எல்லாம் அங்கீகரிக்கப்பட்டு முடிவடைந்த பணிகளாக, தற்போது நடைபெறும் பணிகளாக, மேற்கொண்டு துவங்க இருக்கும் பணிகளாக திருத்தணியில் ஒரு கோடியே 50 இலட்சத்திற்கும், திருத்தணி மலைக்கோயில் கழிவறை, மத்தூர் சேவார்த்திகள் தங்கும் கூடங்கள், திருவாலங்காடு திருத்தேர் பழுதுபார்த்தல், திருத்தணி ராஜ கோபுரம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு

ரூபாய் ஒரு கோடி மதிப்பீடு செய்து, ஆணையர் அங்கீகாரத்திற்கும், மேலும் கன்னி கோயில் வளாக ஓய்வறைகள், நன்கொடையாளர் குடில்கள் அமைக்கும் பணி, திருவாலங்காடு திருப்பணி போன்றவற்றிற்காக ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சத்திற்கான திட்ட வரைவுகளை எல்லாம் உருவாக்கிக் கொடுத்திருக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்களுக்கும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*நண்பகல் 12-00*

கடந்த கால ஆட்சியிலே ஆலயங்களில் சிலைத் திருட்டு என்பது அன்றாடச் செய்திகளாக இருந்த ஒரு நிலை மாறி, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, சிலைத் திருட்டே இல்லை என்கின்ற நிலையினைத் தமிழகம் மகிழ்ச்சியோடு வரவேற்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சூழல் என்றும் எதிர்காலத்தில் தொடர, சிறு கோயில்களுக்குச் சொந்தமான விலையுயர்ந்த நகைகளை ஒரே இடத்தில் வைத்துப் பராமரிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்யலாம் என்ற யோசனையையும் அறநிலையத் துறைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகள், கட்டடப் பணிகள், சம்ப்ரோக்ஷணங்கள் போன்றவைகள் சிறப்பாகவும், செம்மையாகவும் நடக்கின்ற விதத்திலும், பழமையான சிற்பங்களை முறையாகப் பாதுகாக்கின்ற விதத்திலும் அறநிலையத் துறையின்கீழ் பொறியியல் வல்லுநர்கள், சிற்பிகள், ஸ்தபதிகள் ஆகியோரைக் கொண்டு தனியாக ஒரு கட்டுமானக் கழகத்தைத் தோற்றுவித்திட அறநிலையத் துறை ஆவன செய்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியாளர்களின் எண்ணிக்கையை வைத்துக்கொண்டுதான் ஒரு நாட்டின் செல்வச் செழிப்பே கணக்கிடப்படுகிறது என்று சொன்னான் ஒரு மேலைநாட்டு அறிஞன். அந்தக் கூற்றின் அடிப்படையில், 'அன்னச்சத்திரம் ஆயிரம் வைத்தல்; ஆலயம் பதினாயிரம் கட்டுதலைக் காட்டிலும், ஏழைக்குக் கல்வி அறிவு கொடுப்பதே தலையாய கொடை' என்று சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையில், திருத்தணி கோயிலுக்குக் கிடைக்கும் பெருத்த வருமானத்திலிருந்து தணிகையிலே தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றும், பெண்களுக்கான கலைக் கல்லூரி ஒன்றும் அறநிலையத் துறை உருவாக்கித்தர வேண்டும் என்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



திருத்தணியில் காலமாற்றத்திற்கு ஏற்றவாறு நவீன வசதிகளுடன் கூடிய திருமணக் கூடம், பல்நோக்கு அங்காடி வளாகம் ஆகியவற்றை வடிவமைத்து, திருக்கோயில் வருமானத்தை மேலும் பல மடங்கு பெருக்கிட அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலத்தில் கலைஞர் அவர்கள் முதல்வர் பொறுப்பேற்றிருந்தபோதுதான், திருத்தணியில் தங்கும் விடுதிகள், குடில்கள் எல்லாம் எழில் குலுங்க அமைத்துக் கொடுத்தார்கள்; மக்கள் மனநிறைவோடு பாராட்டி மகிழ்ந்தார்கள். ஆனால் இடையிலே அந்தக் குடில்களை எல்லாம் முறையாகப் பராமரிக்காத நிலையிலே, மக்கள் முகம் சுளிக்கின்ற அளவுக்கு மோசமான நிலை ஏற்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, இப்போது அந்தக் குடில்கள் எல்லாம் பழுது பார்க்கப்பட்டு செப்பனிடப்பட்டாலும், முழுமையான மனநிறைவு பெறக்கூடிய அளவிற்கு தங்கும் விடுதிகளைத் தரம் உயர்த்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணி திருத்தலத்திற்கு ஆண்டுக்கு 8 கோடிக்கு மேல் வருமானம் கிடைக்கிறது. அப்படிக் கிடைக்கின்ற வருமானத்திலே கணிசமான தொகையை ஆலயத்தை நல்ல முறையில் பராமரிப்பதற்கும், ஆன்மீக வழிபாட்டுக்கு வருபவர்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் பயன்படுத்த வேண்டும். அப்படிச் செய்வதன் மூலமாக, மேலும் அதிகப்படியான மக்களை ஈர்த்து கூடுதல் வருமானம் ஈட்டிட முடியும். எனவே அரசு முனைப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

'சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்ட முடியும்' என்பதை நினைவுகூர்ந்து, கோயில் அமைந்துள்ள நகரத்தின் நலம் காக்கவும் கோயில் நிர்வாகம் மேலும் அக்கறை செலுத்த வேண்டும். திருத்தணி நகரின் சாலைகள், குறிப்பாகக் கோயிலுக்கு பக்தர்கள் பயணம் செய்யும் சாலைகள், மின் விளக்குகள், சாலையோரக் கழிவுநீர்க் கால்வாய்கள், கழிப்பறைகள் போன்ற சுகாதார மேம்பாடுகளுக்காக கோயில் வருமானத்திலிருந்து தாராள மனதோடு கணிசமாகச் செலவு செய்திட வேண்டும். வருமானத்தைப் பெருக்கிட அறநிலையத் துறை ஒருவழிப் பாதையாகச் செயல்படாமல், நகர மக்களுக்கு வசதிகள் பெருகிட வழிவகை செய்ய வேண்டுமென்று அறநிலையத் துறையை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தணிகை கோயிலுக்குச் சொந்தமான வைணவக் கோயில் நெடும்பரம் கோதண்டராம சுவாமி கோயில், புராதனமான பழமை வாய்ந்த தொன்மையான ஆலயம் ஆகும். அந்தக் கோயிலுக்குச் சொந்தமான 20 ஏக்கர் நிலத்தினைத் தனியார் கையகப்படுத்தி உள்ளதை மீட்டுத்தர அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு பெரிய திருக்குளம் ஒன்று உள்ளது. அதற்கு சுற்றுச்சுவர் அமைத்து, புதுப்பித்துத்தர வேண்டும் என்று வேண்டுகிறேன்.

திருவாலங்காடு 'திருமதில் அழகு' என்று பழம்பெரும் பாடலால் பெருமை பெற்று இருக்கின்ற பெருமதிலினை, சுற்றுச் சுவற்றினை பொலிவுபெறச் செய்திட பணிகள் தொடங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். திருவாலங்காடு திருக்குளம் அருகே அமைந்துள்ள சர்க்கரை ஆலையால் அந்தக் குளம் மாசுபட்டுக் கிடக்கின்றது. அங்கு சுற்றுச் சுவர் எழுப்பி செம்மைப்படுத்திட வேண்டுகிறேன்.

விழாக்களும், வேதபாராயணமும் நிறைந்த, செல்வச் செழிப்பு மிக்க ஆலயங்களுக்கிடையே இருட்டில் வாழும் நூற்றுக்கணக்கான சிறு கோயில்களின் இழிநிலையைப் போக்கிட வேண்டும். பண்டைய மன்னர்கள் இறையளியாக விட்ட ஆயிரம் வேலி நிலங்கள் சொத்துடைய பெரிய கோயில்கள் எல்லாம் இருக்கின்றன. கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளபடி, தமிழகத்திலே உள்ள இந்துக் கோயில்களுக்கு சுமார் 4.91 இலட்சம் ஏக்கருக்கு மேல் நிலம் சொந்தமாக உள்ளது. ஆனால் 25,000 கோயில்களில் ஒரு கால பூஜைகூட செய்ய முடியாத நிலைமை இருக்கின்றது. எனவே பெரிய கோயில்களின் பராமரிப்பிலிருந்து, அதன் வருமானத்திலிருந்து சிறிய கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்தநேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

அதேபோல கோயில் நிலத்தை ஏக்கர் கணக்கிலே தலைமுறை தலைமுறையாக அனுபவிக்கும் குத்தகைதாரர்கள், மனைகளில் குடியிருப்போர், கடைகளை வைத்திருப்போர், குத்தகை கொடுக்க மனமின்றி மனிதனை ஏமாற்றுவதுபோல, இறைவனையும் பலர் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். குத்தகைச் சட்டங்களிலிருந்து கோயில் நிலங்களுக்கு விலக்களித்து, கடும் நடவடிக்கைகள் மூலம் குத்தகை



நிலுவைகளை வசூல் செய்திட அறநிலையத் துறை முனைப்புடன் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இறுதியாக ஒரு வேண்டுகோளை வைக்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றபிறகு, 18 ஆண்டுகாலமாக ஓடாது நின்றிருந்த திருவாலங்காடு மரத் தேரினைப் பழுதுபார்க்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் விடுத்திருந்தேன். வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அறநிலையத் துறை, உடனே அந்தத் தேரைப் பழுதுபார்க்க 14 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு தயார் செய்துள்ளது. முதல்வர் கலைஞர் அவர்களை, இந்தப் பணிக்காக நன்றியோடு நினைவுகூர்கிறேன். இந்தத் தேர் மிகப் பழமை வாய்ந்த கமலத் தேர். சித்திர வேலைப்பாடு உடைய பவழத் தேர். இலங்கை கிரி மலையிலிருந்து கொண்டு வரப்பட்ட திருத்தணாமுதிரி மரங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட தேர். இந்தத் தேர் 1903 ஆம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்டது. பிரித்துள்ள தேரினை முழு வீச்சிலே பழுதுபார்த்து, ஆரூர்த் தேரோட்டத்தை நடத்திக் காட்டிய முதல்வர் கலைஞர் அவர்கள், அவர்களின் திருக்காத்தால் விரைவில் திருவாலங்காட்டுத் தேரோட்டத்தையும் நடத்தி, அறநிலையத் துறை ஒரு வரலாற்றுச் சிறப்பினை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நன்றி கூறி, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்மொழிந்துள்ள இரண்டு மானியக் கோரிக்கைகளையும் வரவேற்று, இதிலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் தொகுதியிலே, நாகூரிலே அருள்மிகு நாகநாத சுவாமிகள் திருக்கோயில் இருக்கின்றது. அந்தக் கோயிலுக்கு நிறைய நிலங்களும், சொத்துக்களும் இருந்தும், முறையான வருவாய் இல்லாத காரணத்தால், அந்தக் கோயிலுக்குச் சொந்தமான தேர் செப்பனிடப்பட முடியாமலும், குளங்கள் தூர் வாரப்படாத நிலையிலும் இருந்துகொண்டு இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற மாதம் நாகூர் வந்திருந்தபோது, அதைப் பார்த்து மிகவும் மனம் நொந்துபோய், இந்த மாதிரி ஒரு நிலைக்கு வந்துவிட்டதே என்று வருத்தப்பட்டுச் சொன்னார்கள். ஆகவே இதை உடனடியாக கவனத்தில் கொண்டு, தேரையும், குளத்தையும் ஒழுங்குபடுத்தித் தருமாறு அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாகையிலே அருள்மிகு நீலாயதாட்சியம்மன் கோயிலுக்குச் சொந்தமான புண்டரிகைக் குளம் உள்ளது. அந்தக் குளத்தையும் அமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட்டார்கள். நகரத்தின் மத்தியிலே மிகவும் அழகாக அமைந்திருக்கின்றது. அதன் சுற்றுப்புறச் சுவர் எல்லாம் இடிந்து, மிகுந்த பழுதடைந்த நிலையில் இருக்கிறது. அந்தக் குளத்தினால் மக்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லை. மேலும் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் பயன் இல்லாமலும் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே அந்தக் குளத்தையும் அமைச்சர் அவர்கள் செப்பனிட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நாகையிலே அருள்மிகு சட்டநாதர் கோயிலின் தேர் செபபனிடப்பட வேண்டும். அதுவும் பழுதடைந்த நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. அதுபோல நாகை, வழிப்பாளையத்திலே அருள்மிகு அகஸ்தீஸ்வரர் சுவாமி ஆலயத்தில் உள்ள குளத்தின் நான்கு பக்கச் சுவர்களும் இடிந்து, தூர்ந்துவிடக்கூடிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அந்தக் குளத்தின் 4 பக்கச் சுவர்களையும் கட்டி, படித்துறையை ஏற்படுத்தி, தூர் வாரித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல நாகை, சௌந்தரராஜப் பெருமாள் ஆலயத்தினுடைய ரதம் மிகவும் பழுதடைந்திருக்கிறது. அந்தக் கோயிலினுடைய குளமும் பழுதுபட்டிருக்கிறது. ஆகவே இரண்டையும் செப்பனிட்டுத் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல வடக்கு திரௌபதி அம்மன் திருக்கோயில் திருப்பணி பாதி நடைபெற்றிருக்கிறது. அதை முழுமையாக நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் உறுதுணை புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல நாகூர் பெருமாள் கோயில் குளமும் தூர் வாரப்பட வேண்டும். அதற்கு 4 பக்கக் கரைகளையும் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலயங்களுக்குச் சொந்தமான கடைகள், கட்டடங்கள் இவற்றிலிருந்து வாடகை வசூலிக்கப்பட முடியாத நிலையிலே பல வழக்குகள் தேங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றை வசூல் செய்வதற்கு முறையான சட்டத் திருத்தங்கள் வேண்டும். அல்லது காலி செய்வதற்கு வாடகைதாரர்கள் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். அல்லது இந்த நிலத்தைப் போலவே அதையும் அவர்களுக்கு விற்றுவிட்டு, அந்தப் பணத்தை வங்கிகளில் முதலீடு செய்ய வேண்டும். இத்தகைய நிலைகளில் ஏதாவது ஒரு நிலையை எடுத்தால்தான் கோயில்களைப் பாதுகாக்க முடியும். நிலம் சொத்துக்கள் உள்ள கோயில்கள் எல்லாம், வருமானம் இல்லாமல், உள்ளன. இத்தகைய கோயில்களில் பணியாற்றக்கூடிய



பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாமல் 5 மாத பாக்கி, 1 வருட பாக்கி, 5 வருட பாக்கி என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, கடைகள் போன்ற சொத்துக்களுக்கு நல்ல தீர்வையை இந்த அரசு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இத்துறையின்கீழ் சீவலூரிலுள்ள பள்ளிக்கூடத்திற்குச் சுட்டட வசதியும், மற்ற வசதிகளும் தேவைப்படுகின்றன. அவற்றையும் செய்து கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

தமிழ்ப் பண்பாட்டுத் துறை தனியாக அமைக்கப்பட்டவுடன், தமிழ் வளர்ச்சிக்காகப் பல்வேறு அரிய, சீரிய பணிகளை இந்த அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஆற்றி வருகிறார்கள். அந்த வகையில் வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வரும் விமானங்களில், Air-France, British Airways, Singapore Airlines, Malaysian Airlines போன்றவற்றில் தமிழில் அறிவிப்புகள் செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்திருக்கிறது. வெளிநாட்டுக்காரர்கள் செய்கின்ற அந்தக் காரியத்தை இந்தியாவில் உள்ள இந்திய அரசுக்குச் சொந்தமான Air India, Indian Airlines செய்வதில்லை. மற்ற நாட்டு விமானங்களில் தமிழில் அறிவிப்புகள் செய்யும்போது, நமது அரசு நிறுவனங்கள் செய்யாதது கண்டிக்கத்தக்கது. இதுகுறித்து உடனடியாகப் பரிசீலித்து, சென்னைக்கு வரும் Air India, Indian Airlines விமானங்களில், தமிழில் ஒலிபரப்ப ஆவன செய்யவேண்டும். Air France-க்கு இருக்கும் உணர்வு Indian Airlines-க்கு ஏன் இல்லை என்று அறிய விரும்புகிறேன். இதுகுறித்து இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். நிச்சயமாக எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அதேபோல நாகைக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஒப்புதலோடு ஓர் அருங்காட்சியகத்தைத் தந்திருக்கிறார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று இசைப் பள்ளியையும் சவகர் சிறுவர் இல்லத்தையும் வழங்கிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று யுனானி மருத்துவ நூலையும், நபிகள் நாயகம் மருத்துவ நூலையும் தமிழில் மொழி பெயர்த்து, அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கபபெற்றது)

அதேபோல நான் நீண்ட காலமாகக் கோரி வருவது ‘தமிழக [illegible] தனித் தமிழ் நாள்’ என்பதாகும். தமிழுக்காகவே தமிழ்ப் பண்பாட்டுத்

துறையை வழங்கிய இந்த அரசு, மற்ற மாநிலங்களில் உள்ளதுபோல, தமிழுக்கு என்று தனிக் கொடியையும், தனித் தமிழ் நாளையும் அறிவிக்க வேண்டும். அதில் ஏன் இந்த அரசு காலம் தாழ்த்துகிறது என்று தெரியவில்லை. திராவிட இயக்கம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்த மொழிகளிலே தலையாய மொழி தமிழ் மொழி. கன்னட மொழிக்கு அங்கே அது இருக்கிறது. ஆனால் தமிழ் மொழிக்கு இல்லை. அதை உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று திருக்குறளை தேசிய நூலாக அறிவிப்பதற்கான நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான்காம் தமிழ்ச் சங்கம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த குலாம்கான் நாவலர் நாகையில் பிறந்தார். அவர் நாகையில் பிறந்தார் என்பதற்கான அறிவிப்புப் பலகை இரயில் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தது. மத்திய அரசு தற்போது அதை அகற்றிவிட்டது. அதை மீண்டும் அந்த இடத்தில் நிறுவுவதற்கான முயற்சிக்கு தமிழ்ப் பண்பாட்டுத் துறை முன்வர வேண்டும். அதேபோல நாகை தமிழ்ச் சங்கம் திரு. சோலை இளஞ்சிறனார் அவர்களால் தொடங்கப்பட்டு, பல்வேறு சைவ, சித்தாந்தப் பணிகள் அங்கு நடைபெற்று வந்தன. அந்தக் கட்டடத்தை பாண்டித்துரைத் தேவர் அவர்கள் இலவசமாக வழங்கியிருந்தார்கள். அந்தக் கட்டடம் இடிந்துவிட்ட காரணத்தால், அங்கு கூட்டங்கள் நடத்த முடியாமல் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே தமிழ்ப் பண்பாட்டுத் துறை சார்பாக அந்தக் கட்டடத்தைப் புதுப்பித்து, அதை செப்பனிட்டுத் தந்தால், மீண்டும் அது இயங்க வாய்ப்பாக இருக்கும். அந்த இடத்தில் திருக்குறள் பாடமும், சிலப்பதிகாரப் பாடமும், இளங்கலை, முதுகலைப் பாடங்களும் இலவசமாக வழங்குவதற்கு நாகை தமிழறிஞர்களால் முடியும். ஆகவே தமிழ் வளர்ச்சித் துறை சார்பாக அந்தக் கட்டடத்தைச் செப்பனிட்டுத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

1970 ஆம் ஆண்டு முதல் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றிவரும் 30 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. அதையும் இந்த அரசு கவனத்தில் கொண்டு, உடனடியாக வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு, தமிழுக்கு தனிக் கொடியையும், தனித் தமிழ் நாளையும் வழங்கிட வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனித் தமிழ்நாட்டுக்குத் தமிழ்க் கொடி என்கிறார்? அதனுடைய முழுமையான பொருளைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** தனித் தமிழ்நாட்டுக்குத் தனித் தமிழ் கொடி அல்ல. இப்போது கர்நாடகாவிலே கன்னட மொழிக்கு என்று தனிக் கொடி இருக்கிறது. கன்னட தினம் என்று 5 நாட்களைக் கொண்டாடுகிறார்கள். அந்த தினத்தில் கன்னடக் கொடியை அரசு அலுவலகங்களிலும், Bus-களிலும் ஏற்றி எல்லா இடங்களிலும் மொழி சார்பான கூட்டங்களை நடத்துகிறார்கள். அது, மொழி வளர்வதற்கும் ஓர் உணர்ச்சிபூர்வமான நிகழ்வாக இருக்கிறது. ஆகவே, அதுபோல, தமிழுக்கு என்று தனிக் கொடியையும், தமிழ் இனத்திற்கு என்று தனி நாளையும் அறிவிக்க வேண்டும். தமிழ் நாட்டுக்கு என்று தனிக் கொடியோ நாளோ அல்ல என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்திலே அரசின் சார்பாக அப்படி கன்னடக் கொடி என்று இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** அந்த தினத்திலே அரசுக் கட்டடங்களிலே கொடியை ஏற்றுகிறார்கள். அரசுத் துறையைச் சார்ந்த அனைத்து இடங்களிலும் அந்தக் கொடியை ஏற்றி, அந்த தினத்தைக் கொண்டாடுகிறார்கள். நான் பெங்களூரில் 2 வருடங்கள் படித்தபோது அந்த விழாவிலே பங்கேற்று, நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறேன். வருடா வருடம் நவம்பர் மாதம் நடைபெறுகிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஏற்கெனவே திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது, இந்த அரசின் சார்பில் ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. தேசியக் கொடி இணைந்த தமிழ் நாட்டுக் கொடி, ஒவ்வொரு மாநிலத்திற்கும் அந்த மாநிலத்தைக் குறிப்பிடுகின்ற கொடிகள் வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. அதிலே தேசியக் கொடி இடம் பெறவேண்டும், அதில் இருக்கின்ற அசோகச் சக்கரம் உட்பட அனைத்தும் இடம் பெறவேண்டும். ஏனென்றால் இங்கே போலீசுக்குக்கூட தனிக் கொடி இருக்கிறது. அதைப்போல தமிழக அரசுக்கு இப்படி ஒரு தனிக் கொடி இருக்க வேண்டும், கோபுரச் சின்னத்தோடு அடங்கிய கொடி, அதிலே ஒரு பகுதியிலே தேசியக் கொடி அப்படியே இடம் பெறவேண்டும் என்று

சொல்லப்பட்டது. அதை திருமதி இந்திரா காந்தி அவர்கள்கூட ஓரளவு ஏற்றுக்கொண்டு, அதைப் பற்றிப் பேசும்போது குறிப்பிட்டார்கள். எனக்குச் சரியாக நினைவு இல்லை. பாராளுமன்றத்திலே பேசியதாக நினைவு. தான் சென்று வந்த வெளிநாடுகளிலேகூட இப்படி மாநிலத்திற்கு மாநிலம் கொடி இருக்கிறது என்று குறிப்பிட்டுவிட்டு, அதைப் பற்றி—அவர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை. ஆனால் அதைப்பற்றி—கோடிட்டுக் காட்டினார்கள். ஆனால் நம்முடைய கோரிக்கை ஏற்கப்படவில்லை.

*பிற்பகல் 12-15*

இப்போது தமிழுக்கு தனிக் கொடி என்று கேட்பது—அவர் சொல்லும்போது தனி நாள் என்று சொன்னது, தனி நாடு என்று எங்கள் காதிலே விழுந்தது. செய்தியாளர்களுடைய காதுகளிலேயும் அப்படி விழுந்திருந்தால் அது வேறுவிதமாக ஆகிவிடும். நாள் என்பதைச் சரியாக, தெளிவாகச் சொல்லாத காரணத்தால் தனி நாடு என்று நாங்களே அப்படித்தான் புரிந்துகொண்டோம். ஆகவே செய்தியாளர்கள் அதை 'நாடு' என்று எழுதாமல், 'நாள்' என்று எழுதவேண்டுமென்று துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பத்திரிகையாளர்கள், முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, அப்படித்தான் பிரசுரிக்க வேண்டுமென்று நானும் வலியுறுத்துகிறேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** நானும் 'நாள்' என்றுதான் குறிப்பிட்டேன். 'நாடு' என்று குறிப்பிடவில்லை. 'நாள்' என்றுதான் குறிப்பிட்டேன். (குறுக்கீடு), நாள், தினம், தனித் தமிழர் தினம் என்று அறிவிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே

"விண்ணாளும் வேருக்கும் மேலாகிய வேதியனை
மண்ணாளும் மன்னவருக்கும் மாண்பாகி நின்றானை
தண்ணார் தமிழளிக்கும் தென்பாண்டி நாட்டானை
பெண்ணாளும் பாகனை பேணும் பெருந்துறையின்
கண்ணார் கயல் காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலையானைப் பாடுதும்காண் அம்மானை"



எங்கெங்கும் சித்தர்கள் வாழும் பூமி, நினைத்தாலே முக்தி தருகின்ற ஆன்மீக நகரமான திருவண்ணாமலை நகரிலே குடிகொண்டிருக்கின்ற, அருள் கொண்டிருக்கின்ற அருணாசலேஸ்வரரையும், மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களையும் வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். தமிழ் வளர்ச்சி மற்றும் இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கு இந்த அரசு திருப்பணிக் குழு அமைத்து, மரியாதைக்குரிய இளையராஜா அவர்களை குழுத் தலைவராக நியமனம் செய்த அன்றையதினமே மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலே குழு கூடி, ஒரு கோடி ரூபாய் அளவுக்கு நன்கொடையாளர்கள் நிதி அளித்து, திருப்பணியைத் தொடங்கியிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுமார் 500, 600 ஆண்டுகளுக்கு முந்தைய புராதன ஆலயங்கள், கிராமப்புறங்களிலே இருக்கின்றன. அந்த ஆலயங்களை எல்லாம்—கிராமங்களில் இருக்கின்ற மக்களால் பொருள் உதவி தந்து திருப்பணி செய்ய முடியாத நிலையிலே இருக்கின்ற ஆலயங்களை எல்லாம்—அரசு ஏற்று அந்த ஆலயங்களில் திருப்பணி செய்துதர வேண்டுமென்று நான் இந்தநேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் அரடாப்பட்டு என்ற கிராமத்திலே, ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய புராதன ஆலயமான அனுபரததாண்டேஸ்வரர் ஆலயம் இருக்கிறது. அதற்குத் திருப்பணி செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. சிதைந்துபோய் இருக்கின்ற அந்தத் திருக்கோயிலுக்குச் சென்று மக்கள் வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோயிலுக்கு மிக நல்ல நிலையிலே திருப்பணி செய்ய வேண்டும். அரசால் முடியாவிட்டாலும் இப்போது இருக்கின்ற பல்வேறு பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் எல்லாம் திருப்பணி செய்வதற்கு முன்வருவார்களேயானால், அவர்களை அழைத்து, திருப்பணிகளைச் செய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக 3 ஆண்டுகளுக்கு முன்பு திருவண்ணாமலையிலே முகப்புத் தோற்றமாக இருந்த பதினாறு கால் மண்டபம் தீயினால் சிதைந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறது. கடந்த 3 ஆண்டுகாலமாக அந்த பதினாறு கால் மண்டபம் இருந்த பகுதியிலே திருப்பணி ஏதும் தொடங்காத நிலை இருக்கிறது.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** தொடங்காத நிலையில் இருக்கிறதா? முடியாத நிலையில் இருக்கிறதா?

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த பதினாறு கால் மண்டபம் இருந்த பகுதியிலே இதுவரையில் எந்தப் பணியும் தொடங்கப்படவில்லை. ஆனால் அதற்குண்டான சிலைகளையும், சிற்பங்களையும் வேறு ஒரு இடத்திலே செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பணியை வேகப்படுத்த வேண்டும். ஓராண்டிற்குள்ளாக முடிப்பதாக நமது முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு அறிவித்தார்கள். ஆனால் மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்தப் பணியை வேகப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

பதினாறு கால் மண்டபம் தீயினால் இடிந்தபோது 63 கடை உரிமையாளர்கள் அங்கே கடை வைத்திருந்தார்கள். அவர்களுக்கு வேறு ஒரு இடத்திலே கடை அமைத்துத் தந்திருக்கிறார்கள். நிச்சயமாக அவர்களுடைய வயிற்றுப் பசியைப் போக்குகின்ற அளவிற்குக்கூட அந்தப் பகுதியிலே வருமானம் இல்லை; வியாபாரம் இல்லாமல் இருக்கின்றார்கள். ஆகவே கோயில் முகப்புப் பகுதியிலேயே கடைகளையும், அங்கே தங்குவதற்குண்டான வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டும். அந்த 63 நபர்களுக்கும் கடையைக் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் வாய்ப்புகளை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே இருக்கின்ற மக்களிடையே ஏற்றத்தாழ்வு, சமுதாயப் பிரச்சினை ஆகியவை வராமல் இருப்பதற்கு, இப்போது இருக்கிற ஒரே வழி, ஆன்மீகச் சொற்பொழிவுகளையும், ஆன்மீக உணர்வுகளையும் மக்களுக்கு எடுத்துச் சொல்கின்ற வழிதான். அதன்மூலமாக தற்போதுள்ள நிலைகளையெல்லாம் போக்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அரசு, ஆன்மீக உணர்வுகளை மக்கள்



மத்தியிலே புகுத்துகின்ற வண்ணம், ஆன்மீகச் சொற்பொழிவுகளை கிராமப்புறங்களிலே நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்கு மாதாமாதம் பௌர்ணமிதோறும் இலட்சக்கணக்கான மக்கள் வருகின்றார்கள். கடந்த மாதம்கூட, சித்ரா பௌர்ணமி தினத்தன்று ஐந்து இலட்சம் முதல் பத்து இலட்சம் வரை மக்கள் வந்திருந்ததாகச் சொல்கிறார்கள். பத்திரிகைச் செய்தியிலே 10 இலட்சம் மக்கள் வருகை தந்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்களெல்லாம் தங்குவதற்கு, குளிப்பதற்கு, உணவு அருந்துவதற்கு வசதி இல்லாமல்—அந்த நகரத்திலே இருக்கின்ற மக்கள், வருகின்ற மக்கள் ஆகியோர்—திண்டாடிக் கொண்டிருக்கிற நிலையை அரசுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் அங்கே தங்குவதற்கும், குளிப்பதற்கும் வசதி ஏற்படுத்தித் தந்தால்கூடப் போதும் என்ற நிலையை அரசுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் நிறைய விஷயங்கள் இருக்கின்றன. விரைவில் பேசி முடித்துக்கொள்கிறேன். அதேபோல பௌர்ணமி தினத்தன்றும், விழாக் காலங்களிலும் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்வதற்கு 5, 6 மணி நேரம், 12 மணி நேரம் வரையிலே வெயிலிலே காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு, அமர்ந்து சுவாமி தரிசனம் காண்பதற்கு—10, 12 மணி நேரம் வெயிலிலே இல்லாமல், அமர்ந்து தரிசனம் காண்பதற்கு—மேற்கூடங்களை அமைத்துத்தர வேண்டும். அதேபோல திருவண்ணாமலையிலே கிரிவலம் வருகின்ற பாதை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அந்தப் பகுதியிலே மக்கள் நடப்பதற்கே வழியில்லாமல் இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பாதையைச் செப்பனிடுத்தர வேண்டும். மேலும் அந்தப் பாதையிலே அமைக்கப்பட்டிருக்கின்ற 140 மெர்க்குரி விளக்குகளுக்கு, அரசே, அறநிலையத் துறையே மின்சாரக் கட்டணத்தை கட்ட வேண்டும். ஆணாய்ப்பிறந்தான், அத்தியந்தல், அடியண்ணாமலை, வேங்கிக்கால் போன்ற ஊராட்சிகள் இந்த மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றன. அந்த ஊராட்சிகள் அனைத்தும் நம்முடைய அமைச்சர் அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்தவை. அந்த ஊராட்சித் தலைவர்களெல்லாம் பல முறை அமைச்சர்

அவர்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் முறையிட்டிருக்கிறார்கள். அந்த ஊராட்சிகளின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, அறநிலையத் துறையே மின் கட்டணத்தைச் செலுத்த வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

'கோயில் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழி இருக்கின்ற இந்தக் காலத்திலே, கிராமப்புறங்களுக்குச் செல்கின்றபோதெல்லாம், கிராமப்புற மக்களுக்கான அடிப்படைத் தேவைகளான குடிநீர், சாலை போன்ற வசதிகளையெல்லாம் அவர்கள் கேட்கின்றபோது, அந்த வாக்காளர்களைச் சந்திக்கச் செல்லும்போதுகூட, "கடைசியாக இந்தக் கோயிலையும் கட்டிக் கொடுத்துவிடுங்கள்" என்று சொல்கின்ற நிலையை நாம் அறிவோம். ஆகவே நீங்கள் கிராமப்புறங்களிலே இருக்கின்ற கோயில்களை, ஒவ்வொரு கோயிலாக எடுத்து, சீரமைத்துக் கொடுக்க வேண்டும். ஒரு கால பூஜை என்று ஆயிரம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இத்துடன் உங்கள் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். இன்னும் ஐந்து பேர் பேச வேண்டும். ஒரு மணிக்குள் விவாதத்தை முடிக்க வேண்டும். எனவே நீங்கள் உட்காருங்கள். அடுத்து, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை மற்றும் அறநிலையத் துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். மூவாத் தமிழான முத்தமிழை இன்றைக்கு காலத்தினுடைய நீரோட்டத்திற்கு ஏற்ப, அறிவியல் தமிழாகவும், பொறியியல் தமிழாகவும், ஐம்பெரும் தமிழாகவும் மிகச் சிறப்பான முறையிலே வளர்த்தெடுக்கத்தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலிலே, இன்றைக்குத் தமிழ் வளர்ச்சியைப் பொறுத்தவரையிலே, என் என்று சொன்னாலே எண்ணெயாகக் கொண்டு வந்து நிறுத்தக்கூடிய ஆற்றல் படைத்த ஒருவரை, நம்முடைய மாண்புமிகு தமிழ்க்குடிமகனார் அவர்களை அமைச்சராகக் கொண்டு இயங்கக்கூடிய இந்தத் துறையிலே, தமிழ் வளர்ச்சி குறித்து சில கருத்துக்களை, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.



பிற்பகல் 12-25

இப்போது ஐந்தாம் வகுப்பு வரையில் தமிழ் மொழியிலே சொல்லித் தரப்பட வேண்டும்; மருத்துவம், பொறியியல் போன்ற படிப்புகள்கூட தமிழ் வழியிலே சொல்லித் தரப்பட வேண்டும்; தமிழ் வழியிலே படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை வைத்து உண்ணா நோன்பு இருந்த தமிழ் அறிஞர்களுடைய கோரிக்கையை ஏற்று—அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கவில்லை என்று சொன்னாலும்கூட, அவர்களுடைய நிலைப்பாட்டை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றபோது—'அந்த உண்ணா நோன்பை முடித்துக் கொள்ளுங்கள்; இந்த ஆட்சியே தமிழுக்காக, தமிழ் வளர்ச்சிக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்ற உங்களுடைய ஆட்சி' என்ற அடிப்படையிலே, தமிழறிஞர்கள் கொண்ட ஒரு குழுவை நியமித்து, அதை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்து வருகிற தமிழக அரசை நான் இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"இருந்தமிழே உன்னால் இருந்தேன்-வானோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

என்பவை தமிழ்விடு தூது கண்ட வரிகளாகும். அந்த வரிகளைப்போல, பா.ம.க.-வினுடைய சார்பிலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்று சொன்னால், இப்போது இந்தத் தமிழ் வளர்ச்சியிலே ஈடுபடுகிறபோது, நீங்கள் எடுத்து வருகிற நடவடிக்கைகளையும் விரைந்து செயல்படுத்தி, அந்தக் குழுவினுடைய அறிக்கையைப் பெற்ற உடனே, இந்த ஆண்டிலேயிருந்து செயல்படுத்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்ள விழைகிறேன்.

அதுபோல தமிழிலே விளம்பரப் பெயர்ப் பலகைகளை எழுதாதவர்களுக்கு, முன்பு 50 ரூபாய்தான் ஒறுத்தல் கட்டணமாக இருந்தது. அந்த நடவடிக்கையைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதற்காக இப்போது தமிழக அரசு ஆயிரம் ரூபாய் ஒறுத்தல் கட்டணமாக விதித்து, தமிழிலே விளம்பரப் பலகைகளை அமல்படுத்துவதிலே எடுத்திருக்கிற இந்த நடவடிக்கையையும் நான் பாராட்டி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் ஒரு வேண்டுகோள். இப்போது தாமரை எலக்ட்ரிகல்ஸ் என்று தங்களுடைய கடைகளுக்குப் பெயர் வைக்கிறார்கள். அதை அப்படியே, ஆங்கிலத்தில் உள்ளதை, தமிழிலே எழுதிவிடுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் பெயர்ப் பலகைகளை வைக்கின்ற புத்தகத்தினை, மொழி மாற்றுப் புத்தகத்தினை அருமையாக அச்சிட்டு வழங்கியிருக்கிறார்கள். அதை ஒவ்வொரு அங்காடிக்காரர்களும்கூட வாங்குகிற மாதிரி அனுப்பி வைக்கலாம் என்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். அப்படிச் செய்கிறபோது, தாமரை எலக்ட்ரிகல்ஸ் என்று சொல்லப்படுவதை, தாமரை மின்பொருள் அங்காடி என—அதாவது, தமிழிலே மட்டுமல்ல—அந்தப் பெயர்ப் பலகையானது தமிழாகவும் இருக்கிற மாதிரி அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநோத்திலே தமிழ் விளம்பரப் பெயர்ப் பலகைகளை வைக்க மறுப்பவர்களுடைய உரிமங்களைக்கூட இரத்து செய்ய அரசு தயங்கக்கூடாது என்று நான் இந்தநேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன.

அதேபோல் திருக்குறளானது, உலகத்திலே இருக்கக்கூடிய மறை நூல்களிலே, பைபிளுக்கு அடுத்தபடியாக, குரானுக்கு அடுத்தபடியாக, பொதுமறையாகக் கருதப்பட்டு, இப்போது உலக மொழிகளிலே, மிக முக்கியமான மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டு இருக்கிறது. அந்தத் திருக்குறளைத் தேசிய நூலாக இதுவரையிலே மத்திய அரசு அறிவிக்கவில்லை. எனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருக்குறளை தேசிய நூலாக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பெங்களூரிலே திருவள்ளுவருடைய சிலையானது இன்னும் திறக்கப்படாமல் மூடி வைக்கப்பட்டிருக்கிறது மீண்டும் கர்நாடக முதலமைச்சர் அவர்களோடு நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பேசி, அந்தத் திருவள்ளுவர் சிலையை எப்படியும் திறப்பதற்கு ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அதேபோல் பேரறிஞர் அண்ணா அவர்களால் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்று முடிந்த பிறகு, திருக்குறள் இருக்கை, சென்னை, மதுரை, அண்ணாமலை ஆகிய 3 பல்கலைக்கழகங்களிலே உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று வரையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே திருக்குறள் இருக்கையானது செயல்படவில்லை. எனவே மீண்டும் அவர்களுக்கு அறிவுறுத்தி அந்தத் திருக்குறள் இருக்கையைச்



செயல்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுடைய நூலை நம்முடைய தமிழக அரசானது நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். சென்னைக்குப் பக்கத்திலேயுள்ள மடிப்பாக்கத்திலே அவருக்குச் சொந்தமாக இருந்த இடத்திலே ஒரு நினைவு மண்டபம் கட்டப்பட வேண்டுமென்று தமிழறிஞர்களும், தமிழார்வலர்களும் இதற்காக முயன்று கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசு இதற்கு நிதியுதவி செய்து, அங்கு நினைவு மண்டபம் கட்டுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் புரட்சிக் கவிஞரைப்போல, மிகச் சிறந்த கவிஞராக இருந்தவர் செங்கை சிவம் அவர்கள்—(சிரிப்பு) புதுவை சிவம் அவர்கள். மன்னிக்க வேண்டுகிறேன். செங்கை சிவமும் அப்படி ஒரு கவிஞராக வருவாரேயானால், உண்மையிலேயே அது நமக்கெல்லாம் பெருமையாக இருக்கும். ஆர்வத்தின் காரணமாக வாய் தவறி வந்துவிட்டது. புதுவை சிவம் அவர்கள் மிகச் சிறந்த முத்தமிழ் அறிஞராக, கவிஞராகத் திகழ்ந்தவர். அவருடைய குடும்பம் மிக நலிவடைந்த நிலையில் இருக்கின்ற காரணத்தினால், அவருக்கு நிதியுதவி வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

அதேபோல இப்போது அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகின்றது. அதை வரவேற்கின்ற அதேநேரத்திலே, அவர்களுக்கு 500 ரூபாய் என்று வழங்கப்படுகின்ற உதவித் தொகையை 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். மொத்தமே 450 அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களே தான் இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்கள் ஆய்வு செய்வதற்காகப் பல இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்களுக்கு, பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அவர்களுக்கு மருத்துவப் படியையும் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு தனிப்பட்ட கோரிக்கை. (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இது ஏற்கெனவே

கொண்டுவரப்பட்ட செய்திதான். குடந்தை தேவி ராசகோபாலன் என்ற தமிழ் அறிஞருடைய மனுவைப் பரிசீலித்து, ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, அவருக்கு, தமிழ் மொழிக் காவலர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவியினை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தியாகி அப்துல் ரகூப் என்பவர் கடந்த ஆட்சிக் காலத்திலே தமிழ் உணர்வோடு தீக்குளித்து இறந்தவர். அவருடைய குடும்பத்திலே இருக்கக்கூடிய அவருடைய அண்ணன் ஆசிப் அலி என்பவர், D.E.E. என்ற Diploma படிப்பை முடித்து இருக்கிறார். சிறப்பு நேர்வாகக் கருதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அப்துல் ரகூப் என்பவருடைய அண்ணன் ஆசிப் அலிக்கு, பணியினை வழங்க வேண்டுமென்று இந்தநேரத்திலே பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நலிவடைந்த கலைகளை ஊக்கப்படுத்துகின்ற இந்தத் தமிழக அரசைப் பாராட்டுகின்ற நேரத்தில்... இரவு நேரங்களிலே இறப்புக் காலங்களில் ஒப்பாரிப் பாடல்களை அரவாணிகள் என்று சொல்லப்படுபவர்களான அலிகள்தான் பாடுகின்றார்கள். அவர்களையும் நலிவடைந்த கலைஞர்களாகக் கருதி, அவர்களுக்கும் நிதி உதவியை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மார்கழி மாதத்தில் திருப்பாவை, திருவெம்பாவை போன்ற பாடல்களை மிகச் சிறப்பாகப் பாடக்கூடிய தாசரிகளுக்கும், நலிவடைந்த கலைஞர்களுக்கான நிதி உதவியை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தநேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குச் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். சில விழாக்களை நாம் நடத்துகிறோம். இது நான் ஏற்கெனவே தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்த செய்திதான். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் இது குறித்துக் கொண்டு வந்திருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சனவரித் திங்கள் ஒன்றாம் நாளை தொல்காப்பியர் திருநாளாகவும், ஏப்ரல் 14-ஐ இளங்கோவடிகள் திருநாளாகவும். அதேபோல, விஜயதசமியை கம்பர் திருநாளாகவும் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், தமிழ் வளர்ச்சித் துறையும், அறநிலையத் துறையும் எப்படி இணைந்து இருக்கின்றனவோ அதேபோல, ஆன்மீகமும் தமிழ் அறிஞர்களுக்கான இந்த நாட்களையும் இணைத்து கொண்டாடப்படுகின்ற நேரத்திலே, அது சிறப்பிற்குரியதாக இந்த அரசுக்கு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்து இரண்டே இரண்டு கோரிக்கைகள். மயிலாப்பூரில் திருக்கோயில்களிலே ஓதுவார்களாக இருந்தாலும் சரி, தமிழ்ப் புலவர்களாக இருந்தாலும் சரி, இசைக் கலைஞர்களாக இருக்கக்கூடிய மேளக்காரர்கள், தாளக்காரர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் எல்லாம் வீடுகள் இல்லாமல் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில், சில பேர்களுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட வீடுகள் ஒதுக்கப்பட்டு இருக்கின்றன. இதுகுறித்து அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதாவது, என்னுடைய வேண்டுகோள் என்னவென்று சொன்னால், கபாலீஸ்வரர் கோயில் போன்ற கோயில்களாக இருந்தாலும், அல்லது இந்து அறநிலையத் துறையினுடைய ஆட்சியின்கீழ் இருக்கக்கூடிய அனைத்துக் கோயில்களாக இருந்தாலும், அவற்றில் உள்ளவர்களுக்கு, ஒருவருக்கு ஒரு வீட்டிற்கு மேல் ஒதுக்கப்படக்கூடாது. உதாரணத்திற்கு அந்தக் கோயிலில் இருக்கக்கூடிய ஒருவர் இரண்டு வீடுகளுக்கு மேல் வைத்திருக்கிறார். சாம்பு குருக்கள் என்பவருக்கு வீடு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவருக்குச் சொந்த வீடும் இருக்கிறது. எனவே அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் வீடுகளை ஒதுக்கியிருக்கிறார்கள். எனவே அரசு இதைக் கவனித்து, எல்லோருக்கும் வீடு கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுந்தர். (குறுக்கீடு)

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** சீக்கிரம் பேசி முடித்துக்கொள்கிறேன். அதேபோல ஓதுவார்களுக்கு ஊதிய விகிதப்படி சம்பளத்தைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் வழியில் அர்ச்சனை செய்த டாக்டர் பேராசிரியர் விசுவநாத சிவாச்சாரியார் என்பவரை, இப்போது பரம்பரை அர்ச்சகர் முறை ஒழிக்கப்பட்ட காரணத்தால், 60 வயது என்பதைக் காரணம் காட்டி அனுப்பிவிட்டார்கள். ஆனால் அதே நேரத்திலே, அய்யாசாமி, ஏகாம்பரம், குமாரசாமி, சேனாதிபதி என்பவர்கள் எல்லாம் இன்றைக்கும் பணி செய்து கொண்டு இருக்கிறார்கள். நான் ஏன் கேட்கிறேன் என்று சொன்னால், வடமொழியிலே வழிபாடு நடத்துவதை ஊக்கப்படுத்திய சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் என்பவரை இந்த அரசு சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றபோது, டாக்டர் பேராசிரியர் விசுவநாத சிவாச்சாரியார் போன்றவர்களை எல்லாம் வயதைக் காரணம் காட்டி ஓய்வு பெறச் செய்துவிட்டார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை விசாரித்தறிந்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுந்தர். ஐந்து நிமிடங்களில் பேசி முடிக்கவும்.

**திரு. கே. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருமையுடன் வழங்கிய 1999-2000 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினைத் தொடர்ந்து, இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம், தமிழ் வளர்ச்சி—பண்பாடு ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

நம்முடைய முன்னோர்கள் திருக்கோயிலை நிலைக்களனாக வைத்து ஊராட்சி அமைப்பை ஏற்படுத்தி செம்மையாகச் செயல்பட்ட வரலாற்றை உத்திரமேரூர் திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் எடுத்து இயம்புகின்றன என்று நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் தமிழ்நாட்டிலேயே 73 ஊராட்சிகளை உள்ளடக்கிய ஒரு பெரிய ஒன்றியம். அந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேநேரத்திலே 47 ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய முதல்வர் அவர்கள் 'கோயில் என்பது கொடியவர்கள் கொள்ளை அடிக்கின்ற ஒரு கூடாரமாக இருக்கக்கூடாது' என்று குறிப்பிட்டிருப்பதை நம்முடைய அரசு இன்றைக்குச் செயல்படுத்துகின்ற வகையிலே கோயில் நிலங்களை ஆக்கிரமித்த ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து இப்போது அவை மீட்கப்பட்டிருக்கின்றன. திருக்கோயிலுக்குச் சொந்தமான 273 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று 253—Ground—மனைகள் ஆக்கிரமிப்பிலேயிருந்து மீட்கப்பட்டு ஏழைக் கடவுள்களாக இருந்த கடவுள்களை இன்றைக்குப் பணக்காரக் கடவுள்களாக மாற்றிய அமைச்சர் அவர்களை, ஆத்திகப் பெருமக்களே பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல இந்த ஆட்சி வருவதற்கு முன்பு இருள் அடைந்து கிடந்த கோயில்கள் எல்லாம் இன்றைக்கு ஒளியூட்டப்பட்டு இருப்பது கண்டும் பக்தர்கள் எல்லாம் மகிழ்ச்சிப் பெருக்கிலே திளைக்கிறார்கள். முன்பு திருக்கோயில் திருப்பணிக்கு 45 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. 1998-99 ஆம் ஆண்டு முதல் 75 இலட்சமாக உயர்த்தி 37 கோயில்களுக்குப்



பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பது மிகவும் பெருமைக்குரிய ஒன்றாகும். இந்த ஆண்டு அதை ரூ. 1 கோடியாக உயர்த்தி மேலும் பல கோயில்களுக்கு குறிப்பாக உத்திரமேரூர் தொகுதியிலே இருக்கின்ற சித்தனஞ்சேரி அருள்மிகு திருக்காளீசுரர் கோயிலுக்கும், வழக்காட்டுப்பேட்டை அருள்மிகு ஈஸ்வரன் கோயிலுக்கும், திருப்பணி நடைபெறுவதற்கு நிதி வழங்க வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல நம்முடைய ஆட்சி ஏற்பட்டு 3 ஆண்டுகள் ஆகியும இன்னும் பல கோயில்களுக்கு அறங்காவலர் குழுக்கள் நியமிக்கப்படாத நிலை இருக்கிறது. குறிப்பாக, மாமல்லபுரத்திலே ஆளவந்தார் அறக்கட்டளைக்கு பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் இருக்கின்றன. இன்றைக்கும் அதற்கு அறங்காவலர் குழு நியமிக்கப்படாததால் அந்தக் கோயிலுக்குச் சொந்தமான சொத்துக்கள் எல்லாம் பாழாகிற நிலை இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அந்தக் கோயிலுக்கு அறங்காவலர் குழுவை உடனடியாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய தமிழ்நாடு அரசு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய எண்ணத்திற்கு ஏற்ப உயரிய நோக்கம் கொண்டுள்ள ஒளிவு மறைவு அற்ற செயல்பாட்டுக்கு உதவும் வகையில் மக்கள் மொழியில் அரசின் ஆட்சி நடைபெற்றிட தமிழ் மொழி பெயர்ப்புத் துறை பணியாற்றி வருகின்றது. குறிப்பாக தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறை அலுவலகங்களின் அலுவல்களும் தமிழில் நடைபெற அது உதவுகின்றது. ஆனால் இன்னும் சற்று கீழே இறங்கி தமிழ் மொழி பெயர்ப்புத் துறை செயல்பட வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை, ஊரக வளர்ச்சித் துறை போன்ற துறைகளிலே ஒப்பந்தங்கள், நமூனாக்கள், அளவைப் புத்தகங்கள் எல்லாம் இப்போதும் ஆங்கிலத்திலே இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவற்றையெல்லாம் தமிழ்ப்படுத்திட வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேநேரம் நம்முடைய மொழிப் போர் தியாகிகளுக்கெல்லாம் வேலைவாய்ப்பிலே முன்னுரிமை வழங்கிட இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதற்கு மொழிக் காவலர்கள் எல்லாம் இன்றைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். 1986-லே மொழி காக்கப் போராடியவர்களுக்கும், அவர்களைச் சேர்ந்த மொழிக் காவலர்களுக்கும், ஓய்வூதியம் வழங்கப்பட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி வழங்க முடியாவிட்டாலும்கூட, அவர்களுடைய வாரிசுகளுக்கு

வேலைவாய்ப்பிலே முன்னுரிமை அளிக்கின்ற வகையிலே அரசு ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் நம்முடைய பேரறிஞர் அண்ணா முதல் பாரதியார் உள்ளிட்ட—எஸ்டி.எஸ். யோகி உள்ளிட்ட- 21 பேர்களுடைய நூல்கள் எல்லாம் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களுடைய குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது. ஆட்சியை அரணிட்டுக் காத்து நின்று முழங்கிய பாவலரேறு அருட்பெருஞ்செல்வர் பெருஞ்சித்திரனார் நூல்களை நாட்டுடைமையாக்க வேண்டும். அதுபோல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நிஜாமுதீன் அவர்கள் இங்கே தமிழ் தினம் என்ற ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தமிழ் தினத்தைக் கண்டிப்பாக அரசு அறிவித்தே ஆகவேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்று சொன்னால், இன்றைக்கு இயல், இசை, நாடகத் தமிழோடு, கணினித் தமிழையும் நம்முடைய தமிழ் உலகத்திலே அறிமுகப்படுத்தியவரும், கருவறையிலே தமிழை நுழைத்தவரும், சொல் அகராதி, கலைக் களஞ்சியம், மருத்துவக் கலைக் களஞ்சியம் மற்றும் தமிழிலே பல புதுமைகளைப் புகுத்தியவரும் உலகத் தமிழ்ச் சங்கத்திலே இருக்கின்ற எல்லாச் சங்கங்களுக்கும் நிதி உதவி அளித்தவரும் இப்போது நடமாடும் தமிழாய், நான்காம் தமிழாய் விளங்குகின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பிறந்த தினமான ஜூன் மூன்றாம் தேதியை தமிழ்தினமாக அறிவித்து இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டு, விடைபெறுகின்றேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

***திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் ஆட்சி மொழி, பண்பாடு, இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

நமது அரசு தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், தமிழ் மக்கள் மொழி உணர்வுக்காகவும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்கின்ற ஒரு கோட்பாட்டினை அடைகின்ற வகையிலே இப்போது மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்தவகையிலேதான், வியாபார நிலையங்களிலேயெல்லாம் பெயர்ப்



பலகைகள் தூய தமிழிலேயே முதன்மையாக எழுதப்படல் வேண்டுமென்று உத்தரவிட்டு அதனைக் கண்டிப்பாகச் செயல்படுத்தக்கூடிய வகையில் சில வரைமுறைகளையெல்லாம் உருவாக்கியிருக்கின்றது.

தமிழகத்தினுடைய பல்வேறு ஊர்களின் பெயர்கள்—ஏற்கெனவே தூய தமிழிலேயே வழங்கப்பட்ட பெயர்களெல்லாம்—தற்போது மருவி வட மொழிப் பெயர்களிலே அழைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக எனது வேதாரண்யம் தொகுதி ஏற்கெனவே திருமறைக்காடு என்று தூய தமிழ்ப் பெயரிலேயே அழைக்கப்பட்டு வந்தது. ஆனால், மீண்டும் அது வடமொழிப் பெயரிலே வேதாரண்யம் என்று அழைக்கப்பட்டு வருகிறது. இதைப்போல தமிழகத்தில் பல்வேறு இடங்களிலேயுள்ள ஊர்களெல்லாம் வடமொழிப் பெயர்களிலே அழைக்கப்பட்டு வருகின்றன. அவற்றையெல்லாம் மாற்றி தூய தமிழ்ப் பெயர்களில் அவற்றை அழைக்க வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட ஏற்கெனவே அதற்கு உறுதியளித்துள்ளார்கள். அந்தவகையிலே வேதாரண்யத்தை திருமறைக்காடு என்று பெயர் .மாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தமிழர்களுடைய கலை, கலாச்சாரம் மற்றும் பண்பாடு ஆகியவற்றைப் பரப்புகின்ற வகையிலே இசைக் கல்லூரிகள் கடந்த ஆண்டில் 10 மாவட்டங்களில் 10 இடங்களிலும், இந்த ஆண்டு 5 மாவட்டங்களிலும் உருவாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். மிகவும் பாராட்டுக்குரியது (மேசையைத் தட்டும் ஒலி). படிப்படியாக மற்ற மாவட்டங்களிலும் இது விரிவுபடுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அவ்வாறு தொடங்கும்போது நாகை மாவட்டத்திலே எனது வேதாரண்யம் தொகுதியிலே அதைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் ஏனென்றால் திருமறை, திருப்பதிகங்களெல்லாம் பாடப்பட்ட மிகச் சிறப்பு வாய்ந்த புண்ணியஸ்தலமாக அது உள்ளது. எனவே வேதாரண்யத்தில் இசைக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தமிழ் மொழி மற்றும் பண்பாட்டைப் பேணிக் காக்க சிறந்த முறையில் பணியாற்றிய, தொண்டாற்றியவர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகையும் பயணக் கட்டணச் சலுகைகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. 1986 ஆம் ஆண்டிலே இந்தி ஆட்சி மொழிச் சட்டப் பிரிவை எதிர்த்து சிறை சென்றவர்களுக்கும்—நமது

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உள்ளிட்ட 10 சட்டமன்ற உறுப்பினர்களின் பதவியைத் துறக்க வைத்த அந்தப் போராட்டத்திற்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தக்கூடிய வகையிலே அவர்களுக்கும்—இந்த உதவித் தொகையையும் பயணச் சலுகைகளையும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களெல்லாம் இப்போது மீட்கப்படுகின்றன. நியாயமான வாடகையின் மூலம் கோயில்களினுடைய வருவாயெல்லாம் அதிகப்படுத்தப்படுகின்றன. கடந்த காலங்களிலே நடைபெற்ற கோயில் கொள்ளைகளெல்லாம் தடுத்து நிறுத்தப்பட்டு மிக நல்ல முறையிலே இப்போது நிர்வாகம் நடந்து வருகிறது. எனவே வேதாரண்யம் தொகுதியிலே பஞ்சநதிக்குளம் நடுச்சேத்தி என்கின்ற கிராமத்திலே அருள்மிகு திரௌபதி அம்மன் ஆலயம் இருக்கிறது. அந்த ஆலயத்தினுடைய பரம்பரை அறங்காவலர் அதிக அளவிலே தவறு செய்து அந்தக் கோயிலுக்கு வரக்கூடிய வருவாய்களையெல்லாம் மோசடி செய்ததன் காரணமாக அந்தப் பகுதி மக்களெல்லாம் உண்ணாவிரதப் போராட்டத்தைக்கூட கடந்த மாதம் நடத்தியிருக்கிறார்கள். அதுசம்பந்தமாக உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல எனது வேதாரண்யம் தொகுதியில் துளசியாப்பட்டினம் என்கிற கிராமத்திலே தமிழ் மூதாட்டி ஔவையார் அவர்களுக்கு ஒரு கோயில் உள்ளது. தமிழ்நாட்டிலே ஔவையாருக்கு இங்கே மட்டும்தான் கோயில் இருப்பதாக அறிகிறேன். அந்தக் கோயில் விழாவை அரசு விழாவாக ஏற்று நடத்த வேண்டுமென்று அந்தப் பகுதி மக்களெல்லாம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதனை அரசு விழாவாக ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேதாரண்யம் திருக்கோயிலுக்குக் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன்பாக 10 இலட்சம் ரூபாய் குடமுழுக்குக்காகவும், திருப்பணி வேலைகளுக்காகவும் அளிக்கப்பட்டும் இன்றுவரை மூன்றில் ஒரு பங்கு வேலைகூட முடிவுறவில்லை. அதனால் அந்த வேலையைத் துரிதப்படுத்தி உடனடியாகக் குடமுழுக்கு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வேதாரண்யம் அருள்மிகு வேதாரணீசுவரர் கோயில் சுமார் 14,000 ஏக்கர் நிலங்களை உடையது. உலகத்திலேயே அதிகமான நிலங்களை உடைய கோயில் இந்தக் கோயில் என்று இந்து சமய



அறநிலையத் துறையே சொல்கிறது. ஆனால் இந்தக் கோயிலுக்கு வருமானம் மிகவும் குறைவாக உள்ளது. ஏற்கெனவே இந்தக் கோயிலினுடைய அறங்காவலர், யாழ்ப்பாணம் வருணி ஆதீனத்தின் மூலம் பரம்பரையாக நியமனம் செய்யப்பட்டு கோயில் நிர்வாகம் செம்மையாக நடைபெற்று வந்தது. கடந்த ஆட்சியிலே இந்தக் கோயில் சொத்துக்களையெல்லாம் கொள்ளையடிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக, தங்களுக்கு வேண்டியவர்களுக்கு நியமனம் செய்திடும் வகையிலே முறைகேடாக ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அச்சட்ட ஆணை 30/94 ஆகும். திருக்கோயில் சட்டத்திற்கு முரணாக, தொகுதி மக்களின் விருப்பத்திற்கு மாறாக கடந்த ஆட்சியாளர்களால் பிறப்பிக்கப்பட்ட சட்டம் தற்போது உயர் நீதிமன்றத்தின் தடையின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே இந்தச் சட்டத்தை இரத்து செய்து எப்போதும்போல யாழ்ப்பாணம் வருணி ஆதீனத்தின் மூலம் பரம்பரை அறங்காவலர்களை நியமனம் செய்திடும் முறையை உருவாக்கி நிர்வாகத்தைச் செம்மைப்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு எனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

***திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று முச்சங்கங்கள் அமைத்து தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக மதுரை மாநகர் பாடுபட்டதை, வரலாறு நாட்டுக்கு உணர்த்திக்கொண்டிருக்கிறது. அதே மதுரையில் நான்காவது சங்கத்தை நிறுவி தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட பாண்டித்துரைத் தேவருக்கு தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் நினைவகம் அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் மொழியினுடைய வளர்ச்சி எப்படி இருக்க வேண்டுமென்றால், இன்று தமிழ்நாட்டினுடைய ஆட்சி மொழியாக இருக்கிற தமிழ் மொழி நாளைக்கு மத்திய அரசின் ஆட்சி மொழியாக இருக்கப்போகின்ற நிலை ஏற்படுமேயானால் அதுதான் தமிழ் மொழியினுடைய உண்மையான வளர்ச்சியாக இருக்க முடியும். எனவே எப்படிப்பட்ட சூழ்நிலையில் அது உருவாகும் என்றால், வருகிற பாராளுமன்றத் தேர்தலில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆதரவு

பெற்ற அணி, அகில இந்தியாவில் அமையும் அந்த அரசியல் கூட்டணி, அகில இந்திய அளவில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்று அதன் வாயிலாக மத்தியிலே கலைஞர் அவர்களுடைய ஆதரவு பெற்ற ஒரு மத்திய அரசு மத்தியிலே இடம் பெறுமேயானால், நிச்சயமாக தமிழ் மொழி மத்திய அரசின் ஆட்சிமொழியாகும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் இந்து மதத்தினுடைய வளர்ச்சிக்காக சுவாமி விவேகானந்தர் அவர்கள் மிகச் சிறப்பாகப் பாடுபட்டிருக்கிறார்கள். அமெரிக்காவில் உள்ள சிகாகோவிற்குச் சென்று இந்து மதத்தினுடைய சிறப்பை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சுவாமி விவேகானந்தர் அவர்களை சிகாகோவிற்கு தன்னுடைய சொந்தச் செலவிலே அனுப்பி, இந்து மதத்தைப் பரப்புவதற்கு உறுதுணை புரிந்தவர்தான் இராமநாதபுரம் இராஜா பாஸ்கர சேதுபதி என்றால் அது மிகையாகாது. எனவே சுவாமி விவேகானந்தர் அவர்களை சிகாகோவிற்கு அனுப்பி உலக நாடுகளில் இந்து மதத்தினுடைய வளர்ச்சிக்குப் பாடுபட்ட இராமநாதபுரம் இராஜா பாஸ்கர சேதுபதி அவர்களுக்கு விவேகானந்தர் மண்டபம் முன்பு ஒரு சிலை வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தஞ்சாவூர் பெரிய கோயிலில் இராஜராஜன் சிலையை நிறுவ வேண்டும் என்று சொன்னார்கள்; அவ்வாறே செய்தார்கள். இராஜராஜ சோழன் நிறுவிய அந்தக் கோயிலில் இராஜராஜ சோழனுக்கு சிலை அமைக்கப்பட வேண்டும் என்று முதல்வர் அவர்கள் விரும்பியதைப்போல், சுவாமி விவேகானந்தர் அவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி இந்து மதத்தினைப் பரப்பிய இராமநாதபுரம் இராஜா அவர்களுக்கு விவேகானந்தர் மண்டபம் முன்பு சிலை அமைக்கப்பட வேண்டும் என்று நானும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் ஏறக்குறைய 5 இலட்சம் ஏக்கர் கோயில் நிலங்கள் இருக்கின்றன. இப்போது கோயில் நிலங்களைப் பற்றிய சர்ச்சை கடுமையாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே தமிழக முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி 5 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்காக, ஒரு தனி I.A.S., அதிகாரியினுடைய நிர்வாகத்தின்கீழ்—இன்று பினாமிதாரர்களிடம் நிலங்கள் இருக்கின்றன; பெரும் பண முதலைகளிடம்தான் அந்த நிலங்கள் இருக்கின்றன—அத்தனையையும் கொண்டுவந்து அதைக் கைப்பற்றுகின்ற அளவிற்கு ஒரு புதிய அமைப்பை, புதிய நிர்வாகத்தை



சட்டத்திருத்தங்களுடன்கூடிய, அதிகாரங்களுடன்கூடிய I.A.S., அதிகாரியினுடைய நிர்வாகத்தின்கீழ்—ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்தி குத்தகைதாரர்கள் ஏமாற்ற முடியாத அளவிற்கு அந்த நிலங்களின் நிர்வாகத்தினைச் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு கோயில். உலகத்திலுள்ள யாத்ரீகர்கள் எல்லாம் அங்கு வந்து செல்கின்றார்கள். அப்படிப்பட்ட மதுரை மீனாட்சியம்மன் கோயில் நிர்வாகத்தின் மூலம்—நமது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மதுரை மாநகரைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தாலே, நமது மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் மதுரை மாநகரத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தாலே, மதுரை மீனாட்சியம்மன் கோயில் வருமானத்தின் மூலம்—ஒரு இறையியல் கல்லூரியை ஆன்மீகக் கல்லூரியைத் தொடங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் பழனியாண்டவர் கல்லூரியின்கீழ் இன்று பல்வேறு கல்வி நிறுவனங்கள் உள்ளன எனவே அதில் பொறியியல் கல்லூரியையும், மருத்துவக் கல்லூரியையும் தொடங்கி, எப்படி திருப்பதி பல்கலைக்கழகம் என்று சொல்கிறார்களோ அதேபோல் பழனியாண்டவர் பல்கலைக்கழகம் என்று சொல்கின்ற அளவிற்கு ஒரு நிலையை உருவாக்க வேண்டும். பழனியாண்டவர் கோயில் நிர்வாகத்தில் 200 காலியிடங்கள் இருக்கின்றன. மூன்று வருடமாக அவை நிரப்பப்படாமல் இருக்கின்றன. அவற்றை நிரப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கல்வி நிறுவனங்களை ஒன்றாக இணைத்து அதற்கு நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்ற தகுதியை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே 200 படுக்கைகள் உள்ள ஒரு மருத்துவமனை இருக்கிறது. ஆயிரம் பேர்களுக்கு இலவசமாக மருத்துவ சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கு ஒரு மருத்துவக் கல்லூரி வழங்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேனி மாவட்டம், கம்பம் அருகே கண்ணகி கோயில் இருக்கிறது. எப்படி பெரியாறு அணை நீர்மட்ட பிரச்சினை தமிழர்களுக்கு ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறதோ, அதேபோல் கண்ணகி கோயில் பிரச்சினையும், மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

ஒவ்வொரு சித்திரா பௌர்ணமி தினத்தன்றும் பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தால், கண்ணகி கோயில் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.50

எனது உசிலம்பட்டி தொகுதியில் கருமாத்தூர் முனுசாமி கோயில், பாப்பாபட்டி, ஒச்சாண்டம்மன் கோயில், உசிலம்பட்டி, சின்னகருப்பு கோயில், முதலைக்குளம், பதினெட்டாம்படி கருப்புசாமி கோயில், நாட்டாமங்கலம், ஆதிசிவன் கோயில் என்று பல கோயில்கள் இருக்கின்றன. இதை கோயில் தொகுதி என்றே சொல்லலாம். அங்கே அந்த அளவிற்கு நூற்றுக்கணக்கான கோயில்கள் இருக்கின்றன. இந்த முக்கியக் கோயில்களுக்காவது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் திருப்பணி செய்யவும், வாரம் இருமுறை பூசை செய்யவும் உதவி புரிய வேணுமாய்க் கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக திரு. ந. கருப்பண்ண உடையார். ஐந்து நிமிடத்தில் பேசி முடிக்கவும்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கை எண் 12, தமிழ் வளர்ச்சி—பண்பாடு குறித்த மானியக் கோரிக்கை எண் 51- ஆகியவற்றின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் சென்ற மூன்றாண்டுகளாக பல நூற்றுக்கணக்கான கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கு விழா நடத்திட நடவடிக்கை எடுத்துவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

தமிழகத்தில் பொற்கால ஆட்சி செய்த பெருந்தலைவர் காமராஜர் காலத்தில் ஆலயத்திற்குள் ஆண்டவனை வழிபட ஆதிதிராவிட மக்களை அனுப்பிய பெருமை காங்கிரஸ் கட்சியைச் சாரும் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன். மக்கள் தலைவர் ஜி.கே. மூப்பனார் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளராக இருந்தபொழுது தன்னுடைய சொந்த ஊரான சுந்தரபெருமாள்



கோயிலில் முதன்முதலாக சமபந்தி போஜனம் என்று ஏற்பாடு செய்து எல்லா சாதியினருக்கும், ஆதிதிராவிடர் தெருவில் விருந்தளித்து தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியத் திருநாட்டின் பிரதமராக இருந்த மறைந்த இளந்தலைவர் இராஜீவ் காந்தி அவர்கள், ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஓர் ஆலயத்திற்கு, அரிசன மக்களின் ஆலயப் பிரவேசத்திற்கு மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் தலைமையில் அந்த மாநில முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களையும் அனுப்பி வைத்தார்கள் என்பதைப் பெருமையோடும் மகிழ்ச்சியோடும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் திருக்கோயில்கள், சமணத் திருக்கோயில்கள் மற்றும் அறநிறுவனங்கள் என 36,253 உள்ளன. மொத்த நிலப்பரப்பு 4,91,380 ஏக்கர் உள்ளது. குத்தகைதாரர்கள் 1,06,807 பேர் உள்ளனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் 22,046 உள்ளன. 22,629 வாடகைதாரர்கள் உள்ளனர். 22,592 வீட்டு மனைகள் 84,220 நபர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. திருக்கோயில்கள் மூலம், 28,569 வழக்குகளில் 13,253 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு சுமார் 800 லட்சம் ரூபாய் வசூலிக்கப் பட்டதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. மீதியுள்ள 15,316 வழக்குகளின் நிலை என்ன என்பதையும் விளக்கவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான 273.21 ஏக்கர் நிலம் மற்றும் 253 ground 1,310 சதுர அடி மனைகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில்களுக்கு ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் அறநிலையைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை வைத்துக்கொண்டு குத்தகை கொடுக்காமல் இருக்கின்றவர்களிடமிருந்து நிலத்தைக் கையகப்படுத்தி அந்த நிலங்களை நல்ல விலைக்கு விற்று வங்கியில் பணத்தைப்போட்டு அதன்மூலம் வரும் வட்டியை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்பதைத் தங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் வீடுகள், கடைகள் கட்டிக்கொண்டு, கோயிலுக்கு பணத்தைத் தராதவர்களிடம் உள்ள இடங்களைத் திரும்பப் பெற்று அதிக விலைக்கு விற்று, அந்தப்பணத்தை வங்கியில் முதலீடு செய்யலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தின் கிராமப்புறங்களிலுள்ள நலிவுற்ற பழுதடைந்த கோயில்களில் திருப்பணி செய்ய ஓர் ஆண்டுக்கு 50 கோயில்கள் என எடுத்துக்கொண்டு,

ஒரு கோயிலுக்கு 25 ஆயிரம் ரூபாய வழங்குவதை வரவேற்கிறேன். அதை இந்த ஆண்டு முதல் 200 கோயில்களுக்கு என்று விரிவுபடுத்தி நிதியுதவி வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். திருக்கோயில்களில் நகைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களைப் பாதுகாக்க, கள்வர் எச்சரிக்கை மணிகள் பொருத்த 110 திருக்கோயில்களுக்கு அனுமதி வழங்கி, 141 கோயில்களில்தான் பொருத்தப்பட்டுள்ளன. மீதி உள்ள 269 கோயில்களில் உடனடியாக கள்வர் எச்சரிக்கை மணி பொருத்தப்பட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலும் தமிழகத்திலும், தமிழை வளர்க்கவேண்டும் என்பதை எண்ணி, தமிழகப் பண்பாட்டு மையங்கள் ஏற்படுத்தி, அதன்மூலம் இயல், இசை, நாடகம் போன்ற கலைகள் வளருவதற்கு ஊக்கம் அளித்துவரும் அரசைப் பாராட்டுகிறேன். இந்தியாவின், வெளிமாநிலங்களிலும், தமிழகத்திலும் உள்ள தமிழ்க் கலைஞர்கள் எழுதிய நல்ல புத்தகங்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருவதையும், திருவள்ளுவர் விருது, பாரதியார் விருது வழங்கி வருவதையும், தஞ்சையில் ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு, வருவதையும் பாராட்டுகிறேன்.

தமிழகத்தில் உள்ள கோயில்களில் குடமுழுக்கு விழா செய்யப்படவும், அல்லது திருப்பணி வேலைகள் செய்யப்படவும் அறங்காவலர் குழு தீர்மானம் இயற்றி அனுப்பினால், அதை அனுமதிக்கக் காலதாமதம் ஆகிறது என்பதையும், ஒப்பந்தம் விட்ட பிறகும் வேலை செய்ய அனுமதி தர காலதாமதமாகிறது என்பதையும் எண்ணி, விரைவில் அனுமதி வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பாடல்பெற்ற திருக்கோயில்களுக்குக் குடமுழுக்கு விழா செய்ய அறநிலையத் துறை மூலம் நிதி உதவி வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் பழம்பெரும் கிராமியக் கலைகளான தெருக்கூத்து, கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் போன்ற அரிய கலைகளுக்கு அரசின் ஆதரவு போதுமான அளவிற்கு இல்லாத காரணத்தினால் அவை முற்றிலும் அழிந்துவிடக்கூடிய நிலையில் இருப்பதை அரசு கவனத்தில்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற அரசின் கொள்கையை நான் பாராட்டி, மேலும் அந்த முயற்சியைத் தீவிரப்படுத்த வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள நிறுவனக் கல்விசார் அலுவலர்களின் வேண்டுகோளை ஏற்று பல்கலைக் கழக மானியக் குழு ஊதியத்தை 1986-லிருந்து 1999 வரை வழங்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கலை, பண்பாட்டுத் துறை மூலம் குரலிசை, வீணை, வயலின் போன்றவற்றில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களை நியமனம் செய்யும்போது அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகவும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** முடித்துவிடுகிறேன். மூப்பின் அடிப்படையிலும் ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது நடைமுறையில் உள்ள நேரடி விண்ணப்பம் பெற்று நியமனம் செய்யும் முறையை இரத்து செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'என்னை நன்றாகக் கலைஞர் படைத்தார் அன்னைத் தமிழுக்கு அணி செய்யுமாறே' என்ற திருமந்திரத்தின் ஒரு மந்திரத்தை ஓதி, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பிலும், தமிழ்த் துறையின் சார்பிலும் என்னுடைய கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

அறநிலையத் துறையின் சார்பில் பேசிய எல்லோருடைய கருத்துக்களையும் நினைவில்கொண்டு, தக்க தீர்வு காணப்படும் என்பது மட்டுமல்லாமல், அவர்களுக்கு எழுத்து வடிவமான விடையே தரப்படும் என்பதையும் நான் உறுதி செய்கிறேன். ஏராளமான நண்பர்கள் இதிலே இருக்கிற புள்ளிவிவரங்களைத் தெரிவித்திருக்கிற காரணத்தால், அவற்றை நான் மீண்டும் திருப்பிச் சொல்லும் தேவையிராது என்று கருதுகிறேன். அந்த வகையில், எத்தனையோ கோயில்கள் பெரிய வருவாயைப்

பெற்றிருந்தாலும், ரூ.1000-க்கும் குறைவான வருமானம் உள்ள கோயில்கள் ஏறத்தாழ 27 ஆயிரம் இருக்கின்றன. அதனால்தான், பெரிய கோயில்களை நாம் சிறப்பாக அந்தந்த வருவாயைக் கொண்டு பேணுகின்றபோது, சிறிய கோயில்களைப் பேணுவதற்கான அடிப்படை இடர்ப்பாடுகளைப் பெற வேண்டியிருக்கிறது. வருவாய், ரூபாய் ஆயிரமாக இருந்தாலும், அந்தக் கோயிலுக்கு இருக்கிற தேர் பெரியதாக இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு இருக்கிற குளம் பெரியதாக இருக்கிறது. அந்தக் கோயிலே பல கோபுரங்களைக் கொண்டதாக இருக்கிறது. எனவேதான் திருப்பணி என்று தொடங்கிவிட்டால், பல இலட்சக்கணக்கான ரூபாய் அதற்குத் தேவைப்படுகிறது. இதை எப்படி ஈடுகட்டுவது என்பதில்தான் அடிப்படை இடர்ப்பாடு இருக்கிறது. காரணம், இந்து சமய அறநிலையத் துறையினுடைய அடிப்படை நிலையே, எந்தக் கோயிலில் வருவாய் வருகிறதோ அந்தக் கோயிலின் வருவாய் அந்தக் கோயிலுக்குத்தான் செலவிடப்பட வேண்டும். ஆனாலும்கூட, அரசினுடைய விருப்பத்தின் அடிப்படையிலும், வேறு சில தீர்வுகளின் அடிப்படையிலேயும்தான் பெரிய கோயில்களிலிருந்து ஓரளவிற்கு - அது பேரளவுக்கு என்று சொல்ல முடியாது. 'பேரளவுக்குக் கடன் வாங்கி விட்டால் பிறகு அந்தக்கோயிலும் வறுமைக்கு ஆளாகிவிடும்.' எனவே ஓரளவிற்கு—அதைப்பெற்றுத் திருப்பணிகளைச் செய்கிறோம். அதனால்தான் அடிப்படைப் பணிகளை நிறையச் செய்தாலும், முழுமையாக நிறைவு செய்ய முடியாத நிலைமை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நல்ல, வரலாற்றுச் சார்புடைய கோயில்கள், தேவாரம் பாடிய மூவர்களால் பாடல் பெற்ற தலங்கள் என்றெல்லாம் ஏராளமான கோயில்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பார்க்கின்றபோது மனம் வேதனைப்படுகிறது. காரணம், கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, நாட்டியக் கலை என்று அத்தனை கலைகளுக்கும் பிறப்பிடமாக இருக்கின்ற அந்தக் கோயில்கள் பழுதடைந்தும், சிதிலமடைந்தும் இருப்பது உண்மையிலேயே அரசுக்கு வருத்தத்தைத் தருகிறது. ஆனாலும் தீர்வு காணுவதை நோக்கி அது முன்னேறுகிறது.

பொதுவாகவே நிலுவைகள்தான் இப்போது இழுவைகளாக இருக்கின்றன. அதனால்தான் இப்போது 79-இ என்ற சட்டப் பிரிவைக் கொண்டு வந்திருக்கிறோம். உங்களுக்குத் தெரியும். குத்தகை தராதவர்களை மாவட்ட ஆட்சியர் எப்படி நில வருவாயைத் தராவிட்டால் அங்கே நேரடியாகச் சென்று, அவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யக்கூடிய அளவுக்குச் சூழ்நிலை



இருக்கிறதோ, அதே சூழ்நிலையில்தான் இந்தச் சட்டப்பிரிவு இப்போது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் நினைவுறுத்த விரும்புகிறேன்.

நம்முடைய பழனிசாமிகூடக் குறிப்பிட்டார்கள். நம்முடைய தலைவர் அவர்கள் அதை அற்புதமாகச் சொன்னார்கள். ஏமாற்றுகிறார்கள் என்று நான் சொல்லவில்லை, குத்தகைதாரர்கள் ஏமாறுகிறார்கள் என்று சொன்னார்கள். நாகரீகமாகச் சொன்னார்கள். உண்மையிலேயே சொல்கிறேன், திருவாரூர் கோயிலிலேயேகூட 896 ஏக்கர் நன்செய் நிலத்திற்கு, ஓராண்டிற்கு வர வேண்டியது 2,098 குவிண்டால் நெல். ஆனால். 13 ஆண்டுகளாக ஒரு படி நெல்கூடத் தரப்படவில்லை. நீங்கள், 13 வருடங்களாக விளையவே இல்லை என்று சொல்வீர்களா; தருவதற்கு மனமில்லை என்று சொல்வீர்களா என்பதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அதனால்தான் விளைகின்ற வாய்ப்பு வருகின்றபோது கொடுத்துக் கொண்டு வந்திருந்தால், விளையாதபோது தள்ளுபடி செய்வதிலே அரசுக்கு எந்தவித இடரும் இருக்காது. ஆனால் அப்படிப்பட்ட மனமே இல்லை என்பதை நான்கூடக் குறிப்பிடவில்லை. 'தினமணி' தன்னுடைய ஆசிரியர் உரையிலேகூடத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. அவர்கள் சொல்கிறார்கள். "சிவன் சொத்து குலநாசம்" என்று பழமொழி வழங்கிவரும் மண்ணில் இந்த நிலை. குத்தகை விகிதம் எவ்வளவு தெரியுமா? விளைச்சலில் 75 விழுக்காடு, முக்கால் பாகம் குத்தகைதாரர்களுக்கு, கால் பங்கே நில உரிமையாளரான ஈசனுக்கு; அதையும் செலுத்த குத்தகைதாரர்களுக்கு மனம் வரவில்லையே என்று நாடு அழுகிறது." நீங்களும் அந்தக் குரலைக் கேட்பீர்கள் என்று நான் கருதுகிறேன். என்றாலும், கோயிலிலே இவற்றைச் சீர்திருத்தும் செய்வதற்கு முன்னர்—இந்தக் கோயில்களை அணுகுகிறபோது— எங்களுக்கு அடிப்படையில் ஒரு கோட்பாட்டை தலைவர் கலைஞர் அவர்களே 1952-53-ல் வெளிவந்த பராசக்தி திரைப்படத்தில் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலும் நாங்கள் இதை அணுகுகிறோம் என்பதை நாம் நினைவுகூறவேண்டும்.

பிற்பகல் 1-00

பராசக்தியிலே இப்படி ஒரு உரையாடல் வரும், உங்களுக்குத் தெரியும். 'கோயிலிலே குழப்பம் விளைவித்தேன், கோயில் கூடாது என்பதற்காக அல்ல; கோயில் கொடியவரின் கூடாரமாக இருக்கக்கூடாது என்பதற்காக; நான் பூசாரியைத் தாக்கினேன், அவன் பக்தன் என்பதற்காக அல்ல, பக்தி பகல் வேஷம் ஆகிவிட்டதைக் கண்டிப்பதற்காக' என்று.

இந்த அணுகுமுறையை, இதற்கு வழிகாட்டிய, இந்த அறநிலையத் துறைக்கு 1953-லே வழங்கிய தலைவர்தான் இப்போது இதை உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே இந்த வழிகாட்டுதலோடு நாங்கள் செயல்படுகிறபோது இப்போது நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக இந்த 1405-வது பசலி என்று சொல்லப்படுகிற நிதியாண்டில், 668 இலட்சமாக இருந்த அந்த வருவாய், அதற்கு அடுத்து 729 இலட்சமாகக் கூடி இப்போது 1018 இலட்சமாகக் கூடியிருக்கிறது. அது இந்தத் துறையினுடைய முயற்சிக்குக் கிடைத்த வெற்றி என்று நான் கருதுகிறேன். அதேநேரத்தில் இதிலே 3½ கோடி ரூபாய் வருவாய் அதிகமாகிறது என்று சொன்னாலும்கூட, 'கடன் கேட்காமல் கெட்டது' என்று ஒரு பழமொழி உண்டு; அலுவலர்களும் சில நேரம் கேட்காமல் காலம் கடத்தியிருக்கிறார்கள். சில நேரம் கேட்டாலும் கண்டுகொள்ளாதவர்களும் இருக்கிறார்கள். இந்த இரண்டு நிலைகளிலே பல தவறுகள் நேர்ந்திருக்கின்றன. ஒரு பக்கத்திலே" நிலுவையைத் தண்டுவதற்கு நடவடிக்கை எடுக்கிற அதேநேரத்தில் தவறு செய்த அலுவலரையும் தண்டிக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. எனவேதான் அவையெல்லாம் செம்மைப்படுத்தப்பட்டு அனைவரும் தங்களுடைய கடமையைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தப்படுகிறது. அந்த அடிப்படையில் இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சியில் மாண்புமிகு தலைவர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவித்ததைப்போல 1925-ல் தொடங்கப்பட்டது அறநிலையத் துறை. ஏறத்தாழ 70 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட சொத்துப் பதிவேடுகள் 1192 மட்டும்தான்; நான் சொல்வது 70 ஆண்டுகளில். ஆனால் இந்த 3 ஆண்டுகளில் மட்டும் 1722 சொத்துப் பதிவேடுகளை உறுதி செய்து சொத்து எங்கே இருக்கிறது என்பதை எல்லோருக்கும் அடையாளம் காட்டியிருக்கிறோம். ஏனென்றால் பலபேர் அதைக் கணக்கிலேயே காட்டுவது இல்லை. கணக்குக் காட்டாமல் இருந்தால்தான் வசதி என்று பலரும் கருதியிருக்கிறார்கள். எனவேதான் கணக்கை எடுத்திருக்கிறோம். இன்னும் எஞ்சியிருப்பது 60 கோயில்களுக்கு மட்டும்தான். எனவே இப்படிக்கொண்டு வருவதன் வாயிலாக யாரும் கோயில் சொத்துக்களை மறைக்க முடியாது. அடுத்து வருகிற அலுவலர்கள்கூட அதை மாற்றிப் பதிவு செய்துகொள்ள முடியாத அளவுக்கு இப்போது அரசினுடைய ஏற்பைப் பெற்றிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மீட்கப்பட்ட நிலங்களில் பலவகை உண்டு. முற்றிலுமாக மீட்கப்பட்டவை; நீதிமன்றத்திற்குச் சென்று சாதகமாக தீர்ப்புப்



பெறப்பட்டவை; திருக்கோயில் நிலங்கள் தனியார் பெயரில் பட்டா பதிவு செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டவை; திருக்கோயிலுக்குப் பட்டா இருந்தும் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்தவை என்று பலவகைகள் இருக்கின்றன. நேரமின்மை காரணமாக நான் விரிவாகப் படிக்கவில்லை. ஒரேவரியில், இத்தனையையும் சேர்த்தால் இந்த அரசு. இந்தத் துறை இந்த 2, 3 ஆண்டுகளில் மட்டும் 6,229 ஏக்கர் நிலங்களை இந்த வகையில் அடையாளம் கண்டு மீட்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே பல கணக்குகள் இருக்கின்றன. அதேநேரத்தில் மனை நிலங்கள் இருக்கின்றன. 1,944 grounds என்ற அளவுக்கு மனை நிலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு சென்னையில் எல்லாம் ஒரு மனை நிலத்தினுடைய விலை என்ன என்பது உங்களுக்குத் தெரியும். எனவே மீட்கப்பட்டதினுடைய அளவு அதிகம். அந்த அளவுக்கு இந்தத் துறை கடும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சில இடங்களில் கடுமையாகத்தான் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. குன்றத்தூரிலே 74 மனைகள்—135 பேர்—யாரோ ஒருவர் அதை விலைக்கு விற்றுவிட்டுப் போய்விட்டார். எங்கள் சொத்தை எடுத்து அவர்கள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு அவர்கள் விற்றுவிட்டுப் போய் விட்டார்கள். கடைசியிலே என்ன ஆயிற்று? மின் துண்டிப்புச் செய்துதான் அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. அதற்குப் பிறகுதான் குத்தகைதாரர்கள் ஒழுங்காக, முறையான குத்தகையைச் செலுத்தி இப்போது அவர்களுடைய வரவை ஒழுங்காக கோயிலுக்குச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பல இடங்களில் இருக்கிற காரணத்தால் நடவடிக்கைகளைக் கடுமையாக எடுக்க வேண்டியிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்மையிலேகூட ஆளவந்தான் அறக்கட்டளைக்குத் தீர்ப்பு வந்தது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் இன்றைக்கு இதழ்கள்கூட எழுதின. கிட்டத்தட்ட 285 ஏக்கர்—மாமல்லபுரம் கடலோரத்தில் 285 ஏக்கர் மீட்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதைப்போலத்தான் திருத்துறைப்பூண்டி வீரன்வயலிலே 621 ஏக்கரும் நீதிமன்றத்தில் தீர்ப்பாகி வந்திருக்கிறது. இப்படிப் பல இடங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு இப்போது இந்தத் துறை சிறப்பாக மிளிர்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காஞ்சி நகரத்திலே மட்டும் அண்மையிலே 6 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டது; காஞ்சி நகரத்திலேயே. அதனால்தான்.

11 கட்டடங்கள் இடிக்கப்பட்டன. அதையும் நான் சொல்லிவிட வேண்டும் உங்களுக்கு. தவறான பொருளில் இல்லை. நெடுஞ்சாலை ஆக்கிரமிப்பு என்று தீர்ப்பு வந்தவுடனேயே அடுத்த நொடிகூட காத்திராமல் மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒப்புதலோடு அன்றைக்கு இடித்து விட்டோம் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். வேறு வழியில்லை. எனவே அப்படிப்பட்ட நிலையில் அதைச் செய்து தீர வேண்டிய கடமை இருக்கிறது. அதே நேரத்திலே இன்னும் 600 வீடுகள் முறைப்படி நடவடிக்கையில் இருக்கின்றன. அவர்கள் தருவது எவ்வளவு தெரியுமா? வாடகை ஒரு வீட்டுக்கு, மாதத்திற்கு 5 ரூபாய். ஒவ்வொரு வீட்டுக்கும் 5 ரூபாய் கொடுத்துவிட்டு கோயில் நிலத்தில் நல்லபடியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-05

சென்னையிலே ஒருவர் 1,894 சதுர அடியில் 5 மாடிக் கட்டடம் அனுமதி இல்லாமலேயே கட்டி இருக்கிறார். அனுமதியே கிடையாது. 5 மாடிக் கட்டடம் கட்டியிருக்கிறார். 5 மாடியிலும் கிட்டத்தட்ட 20 கடைகளை வாடகைக்குவிட்டு 1 இலட்சம் ரூபாய் சம்பாதிக்கிறார். அவர் திருக்கோயிலுக்குத் தருகின்ற அந்த வாடகையைப் பார்த்தால் நீங்கள் வியந்துபோய்விடுவீர்கள், அயர்ந்து போய்விடுவீர்கள், வெறும் இரண்டே ரூபாய். இதுதான் நிலை. எனவே இதற்குக் கடுமையாக நடவடிக்கை எடுக்காமல்—ஒன்று அந்த 5 மாடி கட்டடம் இடிக்கப்பட வேண்டுமென்று முன்வந்தபோது, நேரடியாகப் பார்வையிட்டபோதுதான் அவர் முறையாக கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு 6,000 ரூபாய் வாடகை தரக்கூடிய அளவுக்கு இப்போது ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரண்டு ரூபாய் எங்கே, 6,000 ரூபாய் எங்கே, மாதம் 6000 ரூபாய் எனில் 12 மாதத்திற்கு எவ்வளவு வரும் என்பதை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். எனவேதான் இதுபோன்ற பணிகளைச் செய்கிறபோது, அந்த நிலையிலும் இந்தத் துறை ஆழ்ந்து செய்ய வேண்டியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் நிறையபோ இதுபோன்று செய்கிறார்கள். ஈரோட்டிலே பெருந்தலையூரிலே நாங்கள் ஈடுபட்டு 19 ஏக்கர் நிலத்தை மீட்டோம். அந்த ஊராட்சி மன்றத் தலைவர் எழுதுகிறார். 'கடந்த 30 ஆண்டுக்காலமாகத் தீர்க்க முடியாது இருந்த இந்தப் பிரச்சினையை எந்தவிதமான அசம்பாவிதமும் நிகழாமல் அதேசமயத்தில் சுமூகமான முறையில் தீர்த்துக் கோயில் நிலங்களை மீட்டு, கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைக்க உதவிய அமைச்சர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று தெரிவித்தார் என்று



சொன்னால், இது நாங்கள் செய்கிற பணி. யாரோ ஒருவர் எழுதுகிறார். எனவே இதைச் செய்கிறபோது இந்தத் துறை சில நேரம் போராடியும் மீட்க வேண்டியிருக்கிறது. அதையும் சொல்கிறேன். கோவையில், கிட்டத்தட்ட 135 மனை நிலம்—grounds—அண்மையில் அங்கு இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர், அங்கே இருக்கிற காவல் துறை மேல் அதிகாரியாக இருக்கிற திரு. கண்ணப்பன் எல்லோரும் சேர்ந்து போராடித்தான் 1,000 குடிசைகளை அகற்ற வேண்டியிருந்தது. அதேநேரத்திலே திருப்பூரிலே 54 ground நிலம் மீட்கப்பட்டிருப்பது நம்முடைய சுப்பராயன் அவர்களுக்குத் தெரியும். எனவே இப்படிப் பல இடங்களில் விலை உயர்ந்த நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. திருப்பூரில் 54 மனைகள் என்றால் என்ன விலை என்று நீங்கள் பார்க்க வேண்டும்; அதேநேரத்திலே கோவையிலே 135 மனைகள் என்றால் என்ன விலை என்றும் பார்க்க வேண்டும். இவையெல்லாம விலை உயர்ந்தவை. இப்போது இந்தத் துறை மெல்ல மெல்ல அவற்றைச் செம்மை செய்து தன்னுடைய நிலைக்குக் கொண்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேநேரத்தில் இப்போது நியாய வாடகை நிர்ணயம் செய்கிறோம். அப்படி நிர்ணயம் செய்வதினாலேயே எதிர்பார்க்கக்கூடிய கூடுதல் வருமானம் ரூ.114 இலட்சம்—1 கோடியே 14 இலட்சம்—கூடுதலாக வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அளவுக்கு நியாய வாடகை நிர்ணயிக்கப்படுகிறது. அதனால்தான் இந்தச் சட்டப் பிரிவு வந்தது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேநேரத்தில் ஏராளமான வழக்குகள். என்ன நிலை என்று கேட்டார். அதில்தான் இன்னும் எங்களுக்குச் சரியான ஒரு பிடி கிடைக்கவில்லை. ஒரு வழக்கு ஏறக்குறைய 16 ஆண்டுகள் நடந்து தீர்ப்பு வந்தது. அமீனா என்று சொல்லப்படுகிற அந்த "நடவடிக்கை எடுக்கக்கூடிய அலுவலர்" அந்த இடத்திற்குப் போய், அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்க முடியாமல் என்ன காரணத்தாலோ தெரியவில்லை அதற்குப்பிறகு 15 ஆண்டுகள் வழக்கு நடந்திருக்கிறது. எனவே ஒரு வழக்கு முடிய 31 ஆண்டுகள் என்று சொன்னால், இதற்கு ஏதாவது ஒரு வகையில் தீர்வு காண வேண்டும். இது வேறு எங்கும் அல்ல. சென்னையிலே மயிலாப்பூரிலே கபாலீஸ்வரர் கோயில் சொத்திலே இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட நிலைகளை ஆழ்ந்து பார்த்து கிட்டத்தட்ட பெரிய அளவில் முயற்சி செய்து, அதேநேரத்தில் எங்களுக்கு ஆள் பற்றாக்குறை இருக்கிறது என்பதையும் மறுக்கவில்லை. இத்தனை கோயில்களுக்கும் சேர்த்து எங்களுக்கு இருக்கிற செயல் அலுவலர்கள்

446 பேர்தான். ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் இதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று—எனக்குத் தெரிந்த வரையில் ஒரே நேரத்திலே, இத்தனை செயல் அலுவலர்களை எந்த முதலமைச்சரும் இதுவரைக்கும் இந்த வரலாற்றில் வழங்கியது கிடையாது—200 செயல் அலுவலர்களை கடந்த ஆண்டு வழங்கி 446-ஐ 646 ஆக்கக்கூடிய அளவிற்கு உயர்த்தி இருக்கிறார். அவர்களைத் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டிய காரணத்தினால் சற்றுக் காலதாமதம் ஆகிறது என்றாலும் இப்போது 62 பேரைக் கொடுத்திருக்கிறார்கள். அதே நேரத்திலே இந்த அதிகாரிகள் அதிகம் ஆகும்போது எங்களுக்கு வேலை எளிதாக இருக்கும். ஏனென்றால் கண்டு அறிந்து செய்ய முடியும். எனவே அதை நான உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேநேரத்திலே சமத்துவபுரங்களுக்கு இடம் வழங்குவதில், கல்வி நிறுவனங்களுக்கு இடம் வழங்குவதில் இந்த அரசு அதுவும் குறிப்பாக, அறநிலையத் துறை தாராளமாக வழங்குகிறது. இலவசமாக வழங்குவதாக யாரும் நினைத்துவிட வேண்டாம். முழுக்க, அப்போது அந்த இடத்திற்கு என்ன சந்தை விலை மதிப்போ, அதைப் பெற்று நிரந்தர வைப்பில் கணக்கில் போட்டுக்கொண்ட பிறகுதான் இடங்கள் வழங்கப்படும். முன்நுழைவு அனுமதி வழங்குகிறோம் என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளுங்கள். அதற்கான முழுமையான தொகையைப் பெறுகிறோம். அந்தத் துறைகளும் கொடுத்துவிடுகின்றன. இதுதான் நிலைமை. எனவே இவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அந்த அளவிற்குச் சமத்துவபுரங்கள் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆழ்ந்த சிந்தனைக்குப்பின் உருவான இந்தத் திட்டத்தில் அடித்தளமாக இருக்கின்ற நிலத்தை வழங்குகிற வாய்ப்பு அறநிலையத் துறைக்குக் கிடைத்தது என்பதில் நானும் அதோடு பங்குபெற்று மகிழ்ச்சியடைகிறேன். காரணம் பெரியார் நினைவு சமத்துவபுரத்திற்கு இப்போது ஆலயத்தின் சார்பில் இருக்கின்ற இந்த இடம் உதவுகிறது என்பதுதான் இரண்டுக்கும் ஓர் அருமையான உறவுப் பாலம் என்று நான் கருதுகிறேன். எனவே அறிவியல்பூர்வமான, ஒரு சமுதாய சீர்திருத்தவாதியினுடைய பெயரால் ஓர் அற்புதமான ஆற்றல்மிக்க ஒரு தலைவருடைய முயற்சியால் எடுக்கப்பட்ட இந்த அடிப்படைப் பணிகளுக்கு ஆலய இடம் பயன்படுகிறது. அது முறையாகப் பயன்படுகிறது என்பதிலே நான் பெருமையடைகிறேன்.



பிற்பகல் 1-10

அதேநேரத்தில் கல்விக்கூடங்கள் 44 ஏற்கெனவே நடைபெறுகின்றன. எனவே அதிகமான கல்விக் கூடங்களை இப்போது தொடங்க முடியாத நிலைமை. நம்முடைய கல்வி அமைச்சர் ஏற்கெனவே ஒரு கல்லூரி தொடங்க வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் வேண்டுமென்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். முன்னைப் போல் அல்ல. அரசினர் கல்லூரியாக நடத்த முடியாது. கண்டிப்பாக பேராசிரியர் அவர்களோ அல்லது தலைவர் அவர்களோ அதற்கு இசைவு தரமாட்டார்கள். அதேநேரத்திலே அரசு உதவிபெறும் கல்லூரியாகவும் நடத்த முடியாது. நடத்தினால் சுயநிதிக் கல்லூரியாகத்தான் நடத்த முடியும். அதை அறநிலையத் துறை எடுத்துக்கொண்டால், அந்தத் திருக்கோயிலினுடைய நிலை வேறுவகையில் மாறிப் போய்விடும் என்பதை நான் நாகரீகமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது பொருத்தமாக இராது என்பதைச் சுட்டிக்காட்டுவதிலே எனக்கு எந்த வருத்தமும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிறைய பணம் இருக்கிறது கோயிலுக்கு. அதற்குப் பிறகு இந்த வேலையைத்தான் பார்க்க முடியும். கல்லூரியைச் செம்மை செய்வதற்கு, இன்னும் சொல்லப்போனால் இப்போது தரப்படுகிற, அரசு சார்பிலே தரப்படுகிற ஒரு கல்லூரி முதல்வருக்கு ஏறத்தாழ 30 ஆயிரம் ரூபாய் சம்பளம். அப்படி கணக்குப் பண்ணினால் கிட்டத்தட்ட பெரும் தொகை அதிலே போய்விடும் என்பதை நினைவில்கொள்ள வேண்டும். அதேநேரத்திலே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு ஓர் அருமையான வாய்ப்பைத் தந்திருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய்க்குக் குறைவான வருமானம் உள்ள அத்தனை கோயில்களுக்கும் இலவச மின்சாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக 22-3-1999-லேயே அரசாணை பிறப்பித்ததற்கு இந்தத் துறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. எனவே ஆங்காங்கே இருக்கின்ற நம்முடைய உறுப்பினர்கள் எந்தெந்தக் கோயில்களுக்கு அது தேவையோ, உரிய அலுவலர்களைத் தொடர்புகொண்டு, இலவச மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டும். ஓர் ஆண்டுக்கு 500 அலகு மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய ஞானசேகரன், மோகன் கந்தசாமி வாயிலாகச் சொன்ன அந்த இழுவை இரயில், அது ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டு இதே அவையில் அதைப்பற்றி நான் விடை சொல்லி இருக்கிறேன். எனவே

ஒரு மடங்கு வரவானால், மூன்று மடங்கு செலவாகிறது. அதுதான் சிக்கலே. எங்களுக்கு ஒன்றும் பக்தர்களுக்கு வசதி செய்வதில் சிக்கல் இல்லை. அந்த வசதி செய்து கொடுத்த பிறகு, துறை அசதியாகிவிடக் கூடாது. அதற்காகத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது. எனவே அதையும் நினைவில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு பழுதான நகைகள். அதாவது இரண்டு நிலைகளில் இருக்கின்றன. சரியான நிலையில் இருக்கின்ற நகைகளை எந்தக் காரணம் கொண்டும் தொட முடியாது. அது அவ்வப்போது நகை மதிப்பீட்டாளர்களால் சரிபார்க்கப்பட்டு அந்தக் கோயிலில்தான் வைக்கப்படும் அல்லது தேவையான இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்படும். ஆனால் பழுதான நகைகளை மட்டும் மும்பையில் சென்று இணை ஆணையர் உட்பட அதிகாரிகளோடு சென்று, உருக்கி, நிறைய இடங்களிலே தங்கக் கட்டிகள் இருக்கின்றன. அது குறித்து அரசு உயர்மட்டக் குழுவில் வைத்து சரியான முடிவுகளை எடுக்கும் என்பதை மட்டும் அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் மட்டும் நாங்கள் கடுமையான முயற்சி எடுத்து, குத்தகைகளைத் தந்து உதவுவதில் ஏற்படுகின்ற அந்த முயற்சியில உங்களுடைய, எல்லோருடைய ஒத்துழைப்பும் எங்களுக்குக் கிடைக்குமானால் நல்லது. அதேநேரத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்ததைப்போல உங்களுடைய கருத்துக்களையெல்லாம் கேட்டு, உயர்மட்டக் குழுவில் வைத்து முடிவு செய்வோம். ஏற்கெனவே உயர்மட்டக் குழு இருக்கிறது. கேட்டார்கள். இருக்கிறதா என்று கேட்டார்கள். அதிலே கருமுத்து தி. கண்ணன் போன்றவர்கள், தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருப்பனந்தாள் காசி வாசி எல்லோருமே உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். அந்த உயர்மட்டக் குழு இயங்கிக்கொண்டிருக்கிறது. எனவே அந்த அடிப்படையில் அது செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், இவ்வளவுக்கும் மேலாக நாங்கள் செய்த பணிகளில் சிறந்தது தமிழ் அர்ச்சனை. அதை அவர்களே பாராட்டி இருக்கிறார்கள். இப்போது எல்லா இடத்திலும் தமிழ் அர்ச்சனை நடப்பதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகத்தான் உங்களுக்குச் சில புத்தகங்களை வழங்கியிருக்கிறோம். இப்போது ஏராளமாக, இலட்சக்கணக்கான படிகள், என்னைக் கேட்டால் நேரடியாக கோயிலில் வழிபடுவதற்கு மாத்திரமல்ல. வருகை தருகின்றவர்



வாங்கிக் கொண்டு போவதற்காகவும் தருகிறோம். வடபழனி கோயிலிலே 3 ஆயிரம் நூல்கள் வைத்தபோது, அதிலே கிட்டத்தட்ட 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள் வாங்கிக்கொண்டு போனார்கள். அதுதான் முக்கியம். எனவே அவர்களும் அதைப் பயன்படுத்திக்கொள்ள எளிதாக இருக்கிறது. 8 போற்றிகள், 16 போற்றிகள், 108 போற்றிகள் என்று முறையாக இருக்கிறது என்று தெரிவித்து இந்தத் துறையைப் பாராட்டியிருக்கிறார்கள். அதற்காகவும் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவோடு அறநிலையத் துறையினுடைய அந்த மானியக் கோரிக்கையினுடைய விடையை நிறுத்தி, அடுத்து தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் என்னுடைய விடைகளைக் கூற விரும்புகிறேன்.

1995-96-ல் 10.33 கோடியாக இருந்த தமிழ் வளர்ச்சித் துறைக்கான ஒதுக்கீடு, 1999-2000 ஆண்டில் 31 கோடியாக உயர்த்தித் தந்த மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு, தமிழுக்கு முன்மை தரும் (மேசையைத் தட்டும் ஒலி) வளம் சேர்த்த தலைவர் கலைஞர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவுக்கு அவர்கள் செய்கின்றபோது, மூன்று வகைகளில் தமிழ் வளர்ச்சியை நோக்க வேண்டும். ஒன்று, புதிய நிறுவனங்களை உண்டாக்குவது. மற்றொன்று, ஏற்கெனவே இருக்கின்ற நிறுவனங்களை மேம்படுத்துவது. மூன்றாவது புதிய முயற்சிகளை மேற்கொள்வது. இந்த மூன்று வகைகளிலும் இந்தத் துறை மேம்பட்டிருக்கிறது. குறிப்பாக அருங்காட்சியகங்கள். இந்த ஆட்சி தொடங்குவதற்கு முன்னால் 12 அருங்காட்சியகங்கள் இருந்தன. இது பல ஆண்டுகளாக. ஆனால் இந்த மூன்றே ஆண்டுகளில் — நான் இப்போது அறிவிக்கப்போவதையும் சேர்த்து இந்த மூன்று ஆண்டுகளில் 7 அருங்காட்சியகங்கள் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அதேபோல இசைப் பள்ளிக் கல்லூரிகள் என்றால் இதற்கு முன்னால் மூன்று கல்லூரிகள். இப்போது அறிவிக்கப்போவதையும் சேர்த்து, ஏற்கெனவே வளர்ந்த ஒரு கல்லூரி 15 இசைப் பள்ளிகள். எனவே மூன்றாக இருந்தது, இன்றைக்கு 19-ஆக உயர்ந்திருக்கிறது.

அதுபோல சவகர் சிறுவர் இல்லங்கள். சென்னை, புதுக்கோட்டை, மதுரையில் மூன்றாக இருந்தன. இன்றைக்கு அறிவிப்போடு சேர்த்து 23-ஆக உயர்ந்திருக்கிறது. எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் இதை விரிவுபடுத்த வேண்டுமென்ற குறிக்கோளோடு இது நகர்ந்துகொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் கலைப் பண்பாட்டு மண்டல உதவி இயக்குநர்களை 6 இடங்களில், காஞ்சி, சேலம், தஞ்சை,

விருதுநகர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் புதிய அமைப்புகள், ஏனென்றால் இத்தனை நிறுவனங்களைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அதற்கும் தலைவர் கலைஞர் அவர்கள் இசைவு தந்து இன்றைக்கு இயங்கிக்கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1.15

அதேபோல தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலகம் சேலத்திலும், நெல்லையிலும் இயங்குகிறது. இதெல்லாம் இப்போது புதிதாக ஏற்பட்ட நிறுவனம். அதேநேரத்தில் தமிழ் வளர்ச்சி வளாகம் புதிதாக ஏற்படப் போகிற நிறுவனம். தலைவர் கலைஞர் அவர்கள் அனைத்து அலுவலகங்களையும் ஒருங்கிணைத்து ஓரே கட்டடத்திற்குள் கொண்டு வாருங்கள் என்று சொன்னதன் அடிப்படையில் ரூபாய் இரண்டு கோடியை கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்தார்கள். இப்போது ஒப்பந்தப் புள்ளிகள் முடிவுபெற்று விரைவில் அந்தப் பணி தொடங்க இருக்கிறது என்பதை மட்டும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி வரும்போது ஓரே கட்டடத்திற்குள் தமிழ் வளர்ச்சி சார்ந்த அனைத்து அலுவலகங்களும் இயங்கும் என்பதையும், அது அருங்காட்சியகத்தினுடைய வளாகத்திற்குள் அமையும் என்பதையும் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, நிறுவனங்களை எப்படி பெருக்குவது, எப்படி மேம்படுத்துவது என்பது முக்கியம். தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய சங்கத் தமிழ் எழுதுகிறபோது, முதலிலே குறிஞ்சிப் பாட்டுக்கு உகந்த மலர்களை வைத்துக்கொண்டு வாழ்த்துமாலை தொடங்குவார். எனவே குறிஞ்சிப்பாட்டில் இருக்கிற 99 மலர்களையும் அடையாளம் கண்டுபிடித்து, அன்றைக்கு இருந்த பெயர் என்ன; இன்றைக்கு இருக்கிற பெயர் என்ன; அதேநேரத்தில் பாடத்தின் வாயிலாக botanical name என்று சொல்லக்கூடிய பயிரியல் பெயர் என்ன—இந்த மூன்றையும் இணைத்து, அந்தப் பூ இப்போது எந்தப் பூ என்று கண்டுபிடித்து அது உயிரோடு இருந்தால், அப்படி இல்லாவிட்டாலும் படமாக வைத்து இன்றைக்கு அருங்காட்சியகத்தில் காட்சியாக வைக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேநேரத்தில் தொல்பொருள் ஆய்விலே, இராமநாதபுரத்தில் அழகன்குளம், ஈரோட்டிலே கொடுமணல், அதேபோல பூம்புகார்—இவையெல்லாம் அந்தக் காலத்தில் அகழ்ந்தெடுத்தார்களே தவிர, அவை மக்களுடைய பார்வைக்கு வரவில்லை. ஆனால் இந்த



அரசு தொடங்கப்பட்ட பிறகுதான் இந்த மூன்றுக்கும் தனித் தனியாக அருங்காட்சியகங்களை அமைத்து, அழகன் குளத்திலே, கொடுமணலிலே, பூம்புகாரிலே தொல்பொருள் ஆய்வு சார்ந்த அகழ் வைப்பகங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டு இயங்குகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேநேரத்தில் அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம், கிட்டத்தட்ட 77 ஆயிரம் ஓலைச் சுவடிகளைக் கொண்டது; அதிக அளவிலே கொண்டது. ஆனால் அந்த ஓலைச் சுவடிகள் 200 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை. எனவே அவை பழுதுபட்டுப் போய்விடும் என்பதற்காக, தலைவர் கலைஞர் அவர்கள் அனுமதியோடு கிட்டத்தட்ட 13½ இலட்சம் ரூபாய் செலவு செய்து, அதற்கு குளிர்பதன வசதி செய்யப்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்ல, 25 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு நுண்படி—micro film—பொருத்தப்பட்டு இன்றைக்கு அனைத்தும் படி எடுக்கப்பட்டு வருங்காலத்தில் பாதுகாக்கப்படும் என்ற உறுதியை நாங்கள் செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் இயல், இசை நாடக மன்றத்தினைப் பற்றிச் சொன்னார்கள், நலிந்த கலைஞர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று. நலிந்த கலைஞர்களுக்கு 100 ரூபாயாக இருந்த உதவித் தொகையை 300 ரூபாயாக உயர்த்தியதும் கலைஞர்தான்; 300 பேருக்குக் கொடுத்து வந்ததை இந்த ஆண்டு 500 ஆக உயர்த்தியதும் கலைஞர்தான்; இதுவரைக்கும் மொத்தம் நலிந்த கலைஞர்கள் 5,067 பேர் பயன்பெறுகிறார்கள் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே நாங்கள் யாரையும் கைவிட்டுவிடவில்லை. இன்னும் மேலும் 500, 500 பேராக நலிந்த கலைஞர்களைத் தேடிப் பிடித்து அவர்களுக்கு உதவுவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் கலை: கைத்தொழில் கல்லூரி சென்னையிலே இருக்கிறது அது 150 ஆண்டுகள் நிறைவு செய்தது சென்னையில் Arts and Crafts College இருக்கிறது. அதேபோல குடந்தையிலும் இருக்கிறது. அதற்கு இதுவரைக்கும் முதுகலை வகுப்புகளே கிடையாது. முதன்முறையாக வண்ணக் கலைகள், பிறகு சிற்பக் கலைகள்—இவைகளுக்கெல்லாம் முதுகலை வகுப்புகள் தரப்பட்டு இருக்கின்றன. மேம்பாடு பணிகள் என்று, தமிழ் வளர்ச்சிக்கு என்று உதவி இயக்குநர்களே பல மாவட்டங்களில் இல்லை நாங்கள் பொறுப்பேற்றபோது. என்னைக் கேட்டால் 8 தமிழ் ஆய்வர்கள், 5

உதவி இயக்குநர்கள், என இவ்வளவு பேர்தான் இருந்தார்கள். இன்றைக்கு, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆணையின்படி பல பேர் முனைவர் பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை என்று சொல்லுவார்களே, அதையும் மனதில் வைத்துக்கொண்டு முதுகலை பட்டம் பெற்று, முனைவர் பட்டம் பெற்றவர்களை கிட்டத்தட்ட 29 மாவட்டங்களில் 27 பேர் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த முனைவர் அவர்கள் போட்ட வழக்குகள், இவர்கள் போட்ட வழக்குகள் என்றெல்லாம் இருந்தன. அதையெல்லாம் பேசித் தீர்த்து, எல்லாத் தரப்புக்கும் பதவி உயர்வும் பணியமர்த்தலும் நடந்து இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டும்.

ஓவிய நுண்கலைஞர்களுக்கு இருந்த முன்னால் கொடுக்கப்பட்டது 5 இலட்சம்தான். ஆனால் தமிழக அரசு பொறுப்பேற்றபிறகு 15 இலட்சமாக அதை உயர்த்தி, 10 இலட்சம் ரூபாய் வேறு வகையான பணிகளுக்கு ஒதுக்கீடு செய்ததினால்தான், இன்றைக்குச் சிறந்த ஓவியக் கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து, கலைச் செம்மல் விருது கொடுத்து 20 ஆயிரம் ரூபாய் பரிசு கொடுக்கிறோம் என்று சொன்னால், அது கலைஞராலே கொடுக்கப்பட்ட நன்கொடை என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

அடுத்து ஆட்சிமொழிக் கருத்தரங்குகளை இன்றைக்கு எல்லா மாவட்டங்களிலும் நடத்தி வருகின்றோம். இன்னும் சில மாவட்டங்களில் நடத்த வேண்டும். ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தினால் என்ன நன்மை என்றால், அப்போது அலுவலர்கள் என்ன செய்கிறார்கள், ஏன் இப்படி நடக்கிறது என்பதையெல்லாம் அங்கேயே நேரடியாக உறுப்பினர்களும் பேசி, பொதுமக்களுடைய பிரதிநிதிகள், அந்த அலுவலர்கள், வெளியிலிருந்து வந்திருக்கிற தமிழறிஞர்கள் எல்லோரும் பேசும்போது ஒரு முழுமையான ஆய்வு கிடைக்கிறது. அந்த ஆய்வின் அடிப்படையில் மேலும் மேலும் ஆட்சிமொழித் திட்டத்தை செயல்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

அடுத்து உயர் நீதிமன்றத்திற்கு மட்டும் தலைவர் கலைஞர் அவர்கள் 862 தமிழ்த் தட்டச்சுப் பொறிகளை 65 இலட்சம் ரூபாய்க்கு வாங்கிக் கொடுத்து இருக்கிறார்கள். அதேநேரத்தில் தலைமைச் செயலகத்தில் 65 விழுக்காடு தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் இருக்க வேண்டும். ஆனால்



500 தமிழ் தட்டச்சுப் பொறிகள் வாங்கிக் கொடுத்துள்ளனர். இன்னும் 107 தட்டச்சுப் பொறிகள் எடுக்கப்படவில்லை; அதையும் சொல்லியாக வேண்டும். அதேநேரத்தில் சார் நிலை அலுவலகங்களுக்கு 500 தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் வாங்க 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அதை வாங்கி இருக்கிறோம். அவற்றையெல்லாம் இன்னும் பல பேர் எடுக்கவில்லை; எங்களுக்கு இருக்கிற வருத்தமே அதுதான். தலைமைச் செயலகத்தில் சீர்திருத்தம் பற்றி--அரசு ஆணைகள் பற்றித் தலைவர் கலைஞர் அவர்களே அமைச்சரவையில் அறிவுறுத்தினார்கள். தலைமைச் செயலாளரை அழைத்துச் சொன்னார்கள். அரசாணைகள் அனைத்தும் தமிழிலே வர வேண்டும்; அனைவரும் தமிழில் கையொப்பம் இட வேண்டும்; எல்லோருக்கும் தெளிவுபடுத்துங்கள் என்று சொன்னார். ஆனால்கூட இன்னும் சில பேரிடமிருந்து எங்களுக்கு வருகிற குறிப்புகள், சிலர் கீழிருந்து தருகிற அறிவிப்புகளைப் பார்த்தால், இன்னும் பல அரசாணைகள் ஆங்கிலத்தில் வெளிவருகின்றன. சில துறைகளிடமிருந்து வருகின்றன; இன்னும் பல பேர்களுக்கு வருகிற மடல்கள் ஆங்கிலத்தில் வருகின்றன என்றெல்லாம் குறைகள் வருகின்றன. எனவே அதை அலுவலர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நான் இதை இந்த அவையிலே சொல்வதில் எந்த வருத்தமும் அடையவில்லை.; கூச்சப்படவில்லை; கூச்சப்பட வேண்டிய தேவையும் இல்லை. தமிழ்ப் பணி செய்வதற்குக் கூச்சப்பட்டால் பிறகு தமிழ்ப் பணியே செய்ய முடியாது. எனவே இதிலே நான் சொல்ல விரும்புகிற கருத்து இதுதான். சொல்லிப் பார்த்தோம், பல பேர்களுடைய செவிகளில் விழவே இல்லை. கிள்ளிப் பார்த்தோம், வலிக்கவே இல்லை என்று சொல்லி விட்டார்கள். துள்ளிக்கூடப் பார்த்தோம், இது வெறும் குதியாட்டம் என்றுசொல்லி விட்டார்கள். எனவே அள்ளிப் பார்த்தால்தான் அது சரியாக இருக்கும். ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகளை அப்படியே அள்ளிக் கொண்டு வந்தால்தான் இது வருமா என்பதை நான் ஒரு கேள்விக் குறியாகத்தான் வைத்துக் கொண்டிருக்கிறேன். அலுவலர்கள் அனைவரும், தலைமைச் செயலகத்தில் குறிப்பாக அனைத்தையும் திரும்ப ஒப்படைத்து, முழுமையாக அரசாணையின்படிதான் இது நடக்கிறது. இது ஏதோ தனிப்பட்ட செய்தி அல்ல. ஒரு வேண்டுகோள் அல்ல. அரசாணையின்படி அவர்கள் செய்ய வேண்டும். ஏனென்றால் அரசாணையைப் பிறப்பிப்பதே அவர்கள்தான். அவர்களே அரசாணையைப் பிறப்பித்துவிட்டு, அவர்களே அதைக் காலடியில் போட்டு நமத்துப்போகச் செய்தால், இது இரட்டை நிலை; முரண்பாடான நிலை என்று இருக்கும். வெளியில் இருப்பவர்கள் சொல்வார்கள், இன்னும்

தமிழ்நாட்டில் முழுமையாகத் தமிழ் ஆட்சிமொழியாக ஆகவில்லை என்றுதான் சொல்வார்கள். ஆகவேதான் இதற்குக் காரணமான அலுவலர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கலைக் களஞ்சியங்கள் ஏராளமாக இன்றைக்கு வெளி வந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால், மருத்துவக் கலைக் களஞ்சியம் வந்திருக்கிறது. தமிழக அரசு பணம் கொடுக்கிறது. இதன் 5-வது தொகுதி முடிந்து 6-வது தொகுதி அச்சாகிக் கொண்டிருக்கிறது. அதேநேரத்தில் வாழ்வியல் களஞ்சியத்திற்கும் அறிவியல் களஞ்சியத்திற்கும் தமிழக அரசு 10 இலட்சம் ரூபாய் கொடுத்து, தேங்கியிருந்த 4 பதிப்புக்களை வெளியே கொண்டு வருகிறது. நீண்டகாலமாக வெளியே கிடைக்காமல் இருந்த பெரியசாமி தூரன் அவர்களால் தொகுக்கப்பட்ட குழந்தைகள் கலைக் களஞ்சியத்தினை 10 இலட்சம் ரூபாய் செலவில் பதிப்பித்துத் தலைவர் கலைஞர் அவர்களே வெளியிட்டிருக்கிறார்கள். நீங்களெல்லாம் வாங்கிப் பயன்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த அளவிற்குக் கலைக் களஞ்சியப் பணிகள் ஏராளமாக நடைபெறுகின்றன.

செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலியிலே, தொடக்கக் காலத்தில், 1996 வரையிலும், 22 ஆண்டுகளில் இரண்டே தொகுதிகள் வந்தன. ஆனால் இந்த இரண்டாண்டுகளில் ஒரு தொகுதி வந்திருக்கிறது. இப்போது 'க' பகுதி அச்சாகிக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் கணிப் பொறி வசதி எல்லாம் செய்து கொடுத்திருக்கிறோம். எனவே 5 தொகுதிகளையும் முழுமையாகக் கொண்டுவந்து, அநேகமாக இந்த ஓராண்டில் 5, 6 தொகுதிகளை இந்தத் துறை கொண்டு வந்து விடும். தலைவர் கலைஞரால் உருவாக்கப்பட்டது அந்த இயக்ககம். அதுவும் தனித் தமிழ் ஞாயிறு, மொழி ஞாயிறு, தேவநேயப்பாவாணருக்காக உருவாக்கப்பட்ட அந்த நிறுவனம், அந்தப் பணியைத் தொய்வின்றித் தொடருவதற்குப் பலமுறை அறிவித்திருக்கிறார்கள். அது தொய்வின்றித் தொடர்கிறது, தொடரும் என்பதை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மொழிக் காவலர்களுக்கு 400 ரூபாயை 500 ரூபாயாக ஆக்கி, 500 ரூபாயை 1,500 ரூபாயாக்கி, 1,500 ரூபாயை 3,000 ரூபாயாக்கி, இன்றைக்கு அந்த அடிப்படையில் 2,322 பேர் பயன்பெறுகிறார்கள். அதிலே வரைவரை சில கட்டுப்பாடுகள்; முதலிலே அப்படியெல்லாம் இல்லாமல் இருந்தது. நான் மறுக்கவில்லை. ஆனால் 3,000 ரூபாய் என்று வருகிறபோது, நீதிமன்றத்தின் மூலமாக எங்களுக்கு வலியுறுத்தப்பட்டதன் காரணத்தினாலே, சிறைச் சான்று இருக்க வேண்டும், குறைந்தது 14 நாட்கள் சிறையில் இருந்திருக்க வேண்டுமென்ற அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு, இது தரப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அதேநேரத்தில் விருதுகளுக்குக்கூட, தொகையை தலைவர் அவர்கள் தாராளமாக உயர்த்தியிருக்கிறார்கள். திரு.வி.க., திருவள்ளுவர், பாரதி, பாரதிதாசன் விருதுகள் எங்கள் துறையின் சார்பிலே வழங்கும்போது, முதலிலே 10,000 ரூபாயாக இருந்தது. இந்த ஆட்சி தொடங்குகிறபோது 10,000 ரூபாய். அதை ஒரு கட்டத்தில் 20,000 ரூபாயாக ஆக்கினார்கள். எனவே அதையே இன்றைக்கு ஒரு இலட்சமாக ஆக்கியிருக்கிறார்கள். விருதுகள் பெறுகிறவர்கள் வெறுமனே ஓர் அடையாளத்துக்காகப் பெறுகிறார்கள் என்றில்லாமல், உண்மையிலேயே அவர்கள் பயனோடு பெறுகிறார்கள் என்ற அளவிற்குத் தலைவர் கலைஞர் அவர்கள் தாராளமாக அதற்கு வாய்ப்பளித்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைமைச் செயலகத்தில நான் பாராட்ட விரும்புகிற ஒரு பணி பொதுத் துறை என்னைக் கேட்டால், தமிழர் அல்லாத ஒரு செயலாளர், பெருக்கி அவர்கள் எடுத்த முயற்சியின் வாயிலாகத் தமிழில் தொலைபேசிக் குறிப்பேடுகள் தலைமைச் செயலகம் முழுவதும் தரப்பட்டிருக்கின்றன என்பது பாராட்டுக்குரிய முயற்சி. இந்த முயற்சியைப் பாராட்டாமல் இருந்தால் பிறகு நல்லவைக்கு வாய்ப்பில்லாமல் போய்விடும். இது தமிழில் தொலைபேசி ஏடு. ஆனால் நான் வியப்போடு நோக்குவது இங்கே. ஆனால் ஒரு காலத்தில் 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால மதுரையில், மதுரையினுடைய தமிழில்தான் தொலைபேசிக் குறிப்புகள் இருந்திருக்கின்றன. அது என் கையில் இருக்கிறது. அதை இன்னொரு நாளைக்கு அடையாளமாகக் காட்டுகிறேன். பெயர்களை தமிழிலேதான் இருக்கும். ஆனால் காலப்போக்கில்தான் அது முற்றிலும் ஆங்கிலத்தில் மாறியிருக்கிறது. எனவே இருந்ததை மீண்டும் அந்தத் துறை கொண்டுவருவதற்கு இந்தத் துறை முயற்சி செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய முயற்சிகள். இலக்கணக் குழு அமைத்திருக்கிறோம். இலக்கணத்திலே 2,500 ஆண்டுகளுக்கு முன்னால தொல்காப்பியம், அதற்குப் பின்னர் 800 ஆண்டுகளுக்கு முன்னால் நன்னூல்; அதற்குப் பிறகு புதிய இலக்கணம் இல்லை. எனவே அரசு முயற்சி எடுத்து

இன்றைக்கு இலக்கணக் குழுவை அமைத்திருக்கிறது. அதிலே விடப்பட வேண்டிய பழைய மரபுகள் எவை? சேர்க்கப்பட வேண்டிய புதிய மரபுகள் எவை என்பதைக் கண்டுபிடித்து, தக்க புலவர்கள் முன்னிலையில் அரங்கேற்றி அந்த நூல் வெளிவரும். அப்படி ஒரு நூல் வெளிவந்தால் தொல்காப்பியருக்குப் பின்னால், நன்னூலாருக்குப் பின்னால், தலைவர் கலைஞர் அவர்கள் வெளியிட்ட இலக்கண நூலாகத்தான் அது பெருமை பெறும் என்பதை நான் இந்தநேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

இ.ஆ.ப. தேர்வுகள் எழுதுகிறவர்களுக்கு இதுவரையிலும் தமிழில், இந்தத் துறையில் சார்பில் நூல் வரவில்லை. பலபேர் தமிழிலே எழுதி வெற்றி பெறுகிறார்கள் ஆனால் இடர்ப்படுகிறார்கள். ஏனென்று கேட்டால், B.Sc., (வேதியியல்) படித்துவிட்டு, ஒரு தேர்வு எழுதுகிறபொழுது, மற்றவற்றிலெல்லாம் தேர்வு எழுதுகிறார்கள். ஆனால் தொல்காப்பியத்தைப் படித்து, மொழியியல் படித்து எழுதுவது மிகுந்த இடர்ப்பாடு என்பது தெரியும். படாதபாடுபடுகிறார்கள். அதனால்தான் நம்முடைய அரசு அதற்காக 3 இலட்சம் ரூபாயை ஒதுக்கி முதன்முறையாக 'தமிழ் மொழி வரலாறு' என்ற நூலை இப்பொழுது வெளியிட்டு இருக்கிறது. எவ்வளவோ நீண்ட காலமாக இருப்பட்ட, தமிழில் இந்திய ஆட்சிப் பணி, தேர்வு எழுதுகிறவர்களுக்குப் பெரிய கையேடாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேநேரத்தில் பொறியியல் கல்விக்காக நாங்கள் ஏராளமான நூல்களை நம்முடைய கல்வித் துறையின் சார்பில் வெளியிட்டிருக்கிறோம். அதற்காக 15 பல்கலைக்கழகங்களுக்கும் 76 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, ஏற்கெனவே 62 நூல்கள் வெளிவந்திருக்கின்றன. மேலும் 90 நூல்கள் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அஞ்சல் வழிக் கல்வியிலே மகாத்மா காந்தி கல்வி நிறுவனம், மொரிசியஸில் இருக்கின்றது. அதன் வாயிலாக சென்னைப் பல்கலைக் கழகத்திற்குத் தொடர்பு ஏற்பட்டு இப்பொழுது மொரிசியஸ், டர்பன், மடகாஸ்கர் ஆகிய 3 இடங்களுக்கும் அஞ்சல் வழிக் கல்வி இந்த ஜூன் மாதத்திலிருந்து தொடங்கும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேநேரத்தில் இணையம். இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் பெரிய மாநாட்டை நடத்தி, உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை நிறுவி, அனைத்து வகையிலும், அனைத்தும் இணைந்து



வரவேண்டுமென்பதற்காக பெரிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே தொடக்ககால முயற்சியாக இன்றைக்கு இணையத்தின் வாயிலாக — தலைவருடைய துறையிலும், எங்களுடைய துறையிலும் இணையத்தில் எல்லாவற்றையும் பார்க்கலாம் — நம்முடைய துறையின் அனைத்துப் பணிகளும், அதேநேரத்தில் கோயில்களுடைய எல்லா வகையான விவரங்களும் இணையத்தில் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அது விரிவுபடுத்தப்படுகிறபொழுது, உலக நாடுகளில் இருக்கிற அத்தனை பேரும் பார்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

ஊர்திகளில் தமிழில் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து இருப்பீர்கள். அதற்குச் சட்டம் இருக்கிறது தனியாக பலகை வைக்க வேண்டுமென்று. அரசுத் துறைகளிலெல்லாம் எழுதியிருக்கிறார்கள். அதேநேரத்தில் எண்களைப் பற்றி திரும்பத் திரும்பக் கேட்கிறார்கள், ஏன் எண்களைத் தமிழில் எழுதவில்லை என்று. அது தலைவர் கலைஞர் அவர்களோடு கலந்து பேசி எடுக்கப்பட்ட முடிவு. எண்களைத் தமிழில் எழுதுவதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறது. ஆனால் சரியாக இருக்குமா என்பது சிந்திப்பதற்குரியது. காரணம், 'க' 'அ' 'எ' 'ரு' இவையெல்லாம் எழுத்தாகவும், எண்ணாகவும் இருக்கின்றன. எனவே இந்த இடர், இந்தக் குழப்பம் வந்துவிடக் கூடாது என்பதற்காக ஏற்பட்ட தெளிவில், எண்கள் எண்களாகவே இருக்கட்டும், எழுத்து தமிழில் வரட்டும் என்று தலைவர் கலைஞருடைய கட்டளையை நிறைவேற்றி இன்றைக்கு அரசுத் துறை அதைச் செயல்படுத்தி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

22 உலக நாடுகளுக்கு நூல்கள் அனுப்பப்பட்டு இருக்கின்றன. கிட்டத்தட்ட அந்த நூல்களில் தகுதி வாய்ந்த, மிகச் சிறந்த நூல்கள், ஆற்றல் மிக்க நூல்கள் 130 நூல்களைத் தொகுத்து 22 நாடுகளுக்கு, ஒவ்வொரு நாட்டுக்கும் அனுப்பி இருக்கிறோம்.

இப்பொழுது ஆர்வத்தின் காரணமாக தமிழில் 'Pager' என்று சொல்லப்படுகின்ற அகவியை அதற்கு அகவி என்று பெயர். அது வருகிறது. தமிழிலே அகவி என்று வைத்துக்கொள்ளுங்கள் — குறிப்பாக கோவையிலே கிட்டத்தட்ட 3 ஆயிரம் பேர் அதைக் கையில் வைத்திருக்கிறார்கள். நானே அந்த விழாவைத் தொடங்கி வைத்திருக்கிறேன்.

அடுத்து தமிழிலே மருத்துவம். நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மருந்துச் சீட்டுக்களைத் தமிழிலே எழுதுங்கள், மருந்தின்மீது தமிழிலே அச்சிடுங்கள் என்று சொல்லி நமக்கு உதவி செய்திருக்கிறார்.

யாழ்ப்பாண நூலகம் பற்றி உங்களுக்குத் தெரியும். ஒரு காலத்தில் சிங்களருக்கும் தமிழருக்கும் ஏற்பட்ட போரில் எரிக்கப்பட்ட நூலகம் பல இலட்சக்கணக்கான நூல்களைக் கொண்ட அந்த நூலகத்திற்குக் காலப்போக்கில் நூல்கள் தேவைப்படும்போது நாமே கிட்டத்தட்ட 5,000 ரூபாயில் கிட்டத்தட்ட 2,500 நூல்களைத் தமிழக அரசு யாழ்ப்பாண நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, விளம்பரப் பலகைகள். நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துவிட்டார்கள். 50 ரூபாயாக இருந்த அபராதத்தை 1000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம் என்று. நாங்கள் எவ்வளவோ முயற்சி எடுத்திருந்தும் 3,07,393 கடைகளில் இன்னும் 4,608 கடைகளில் எழுதவில்லை. அதேபோல உணவு நிறுவனங்களில் 335 நிறுவனங்களில எழுதவில்லை. அதற்கு நிறைய தவணை கொடுத்தாகிவிட்டது. ஆனால் யாரும் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் மேலைநாடுகளில் அதைப்பற்றி எந்த அளவுக்கு இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். பாரிஸில் 100 விளம்பரப் பலகை என்றால், 98-ல் பிரெஞ்சு மொழி தவிர வேறு எதுவும் கிடையாது. அதேநேரத்தில் ஜெர்மனியில், நம்முடைய சுப்பிராயனுக்குப் பிடித்த கார்ல் மார்க்ஸ் தெருவில், Road என்று கூட கிடையாது. Street என்றுகூட கிடையாது. 'ஸ்ட்ரேசே' என்று ஜெர்மன் மொழியில்தான் இருக்கிறது. ஆனால் இங்குதான் அனைத்து மொழிகளிலும் எழுதுவதற்கு அனுமதி கொடுத்தோம். தமிழிலே எழுதுவதற்குப் பலபேருக்குச் சங்கடமாக இருக்கிறது. அதைக் கண்டிப்பாக இந்த அரசு கடைப்பிடிக்கும் என்பது மட்டுமல்ல, நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அறிவித்ததுபோல், இனியேனும் எழுதத் தவறினால், அதன் விளைவு கடுமையாக இருக்கும். ஏனென்றால் அபராதம் 50 ரூபாயாக இருந்ததை ஆயிரம் ரூபாயாக உயர்த்தியதால் அந்த எழுதுவார்கள் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் எழுதுவதற்குரிய செலவு அதைவிடக் குறைவுதான். ஆனால் அதேநேரத்தில் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிற சில துறைகள் சில தவறுகளைச் செய்கின்றன.

கர்நாடகத்திலிருந்து ஒரு விளம்பரம் தமிழ்நாட்டுக்கு வருகிறது. அவர்கள் 'கர்நாடக பொருட்காட்சிக் குழுமம்' என்று தமிழிலே விளம்பரத்தை வெளியிட்டிருக்கிறார்கள். கர்நாடகப் பொருட்காட்சிக் குழுமம் என்று தமிழ்நாட்டிலிருந்து இதழிலே வெளியிடுகிறார்கள். ஆனால் நம்முடைய துறைகள் ஆங்கிலத்தில் வெளியிடுகின்றன தமிழ் இதழில்— அதுதான் வேடிக்கை. Thirumangalam Municipality, Madurai



District-Tender Notice என்று தினமணியில் வெளிவந்த விளம்பரம். அதேபோன்று, District Rural Development Agency, Coimbatore - Tender Notice என்று தினமலரில் வெளிவருகிறது. கர்நாடக மாநிலத்துக்காரன் இங்கே வந்தால் தமிழிலே எழுதினால்தான் முறை என்று கருதுகிறான்

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** ஆனால் தமிழ்நாட்டில் இருக்கின்றவர்களுக்குத் தமிழிலே வெளியிட வேண்டும் என்ற, அதைத் தமிழிலே தமிழர்களுக்காக வெளியிட வேண்டும் என்ற, உணர்வு இல்லை என்பது மட்டுமல்ல, வெளியிட வேண்டுமென்ற உணர்வு இல்லை என்பது மட்டுமல்ல, கடைசியில் இந்த விளம்பரத்தில்கூட என்ன ஆகிவிட்டது என்றால், அண்ணன் மகன் என்று சொல்லுகின்ற மரபு எல்லாம் போய்விட்டது அண்ணன் மகன் என்று சொல்லுகின்ற மரபு இருக்கிறது. பல இடங்களில் அண்ணன்ஸ் மகன், அப்படி ஒரு மரபு இருக்கிறது. அண்ணன்ஸ் கபே என்று இருக்கும். இதுபோன்ற கடைகளில் பார்க்கலாம். அண்ணன்ஸ் கபே என்று இருக்கும். இதுபோன்ற ஒரு சூழ்நிலை வருமேயானால் அது எவ்வளவு கேடு விளைவிக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதது அல்ல. தம்பி மகன் என்பதுதான் உறவு. அதிலேகூட ஒரு 'க்' இருக்கிறது. தம்பிக்கு மகன் என்று இலக்கணப்படி வரும் ஆனாலும் இதை எப்படியேனும் உணர்த்த வேண்டும். அதை ஆங்கில முறையில் 'S' போட்டு எழுத வேண்டும். அது என்னவோ தம்பீஸ் தம்பீஸ் மகன் என்று எழுதுகின்ற அளவுக்கு அது என்னவோ தம்பீஸ் ஊறுகாய் போல் இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட மனநிலையை முதலிலே மாற்றிக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது அறிவிப்பைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருக்கோயில் நிதி அறநிலையத் துறையின் சார்பில்: பாடல்பெற்ற மற்றும் மங்களாசாசனம் பெற்ற 30 கோயில்களுக்குக் குடமுழுக்கு செய்யப்படும்.

[illegible]

இத்துறை ... 10 கோயில்களுக்குக் குடமுழுக்கு செய்யப்படும். திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன்; திருவண்ணாமலை அருணாசலேசுவரர்; மலைக்கோட்டை தாயுமானவர்; சுவாமிமலை சுவாமிநாதசுவாமி; கும்பகோணம்; சாரங்கபாணி; பட்டீசுவரம் தேனுபுரீசுவரர்; அண்ணன்கோயில் அண்ணன் பெருமாள், தேரழுந்தூர் வேதபுரீசுவரர்; திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் நாச்சியார்; திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர் கோயில் ஆகியவை புதுப்பிக்கப்படும்.

இத்துறையின் ஆளுகையின்கீழ் உள்ள 10 திருக்கோயில்களில் தேர்த் திருப்பணி செய்யப்படும். (1) திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் (விநாயகர் தேர்ப்பணி) (2) கடலூர் திருச்சோபுரம் அருள்மிகு திருச்சோபுரநாதசுவாமி திருக்கோயில் (3) கும்பகோணம் நாகேசுவரசுவாமி திருக்கோயில் (4) புதுக்கோட்டை நார்த்தாமலை அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் (5) திருச்சேறை அருள்மிகு சாரநாதப் பெருமாள் திருக்கோயில் (6) திருநெல்வேலி நெல்லையப்பர் திருக்கோயில் (7) நயினார்கோயில் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில். புதிய தேர் செய்வதற்கு அனுமதி. (8) சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் (9) திருவாலங்காடு அருள்மிகு வடாரண்யேசுவரர் திருக்கோயில் (10) விராலிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகியவையாகும்.

இத்துறை ஆளுகையின் கீழுள்ள திருக்குளங்களில் முதற்கட்டமாக— பல உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். கண்டிப்பாக நீங்கள் வெட்டுத் தீர்மானத்தில் கொடுத்த குளங்கள் எல்லாம் இதில் இடம்பெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன் — 75 திருக்கோயில்களின் திருக்குளங்களைத் தேர்வு செய்து அதற்கு முழுமையாக மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு, ஊரகவளர்ச்சி முகமையோடு சேர்ந்து செய்ய வேண்டும். அதில் சேர்ந்து கண்டிப்பாக இந்தத் துறை செய்து தரும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

ஒரு கால பூஜை நடத்த இயலாத 500 திருக்கோயில்களைத் தேர்ந்தெடுத்து, அதற்காக ரூ. 2500-ஐ பொதுமக்கள் நன்கொடையாகப் பெறுகிறோம். நாங்கள் 22,500 ரூபாயைத் தந்துவிடுகிறோம். இதுவரை கிட்டத்தட்ட 8 ஆயிரம் கோயில்கள் ஏற்கெனவே பயன்பெற்று வருகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே அந்த வகையில் இந்த ஆண்டும் 500 கோயில்கள் தேர்வு செய்யப்படும். உறுப்பினர்கள் அனைவரும் தயவுசெய்து ஆங்காங்குள்ள கோயில்களைச் சுட்டிக்காட்டி எழுதினால் நிச்சயமாக அவைகளுக்கு வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், அதன் சார் நிறுவனங்கள் மற்றும் தங்கும் விடுதி ஆகியவைகளுக்குக் குடிநீர் வசதியைப் பெருக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பழனி நகராட்சியுடன் இணைந்து நிரந்தரக் குடிநீர்த் திட்டம் ரூ. 1 கோடி செலவில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இறையன்பர்கள் வசதியை முன்னிட்டு திருக்கோயில்களின் அருகிலுள்ள கடற்கரை மற்றும் ஆற்றுப் படுகைகளில் படித்துறைகள், உடைமாற்றுக் கூடங்கள் மற்றும் கழிப்பிட வசதிகள் முதற்கட்டமாக 5 திருக்கோயில்களுக்குச் செய்து கொடுக்கப்படும். அதில் (1) பவானி சங்கமேசுவரர் கோயில் (2) திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில் (3) திருவரங்கம் அரங்கநாதசுவாமி கோயில் (அம்மா மண்டபம்) (4) இராமேசுவரம் இராமநாதசுவாமி கோயில் (5) அழகர்கோயில், கள்ளழகர் திருக்கோயில்.

அதுபோல பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் பங்குனி உத்திரம் போன்ற பெரிய விழாக்களுக்கு ஏராளமான இறையன்பர்கள் நடைப்பயணமாக வருகிறார்கள். அவர்களின் வசதிக்காக 5 இடங்களில் ஓய்வு மண்டபம் கட்டப்பட்டு, அதற்காகத் துறை 25 இலட்ச ரூபாயைச் செலவிடும்.

அதேபோல திருக்கோயில்களில் உள்ள ஓவியங்கள், சிற்பங்கள் ஆகியவற்றை ஏற்கெனவே படப்பிடிப்பு செய்து, 10 ஒளிப் பேழைகள், Video Cassettes இருக்கின்றன. அதேபோல மேலும் 10 கோயில்களைத் தேர்ந்தெடுத்து அதற்கான ஒளிப்பேழைகள் உருவாக்குவதற்காகத் திரைப்படத் துறைக்கு, எம்.ஜி.ஆர். திரைப்படப் பிரிவிற்கு 11 இலட்ச ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில் பெருமைகளையும் முக்கிய திருவிழாக்களையும் மற்ற விவரங்களையும் உலகெங்கிலும் உள்ள மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் இணையத்தில் அனைத்தும் இணைக்கப்படும்.

அடுத்து திருக்கோயில்களுக்குச் சொந்தமான நகர்ப்புற நிலங்கள் திருக்கோயில்களுக்குப் பயன்படும் வகையில் மாற்றி, திருக்கோயில் வருமானத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் பொதுமக்கள் வசதிக்காக முதற்கட்டமாக 7 இடங்களில் திருமண மண்டபங்கள் அமைக்கப்படும். அதில் ஒன்று வணக்கத்திற்குரிய சென்னை மேயர் அவர்களின் வேண்டுகோளின்படி தேனாம்பேட்டை அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி கோயில்; இரண்டாவது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சைதை கிட்டு அவர்களுடைய வேண்டுகோளின்படியும், நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. டி.ஆர்.பாலு தாமே முன்வந்து அந்தத் தொகையைச் செலுத்தித் திருமண மண்டபம் வேண்டியதன் அடிப்படையிலும், அந்த இரண்டுபேர் வேண்டுகோளுக்காக கோட்டூர் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் திருக்கோயில்; மூன்றாவது நம்முடைய

சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப. தங்கவேலன் அவர்களுடைய வேண்டுகோளின்படி, இராசசிங்கமங்கலம் கோயில்; நான்காவது, அமைச்சர் திரு அவர்களுடைய வேண்டுகோளுக்காக பள்ளப்பட்டி சிதம்பரேஸ்வரர் திருக்கோயில்; உப்பிலியப்பன் கோயில் வேங்கடாசலபதி திருக்கோயில்; திருச்சேறை சாரநாதசுவாமி திருக்கோயில்; நம்முடைய புகழேந்தி அவர்களுடைய வேண்டுகோளுக்காக திருப்பாதிரிப்புலியூர் பாடலீஸ்வரர் திருக்கோயில் ஆகிய 7 திருக்கோயில்களுக்கும் புதிய திருமண மண்டபங்கள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

ஆண்டிற்கு ரூ. 5,000 முதல் ரூ. 10,000 வரை வருமானம் உள்ள திருக்கோயில் தொகுப்பூதிய பணியாளர்களுக்குத் தற்போது வழங்கும் சம்பளத்தில் ரூ. 25 உயர்த்தி வழங்கப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு ரூ. 12.45 இலட்சம் கூடுதல் செலவாகும். இதனால் 1,150 பணியாளர்கள் பயனடைவார்கள்.

சுசீந்திரம் பற்றி நம்முடைய நண்பர் பேசினார். சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில் நிலையான செலவினச் சம்பளப் பணியாளர்கள் ஏறத்தாழ 761 பேர்களுக்கு 25 ரூபாய் ஊதிய உயர்வு தந்து அவர்களுக்குப் பயனளிக்கப்படும். இதிலே இரண்டு இலட்சத்து இருபத்தொன்பதாயிரம் ரூபாய் செலவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருக்கோயில்கள், தமிழகத்திலுள்ள நலிவுற்ற ஆதிதிராவிடர் பகுதி கோயில்கள், ஏற்கெனவே உள்ளது. போன ஆண்டு திட்டத்திலே 100 கோயில்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன. தலைவர் கூடக் கேட்டார்கள், பட்டியல் இருக்கிறதா என்று. பட்டியல் தயாராக இருக்கிறது. 100 கோயில்களுக்கு ஏற்கெனவே வழங்கியிருக்கிறோம். மேலும் 100 கோயில்களுக்கு ஆதிதிராவிடர் பகுதியில் இருக்கிற, பிற்படுத்தப்பட்டோர் பகுதியில் இருக்கிற கோயில்களுக்கு, [illegible] தேர்ந்தெடுக்கப்பட்டுக் கொடுக்கப்படும். அதற்கு ரூ. 25,000 வழங்கப்படும்.

அதுபோல இலவசத் திருமணங்கள். ஆயிரம் இலவசத் திருமணங்களுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. திருக்கோயில்களுக்குச் சொந்தமான நகர்ப்புற நிலங்களில் இப்போது வணிக வளாகம் கட்டுகிறோம். இதற்கு முன்னால் நேரடியாக துறையே கட்டும். இப்போது அந்த வணிகர்களுடைய பங்கையும் பெற்று அவர்களுடைய



தொகையையும் கொண்டு வணிக வளாகம் கட்டுவதற்கு, முதலில் தூத்துக்குடியில் அருள்மிகு சங்கரராமேசுவரர் திருக்கோயில், இரண்டாவதாக திருத்துறைப்பூண்டியில் அருள்மிகு பவஔஷதபுரீசுவரர் திருக்கோயில், மூன்றாவதாக திருநெல்வேலியில் அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில். அடுத்து, 8 இணை ஆணையர் மற்றும் 5 துணை ஆணையர் நிலையில் உள்ள திருக்கோயில்களுக்குத் தகவல் தொடர்பு கருதி, கணிப்பொறி வசதி ஏற்படுத்தப்படும். இதற்கு ரூ. 13.30 இலட்சம் செலவாகும்.

திருக்கோயில்களில் திருப்பணிகளை விரைவுபடுத்த பட்டயப் பொறியாளர்கள் கேட்டார்கள்; காலம் கடக்கிறது, மதிப்பீடு தயார் செய்ய வேண்டும் என்று. அதற்காகவே தனி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. திருக்கோயில்களில் திருப்பணிகளை விரைவுபடுத்த பட்டயப் பொறியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்படுவர். இவர்களுக்கு மதிப்பீட்டில் ஒரு விழுக்காடு கட்டணமாக அளித்து மதிப்பீடு தயார் செய்யும் பணி நிறைவேற்றம் செய்யப்படும். அதேபோல தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் தூய்மையாகவும், சீராகவும் பொதுமக்கள் பாராட்டும் வகையில் பேணப்படும் திருக்கோயில்களுக்கு மாவட்ட அளவில் சுழற்கோப்பை வழங்கப்படும். இதற்கு ரூ. 2.90 இலட்சம் வழங்கப்படும். அடுத்து முதல் நிலைச் செயல் அலுவலர்கள் சார்ந்துள்ள திருக்கோயில்களையும் மற்றும் அதன் சார் நிறுவனங்களையும் அதன் சொத்துக்களையும் கண்காணிக்க முதற்கட்டமாக 20 திருக்கோயில்களைச் சார்ந்த செயல் அலுவலர்களுக்கு இரு சக்கர மின் இயக்க ஊர்தி — Motor Cycle — வழங்கப்படும். இதற்கு ரூ. 8 இலட்சம் செலவிடப்படும். இதற்கு எரிபொருள் மாதம் 25 litre petrol-லும் மற்றும் பேணுதல் செலவுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஆயிரமும் வழங்கப்படும். இதற்கு கூடுதலாக ரூ. 2 இலட்சம் செலவிடப்படும். இது கோயில் நிதியிலிருந்து.

அரசு நிதியிலிருந்து, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத பிறபடுத்தப்பட்ட கோயில்களுக்குக் கொடுக்கப்படுகிற, அந்த 100 கோயில்கள் — நான் ஏற்கெனவே சொன்னேன் — அதிலே ஆதிதிராவிடர் பகுதியில் இருக்கிற கோயில்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அதிகமாக எடுத்துக் கொள்ளப்படும். அதற்கு நண்பர்கள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பதவி உயர்வினால் குறைக்கப்பட்ட நிலை-1 செயல் அலுவலர் பதவி இடங்கள் 57, 66-ஆக உயர்த்தப்படும். இதற்காக ரூ. 2.36 இலட்சம் செலவழிக்கப்படும். ஏற்கெனவே உதவி ஆணையர் அலுவலகங்களில் பயன்படுத்தப்பட்டு, தற்போது கழிவு செய்யப்பட்ட 15 ஈப்பு ஊர்திகளுக்குப் பதிலாக நடப்பு நிதியாண்டில் முதற்கட்டமாக 8 ஈப்பு ஊர்திகள் வழங்கப்படும். இதற்கு ரூ. 28 இலட்சம் செலவாகும். அடுத்த நிதியாண்டில் மீதி 7 ஈப்புகள் வழங்கப்படும்.

இத்துறைத் தணிக்கைப் பிரிவில் உள்ள 2 மண்டலத் தணிக்கை அலுவலர் பதவிகள் துணைத் தலைமைத் தணிக்கை அலுவலர் பதவிகளாக மேம்படுத்தப்படும். இதற்காக ரூ. 0.24 இலட்சம் செலவிடப்படும். தலைமை இடத்தில் உள்ள தலைமையிட அலுவலர்களின் இல்லங்களுக்குத் தொலைபேசி இணைப்பு வழங்கப்படும். இதற்கு ரூ. 1.05 இலட்சம் செலவாகும். அடுத்து சுசீந்திரத்திற்காக. சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களுக்கு வழங்கப்படும் அரசு மானியத்தை, இதுவரைக்கும் இருந்ததை உயர்த்தி இப்போது ரூ. 6 இலட்சம் கூடுதலாக வழங்கப்படுகிறது. இதனால் மொத்தத் தொகை ரூ. 33.70 இலட்சமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சேலத்தில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் அமைப்பதற்கு ரூ. 7.28 இலட்சம் ஒதுக்கப்படும்.

இனி தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறையின் சார்பான அறிவிப்புகள்.

சென்னையிலுள்ள அரசினர் கலைத் தொழிற் கல்லூரி 150 ஆண்டுகளை. நிறைவு செய்திருப்பதால், வகுப்பறைகளும், பொருட்காட்சியகமும் அமைப்பதற்காக ரூ. 19.00 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. அரசு கலைத் தொழிற் கல்லூரிகளில் முதுகலைப் பட்டப் பிரிவிற்கென 3 விரிவுரையாளர்கள் பணியிடம் ஏற்படுத்த ரூ. 3 இலட்சம், நூலகத்திற்கு நூல்கள் வாங்க ரூ. 1 இலட்சம், கலைக்கூடங்களுக்காக துணைப்பாகங்கள் வாங்க ரூ. 3 இலட்சம், இதற்கெல்லாம் சேர்த்து பணம் ஒதுக்கப்படுகிறது.

புதிதாக ஐந்து மாவட்டங்களில் சவகர் சிறுவர் மன்றம் அமைக்கவும், சிறுவர் மன்ற விரிவாக்க மையம் அமைக்கவும் ரூ. 3.75 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. சவகர் சிறுவர் மன்றம் அமைகின்ற ஊர்கள் (1) ஈரோடு, (2) திருவாரூர், (3) விருதுநகர், (4) விழுப்புரம், (5) திருவள்ளூர்.



பிற்பகல் 1-40

சவகர் சிறுவர் மன்றங்களில் சென்ற ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 25.48 இலட்சம். இவ்வாண்டு வரவு-செலவுக் கணக்கில் ரூ. 38.63 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் பழங்கால இசைவாணர்களின் இசை அரங்குப் பாடல்கள் மற்றும் பழம்பாடல்கள் ஆகியவற்றைக் குறுந்தகட்டில் (C.D. ROM) தொகுத்துப் பாதுகாப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

கலை விழாக்கள் நடத்துவதற்காக ஒட்டுமொத்தமாக நல்கையாக ரூ. 16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதற்கு முன்னால் இருந்தது 1 இலட்சம் ரூபாய்தான். அதை தலைவர் கலைஞர் அவர்கள் ஒன்றோடு 16-ஐ சேர்த்து 17 இலட்சமாக உயர்த்தியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இயல் இசை நாடக மன்றத்திற்கு சென்ற 1998-99 ஆம் ஆண்டில் வரவு-செலவுக் கணக்கில் ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு முதல் அது ரூபாய் 59 இலட்சமாக உயர்த்தித் தரப்படுகிறது இயல் இசை நாடக மன்றத்திற்கு. கலைஞர்களைக் கௌரவிப்பதன்பேரில் கலைஞர் தந்த நன்கொடை இது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திருக்கோயிலூரில் கபிலர் குன்றில் "தொல்பொருள் காட்சியகம்" அமைப்பதற்காக ரூ. 5.50 இலட்சம் ஒதுக்கப்படுகிறது.

கங்கைகொண்ட சோழபுரத்தில் இராசேந்திர சோழனின் அரண்மனைக் கட்டடச் சுவர்களின் அடிப்படைப் பகுதிகளைப் பாதுகாப்பதற்காக ரூ. 4.50 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. தொல்பொருள் ஆய்வுத் துறையின் சார்பில் பகுதி-2 திட்டங்களுக்கு ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. புதியதாக 5 மாவட்டங்களில் இசைப்பள்ளிகள் தொடங்கப்படுகின்றன. 1. காஞ்சிபுரம், 2. திருவண்ணாமலை, 3. சிவகங்கை, 4. தருமபுரி, 5. சீர்காழி. ஏற்கெனவே அங்கு மூவர் இசை விழா நடைபெறுகிற காரணத்தால் அது நாகப்பட்டினம் மாவட்டத்திற்குத் தந்ததாக நம்முடைய நிஜாமுதீன் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த நூற்றாண்டு முடியும் தருவாயில் இருப்பதால், பல்வேறு ஆற்றல்மிகு தமிழர்களின் அரசியல், அறிவியல், இலக்கியம், சமூக சீர்திருத்தம், விளையாட்டு போன்ற பல துறைகளின் பங்களிப்பினைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தொகுத்து வெளியிட அரசு ஆவன செய்யும்.

அடுத்தது தமிழ் இலக்கிய வரலாறு. இதுகாறும் வெளிவந்த "தமிழ் இலக்கிய வரலாறு" தமிழ் நாட்டு இலக்கியங்களை மட்டுமே சார்ந்து நிற்கும் நிலையை மாற்றி, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் இலக்கிய வரலாறுகளையும் ஒருங்கிணைத்து, "புதிய தமிழ் இலக்கிய வரலாறு" உருவாக்கப்படும். இதற்காக 3 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்படும் நல்கை ரூ. 18.50 இலட்சம் என்பதிலிருந்து 53 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஓய்வூதியத் தொகை குறித்துத் தனியாக ஆய்வு செய்து அறிவிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கல்வி மானியத்தில் அறிவித்தபடி நடப்பு நிதியாண்டில் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கான மானியத்தை உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இராமநாதபுரம், கரூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் புதிய அருங்காட்சியகங்கள் தொடங்கப்படும். அதற்காக ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. அரசு அருங்காட்சியகங்களுக்குப் பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 25.18 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் வளர்ச்சித் துறைக்கு பகுதி-2 திட்டத்தின்கீழ் 5 திட்டப் பணிகளுக்கு ரூ. 16.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரிசா மாநிலத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட 10 இலட்சமும் அடங்கும். அதேநேரத்தில் ஐ.ஆ.ப. தேர்வினைத் தமிழில் எழுதி வெற்றி பெறுகிறவர்களுக்குப் பரிசு தருவதற்காகவும் அதில் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அகரமுதலித் திட்டம் 3 பணிகளுக்காக ரூ. 5.20 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. தமிழறிஞர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் பெயரில் தஞ்சாவூரில் அமைந்திருக்கும் புலவர் கல்லூரி மாணவர்களுக்கு இலக்கணம் இலக்கியம் ஆகியவற்றில் ஆழ்ந்த புலமைச் செருக்குடைய கல்வியை வழங்கி வருவதைப் பாராட்டி, அக்கல்லூரிக்குப் போதுமான வகுப்பறை வசதிகள் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யும். கணினி வழி கலை—பண்பாட்டுத் தரவகம் ஒன்று அமைப்பதற்காக, கலை - பண்பாட்டு இயக்ககத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தபடி சீர்காழியில் மூவர் இசை விழா நடத்துவதற்கும் மணிமண்டபம் நிறுவுவதற்கும் தருமபுர ஆதினம் இப்போது இடத்தை ஒதுக்கித் தந்திருக்கிறது. அந்தப் பணி இந்த ஆண்டில் நிறைவுபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தபடி நிரந்தரக்



கண்காட்சி வைப்பதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்தார்கள். அதிலே தமிழக வரலாறு என்று பொறிக்கப்பட வேண்டும். அதற்கு அடிப்படையாகக் கொச்சியில் அதனுடைய பகுதியில் மாதவ நாயர் அறக்கட்டளை சார்பில் நிறுவப்பெற்றுள்ள 'கேரள வரலாற்று அருங்காட்சியகம்' ஏற்கெனவே பார்வையிடப்பெற்று குறிப்புகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. அதனடிப்படையில் மரபுசார் மாதிரிகள் - சிற்பங்களுடன் கூடிய ஓவியக்கூடம், கலைகளுக்கான மையம் ஒளி-ஒலிக் காட்சிகள், வரலாற்று காட்சிக் கலைகளுக்கான சித்தரிக்கும் சிலைகள் ஆகியவை அனைத்தும் நாயகர்களைச் தமிழ் இலக்கியச் சங்கப் பலகை ஏற்கெனவே அமைக்கப்படும். அறிவித்தபடி இந்த ஆண்டு இயங்கத் தொடங்கி இந்திய அளவிலான அனைத்து இலக்கியப் பணிகளையும் இது செய்வதற்கு ஏற்பாக அமைந்திருக்கிறது.

இறுதியாக தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் அரசுப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் இதுவரை 10 ஆம் வகுப்புத் தமிழ்ப்பாட அளவில் தேறினால்போதும் என்றிருப்பதை மாற்றி தமிழ் வளர்ச்சி இயக்ககம் வெளியிட்டுள்ள 'ஆட்சித் தமிழ்' எனும் நூலில் தேர்வு எழுதி வெற்றி பெற்றால் மட்டும்தான் தகுதிகாண் பருவத்தை - Probation to be declared — நிறைவு செய்ய முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த அளவோடு என்னுடைய உரையை நான் நிறைவு செய்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இறுதியாக ஒன்றை நான் சுட்டிக்காட்டி, உரையை நிறைவு செய்கிறேன்.

பிற்பகல் 1-45

1938-வது ஆண்டில், இந்தி எதிர்ப்புப் போரில், வில், கயல், புலி என்ற மூன்றையும் தாங்கிய தமிழ்க் கொடியை ஏந்திய அதே கலைஞர்தான், வருங்காலத்தில் கழகத்தின் சார்பில் அண்ணா தந்த கொடியையும் தாங்கி நடை போடுகிற காலத்தில், தன்னுடைய பேச்சால், எழுத்தால், செயலால் நிர்வாகத் திறனால், எத்துறையில் புகுந்தாலும், அத்துறையிலும் தன் முத்திரையைப் பதிக்கிற கலைஞராக விளங்குகிறார். அவர், 'தூக்குமேடை'யில் எழுதிய ஒரு வசனத்தை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

"இது கீழே போடுகிற கொடி அல்ல; சாதி வேருக்கு சமாதி கட்டி, அதன் பக்கத்திலே எழுப்பப்படும் சுயமரியாதை மாளிகையின் உச்சியிலே பறக்க விடுகிற கொடி. தமிழ் மொழியைக் காப்பதற்கு 8 பேரும், தமிழினம் காப்பதற்கு 7 பேரும், தங்கள் தேக்குமரத் தேகங்களைத் தீயின்

[முனைவர். மு. தமிழ்க்குடிமகன்] [1999 மே 6

நாக்குகளுக்கு அர்ப்பணித்தார்களே, அவர்களின் கைகளிலே ஏந்திய கொடியடா இது. ஏமாற்றப்பட்டவர்களாக, எலும்புக்கூடுகளாக, நாயினும் கேவலமாக, சாக்கடையிலே நெளியும் புழுக்களிலும் கேவலமாக, சாத்திரக் குப்பை மேடுகளிலே தூசி தும்புகளாய்த் தூக்கி எறியப்பட்ட மக்களை, மார்பினை உயர்த்தி பீடுநடை போடச் செய்ய, ஏடு கொள்ளாப் புகழ்படைத்த, எங்கள் அண்ணன் வழங்கிய கொடியடா" என்று மிடுக்கோடு கூறிய கலைஞர் அவர்களுடைய வரிகளோடு முடித்து, இன்னும் சொல்லலாம் விரிவாக; இருந்தாலும், முடித்தேன் நிறைவாக என்று கூறி, என்னுடைய சூளுரையோடு நிறைவு செய்கிறேன்.

'இன்பத் தமிழ்மொழிக்கு என்றும் என் மூச்சும்,
இனிய தமிழ்நாட்டைப் பற்றியென் பேச்சும்,
அன்பின் பிணைப்பினுக்கு என்றன்கை வீச்சும்,
அடங்காமல் என்றும் இத்தரையில் நின்றோச்சும்'

என்ற சூளுரையோடு, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர அன்புடன் வேண்டி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 12 - 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 12 - 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய - அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.



1999 மே 6]

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சி. வேலாயுதன், இருக்கையில் இல்லை. திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ. 21,90,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குத் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது

## (ஆ) கோரிக்கை எண் 51 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 51 - தமிழ் வளர்ச்சி-பண்பாடு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சி. வேலாயுதன், இருக்கையில் இல்லை. திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு பற்றிய 51ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ. 30,61,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7-5-1999) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

152. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளின் அட்டவணை-II-ல் சில திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 27-01-1999 ஆம் நாளிட்ட 21ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

196. மானியக் கோரிக்கை எண் 12-தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

197. மானியக் கோரிக்கை எண் 51 தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

198. தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ்)

199. கலை-பண்பாட்டு இயக்ககத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ்)



## இணைப்பு - I

*[69ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]*

**மானியக் கோரிக்கை எண் 12**

**தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000**

**முன்னுரை:**

பழமையும் பெருமையும் மிக்க நம் தமிழ்ப் பண்பாட்டிற்கும், தமிழர்தம் கூரிய அறிவு, ஆற்றல், கலைத்திறன், அறவுணர்வு, அருள் நெறித் தெளிவு ஆகியவற்றிற்கும் நிலைக்களமாகவும், முடிமணியாகவும் திகழ்வன நம் திருக்கோயில்கள் ஆகும்.

"திருக்கோயில் பொருந்த ஒரு செங்கல் இடுவார், உலகாள்வார்" என்ற முதுமொழிக்கு இணங்க, வரலாற்றுக் கருவூலங்களாகவும், கலைப் பெட்டகங்களாகவும் திகழும் நம் திருக்கோயில்களையும், சமய நிறுவனங்களையும் போற்றிப் பேணிப் பாதுகாத்திட நம் தமிழக அரசு அனைத்து . முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

**இந்து சமய அறநிறுவனங்களின் பராமரிப்பும் நிர்வாகமும்:**

தமிழகத்திலுள்ள பல்லாயிரக்கணக்கான திருக்கோயில்களும், இந்து சமய மற்றும் சமண நிறுவனங்களும், அறக்கட்டளைகளும் தமிழகத்தை ஆண்டு வந்த மன்னர்களாலும், அடுத்தடுத்து ஆட்சியைக் கைப்பற்றிய முகமதிய மன்னர்களாலும், ஆங்கிலேய அரசாலும் பராமரிக்கப்பட்டு வந்ததுடன், அவற்றின் பராமரிப்புக்கென நிரந்தர உறுதுணையாக நிலங்களை மானியமாக அளித்து, அன்றாட நிர்வாகத்தினை மேற்பார்வையிட்டனர். நம் முன்னோர்கள் திருக்கோயிலை நிலைக்களனாக வைத்து ஊராட்சி அமைப்பை ஏற்படுத்தி செம்மையாகச் செயல்பட்ட வரலாற்றினை உத்திரமேரூர் திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன.

ஆங்கிலேயர் தமது ஆட்சிக் காலத்தில், பல்வேறு சட்டங்களின் மூலமாக இந்து சமய அறநிறுவனங்களின் நிர்வாகத்தை ஓரளவு கட்டுப்பாட்டில் வைத்திருந்ததுடன், அவர்களுக்கு முன்னர் ஆட்சி புரிந்தோர் இந்து சமய அறநிறுவனங்களின் பராமரிப்பிற்கு என

[1999 மே 6

மானியமாக நிலங்கள் அளித்ததை உறுதிப்படுத்தி, இனாம் சாசனங்கள் வழங்கி, இந்து சமய அற நிறுவனங்களின் சொத்துரிமையை நிலைநாட்டினர்.

திருக்கோயில்களின் அன்றாட நிர்வாகம், சொத்துக்கள் பராமரிப்பு ஆகியவற்றைக் கண்காணிக்க, 1927 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம், "இந்து சமய அறநிலைய வாரியம்" அமைக்கப்பட்டு இந்து சமய அறநிறுவனங்களின் நிர்வாகம் ஒருமுனைப்படுத்தப்பட்டது.

நாடு விடுதலை அடைந்த பின்னர், இந்து சமய அறநிலைய வாரியம் கலைக்கப்பட்டு, 1951 ஆம் ஆண்டின் 19-வது சட்டத்தின்படி இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஏற்படுத்தப்பட்டு இந்து சமய அறநிறுவனங்களின் அமைப்பு சீர்படுத்தப்பட்டது. அறங்காவலர்களின் செயல்பாட்டை மேற்பார்வையிட வட்டாரக் குழுக்களும் அமைக்கப்பட்டன. திருக்கோயில்களின் நிர்வாகத்தில் முழுமையான பலனுள்ள நிர்வாகக் கட்டுப்பாட்டினை இச்சட்டம் கொண்டுவர இயலாததால் குறிப்பிடத்தக்க மாறுதல்களுடன் 1959 ஆம் ஆண்டின் 22-வது சட்டமாக, தற்போதுள்ள சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்த அரசு 1968 ஆம் ஆண்டின் 19-வது சட்டத்தின்படி வட்டாரக் குழுக்களை நீக்கி விட்டு முழுப்பொறுப்புகளையும் ஆணையரிடமும் அவரது சார்நிலை அலுவலர்களிடமும் ஒப்படைத்தது. அடுத்தடுத்து ஏற்பட்ட அரசு மாற்றங்களுக்கேற்ப பல சட்டத் திருத்தங்கள் 1976, 1978 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்டன.

இந்த அரசு பதவி ஏற்றதும், இந்து சமய அற நிறுவனங்களின் நிர்வாகத்தைச் சீர் செய்யும் முதற்கட்டப் பணியாக, 1991 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தால் உருவாக்கப்பட்டு, செயல்படாமலிருந்த திருக்கோயில் நிர்வாக வாரியத்தையும், மாவட்டக் குழுக்களையும் கலைத்துவிட்டு இந்து சமய அறநிறுவனங்களின் நிர்வாகம் அரசு அலுவலர்களின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கும் வகையில், 1996 ஆம் ஆண்டின் 39-வது திருத்தச் சட்டம் இயற்றப்பட்டு, 09-12-1996 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. இச்சட்டத்தின்படி, மாநில அளவில் அரசுக்கும், ஆணையருக்கும ஆலோசனை கூறி வழி நடத்திட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் பின்வரும் பெருமக்கள் அங்கம் வகிக்கின்றனர்:-



1999 மே 6]

**அலுவல்சார் உறுப்பினர்கள்:**

| | |
|---|---|
| மாண்புமிகு முதலமைச்சர் | தலைவர் |
| மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் | துணைத் தலைவர் |
| தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலர் | உறுப்பினர் |
| இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் | உறுப்பினர்/செயலர் |

**அலுவல்சாரா உறுப்பினர்கள்:**

தவத்திரு குன்றக்குடி அடிகளார், குன்றக்குடி

தவத்திரு திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர், திருப்பனந்தாள்

தவத்திரு திருவாவடுதுறை ஆதினகர்த்தர், திருவாவடுதுறை

தவத்திரு ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், திருவரங்கம்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், பேரூர்

திருமதி சௌந்தரா கைலாசம், சென்னை

திருமதி உமாமகேஸ்வரி, மேயர், திருநெல்வேலி

திரு. கருமுத்து கண்ணன், மதுரை

**சிறப்பு அழைப்பாளர்:**

தருமபுர ஆதீனகர்த்தரின் பிரதிநிதி

இவ்வாலோசனைக் குழுவின் கூட்டங்களில் திருக்கோயில் நிலங்கள், காலி மனைகள் மற்றும் கட்டடங்களின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் மூலம் திருக்கோயில் வருவாயைப் பெருக்குதல், தமிழகத் திருக்கோயில்களின் கலைச் சிறப்புகள், நித்தியப்படி பூசைகள், திருவிழாக்கள் முதலானவற்றை ஒலி மற்றும் ஒளிப்பதிவு செய்தல்,

திருமுறை ஓதுவார்கள், அர்ச்சகர்கள், நாதசுர இசைக் கலைஞர்கள் ஆகியோர்களுக்குப் புத்தொளிப் பயிற்சி அளித்தல், ஒருகால பூசைத் திட்டம் மற்றும் திருக்கோயில் நகைகள் மற்றும் சிலைகள் பாதுகாப்பு, திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனையை நடைமுறைப்படுத்துதல், குத்தகை நிவாரணச் சட்டத்திலிருந்து திருக்கோயில் நிலங்களுக்கு விலக்களித்தல், கல்வெட்டாய்வுக்குழு அமைத்தல், திருக்கோயில் வருமானத்தைப் பெருக்க வணிகவளாகம் மற்றும் அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்ட நிதி ஆதாரத்தைப் பெருக்குதல் மற்றும் திருக்கோயில் செயல் அலுவலர்களைக் கூடுதலாக நியமித்தல் ஆகிய இனங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

சட்டப் பிரிவு, 79(பி) பிரிவு புதியதாக ஏற்படுத்தப்பட்டு ஆக்கிரமிப்புதாரர்களை வெளியேற்ற குற்றவியல் வழக்குப் பதிவு செய்து அவர்களுக்குத் தண்டனை வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 1996ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட 29 மாவட்டக் குழுக்களின் ஆலோசனைப்படி அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**சமய நிறுவனங்களின் எண்ணிக்கை:**

இத்துறையின் நிர்வாகத்தின்கீழ் சமண சமயம் மற்றும் இந்து சமய அறநிறுவனங்கள் 36,253 உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | 34,213 |
| 2. | மடங்கள் | 56 |
| 3. | மடத்தைச் சார்ந்த திருக்கோயில்கள் | 57 |
| 4. | குறிப்பிட்ட கட்டளைகள் | 1,721 |
| 5. | அறக்கட்டளைகள் | 189 |
| 6. | சமணத் திருக்கோயில்கள் | 17 |
| | மொத்தம் .. | **36,253** |





மேலே கண்ட சமய நிறுவனங்கள் அவற்றின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் கீழ்கண்டவாறு பாகுபாடு செய்யப்பட்டுள்ளன:-

| | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பட்டியலைச் சாரா நிறுவனங்கள் சட்டப்பிரிவு 49-ன் படி ரூபாய் பத்தாயிரத்திற்கும் குறைவாய் வருவாய் உள்ளவை. .. | 33,279 |
| 2. | பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள்— | |
| | (i) சட்டப்பிரிவு 46 (i)-ன்படி ரூபாய் பத்தாயிரத்திற்கு மேலும் ரூபாய் இரண்டு லட்சத்திற்குக் கீழும் ஆண்டு வருவாய் உள்ளவை. .. | 2,564 |
| | (ii) சட்டப் பிரிவு 46 (ii)-ன்படி ரூபாய் இரண்டு லட்சத்திற்கு மேலும் ரூபாய் பத்து லட்சத்திற்குக் கீழும் ஆண்டு வருவாய் உள்ளவை. .. | 302 |
| | (iii) சட்டப்பிரிவு 46 (iii)-ன்படி ரூபாய் பத்து லட்சமும் அதற்கு மேலும் ஆண்டு வருவாய் உள்ளவை. .. | 108 |

இந்து சமய நிறுவனங்கள், இந்து சமய அறநிலையச் சட்ட விதிகளின்படி நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் ஆகியோரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

இம்மாநிலத்தில் உள்ள திருக்கோயில்கள், அறக்கட்டளைகள் மற்றும் சமய நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு பசலி ஆண்டு 1407-ல் வரப்பெற்ற வருவாய், சுமார் 125.42 கோடி ரூபாய் ஆகும்.

**அறநிலையத் துறையின் நிர்வாக அமைப்பு:**

சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையருக்கு உதவிட, தலைமையிடத்தில் ஒரு கூடுதல் ஆணையரும், ஓர் இணை ஆணையரும், ஒரு துணை ஆணையரும், ஓர் உதவி ஆணையரும் உள்ளனர். சிறப்புக் காவலர்களின் பணிகளைக் கண்காணிக்கவும், திருக்கோயில் பாதுகாப்பினைத்

[1999 மே 6

தீவிரப்படுத்தவும் ஒரு காவல் துறை கண்காணிப்பாளரும், மூன்று ஆய்வர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். திருப்பணிகள் தொடர்புடைய பணிகளுக்கு உதவிட ஒரு கண்காணிப்புப் பொறியாளரும், ஒரு செயல் பொறியாளரும், ஓர் உதவிக் கோட்டப் பொறியாளரும் அடங்கிய ஒரு குழு உள்ளது. தணிக்கை சம்மந்தப்பட்ட பணிகளைக் கவனிக்க, ஒரு தலைமைத் தணிக்கை அலுவலரும், வழக்குகளைக் கண்காணிக்க ஓர் உதவி ஆணையரும், அத்துடன், திருக்கோயில் நிலங்களைக் கண்காணித்து முறையாகப் பராமரிக்க வருவாய்த் துறையில் இருந்து மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் தனி அலுவலர் ஒருவரும் உள்ளனர். இத்துறையின் கணக்குப் பிரிவில் ஆணையருக்கு உதவியாக, கருவூலத் துறையிலிருந்து ஒரு முதுநிலைக் கணக்கு அலுவலரும், ஓர் உதவி கணக்கு அலுவலரும் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். தணிக்கைப் பணியை இந்த ஆண்டு மேலும் இறம்படச் செயல்படுத்த 8 உதவி தணிக்கை அலுவலர் பதவிகளை மண்டல தணிக்கை அலுவலர் பதவிகளாகவும், 8 தணிக்கை கண்காணிப்பாளர் பதவிகளை உதவி தணிக்கை அலுவலர் பதவிகளாகவும், 7 தணிக்கை ஆய்வர் பதவிகளை 7 தணிக்கை கண்காணிப்பாளர் பதவிகளாகவும் பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளது. இத்துறையின நிர்வாகத்தில் ஆணையர், சார்நிலை அலுவலர்கள், பொறியாளர்கள், தணிக்கை ஆய்வர்கள், அமைச்சுப் பணியாளர்கள் காவல் துறை பணியாளர்கள் ஆகியோர் மொத்தம் 2,481 பேர் பணிபுரிந்து வருகின்றனர்.

**திருக்கோயில் செயல் அலுவலர்கள்:**

இத்துறையின் கீழுள்ள திருக்கோயில்கள் மற்றும் அறநிறுவனங்கள் சட்டப்பிரிவு 45-ன்படி திருக்கோயில்களின் ஆண்டு வருமான வரம்புக்கேற்ப கீழ்க்கண்ட ஏழு நிலைகளில் 493 செயல் அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்:-

| | |
|---|---|
| இணை ஆணையர் நிலை | 8 |
| துணை ஆணையர் நிலை | 12 |
| உதவி ஆணையர் நிலை | 27 |
| செயல் அலுவலர் நிலை-1 | 57 |
| செயல் அலுவலர் நிலை-2 | 120 |
| செயல் அலுவலர் நிலை-3 | 170 |
| செயல் அலுவலர் நிலை-4 | 99 |



1999 மே 6]

**திருமடங்களின் நிர்வாகம்:**

தமிழகத்தில் தற்சமயம் 56 திருமடங்களும், அவற்றுடன் இணைந்த 19 குறிப்பிட்ட கட்டளைகளும் உள்ளன. திருமடங்களின் நிர்வாகத்தில் உள்ள சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதின் பேரில் திருமடங்களின் நிர்வாகக் குறைபாடுகளைக் களையவும், நிர்வாகத்தை மேம்படுத்தவும் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரின் நேர்முக உதவியாளர் தலைமையில் அவருக்கு உதவியாக மண்டல தணிக்கை அலுவலர் மற்றும் பிற அலுவலர்கள் அடங்கிய பிரிவு ஒன்று செயல்பட்டு வருகின்றது. இந்தத் திருமடங்களும், கட்டளைகளும் முறையாக, குறிப்பிட்ட காலமுறை இடைவெளிகளில் ஆய்வு செய்யப்படுவதுடன் தணிக்கைப் பிரிவினால் வரவு-செலவுக் கணக்கு தணிக்கையும் செய்யப்பட்டு நிர்வாகம் சீர்படுத்தப்பட்டு வருகிறது.

**திருக்கோயில் நிலங்கள் - கட்டடங்கள்:**

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக, 4.91 இலட்சம் ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் உள்ளன. அவற்றில் நன்செய், புன்செய் மற்றும் மானாவாரி நிலங்கள் அடங்கியுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:-

| நிலத்தின் தன்மை | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|
| நன்செய் | 2,08,224.56 |
| புன்செய் | 2,64,393.90 |
| மானாவாரி | 18,761.90 |
| மொத்தம் .. | 4,91,380.36 |

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் 1,06,807 குத்தகைதாரர்கள் பயிர் செய்து வருகின்றனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமான 22,046 கட்டடங்களில் 22,629 வாடகைதாரர்கள் உள்ளனர். 22,592 கிரவுண்ட் மனைகள், 84,220 வாடகைதாரர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

[1999 மே 6

நிலக் குத்தகைத் தொகை நிலுவை தொடர்பான வழக்குகளை மேற்கொள்ள 11 வருவாய் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் 28,569 வழக்குகள் ரூ.2,629.60 இலட்சம் நிலுவைக்காக 1,215 திருக்கோயில்களால் தாக்கல் செய்யப்பட்டு, 13,253 வழக்குகளில் தீர்வு காணப்பட்டு ரூ.799.45 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. கட்டட மனை வாடகையை குறைவாகப் பெற்று வரும் இடங்களை ஆய்வு செய்து, நியாய வாடகை நிர்ணயம் செய்ய நியாய வாடகை நிர்ணயக் குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இக்குழுக்கள், திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களுக்கு நியாயமான வாடகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

மனை வாடகை நிலுவைகளை வசூலிக்கவும், குறைந்த அளவு வாடகை நிர்ணயங்களை நியாயமாக நிர்ணயம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படடுள்ளது. நியாய வாடகை நிர்ணயத்தை ஏற்றுக்கொள்ளாதோரைத் திருக்கோயில் மனை, வீடுகளிலிருந்து வெளியேற்றத் தேவையான சட்டத் திருத்தங்கள் தமிழ்நாடு மாநகர குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டத்தில் செய்யப்பட்டு உள்ளன. அதன்படி, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1959ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டப் பிரிவு 79(பி)-ன் மூலம் ஆக்கிரமிப்புதாரர்களை வெளியேற்ற குற்றவியல் வழக்கு பதிவு செய்து அவர்களுக்குத் தண்டனை வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. திருக்கோயிலுக்குச் சொந்தமான 273.21 ஏக்கர் நிலம் மற்றும் 253 கிரவுண்ட் 1310 சதுர அடி மனைகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவித்த சமத்துவபுரம் திட்டத்திற்காக திருக்கோயில்களுக்குச் சொந்தமான 36.98 ஏக்கர் நிலங்கள் 3 இடங்களில் கிரயப்பத்திரம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், 67.85 ஏக்கர் நிலத்தில் முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டு கிரயப் பத்திரப் பதிவு செய்யப்படவுள்ளது.

11,536 கட்டடங்கள் மற்றும் 11,903 மனைகளுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், மாதம் ஒன்றுக்குக் கேட்பு வருவாய் 111.70 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது.



1999 மே 6]

**திருக்கோயில் பணியாளர்கள் நலத்திட்டங்கள்:**

**(அ) சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம்:**

ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் மற்றும் அதற்கு மேலும் வருமானம் பெறக்கூடிய திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக திருக்கோயில்களின் உபரி நிதியில் இருந்து ரூபாய் 10 இலட்சம் அனுமதிக்கப்பட்டதில் ரூபாய் ஏழு இலட்சம் கொண்டதான வைப்பீடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக, மாதந்தோறும் ரூ.20 வீதம் பணியாளர்கள் உறுப்பினர் கட்டணத் தொகையாகச் செலுத்துகின்றனர். பணியாளர் ஓய்வு பெறும்போது அவர் செலுத்திய உறுப்பினர் கட்டணத் தொகை, வட்டியுடன் அவருக்கு வழங்கப்படுவதுடன், கூடுதலாக ரூ.1,000 மேற்படி வைப்பு நிதித் திட்டத்தின் மூலமாக வழங்கப்படுகிறது.

**(ஆ) திருக்கோயில் பணியாளர் நலத் திட்டம்:**

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் மிகை நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் பெறப்பட்டு மூலதன நிதி உருவாக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து கிடைக்கின்ற வட்டித் தொகையினைக் கொண்டு, ஆண்டு உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ.40,000-க்குக் குறைவாக உள்ள திருக்கோயில்களில் மாதச்சம்பளம் ரூ.400-க்குக் குறைவாகப் பெறும் பணியாளர்களுடைய ஊதிய நிலுவைகளை வழங்கப் பயன்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின்படி இதுவரை 2,438 பணியாளர்களுக்கு ரூ.45.81 இலட்சம் வழங்கப்பட்டு பயன் அடைந்துள்ளனர்.

**(இ) ஓய்வூதியத் திட்டம்:**

திருக்கோயில்களில் பணியாற்றி மூப்பின் காரணமாக பதவி ஓய்வு பெறும் பணியாளர்களின் நலன் காக்க பல திட்டங்கள் தீட்டி செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்படி திருக்கோயில்களில் 20 ஆண்டு காலம் பணியாற்றி 60 வயதில் ஓய்வு பெற்ற ஓதுவார், அர்ச்சகர், திவ்வியபிரபந்தம், வேதபாராயணர் மற்றும் இசைக் கலைஞர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஓய்வூதியம் ரூ.500/- ஆக உயர்த்தி 423 சைவம் மற்றும் 153 வைணவ அர்ச்சகர்கள், 40 திவ்வியபிரபந்தம் மற்றும் வேதபாராயணர், 78 இசைக் கலைஞர்கள் மற்றும் 109 ஓதுவார்கள் பயன் அடைந்துள்ளனர். மேலும், இந்த அரசால் அண்மையில்

ஏற்படுத்தப்பட்ட பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 622 கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500 வீதம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

திருக்கோயில்களிலும், அறநிலையங்களிலும் பணியாற்றுகின்ற பணியாளர்கள் பணிக்காலத்தில் இயற்கை எய்திவிட்டால் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுகளுக்கு உதவித்தொகை வழங்கிட பணியாளர் குடும்பநலத்திட்டம் நடைமுறையில் உள்ளது. இதன்படி இயற்கை எய்திய பணியாளர்கள் குடும்பத்திற்கு ரூ.10,000 வழங்கப்படுகிறது. கடந்த மூன்று வருடங்களில், 317 குடும்பங்களுக்கு ரூ.83.24 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**திருக்கோயில் பணியாளர்களுக்கான வேறு பல நலத் திட்டங்கள்:**

(அ) அறநிலையங்களில் பணியாற்றி வருகின்ற பணியாளர்களுக்கு திருமண முன்பணமாக ஆண் பணியாளரின் திருமணம் அல்லது பணியாளரின் மகன் திருமணத்திற்கு ரூபாய் ஆறாயிரமும், பெண் பணியாளரின் திருமணம் அல்லது மகள் திருமணத்திற்கு ரூபாய் பத்தாயிரமும் திருக்கோயில் நிதி வசதிக்கேற்ப வழங்கப்படுகின்றன. இந்த முன்பணங்கள் இவர்களது மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து ஈடு செய்யப்படுகின்றன.

(ஆ) மேலும், திருக்கோயில் பணியாளர்களுக்கு மருத்துவப்படியாக திங்கள் தோறும் ரூ.50/- உயர்த்தி வழங்கப்படுகிறது.

(இ) திருக்கோயில் பணியாளர்களுக்கு இரு சக்கர வாகனம் வாங்க அதிகபட்சக் கடனாக ரூ.20,000 வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

(ஈ) திருக்கோயில் பணியாளர்களின் ஊதிய விகிதம் 10-06-1998 நாளிட்ட தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் அரசாணை (நிலை) எண் 257-ல் திருத்தியமைக்கப்பட்டது. மேலும், தற்போது ரூபாய் ஒரு இலட்சத்திற்குமேல் வருவாய் வரும் எல்லா திருக்கோயில் பணியாளர்களுக்கும் 1-1-1998-ல் 3 சதவிகிதம் அகவிலைப்படியும், அதற்குப்பின்னர் அவ்வப்பொழுது அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் விகிதத்தில் அகவிலைப்படியும் வழங்க ஆணையிடப்பட்டது. மேலும், ரூபாய் பத்தாயிரத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் வரை ஆண்டு வருவாய் பெறும் முதுநிலையல்லாத திருக்கோயில்களில் இதுவரை வழங்கப்பட்டு வந்த தொகுப்பூதிய முறையை மாற்றி அந்தத் திருக்கோயில் பணியாளர்களுக்கும் ஊதிய விகிதங்கள் நிர்ணயித்து ஆணையிடப்பட்டுள்ளது.



(உ) 1999-ஆம் ஆண்டு பொங்கல் பரிசாக உயர் வருவாய் பெறும் முதுநிலைத் திருக்கோயில்களில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு ரூ.725-ம், முதுநிலையல்லாத திருக்கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ரூ.675-ம் வழங்கப்பட்டது.

(ஊ) திருப்பணி-குடமுழுக்கு சிறப்பு ஊதியம்:

திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணி மற்றும் குடமுழுக்கின்போது, சிறப்புப் பணிபுரியும் முதுநிலை திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.1,300/- மற்றும் முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.1,100 அல்லது ஒரு மாத சம்பளம், இவற்றில் எது குறைவோ அது வழங்கப்பட்டு வருகிறது.

(எ) பண்டிகை முன்பணம்:

திருக்கோயில் பணியாளர்களுக்கும் பண்டிகை முன்பணம் ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது.

(ஏ) விடுப்புச் சலுகை:

திருக்கோயில் பணியாளர்களுக்கு ஈட்டிய விடுப்பு, ஒப்படைப்பு விடுப்பு, மருத்துவ விடுப்பு மற்றும் பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு ஆகிய சலுகைகள் வழங்கப்படுகின்றன.

(ஐ) திருக்கோயில் பணியாளர்களுக்கு சீருடை சலவைப்படியாக மாதம் ரூ.10/- வழங்கப்படுகிறது.

(ஒ) பணியாற்றும் காலத்தில் இயற்கை எய்துகின்ற பணியாளர்களின் இறுதிச் சடங்குகள் செய்ய ரூ.2,000/- முன் பணமாக வழங்கப்படுகிறது. மேலும், அவர்களது வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் முன்னுரிமை அளித்து வேலைவாய்ப்பளிக்கப்படுகிறது.

**திருப்பணியும் பழுது பார்த்தலும்:**

ஆகம விதிகளின்படி ஒவ்வொரு திருக்கோயிலிலும் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு விழா நடத்தப்படுதல் வேண்டும். திருப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய திருக்கோயில்கள், பொதுவாக கீழ்க்கண்டவாறு மூன்று வகைகளாகப் பாகுபடுத்தப்படுகின்றன:-

(1) சைவ மற்றும் வைணவப் பெரியோர்களால் பாடல் பெற்ற, புகழ்பெற்ற திருக்கோயில்கள்:

(2) உடனடியாகத் திருப்பணி மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதும், 12 ஆண்டுகாலம் முடிந்து குடமுழுக்கு விழா நடத்தப்பட வேண்டியதும் ஆகிய திருக்கோயில்கள்.

(3) வரலாற்றுப் புகழ்மிக்கதும், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்ததுமான திருக்கோயில்கள்.

பொதுமக்கள் நன்கொடை, அந்தந்த சமய நிறுவனத்தின் நிதி, மிகை நிதி உள்ள திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம், அரசு மானியம், பொது நல நிதி, திருக்கோயில் மேம்பாட்டு நிதியின் (ரூ.5 கோடி திட்டம்) வட்டி, கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணித் திட்ட நிதியின் (ரூ.1 கோடி திட்டம்) வட்டி மற்றும் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணிகள் நிதி ஆகிய நிதி ஆதாரங்களிலிருந்து திருக்கோயில்களின் திருப்பணி, கட்டுமானம் மற்றும் இதர பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) அரசு மானியம்:**

ஒவ்வொரு ஆண்டும் திருக்கோயில்களின் திருப்பணிக்காக அரசு மானியமாக ரூ.45.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு வந்ததை, 1998-99 ஆம் ஆண்டு முதல் ரூ.75.00 இலட்சமாக உயர்த்தி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 1998-99 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாட்டிலுள்ள திருப்பணி செய்யப்பட வேண்டிய 37 முக்கியத் திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

**(ஆ) பொது நல நிதி:**

தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் 97-ஆம் பிரிவின் கீழ் பெறப்படும் நன்கொடைகள், பாரத மாநில வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டு, அத்தொகை திருக்கோயில்களின் திருப்பணி மற்றும் பழுது பார்ப்புப் பணி மேற்கொள்ள நிதி உதவி தேவைப்படும் திருக்கோயில்களுக்கு வழங்கப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 17 திருக்கோயில்களுக்கு ரூ.35.23 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**(இ) ஆலய மேம்பாட்டு நிதி:**

நிதி வசதி மிகுந்த திருகோயில்களின் மிகை நிதியைக் கொண்டு ரூபாய் ஐந்து கோடி வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, இவ்வைப்பு நிதியின்



வட்டியிலிருந்து 20 விழுக்காட்டுத் தொகை, ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் பாடல் பெற்றதும், சரித்திரம் மற்றும் சுற்றுலா முக்கியத்துவ நிகழ்ச்சியில் சார்புடைய திருக்கோயில்களுக்கும், அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருப்பணி மற்றும் இதர கட்டுமான மராமத்துப் பணிகளுக்காக மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 64 திருக்கோயில்களுக்கு ரூ.317.35 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**(ஈ) கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி:**

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் மிகை நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி மூலதனத்தில் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, இதன் வட்டியிலிருந்து, வசதி குறைந்த மற்றும் நிதி தேவையுடைய கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காக் நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்த நிதி அறநிலையத் துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், பழனி திருக்கோயிலின் செயல் அலுவலர், பழனி திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவர் அல்லது தக்கார் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு குழுவால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தக் குழு நிதி தேவைப்படுகின்ற திருக்கோயில்களின் பெயர்ப் பட்டியலைத் தேர்வு செய்து, அரசின் முன் அனுமதி பெற்று ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ.25,000 வீதம் திருப்பணி வேலைகளுக்காக மானியமாக வழங்கி வருகிறது. இந்த நிதி, பழனி திருக்கோயில் நிர்வாகத்தில் வைத்து பராமரிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் இதுவரை 1168 திருக்கோயில்களின் திருப்பணிக்காக ரூ.2,08,12,700 வழங்கப்பட்டுள்ளது.

**(உ) திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி:**

திருக்கோயில்கள் மற்றும் அறநிலையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருப்பணி, கட்டுமானப் பணி மற்றும் இதர பழுது பார்த்தல் பணிகளை முழுமையாக நிறைவேற்றும் வகையில் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதிக்கு ஆன்மீகப் பெரியோர்களும், பொது மக்களும் மனமுவந்து ரூ.595 இலட்சம் நன்கொடை வழங்கியுள்ளனர். இந்நிதி பல்வேறு வைப்பு நிதிகளாக முதலீடு செய்யப்பட்டு, ரூ.400 இலட்சம் வட்டி பெறப்பட்டது. இந்நிதியிலிருந்து பல்வேறு திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும், ஒரு கால பூசைக்காகவும், தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீசுவரர் திருக்கோயில் மின் கட்டணம் செலுத்த வைப்பு நிதி

ஏற்படுத்தவும் இதுவரை ரூ.545 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கிராமப் புறத்தில் ஆதிதிராவிடர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியிலுள்ள நலிவடைந்த இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் வராத 50 திருக்கோயில்களின் திருப்பணிக்காக திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் ரூ.12,50,000 வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்நிதியில் ரூ.150 இலட்சம் வைப்பு நிதியாக உள்ளது.

**சைவத் திருமுறை ஆகமங்கள் மற்றும் வைணவ திவ்யபிரபந்தப் பயிற்சி மையம் ஏற்படுத்துதல்:**

திருவேற்காடு அருள்மிகு தேவிகருமாரியம்மன் திருக்கோயில் சார்பில் சைவத் திருமுறை ஆகமங்கள் மற்றும் வைணவ திவ்யபிரபந்தப் பயிற்சி மையம் ஏற்படுத்தவும், இப்பயிற்சி மையத்திற்கான செலவுகளை திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி மையத்திற்கு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் வேத பாடசாலை மற்றும் தமிழகத் திருக்கோயில்கள் மூலம் நடத்தப்பட்டு வரும் ஆகம பள்ளிகளிலிருந்து பாடத் திட்டங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பயிற்சி மையத்திற்கு பாடத் திட்டம் தயார் செய்ய வல்லுநர் குழு ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்:**

தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களில் 64,348 உலோகத் திருமேனிகள் உள்ளன. அவற்றுள் 43,992 உலோகத் திருமேனிகள் தொல்பொருள் துறை சட்டத்தின்படி பதிவு செய்ய வேண்டியவை. இதுவரை 27,854 உலோகத் திருமேனிகள் தொல்பொருள் ஆய்வுத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 16,138 உலோகத் திருமேனிகள் தொல்பொருள் ஆய்வுத் துறையில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பற்ற நிலையிலுள்ள உலோகத் திருமேனிகளைப் பாதுகாத்திட திருவாரூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் இதுவரை 2,776 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டுள்ளன.



**கள்வர் எச்சரிக்கை மணி:**

திருக்கோயில்களிலுள்ள நகைகள் மற்றும் விலை உயர்ந்தவைகளைப் பாதுகாக்க திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணிகள் பொருத்த 410 திருக்கோயில்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் 141 திருக்கோயில்களில் எச்சரிக்கை மணிகள் பொருத்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 269 திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணிகள் பொருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திருக்கோயில் பாதுகாப்புப் படை:**

திருக்கோயில்களிலுள்ள உலோகத் திருமேனிகள், நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்களைப் பாதுகாப்பதற்காக 1,000 இரண்டாம் நிலை காவலர்கள் மற்றும் 3,000 முன்னாள் இராணுவத்தினரை நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டு, இதுவரை காவல் துறையினரால் 1,000 இரண்டாம் நிலை காவலர்களும், 2,821 முன்னாள் இராணுவத்தினர்களும் 2,632 திருக்கோயில்களில் இப்பாதுகாப்புப் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மீதமுள்ள 179 முன்னாள் இராணுவத்தினர் விரைவில் நியமனம் செய்யப்பட உள்ளனர். சிறப்புக் காவலர்களின் பணிகளைக் கண்காணிக்கவும், பாதுகாப்பினைத் தீவிரப்படுத்தவும் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் அலுவலகத்தில் ஒரு காவல்துறை கண்காணிப்பாளர், மூன்று காவல்துறை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். திருக்கோயில் பாதுகாப்புப் படையினரின் கடமை மற்றும் பணிகள் குறித்து வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

**திருக்கோயில்களால் நடத்தப்படும் நிறுவனங்கள்:**

திருக்கோயில்களில் ஆன்மீகப் பணிகள் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் அதே நேரத்தில் அடித்தள மக்களின் நலன்களுக்காக கல்வி, மருத்துவம், இசை, ஆகமம், ஊனமுற்றோர் மற்றும் முதியோர் நலன்கள் ஆகிய சமூக நலப்பணிகளிலும் திருக்கோயில்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன.

**சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து:**

பேரறிஞர் அண்ணா நினைவு நாள் மற்றும் சுதந்திரத் திருநாள் ஆகிய நாட்களில் ஏற்றத்தாழ்வின்றி அனைவரும் சரிசமமாகப் பங்குபெறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடும், பொது விருந்தும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

[1999 மே 6

**கருணை இல்லங்கள்:**

ஆதரவற்ற சிறுவர், சிறுமியரைப் பேணுவதற்கு திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே நடைபெற்று வருகின்ற 21 கருணை இல்லங்களுடன் 1996-97 ஆம் ஆண்டில் சிறுமியர்களுக்கென புதியதாக 9 திருக்கோயில்களில் தொடங்கப்பட்ட கருணை இல்லங்களில் 186 சிறுமியர்களும், 2 சிறுவர்களும் ஆக கூடுதல் 188 பேர் சேர்ந்து பயன் பெற்று வருகின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து 1997-98 ஆம் ஆண்டில் மேலும் புதியதாக 13 திருக்கோயில்களில் 9 சிறுவர் இல்லங்களும், 4 சிறுமியர் இல்லங்களும் தொடங்கப்பட்டு 155 சிறுவர்களும், 60 சிறுமியர்களும், ஆக கூடுதல் 215 பேர் சேர்ந்து பயன்பெற்று வருகின்றனர். மொத்தம் 43 கருணை இல்லங்களில் 1,024 சிறுவர்கள் மற்றும் 420 சிறுமியர்கள் தங்கியுள்ளனர்.

கருணை இல்ல சிறுவர், சிறுமியர் அனைவருக்கும் உணவு, உறைவிடம், உடை, மருத்துவம், கல்வி போன்ற அனைத்து வசதிகளும் திருக்கோயில் நிதியிலிருந்து செய்து கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்படி இவ்வகையில் ஏற்படும் செலவினத்தில் 50 விழுக்காடு அரசு மானியமாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூ.20 வீதம் உணவு செலவாக ஒரு மாதத்திற்கு வழங்கப்பட வேண்டிய ரூ.600-ல் அரசின் பங்காக குழந்தை ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.200 வீதமும், நிர்வாகச் செலவின் வகையில் மாதத்திற்கு ரூ.267 வீதமும், படுக்கை செலவின வகையில் ஆண்டு ஒன்றுக்கு ரூ.20 வீதமும் வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கருணை இல்லங்களின் குழந்தைகளுக்கு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மூலம் சீருடை வழங்கவும், தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலமாக புத்தகங்கள், குறிப்பேடுகள் வழங்கவும் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திருக்கோயில்களில் இலவசத் திருமணம்:**

அரசின் கொள்கைக்கேற்ப இந்து சமயத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இனங்களைச் சார்ந்த வசதியற்றவர்களின்



1999 மே 6]

திருமணத்திற்காக திருக்கோயில்களின் நிதியிலிருந்து திருமணம் ஒன்றிற்கு ரூ.3,000 வரை செலவிடப்பட்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு 1,173 இணைகளுக்குத் திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளன.

**பக்தர்களுக்கு வசதிகள்:**

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கத்தில் 11 திருக்கோயில்களில் 58 ஓய்வு விடுதிகள், 231 குடில்கள் மற்றும் 951 தனி நபர் அறைகள் கட்டப்பட்டுள்ளன. முக்கியத்துவம் வாய்ந்த சில திருக்கோயில்களில் இறைவனுக்குப் படைக்கப்பட்ட பிரசாதங்களை இலவசமாக பக்தர்களுக்கு வழங்கும் முறை வழக்கத்தில் உள்ளது.

**தமிழ் வழிபாடு:**

தமிழ் நாட்டில் உள்ள பல்லாயிரக்கணக்கான திருக்கோயில்களில் வட மொழியில் மட்டுமே அர்ச்சனை செய்யப்பட்டு வந்தது. இந்த அர்ச்சனை முறையை தமிழில் செய்திடவும், அம்முறையை மிக வெற்றிகரமாகச் செயல்படுத்திடவும், நெறிப்படுத்தவும் தக்க ஆலோசனைகள் வழங்கிட சைவம் மற்றும் வைணவ ஆன்மீகப் பெரியோர்களையும், தமிழில் புலமை பெற்ற பெருமக்களையும் உள்ளடக்கிய கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு அக்குழுவின் பதவிக் காலம் 17-11-1999 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது:

1. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் : தலைவர்
2. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை செயலாளர் : உறுப்பினர்
3. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் : உறுப்பினர்
4. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கூடுதல் ஆணையர் : உறுப்பினர்/செயலர்

[1999 மே 6

| | | |
|---|---|---|
| 5. | திரு. முத்துக்கண்ணப்பர் | : தலைவர் / புலவர் குழு |
| 6. | புலவர் திரு. சு. இளங்கோவன் | : உறுப்பினர் |
| 7. | முனைவர் திரு. வை. இரத்தினசபாபதி | : உறுப்பினர் |
| 8. | முனைவர் திரு. சுப. அண்ணாமலை | : உறுப்பினர் |
| 9. | பெரும்புலவர் திரு. பா. நமச்சிவாயம் | : உறுப்பினர் |
| 10. | முனைவர் திரு. தெ. ஞானசுந்தரம் | : உறுப்பினர் |
| 11. | திரு. எம்.என். வெங்கடவரதன் | : உறுப்பினர் |
| 12. | முனைவர் திரு. அ. அறிவொளி | : உறுப்பினர் |
| 13. | புலவர் திரு. கோ. சாரங்கபாணி | : உறுப்பினர் |
| 14. | திரு. த. அமிர்தலிங்கம் | : உறுப்பினர் |
| 15. | முனைவர் திரு. இரா. செல்வகணபதி | : உறுப்பினர் |

முதற்கட்டமாக விநாயகர், முருகவேள், சிவபெருமான், திருமால், நடராசர், கோதண்டராமர், தென்முகக் கடவுள், தாயார், மாரியம்மன், துர்க்கையம்மன், காளியம்மன் போற்றிகளும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. மேலும் 1008 போற்றிகள் தயாரிப்பது பற்றியும், பிற கடவுளர்களுக்கு போற்றிகள் தயாரிப்பது பற்றியும் குழு பரிசீலித்து வருகிறது.

**கல்வெட்டு ஆய்வு:**

தமிழகத் திருக்கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் வரலாற்றுச் செய்திகளைப் பறைசாற்றும் கருவூலங்களாகத் திகழ்கின்றன. அவற்றை எல்லாம் அறநிலையத் துறையின் சார்பாக ஆய்வு செய்து, செய்திகளைப் புத்தக வடிவில் வெளியிட கீழ்க்கண்ட அறிஞர் பெருமக்களைக் கொண்ட ஒரு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது:



1999 மே 6]

| | | |
|---|---|---|
| 1. | மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் | : தலைவர் |
| 2. | தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை செயலாளர் | : துணைத் தலைவர் |
| 3. | இந்து சமயம் மற்றும் அறநிலைய ஆட்சித் துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் | : உறுப்பினர்/ செயலர் |
| 4. | இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத் துறை, தரமணி, சென்னை | : உறுப்பினர் |
| 5. | முனைவர் திரு. இரா. நாகசாமி, இயக்குநர் (ஓய்வு), தொல்பொருள் ஆய்வுத் துறை | : உறுப்பினர் |
| 6. | குடந்தை திரு. என். சேதுராமன், இயக்குநர், இராமன் & இராமன் நிறுவனம், கும்பகோணம் | : உறுப்பினர் |
| 7. | மருத்துவர் இரா. கலைக்கோவன், திருச்சிராப்பள்ளி | : உறுப்பினர் |
| 8. | செல்வி நளினி, பேராசிரியர், சீத்தாலட்சுமி இராமசாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி | : உறுப்பினர் |
| 9. | புலவர் திரு. செ. இராசு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் | : உறுப்பினர் |
| 10. | முனைவர் திரு. கோ. விஜயவேணுகோபால், மதுரை | : உறுப்பினர் |
| 11. | திரு. கிருஷ்ணமூர்த்தி (தினமலர்) | : உறுப்பினர் |
| 12. | திரு. நெல்லை நெடுமாறன் | : உறுப்பினர் |

**தல வரலாறு:**

திருக்கோயில்களின் சிறப்புகள் மற்றும் பெருமைகளை விளக்கும் வகையில் தல வரலாறு நூல்கள் வெளியிடப்படுகின்றன. 1,295 திருக்கோயில்களின் தல வரலாற்று நூல்களும், 226 திருக்கோயில்களின் தல வரலாற்றுச் சிற்றட்டைகளும், 9 திருக்கோயில்களின் தல புராணங்களும், 2 பிள்ளைத் தமிழ் மற்றும் 2 கலம்பக நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. பழமையும், சிறப்பும் வாய்ந்த தல புராணங்கள் அழிந்துவிடாமல் பாதுகாக்கும் பொருட்டு தல புராணங்கள் மறு பதிப்பு செய்து வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து திருக்கோயில்களுக்கும் தல வரலாறுகளோ அல்லது கையேடுகளோ வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**புத்தொளிப் பயிற்சி:**

திருக்கோயில்களில் ஓராண்டு காலம் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. 24 திருக்கோயில்களில் ஓராண்டு காலப் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டு 14 திருக்கோயில்களில் பயிற்சி முடிந்துள்ளது. இதன் மூலம் 251 பேர் பயிற்சி முடித்துள்ளனர். மீதமுள்ள 10 திருக்கோயில்களில் 180 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களுக்கு தலா ரூ.200 வீதம் ஊக்கத் தொகையும், பயிற்றாளர்களுக்கு தலா ரூ.750 சிறப்பூதியமும் தரப்படுகிறது.

**குறுகிய கால புத்தொளிப் பயிற்சி:**

திருக்கோயில்களில் ஆகம, சாத்திர விதிகளின்படி வழிப்பாட்டு முறைகளைச் சிறப்புடன் நிகழ்த்திட குறுகிய காலப் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் 12 மையங்களில் நடத்தப்பட்டு, ஆலய செயல் அலுவலர்கள், ஆய்வர்கள், அர்ச்சகர்கள், ஓதுவார்கள் உள்ளிட்ட 1,560 பேர் பயனடைந்துள்ளனர்.

**பொதுமக்கள் பயன்பெறும் புத்தொளிப் பயிற்சி:**

துறை மற்றும் திருக்கோயில் அலுவலர்கள், பணியாளர்கள் தவிர பொதுமக்களும் பயன்பெறுகிற வகையில் தக்க சான்றோர்கள், அறிஞர்கள், சமய வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்டு குறுகிய கால சமயப் பயிற்சி வகுப்பு 34 மையங்களில் நடத்தப்பட்டது. இதன் மூலம் 2,916 பேர் பயனடைந்துள்ளனர். பயிற்சியாளர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டதுடன் சான்றிதழும் வழங்கப்பட்டது.





**தமிழ்ப் புலவர்கள் நியமனம்:**

நிதி வசதிமிக்க திருக்கோயில்களில் அத்திருக்கோயில்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்ப் புலவர்கள் 150 பேர் நியமனம் செய்ய ஆணையிடப்பட்டது. அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,500 வீதம் தொகுப்பு ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**இவர்களின் பணிவிபரம்:**

(1) காலபூசையில் தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்ய பிரபந்தம் போன்ற பாசுரங்களைப் பாடுதல் மற்றும் முற்றோதல் செய்தல்;

(2) சைவ, வைணவ சமயச் சொற்பொழிவு செய்தல், சைவ வைணவ சமயக் கருத்துகளைப் பரப்புதல்;

(3) திருக்கோயில் வரலாறுகளைத் தொகுத்து அளித்தல்;

(4) தல புராணம் வெளியிடுதல்;

(5) நூல் நிலையம் பராமரித்தல்.

**திருக்கோயில்களில் ஓதுவார்கள் நியமனம்:**

திருக்கோயில்களில் தேவாரம், திருவாசகம் போன்ற சைவத் திருமுறைகள் பாடுவதற்கு 100 ஓதுவார்கள் பணிநியமனம் செய்யப்படுவர் என்னும் கொள்கை முடிவுக்கேற்ப முதல் கட்டமாக 25 திருக்கோயில்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,500 தொகுப்பூதியத்தில் ஓதுவார்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**நாதசுர இசைக் கலைஞர்களைப் புதிதாகப் பணியில் அமர்த்தல்:**

பல திருக்கோயிலகளில் நிதி வசதி இல்லாத காரணத்தினால் நாதசுர இசை முழங்கவில்லை. இதனை நீக்க நிதி வசதியற்ற 26 திருக்கோயில்களில் நாதசுரம், தவில், தாளம் இசைக் கலைஞர்களை முறையே ரூ.1,000, ரூ.750, ரூ.500 என்ற ஊதிய அடிப்படையில் நியமனம் செய்ய ஆணையிடப்பட்டு முதற்கட்டமாக 15 நாதசுரம், 3 தவில், 1 தாளக் கலைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

[1999 மே 6

**தமிழ் இசைப் பள்ளி:**

5 சைவத் திருக்கோயில்களில் தேவார இசைப் பள்ளிகளில் 69 மாணவர்களும், 4 வைணவத் திருக்கோயில்களில் 70 மாணவர்களும், 8 நாதசுரப் பயிற்சி பள்ளிகளில் 84 மாணவர்களும், தவில் பயிற்சிக்கு 50 மாணவர்களும் சேர்ந்து பயன்பெற்று வருகின்றார்கள். மேற்படி பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் உள்ளூர் மாணவர்களுக்கு ரூ.300 வீதமும், வெளியூர் மாணவர்களுக்கு ரூ.500 வீதமும் மாதம் ஒன்றுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

**திருக்கோயில் திங்கள் இதழ் வெளியீடு:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் வெளியீடாக "திருக்கோயில்" என்ற ஆன்மீகத் திங்கள் இதழ் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்விதழில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆற்றி வரும் அரும் பணிகள் யாவும் விளக்கப்படுவதுடன், தமிழகத்தில் உள்ள தலைசிறந்த சமயப் பெரியோர்களும், அறிஞர் பெருமக்களும் இந்து மதக் கோட்பாடுகள், திருக்கோயில் வரலாறுகள் மற்றும் திருவிழாக்கள் குறித்து அரிய கட்டுரைகளை எழுதி வருகின்றனர்.

**நிறைவுரை:**

"ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே
தொண்டலால் துணையும் இல்லை"

என அருளாளர் பெருமக்கள் அருளியுள்ள பொன் மொழிகளுக்கு இணங்க, சீரிய செயற் திட்டங்களை மேற்காட்டியவாறு திறம்பட வகுத்து அறநிலையத் துறை நாளும் நற்பணிகளை சிறப்புடன் செயல்படுத்தி வருகின்றது.



1999 மே 6]

## இணைப்பு-II

*[69-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

**மானியக் கோரிக்கை எண் 51**

**தமிழ் வளர்ச்சி—பண்பாடு**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000**

மொழி, மக்கள் தம் உள்ளத்துத் தோன்றும் உணர்வுகளையும், எண்ணங்களையும், சிந்தனைகளையும் வெளிப்படுத்துவது. அது மனித சமுதாயத்தின் வாழ்வோடும், வளர்ச்சியோடும் இரண்டறக் கலந்து நிற்பது. சமுதாயத்தின் அன்றாட இயக்கத்திற்கான செய்திப் பரிமாற்றத்திற்குப் பயன்படுவது. மொழி, கருத்துப் பரிமாற்றத்திற்கான கருவி மட்டுமின்றி, அது பேசும் சமுதாயத்தின் இனத்தின் பண்பாட்டுப் பலகணி-கலாச்சாரக் கண்ணாடி. மொழியும் நாகரிகமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. ஒரு நாட்டின் சிறப்பு அந்நாட்டின் மொழிவளத்தைப் பொறுத்தே அமைவதாகும். மொழி வளமுடையதாயின் அதனைப் பேசும் மக்கள், நாகரிகமும், நல்ல பண்பாடும் உடையவர்களாக விளங்குவர். மொழி வளர்ச்சியும், கலை வளர்ச்சியும் நாட்டின் பிற வளர்ச்சிகளுக்கு அடிப்படைகளாகின்றன.

ஒரு மொழியின் வளர்ச்சியை மதிப்பீடு செய்வது அம்மொழியின் பயன்பாட்டை (Language Use) அடிப்படையாகக் கொண்டே அமைகிறது. ஒரு மொழி ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் அன்றாட இயக்கத்தின் பணிகளை நிறைவேற்றுவதில் எந்த அளவிற்குப் பயன்படுகிறது என்பதையும், அச்சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் தங்களுடைய அன்றாட இயக்கத்திற்கு எந்த அளவிற்கு அந்த மொழியைச் சார்ந்துள்ளனர் என்பதையும் பொறுத்துதான் அம்மொழியின் பயன்பாட்டின் தன்மையும், இன்றியமையாமையும் அறியப்படுகின்றன. இதிலிருந்து அம்மொழியின் வளர்ச்சியும் வெளிப்படுகிறது. மொழி வளர்ச்சிக்கு 1. அரசு, 2. மக்கள், 3. அறிஞர்கள் எனும் முத்தரப்பினரின் ஆதரவு தேவைப்படுகிறது. இவ்வகையில் அரசுப் பணிகளிலும், சமுதாயக் கடமைகளிலும் "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்னும் கோட்பாட்டை நமது அரசு வலியுறுத்துகிறது.

ஆட்சிமொழித் திட்டம் 1956 இல் சட்ட வடிவம் பெற்று 1957 இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி

[1999 மே 6

மொழியாக்கும் சீரிய நோக்கத்தோடு மொழிப் பயன்பாட்டில் முழு நிறைவெய்த, தமிழ் மொழியை விரிவான முறையில் ஆட்சியிலும் ஆவணங்களிலும் அன்றாட நடைமுறையிலும் செயற்படுத்துதல், கலை, இலக்கிய மரபுச் செல்வங்களைக் காத்தல், பரப்புதல், பேணி வளர்த்தல் ஆகிய நோக்கங்களுடன் மொழி, கலை, பண்பாடு ஆகிய துறைகளும் பிரிவுகளும் ஓர் அமைப்பாகச் செயற்படும் வகையில் தலைமைச் செயலகத்தில் 1984ஆம் ஆண்டில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை தோற்றுவிக்கப்பட்டது. இத்துறையின் கீழ் இயங்கும் அமைப்புகளும், நிறுவனங்களும் தமிழ் நலம் பேணல், தொன்மரபு காத்தல், வளர்கலை ஊக்குவித்தல் என முத்திறப்பட்டுச் செயலாற்றுகின்றன.

**தமிழ் நலம் பேணுவன**

(அ) தமிழ் வளர்ச்சி இயக்ககம்;
(ஆ) மொழி பெயர்ப்பு இயக்ககம்;
(இ) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்;
(ஈ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்;
(உ) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**தொன்மரபு காப்பன**

(ஊ) தொல்பொருள் ஆய்வு இயக்ககம்;
(எ) அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம்;
(ஏ) அரசு அருங்காட்சியகங்கள்.

**வளர்கலை ஊக்குவன**

(ஐ) கலை-பண்பாட்டு இயக்ககம்;
(1) மண்டலப் பண்பாட்டு மையங்கள்;
(2) அரசு இசைக் கல்லூரிகள், இசைப் பள்ளிகள்;
(3) அரசு கலை-கைவினைத் தொழிற் கல்லூரிகள்;
(4) அரசு கட்டட-சிற்பக் கல்லூரி;
(5) சவகர் சிறுவர் மன்றம்;
(6) ஓவிய நுண்கலைக் குழு;
(7) இயல் இசை நாடக மன்றம்.



1999 மே 6]

**1999-2000ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு**

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| **2059 பொதுப்பணிகள்** | | | |
| 01 அலுவலகக் கட்டடங்கள் | | | |
| 051 கட்டுமானம் | .. | 0.30 | 0.30 |
| 053 பராமரித்தலும் செப்பனிடுதலும் | .. | 30.43 | 30.43 |
| **2202 பொதுக் கல்வி** | | | |
| 03 பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் | | | |
| 102 பல்கலைக்கழகங்களுக்கு நிதியுதவி | 10.00 | 373.91 | 383.91 |
| 05 மொழி வளர்ச்சி | | | |
| 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் | 30.30 | 175.30 | 205.60 |
| 102 இக்கால இந்திய மொழிகள் மேம்பாடும் இலக்கிய மேம்பாடும் | 10.03 | 48.50 | 58.53 |
| 800 ஏனைய செலவு | 135.00 | 754.37 | 889.37 |
| **220500 கலையும் பண்பாடும்** | | | |
| 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் | 24.94 | 16.45 | 41.39 |
| 101 நுண்கலைக் கல்வி | 184.76 | 226.05 | 410.81 |
| 102 கலை-பண்பாட்டை வளர்த்தல் | 131.04 | 276.08 | 407.12 |
| 103 தொல்பொருளியல் ஆய்வு | 46.30 | 250.33 | 296.63 |
| 105 பொது நூலகங்கள் (அரசு கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம்) | 5.61 | 26.29 | 31.90 |

[1999 மே 6

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 107 அரும்பொருட் காட்சியகங்கள் | 46.45 | 247.45 | 293.90 |
| 800 ஏனைய செலவு | .. | 0.01 | 0.01 |
| **2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்** | | | |
| 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் | | | |
| 200 ஏனைய திட்டப் பணிகள் | 0.01 | .. | 0.01 |
| மானியக் கோரிக்கை எண் 51 மொத்தம் | **624.44** | **2425.47** | **3049.01** |

### (ஆ) தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ் வளர்ச்சி இயக்ககம் 1971 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பெற்றது. அரசு நிருவாகத்திலும், பொது வழக்கிலும் ஆட்சி மொழியாகிய தமிழ் மொழிப் பயன்பாட்டை விரிவாக்கவும், மேம்படுத்தவும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது இத்துறையின் தலையாய பணியாகும். தமிழ், கலை, இலக்கிய வளர்ச்சித் தொடர்பான பிற பணிகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

### ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம்

2. ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க முன்னேற்றம் குறித்துத் தலைமைச் செயலகத்தைத் தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை அரசுச் செயலாளரும், துறைத் தலைமை அலுவலகங்கள்—மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றைத் தமிழ் வளர்ச்சி இயக்குநரும், மாவட்டங்களிலுள்ள மண்டல நிலை, மாவட்ட நிலை அலுவலகங்களை மண்டல துணை இயக்குநர்களும், மாவட்டச் சார்நிலை அலுவலகங்களை மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களும் ஆய்வு செய்கின்றனர்.



1999 மே 6]

### ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்

3. ஆட்சிமொழித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வகை செய்ய மாவட்டங்களில் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் 1981 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பெறுகின்றன. 1998-99ஆம் ஆண்டில், மூன்று மாவட்டங்களில் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பெற்றன. 1999-2000ஆம் ஆண்டில் எட்டு மாவட்டங்களில் ஆட்சி மொழிக் கருத்தரங்குகளை நடத்துவதற்கு ரூ.0.40 இலட்சம் ஒதுக்கீடு பெறப்படவுள்ளது.

### தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகளுக்குப் பரிசு வழங்கும் திட்டம்/ ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் ஆர்வமும் திறமையும் காட்டும் அரசு அலுவலகங்களுக்குக் கேடயமும் பாராட்டும் வழங்கும் திட்டம்

4. அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதுவோர்க்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஆட்சிமொழித் திட்டம் அரசின் கொள்கைகளுள் ஒன்று. ஆட்சி மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் துறைத் தலைமை அலுவலகம் ஒன்றையும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஒன்றையும், அதேபோல் தன்னாட்சி நிறுவனத் தலைமை அலுவலகம் ஒன்றையும் தெரிவு செய்து அவற்றிற்குப் பரிசும், கேடயமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கும் திட்டம் ஆண்டுதோறும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்பாக 1998-99ஆம் ஆண்டிற்கு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ 0.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பெற்றது. 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.1.03 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. பரிசு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்

5. தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் 15 தலைப்புகளில் சிறந்த நூல்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. முதல் பரிசு ரூ.10 ஆயிரமும், இரண்டாம் பரிசு ரூ. 5 ஆயிரமும், மூன்றாம் பரிசு ரூ.2 ஆயிரமும் எனப் பணப் பரிசுகள் வழங்கப்பெறுகின்றன. பரிசுக்குரிய நூல்களைப் பதிப்பித்த பதிப்பகத்தார்க்குப் பாராட்டுச் சான்றிதழ் அளிக்கப்பெறுகிறது. 1997 ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களில் 15 சிறந்த நூல்களுக்குத் திருவள்ளுவர் திருநாளன்று நடைபெற்ற விழாவில்

பரிசுகள் வழங்கப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 2.70 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.2.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்**

6. நிலையான மதிப்பும், தகுதியும் வாய்ந்த சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நூல் ஆசிரியர்களுக்கு அரசு நிதியுதவி வழங்குகின்றது. இத்திட்ட விதிகளில் குறித்த தலைப்புகளுக்கு இணங்க, நூல் வெளியிட நிதியுதவி வேண்டி நூல் ஆசிரியர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் வல்லுநர் குழுவால் தெரிவு செய்து பரிந்துரைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் நூல் ஆசிரியர்களுக்குப் பெரும் அளவாக ரூ.8,000 அல்லது நூல் வெளியீட்டுச் செலவில் 50% தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்பெறுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் ரூ.2.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.2.25 இலட்சம் வரவு-செலவு மதிப்பீட்டில் ஒதுக்கப்படவுள்ளது.

**அரிய நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்**

7. இத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பெறும் நூல்களுக்கு ரூ.20,000— அல்லது நூல் அச்சிடும் செலவில் 60% தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்பெறுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டில் ரூ.1.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, நிதியுதவி வழங்கப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.1.10 இலட்சம் நிதி ஒதுக்கப்படவுள்ளது.

**சிறந்த மொழி பெயர்ப்பு நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டம்**

8. பிற மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும், தமிழிலுள்ள சிறந்த இலக்கியங்களைப் பிற மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட இத்திட்டம் வகை செய்கிறது. இதன்படி வெளியிடப்பெறும் மொழியாக்க நூல்களுக்கு ரூ.25,000 அல்லது அச்சிடும் செலவில் 60% தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக இரு தவணைகளில் வழங்கப்பெறுகிறது. 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.[illegible] இலட்சம் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் வழங்கப்படவுள்ளது.



**மாநில/மாவட்ட அளவில் தமிழில் போட்டிகள் நடத்துதல்**

9. இத்திட்டம் 1996-97 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. மாணவர்கள் தமிழ் மொழியின்பால் கொண்டுள்ள ஆர்வத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ் மொழியில் தேர்ச்சி பெறுவதை ஊக்குவிக்கும் முறையிலும், தமிழ் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்திற்கு உறுதுணை புரியும் வகையிலும், அறிவியல் தமிழின் இன்றியமையாமையை எடுத்துரைக்கும் வகையிலும், தமிழ் வளர்ச்சி இயக்கத்தின் வாயிலாக மாவட்ட / மாநில அளவில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களுக்கிடையே போட்டிகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ. 2 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, இத்தொகை அரசு சார்பு நிதி நிறுவனமான தமிழ்நாடு போக்குவரத்து நிதிக் கழகத்தில் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையைக் கொண்டு கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி போன்றவற்றை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்**

10. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. திங்கள் வருமானம் ரூ.400க்கு மேற்படாத 58 அகவை முடிந்த தமிழறிஞர்கள் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறத் தகுதி பெற்றவர்களாவர். நிதியுதவிக்குத் தெரிவு செய்யப்பெறுவோர்க்குத் திங்கள் தோறும் ரூ.500 வீதம் நிதியுதவி வழங்கப்பெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1998 ஆம் ஆண்டு முடிய அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் மொத்தம் 459 பேர் பயனடைந்துள்ளனர். 1998-99 ஆம் ஆண்டிற்கு நிதியுதவியாக ரூ.27.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் மதிப்பீட்டில் ரூ. 27.12 இலட்சம் ஒதுக்கப்படவுள்ளது.

**தமிழ் மொழிக் காவலர் நிதியுதவித் திட்டம்**

11. தமிழ் மொழி மற்றும் பண்பாட்டைப் பேணி வளர்க்கச் சிறந்த முறையில் தொண்டாற்றியவர்களுக்குத் திங்கள்தோறும் நிதியுதவியாக ரூ.1,000 முதல் மருத்துவப்படியாக ரூ.15/- சேர்த்து ரூ.1015 ஆக வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தமிழ்மொழிக் காவலர்களின் மரபுரிமையினருக்கு நிதியுதவி ரூ.1,500/- ஆக உயர்த்தப்பட்டு மருத்துவப்படியாக ரூ.15ம் சேர்த்து மொத்தம் ரூ.1,515 ஆக வழங்கப்பட்டு [illegible] வருகிறது. அத்துடன் இவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகையும் வழங்கப்படுகிறது.

12. இத்திட்டத்தின்கீழ் இதுவரை மொழிக் காவலர்கள் 2,055 பேருக்கும் மொழிக் காவலர்களின் மரபுரிமையினர் 126 பேருக்கும் ஆக 2181 போர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.726.65 இலட்சம் வரவு-செலவு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ. 726.65 இலட்சம் வரவு-செலவு மதிப்பீட்டில் ஒதுக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மொழிக் காவலர்களிடமிருந்தும் எல்லைக் காவலர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மாவட்ட வாரியாகத் தொகுத்து ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**வரலாற்று வரைவுத் திட்டம்**

13. தமிழ்நாட்டு வரலாற்றை முறையாக ஏழு தொகுதிகளில் வெளியிட அரசு முடிவு செய்துள்ளது. தொல் பழங்காலம், சங்ககாலம் பகுதி-1 (அரசியல்), சங்க காலம் பகுதி-2 (வாழ்வியல்), பல்லவர் - பாண்டியர் காலம் (முதற்பகுதி), பல்லவர்—பாண்டியர் காலம் (இரண்டாம் பகுதி) ஆகிய மூன்று தொகுதிகளும், நான்காம் தொகுதியான சோழப் பெருவேந்தர் காலம் நூலின் முதல் பகுதியும் வெளியிடப்பட்டுள்ளன. 4-ஆம் தொகுதியான சோழப் பெருவேந்தர் காலம் (இரண்டாம் பகுதி) 24-12-1998 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் வெளியிடப்பட்டது. பிற்காலப் பாண்டியர் விசயநகர வேந்தர் காலம், பெருவேந்து அமையாக் காலம், வெள்ளையர் ஆட்சிக் காலமும் விடுதலைக்குப் பின்னரும் (இரு பகுதிகள்) ஆகிய மூன்று தொகுதிகளையும் விரைவில் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறப்பு மிக்க இவ்வரலாற்று வரைவுத் திட்ட வல்லுநர் குழுவை இவ்வரசு திருத்தியமைத்துப் பணிகளை விரைவுபடுத்தியுள்ளது. தொகுப்பூதியத்தில் பதிப்பாசிரியர் இருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் அமையும் செலவினங்களுக்கு ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**விழாக்களும் விருதுகளும்**

**திருவள்ளுவர் விருது**

14. திருக்குறள் நெறிபரப்பும் பெருந்தகையாளர் ஒருவரைத் தெரிவு செய்து திருவள்ளுவர் திருநாளில், திருவள்ளுவர் விருது வழங்கப்பெறுகிறது. இவ்விருது 1998 ஆம் ஆண்டு வரை ரூ.20,000/- பணப் பரிசாக வழங்கப்பட்டு வந்தது. 1999 ஆம் ஆண்டு முதல் இவ்விருதுத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு பவுன் தங்கப் பதக்கமும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. 1999 ஆம் ஆண்டிற்கான விருது முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களுக்கு 16-1-1999 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் திருவள்ளுவர் திருநாளில் வழங்கப்பெற்றது.





**பாவேந்தர் பாரதிதாசன் விருது**

15. ஒவ்வோர் ஆண்டும் சிறந்த கவிஞர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழாவில் இவ்விருது வழங்கப் பெறுகிறது. 1998 ஆம் ஆண்டு இவ்விருதுத் தொகையானது ரூ. 20,000-த்தில் இருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது. விருது பெறுபவர் ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு பவுன் தங்கப் பதக்கமும் பரிசாகப் பெறுவார். 1998 ஆம் ஆண்டிற்குரிய விருது. மலேசியக் கவிஞர் முரசு நெடுமாறன் அவர்களுக்கு 24-12-1998 அன்று நடைபெற்ற விழாவின்போது மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது.

**திரு.வி.க. விருது**

16. சிறந்த எழுத்தாளர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் பெயரால் விருது வழங்கும் திட்டம் 1979 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1998 ஆம் ஆண்டு முதல் விருதுத் தொகை ரூ.20,000-த்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்பெற்றது. விருது பெறுபவர் ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு பவுன் தங்கப் பதக்கமும் பரிசாகப் பெறுவார். 1998 ஆம் ஆண்டிற்குரிய விருது புலவர் மருதவாணன் அவர்களுக்கு 24-12-1998 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது.

**பாரதியார் விருது**

17. இவ்விருது 1997 ஆம் ஆண்டு புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பரிசுத்தொகை ரூ.20,000/- த்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக 1998 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. பாரதி நெறி பரப்பும் தகைமையாளர் ஒருவரைத் தெரிவு செய்து விருதுத் தொகை ரூபாய் ஒரு இலட்சமும், ஒரு பவுன் தங்கப் பதக்கமும் வழங்கப்பெறுகிறது. 1998 ஆம் ஆண்டிற்கான இவ்விருது குமரி அனந்தன் அவர்களுக்கு 24-12-1998 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது.

[1999 மே 6

### தமிழ் வளர்ச்சி மன்றம்

18. தமிழ் வளர்ச்சித் தொடர்பான பணிகளில் அறிவுரை கூறும் ஓர் உயர்நிலை அமைப்பாகச் செயற்படும் வகையில் தமிழ் வளர்ச்சி மன்றம் என்ற அமைப்பினை அரசு அமைத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு இம்மன்றத்தை அரசு புதுப்பித்து அமைத்துள்ளது. இம்மன்றக் கூட்டங்கள் அவ்வப்போது கூடி தமிழ் வளர்ச்சித் தொடர்பான பரிந்துரைகளை அரசுக்கு அளித்து வருகிறது. இம்மன்றத்தின் பரிந்துரைப்படி தமிழ்நாட்டில் 8 ஆம் வகுப்பு வரை மழலையர் பள்ளிகளிலும் தொடக்கப் பள்ளிகளிலும் தமிழை ஒரு பாடமாகப் படிக்கவும் சில கலைப் பாடங்கள், கணக்குப்பாடம் ஆகியவற்றைத் தமிழ்மொழி வாயிலாகப் பயிற்றுவிக்கவும் ஆவன செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவிப்பு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### கலைக் களஞ்சியம் வெளியீடல்

19. கலைக் களஞ்சியம் தயாரித்து வெளியிடும் திட்டமானது 1997-98 பகுதி II திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பெற்றது. இத்திட்டத்தைச் செயற்படுத்த முதற்கட்டமாக ரூ. 10 இலட்சம் 1997-98 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கப்பெற்றது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தினால் வெளியிடப்பெற்ற குழந்தைகள் கலைக் களஞ்சியத்தை மறு பதிப்புச் செய்து வெளியிட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ரூ. 10 இலட்சம் வழங்கப்பட்டது. இந்நூல் மாண்புமிகு முதல்வர் அவர்களால் 24-12-1998 அன்று வெளியிடப் பெற்றது. 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ. 10 இலட்சம் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பெற்றுள்ளது. நிருவாகக் குழுவின் முடிவுகளுக்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

### இந்திய ஆட்சிப் பணித் தொகுதித் தேர்வினைத் தமிழில் எழுதுவோர்க்குக் கருவி நூல்கள் அச்சிட்டு வழங்கல்

20. இந்திய ஆட்சிப் பணித் தொகுதித் தேர்வினைத் தமிழில எழுதுவோர்க்குக் கருவி நூல் தயாரித்து அச்சிட்டு வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1. தமிழ் மொழி, 2. இலக்கிய வரலாறு, 3. வரலாறு, 4. புவியியல் ஆகிய பாடங்களுக்குக் கருவி நூல்களைத் தயாரிப்பது தொடர்பாக நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கருவி நூல்களைத் தமிழில் தயாரித்துத் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் மூலம் வெளியிடும் வகையில் உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



1999 மே 6]

### தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்

21. தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் நான்காம் பதிப்பாக, 5,000 படிகள் அச்சிடப் பெற்றன. இந்நூல் மாண்புமிகு முதல்வர் அவர்களால் 24-12-1998 அன்று வெளியிடப்பெற்றது. ஒரு நூலின் விலை ரூ.32/- என நிர்ணயம் செய்து, தமிழ் வளர்ச்சி இயக்ககம் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

### நூல்கள் நாட்டுடைமையாக்கல்

22. பாரதியார், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் ("விடுதலைப் போரில் தமிழகம்" நூல் மட்டும்), கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், மறைமலை அடிகளார் ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் குடும்பத்தார்க்குப் பரிவுத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து 1998 ஆம் ஆண்டில் திரு. வி.க., அமரர் கல்கி ஆகியோர்களின் நூல்கள், படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் குடும்பத்தார்க்கு ரூ.20 இலட்சம் வீதம் பரிவுத் தொகை வழங்கப்பெற்றது. மேலும் சுதந்திர தின பொன்விழா ஆண்டையொட்டி பின்வரும் பதின்மூன்று தேசியத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் குடும்பத்தார்க்குப் பரிவுத் தொகையாக முறையே ரூ. 5 இலட்சம் வீதம் வழங்கப்பெற்றது. 1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, 2. திரு. ப. ஜீவானந்தம், 3. நாமக்கல் கவிஞர் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை, 4. திரு. வ.உ. சிதம்பரனார், 5. திரு. சுத்தானந்த பாரதி, 6. திரு. ஏ.எஸ்.கே. அய்யங்கார், 7. கவிஞர் திரு கா.மு. ஷெரீப், 8. திரு. வ. ராமசாமி, 9. நாவலர் சோமசுந்தர பாரதியார், 10. பரலி சு. நெல்லையப்பர், 11. திரு. வ.வே.சு. அய்யர், 12. காரைக்குடி சா. கணேசன், 13. திரு. எஸ்.டி.எஸ். யோகி.

### அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுதல்

23. வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் தமிழிருக்கை தோற்றுவிக்க ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாறு தமிழிருக்கை தோற்றுவிப்பதற்கு ரூ.50 இலட்சம் அறக்கட்டளை மானியமாக வழங்கலாமெனவும், அதற்கிணையான மானியத்தை அளிக்குமாறு தொடர்புடைய பல்கலைக்கழத்தையும் வேண்டலாம் எனவும் ஆணையிடப்பெற்று வெளிநாடுகளில் பத்துப் பல்கலைக்கழகங்களுக்கு இத்திட்டம் தெரிவிக்கப்பெற்றது. இலண்டன், மலேசியா பல்கலைக் கழகங்களிலிருந்து நன்மொழிக் கடிதங்கள் பெறப்பட்டுள்ளன.

[1999 மே 6

## தமிழ்மொழியைப் பரப்புதல் மற்றும் தமிழ் வளர்ச்சித் தொடர்பான நிதியுதவி/நல்கை வழங்கும் திட்டம்

24. இத்திட்டம் 1996ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ் மொழியைப் பரப்புதல், தமிழ் மொழி வளர்ச்சி-மேம்பாடு போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயற்பட்டு வருகிறது. தமிழ் மொழியைப் பரப்புதல் மற்றும் தமிழ் வளர்ச்சித் தொடர்பான நிதியுதவி/நல்கை வழங்கும் திட்டம் பின்வருமாறு மூன்று வகைகளில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

### 1) பிற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுதல்/ பட்டய வகுப்பு நடத்துதல் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு மானியம்/ நிதியுதவி

25. பிற மாநிலங்களிலுள்ள தமிழ் மக்கள், தமிழ் மொழியைக் கற்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும்பொருட்டும், மற்றவர்கள் தமிழ் கற்கும் ஆர்வத்தினை ஊக்குவிக்கும்பொருட்டும் அயல் மாநிலங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கை நிறுவுவதற்கும், தமிழில் பட்டய வகுப்பு நடத்துவதற்கும் மானியம்/நிதியுதவி வழங்கப்பெறுகிறது. வட மாநிலங்களிலுள்ள பல பல்கலைக்கழகங்களுக்கு இத்தகைய மானியம்/ நிதியுதவி வழங்கப்பெற்றுள்ளன. ஆயினும், இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயற்படுத்திவரும் பல்கலைக்கழகங்கள் மட்டுமே தற்போது நிதியுதவி பெற்று வருகின்றன. அவ்வகையில், ஆந்திர மாநிலத்தில் திருவேங்கடவன் பல்கலைக்கழகம், மைசூரிலுள்ள இந்திய மொழிகள் மைய நிறுவனம் ஆகியவை தொடர்ந்து நிதியுதவியைப் பெறுகின்றன. அயல் மாநிலப் பல்கலைக்கழகங்கள், தமிழ்ச் சங்கங்கள், தமிழ் அமைப்புகள் ஆகியவற்றிலிருந்து அவ்வப்போது வரப்பெறும் கோரிக்கைகளுக்கேற்ப இந்த நிதியுதவி/மானியம் வழங்கக் கருதப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் ஒரிசா மாநிலத்தில் தமிழிருக்கை ஏற்படுத்த ரூ.10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2) தமிழ்ச் சங்கங்களுக்கு நிதியுதவி

26. தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும், அயல்நாடுகளிலும் உள்ள தமிழ்ச் சங்கங்களிலிருந்து அவ்வப்போது வரப்பெறும் வேண்டுகோளின் அடிப்படையில் அவற்றின் தேவைக்கேற்பத் தமிழ்ச் சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கப்பெறுகிறது. கட்டடம் கட்டுதல், கட்டடச் சீரமைப்பு, சங்கத்தின் சார்பில் நடத்தப்பெறும் பள்ளிகளைப் பராமரித்தல், சங்கத்தின் மேம்பாடு மற்றும் தமிழ்ப்பணித் திட்டங்கள் ஆகியவற்றிற்காகத் தமிழ்ச்



1999 மே 6]

சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கப்பெறுகிறது. தில்லி தமிழ்ச் சங்கம், மதுரைத் தமிழ்ச் சங்கம், மும்பைத் தமிழர் சங்கம் ஆகியவை அண்மையில் நிதியுதவி பெற்ற சங்கங்களாகும். மேலும், பெங்களூர் தமிழ்ச் சங்கம் நடத்தும் காமராசர் உயர்நிலைப் பள்ளிக்கு ஆண்டுதோறும் ரூ.15,000/- (ஆண்டு மானியம்) வழங்கவும் ஆணை பிறப்பிக்கப் பெற்றுள்ளது.

### 3) தமிழாய்வுப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல்

27. தமிழியல், தமிழ்ப் பண்பாடு, மொழி வளர்ச்சித் தொடர்பிலான தமிழாய்வுப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு, அந்நிறுவனங்களில் ஆய்வுத் திட்டம், பணிகளின் தன்மைக்கேற்ப மானியம் வழங்கப் பெறுகிறது. சென்னை செம்மஞ்சேரியிலுள்ள ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை தென் மொழிகள் புத்தக நிறுவனம், திருவனந்தபுரத்திலுள்ள பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளி ஆகிய நிறுவனங்களுக்கு இவ்வகையிலான ஆண்டு மானியம் வழங்கப்பெற்று வருகிறது.

### பிற மாநிலங்களில் தமிழ் வளர்ச்சி மையம் தோற்றுவித்தல்

28. இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. முதற் கட்டமாக மேற்கு வங்காளம், மகாராட்டிரம் ஆகிய இரு மாநிலங்களில் தமிழ் வளர்ச்சி மையம் தோற்றுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்தொடர்பில் 1998-99ஆம் ஆண்டிற்கு 12 இலட்சம் நிதி ஒதுக்கப்பெற்றது. இத்திட்டத்தின்கீழ் மும்பை, கல்கத்தா நகரங்களில் அலுவலக இட வசதி ஏற்படுத்தித் தருமாறு மும்பை, கல்கத்தா தமிழ்ச் சங்கங்களிடம் வேண்டப்பெற்றுள்ளது. இடவசதி பெறப்பட்டதும் சங்கங்களின் பதிவுச் சட்டத்தின்கீழ் அந்தந்த நகரங்களில் 'தமிழ் மையம்' பதிவு செய்யப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

### அகராதி, சொல்லகராதி தயாரித்தல்

29. 1998-99 ஆம் ஆண்டு அகராதி, சொல்லகராதி தயாரிக்க ரூ. 10 இலட்சம் தொடர் செலவினமாக நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்தொடர்பில் ஞானப்பிரகாச சுவாமிகள் எழுதி 1938 இல் வெளிவந்த "சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி" மறுபதிப்புச் செய்யப்பட உள்ளது.

[1999 மே 6

**மருத்துவக் கலைக்களஞ்சியம் தயாரித்தல்**

30. 1998-99 ஆம் ஆண்டு மருத்துவக் கலைக் களஞ்சியம் தயாரிக்க ரூ.10 இலட்சம் ஏற்பளிக்கப்பட்டு, முதல் கட்டமாக 1998-1999 ஆம் ஆண்டுக்கு ரூ.2 இலட்சம் தொடர் செலவினமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், மருத்துவக் கலைக் களஞ்சியம் 5-ஆம் தொகுதியினை வெளியிடுவதற்காகத் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ.2 இலட்சம் ஒப்பளிப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு இணையம், கணினி வசதி அளித்தல்**

31. தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு இணையம், கணினி வசதி அளிக்க 1998-1999 ஆம் ஆண்டு ரூ.4 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு கணினி வாங்கப்பெற்றுள்ளது.

## (ஆ) மொழிபெயர்ப்புத் துறை

தமிழ்நாடு அரசு உயரிய நோக்கமாகக் கொண்டுள்ள ஒளிவுமறைவற்ற செயற்பாட்டிற்கு உதவும் வகையில் மக்கள் மொழியில் அரசின் ஆட்சி நடைபெற்றிட மொழிபெயர்ப்புத் துறை பணியாற்றி வருகிறது. தலைமைச் செயலகத்தில் அனைத்துத் துறை அலுவல்களும் தமிழிலேயே நடைபெற மொழிபெயர்ப்புத் துறை பணியாற்றி வருகிறது. ஆங்கிலத்தில் எழுதப்பெறும் இன்றியமையாக் கோப்புகளைத் தமிழில் இத்துறை மொழி பெயர்க்கின்றது.

2. அறிவிக்கைகள், பொதுக் கணக்கு, பொது நிறுவனக் குழு அறிவிக்கைகள், சுற்றோட்டக் குறிப்பு, மாநில ஆட்சியறிக்கை, காவலர் பதக்க மதிப்புரைகள், துறைக் குறிப்புகள், ஆணைய அறிக்கைகள், கொள்கை விளக்கங்கள், விதிகள், துணை விதிகள், விதிமுறைகள், பொதுத் துறையின் மறைபொருள் கோப்புகள், விசாரணை ஆணைய அறிக்கைகள், தேர்தல் ஆணையக் கோப்புகள், நிதிக் குழு அறிக்கைகள் காபிபோசா கோப்புகள், அரசாணைகள் போன்ற அனைத்துவகைக் கோப்புகளும் மொழியாக்கம் செய்யப்பெறுகின்றன.

3. வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், துணை மதிப்பீடுகள் ஆகியவற்றை மொழிபெயர்க்க, பணியாளர்களில் ஒரு தொகுதியினர் ஆண்டுதோறும் நிதித் துறைக்கு அனுப்பப்படுகின்றனர்.



1999 மே 6]

## (இ) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்

தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படையான பணிகளில், அகரமுதலி உருவாக்குதல் தனிச் சிறப்பு வாய்ந்ததொரு பணியாகும். தமிழ் மொழியில் தனித் தன்மை வாய்ந்த பேரகரமுதலியைப் பன்மடலங்களில் வெளியிடும் நோக்கத்தின் விளைவாய் இவ்வியக்கம் 1974 இல் உருவாக்கப்பெற்றது. இரு மொழிப் பேரகராதியான இதில் ஒவ்வொரு சொல்லுக்கும் எடுத்துக் காட்டுகளுடன் உரிய விளக்கமும் செந்தமிழ்ச் சொல்லாட்சியும் வேரும் வரலாறும் அளிக்கப்படுதலால், குறிப்பாகத் தமிழியல் மற்றும் திராவிடவியல் ஆராய்ச்சியாளர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன் அளிப்பதாயிருக்கும். தவிரவும் எல்லார்க்கும் பயன்படும் பொது வகையான சொற்பொருள் அகரமுதலியாகவும் இந்நூல் அமைந்துள்ளது. திரட்டப்பெறும் சொற்களுக்குத் தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல், மற்றும் இலக்கண இலக்கியங்களிலிருந்து விரிவான விளக்கங்களும் சான்றுகளும் மேற்கோள்களும் தரப்படுவதோடு, தேவையான இடங்களில் பட விளக்கங்களும் இடம்பெற்று இப் பேரகரமுதலிக்கு அணி சேர்க்கின்றன.

2. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி வெளியீடுகளாக இதுவரையில் உயிரெழுத்துகள் வரிசையில் 'அ' கரத்தில் தொடங்கும் முதற்பகுதியும், 'ஆ' கரம் முதல 'ஈ' கரம் வரையிலான இரண்டாம் பகுதியும் 'உ' கரம் முதல் 'ஔ' கரம் வரையிலான மூன்றாம் பகுதியும் வெளியிடப்பெற்றுள்ளன. இவையாவும் மொழியியல் வல்லுநர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பாராட்டைப் பெற்றுள்ளன. இவற்றைத் தொடர்ந்து உயிர்மெய் எழுத்துகள் வரிசையில் 'க', 'ச', 'ஞ', 'த', 'ந', 'ப', 'ம', 'ய', 'வ' ஆகிய எழுத்துகளில் தொடங்கும் பகுதிகள் வெளியிடப்பெறும் 'க' கரப் பகுதி அச்சுக்கு அணியமாக்கப்பட்டுவிட்டது. 'கா' முதல் 'கூ' வரை மற்றும் 'கெ' முதல் 'கௌ' வரையிலான இவ்விரு பகுதிகளும் 1999-2000ஆம் நிதியாண்டிற்குள் வெளியிடப்படும் வகையில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் இதர பகுதிகளில் சொல்லடைவு மற்றும் அட்டவணைப்படுத்தும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

3. அகரமுதலியின் எஞ்சிய மடலங்கள் அனைத்தையும் விரைந்து வெளிக் கொணரும் வகையில், கணிப்பொறியமைப்பு, லேசர் அச்சுக் கருவி, ஒளியச்சுக் கருவி முதலியவற்றின் துணைகொண்டு பணியை விரைவுபடுத்தித் திட்டமிட்டவாறு இலக்கினை எய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[1999 மே 6

### (ஈ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உலகளாவிய நிலையில் தமிழியல் தொடர்பான உயர் ஆய்விற்காக 1970 ஆம் ஆண்டில் தமிழக அரசால் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் செயற்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் இலக்கியம் - சுவடிப்புலம், அயல்நாட்டுத் தமிழர் புலம், சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம், தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலம் என்ற நான்கு துறைகள் தற்போது உள்ளன. நிறுவனத்தில் தமிழியல் தொடர்பான திட்டப்பணிகள், நூல் வெளியீடுகள், தமிழ்மொழி, சுவடியியல், மொழி பெயர்ப்பியல் வகுப்புகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடத்துதல், தமிழியல் இதழ் வெளியிடுதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

**திட்டப் பணிகள்**

2. நிறுவனக் கல்விசார் அலுவலர்கள் (14 பேர்) பல திட்டப் பணிகளை உயர் ஆய்வு நிலையில் செய்து வருகின்றனர். இவை இலக்கியம், மொழியியல், மொழி கற்பித்தல், வரலாறு, சமூகவியல், பண்பாடு, நாட்டுப்புறவியல், மொழிபெயர்ப்பு தொடர்பானவை என அமைகின்றன. குறுகிய காலத் திட்டப் பணிகளும், நீண்ட காலத் திட்டப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மேலும் தற்போது நிறுவனத்தில் வருகைதரு பேராசிரியர்களாகப் பணியாற்றும் முனைவர் சோ.ந. கந்தசாமி, முனைவர் கா. சிவத்தம்பி (இலங்கை), முனைவர் ஜோன்னாகுசியோ (போலந்து) ஆகியோரும் தமிழியல் தொடர்பான திட்டப் பணிகளைச் செய்து வருகிறார்கள்.

3. 'தமிழியல் ஆவணம்' என்ற திட்டப் பணி மூலம், தமிழியல் தொடர்பாக இதுவரையிலும் வெளிவந்துள்ள நூல்கள், கட்டுரைகள், ஆய்வுகள் போன்றவை யாவும் சிறு விளக்கக் குறிப்புடன் தொகுக்கப்பட்டுக் கணினியில் பதிவு செய்யப்பட உள்ளன. பின்னர் அவை இணையம் (Internet) வாயிலாக உலகத்தினர் அனைவரும் தமிழியல் செய்திகளைப் பெறும் வகையில் அமைக்கப்படும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒரு தகவல் தொடர்பு மையமாக இயங்கவும் இத்திட்டப் பணி வழி வகுக்கும்.

**பதிப்புகள்**

4. நிறுவனம் இது வரையில் 320 நூல்களை வெளியிட்டுள்ளது. இவை இங்குள்ள கல்விசார் அலுவலர் திட்டப் பணிகள்,



1999 மே 6]

அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சுவடிப் பதிப்புகள், பிற தமிழறிஞர்கள் எழுதியவை ஆகியவற்றைக் கொண்ட வெளியீடுகளாக அமைகின்றன. வட மொழியில் உள்ள பாணினியின் 'அஸ்டாத்தியாயி' என்ற நூலினை முனைவர் க. மீனாட்சி அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்கள். இந்நூலினை வெளியிட மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் நிதி வழங்கியுள்ளது. இந்நூல் மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளது.

**கருத்தரங்குகள்**

5. நிறுவனத்தில் வெள்ளிக்கிழமை கருத்தரங்கம், திங்கள் கருத்தரங்கம், ஆண்டுக் கருத்தரங்கம் என்ற பல கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன. மேலும் துறை சார்ந்த கருத்தரங்குகளும் பயிலரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன. கருத்தரங்குகளில் இங்கு பணி புரியும் கல்விசார் அலுவலர்கள், ஆய்வு மாணவர்கள், பிற தமிழறிஞர்கள். பயிலரங்குகள் போன்றவற்றை நிறுவனம் தனித்தும், பிற நிறுவனங்களுடன் இணைந்தும் நடத்தி வருகின்றது. தென்னகப் பண்பாட்டு மைய நிதியுதவியுடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் புது தில்லியில் உள்ள தேசிய நாடகப் பள்ளியுடன் இணைந்து நாடகப் பயிற்சிப் பட்டறையையும் தென்னகப் பண்பாட்டு மைய நிதியுதவியுடன் 'தமிழ் நாடகம் நேற்றும்-இன்றும்' என்ற தலைப்பில் இரண்டு நாள் கருத்தரங்கையும் நடத்தியது.

6. 'தமிழில் ஆவணம்' என்னும் தேசியக் கருத்தரங்கும் நடைபெற்றது. மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்துடன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இணைந்து 'இலக்கியக் கல்விக்கு மொழியியல் அணுகுமுறை' என்ற தலைப்பில் கருத்தரங்கு மற்றும் பயிலரங்கையும் நடுவண் அரசு மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், பண்பாட்டுத் துறை நிதியுதவியுடன் 'நாடக விழா மற்றும் தமிழ் மேடை நாடக வரலாறு' என்ற கருத்தரங்கையும் பல்கலைக்கழக நல்கைக் குழு நிதியுதவியுடன் 'மொழி பெயர்ப்பு' குறித்து தேசியக் கருத்தரங்கையும் நடத்தியுள்ளது.

**அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்**

7. நிறுவனத்தில் 20 அறக்கட்டளைகள் நிறுவப் பெற்றுள்ளன. இவ்வறக் கட்டளைப் பொறுப்புகள் கல்விசார் அலுவலர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு, அறக்கட்டளைப் பொழிவுகள் நடைபெற்று வருகின்றன.

**நூலகம்**

8. தற்போது நூலகத்தில் 47,083 நூல்கள் உள்ளன. இவற்றைத் தகுந்த முறையில் பேணவும் நூலகத்திற்கு வருகை தரும் தமிழ் ஆர்வலர்கள் நூலகத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் வகையில் நூலகத்தை விரிவாக்கம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. நூல்கள் முழுமையும் கணினி மூலம் அட்டவணையிடும் பணி நடைபெற்று வருகின்றது. டெல்லியில் உள்ள டெல்நெட் (Del Net) நிறுவனம் உலகில் உள்ள கல்வியாளர்களுக்குப் பயன்படும் வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகத்தில் உள்ள நூல்களைக் கணினி வழிப் பதிவு செய்து இணையத்தில் வைப்பதற்கு ஏற்ற திட்டப் பணியைத் தற்போது நிறுவனத்தில் செய்து வருகிறது. சுமார் ரூ.37 இலட்சம் செலவில் இத்திட்டப் பணி அமைந்துள்ளது. இந்தியத் துணைக் கண்டத்தில் தென்னிந்தியாவில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் வட மாநிலத்தில் பாட்டியாலாப் பல்கலைக்கழகமும் இத்திட்டப் பணியைச் செய்யத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**(உ) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

1981 ஆம் ஆண்டில் ஓர் உயராய்வு நிறுவனமாகத் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழகம், தொடக்கத்திலிருந்தே தமிழ்க் கல்வி-தமிழாய்வின் உயர் தனிச் சிறப்புக்காகப் பாடுபட்டு வந்துள்ளது. தமிழ் மொழி, இலக்கியம், இலக்கணம், தத்துவம், பண்பாடு, தமிழ்நிலம், தமிழ்ச் சமுதாயம் ஆகியவை குறித்து உயராய்வு செய்வதே இதன் முதன்மையான நோக்கமாகும். இத்துடன் இப்பல்கலைக்கழகம் தமிழ் மொழியை இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகேற்ற மொழியாக மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனை அடைய ஐந்து புலங்கள், 23 துறைகள் மூலம் பல்வேறு ஆய்வுத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட காலத்தில் தொடங்கப்பட்ட சில திட்டங்கள் இன்னும் தொடர்ந்து வரும் அதே நேரத்தில், தேவை மற்றும் அடிப்படையிலான நோக்கில் புதிய திட்டங்களும் தொடங்கப் பெற்றுள்ளன.

2. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்கலைக்கழக மேம்பாட்டுக்காகக் கருத்துருக்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது. அதன்படி, 1999-2000 ஆம் ஆண்டிற்கான பல்கலைக் கழக செயற்பாடுகள் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் ஒரு பகுதியாகவே அமைந்துள்ளது. தொடக்கத்திலிருந்தே தொடர்ந்து வரும்



திட்டங்களில் பின்வரும் திட்டங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இருபது தொகுதிகள் கொண்ட அறிவியல் களஞ்சியங்களில் 16 தொகுதிகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய நான்கு தொகுதிகள் பதிப்புப் பணியில் உள்ளன. 1998 ஆம் ஆண்டு பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் தமிழில் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அறிவியல் கலைச்சொல் அகராதிகளில் பல தொகுதிகள் முடிக்கபெற்றுள்ளன.

3. தமிழ்ப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்குப் புத்தொளிப் பயிற்சி நடத்தி வந்துள்ளது. இத்திட்டம் ஆசிரியர்களுக்குத் தேவைப்படும் புதிய களங்களாகிய நுண்கலைகள், பண்பாடு முதலியவற்றில் தொடர்ந்து நடத்தப்பெறும். தமிழ்ப் பல்கலைக் கழகம் பிற மாநிலங்களைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி அலுவலர்களுக்கும் பயிற்சிகள் நடத்தி வந்துள்ளது. மொழிப் பயிற்சிக்காக தமிழக அரசு இத்தகைய அலுவலர்களைத் தொடர்ந்து அனுப்பி வருகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகம், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் தேசிய நிறுவனங்களின் உதவியுடன் பன்னாட்டு, தேசிய மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் நடத்தி வந்துள்ளது. இத்தகைய கருத்தரங்குகள் தேசிய அளவிலும், உலக அளவிலும், புகழ்பெற்ற அறிஞர்கள் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள உதவியாக உள்ளன. பிற பல்கலைக் கழகங்களில் ஆய்வு செய்யப்படாத சிறப்பான துறைகளில் முனைவர் பட்ட ஆய்வுக்கும், ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் வாய்ப்பளித்து வந்துள்ளது. ஆண்டுதோறும் ஏறத்தாழ 150 முனைவர் பட்ட ஆய்வியல் நிறைஞர் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். இத்துடன் முதற்கட்டமாக 5 துறைகளில் பட்டய வகுப்புகளும், சான்றிதழ் வகுப்புகளும் தொடங்கப்பட்டு சனவரி 1999 முதல் மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். தமிழக அரசு, மகாகவி பாரதியார், திரு. ஏ.டி. பன்னீர் செல்வம் ஆகியோர் பெயரில் உருவாக்கியுள்ள அறக்கட்டளைகளிலிருந்து வரும் வட்டித் தொகையிலிருந்து உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

4. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொடக்க ஆண்டுகளில் காஞ்சிபுரம், மண்டபம், சென்னை, உதகமண்டலம் ஆகிய இடங்களில் விரிவாக்க மையங்கள் செயற்பட்டு வந்தன. நிருவாகச் சிக்கல்களின் காரணமாகவும் கூர்ந்த மேற்பார்வைக்காகவும் அவை தஞ்சைக்கு மாற்றம் செய்யப்பட்டன. எனினும், அவை முதன் முதலில் தொடங்கப்பட்ட இடங்களில் இருந்தால்தான் அவை உரிய முறையில் வளரமுடியும் என்று இப்போது

கருதப்படுகிறது. முதற்படியாக, தத்துவ மையத்தை சமயம், பண்பாடு ஆகிய செயற்பாடுகளின் களமாகிய காஞ்சிபுரத்துக்கு மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோன்று நீரகழாய்வு மையத்தை, பல்கலைக் கழகத்தின் சொந்த நிலமும் கட்டடங்களும் உள்ள மண்டபத்திற்கு மாற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய விரிவாக்கத் திட்டங்கள், இம்மையங்கள் உயர்தனிச் சிறப்புடைய மையங்களாக எதிர்காலத்தில் வளர்வதற்கு உதவியாய் அமையும்.

5. சமுதாயத்தின் மொழிப் பயன்பாட்டிற்கும், நாட்டின் மொழிக் கொள்கை உருவாக்கத்திற்கும் துணை செய்வதற்கு ஏதுவாக 'மொழித் திட்டமிடுதல் மையம்' ஒன்றினை நிறுவ, பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது. இம்மையம் அகராதி ஆய்வு, மொழிபெயர்ப்பு ஆய்வு, களஞ்சிய ஆய்வு ஆகியவற்றிலும், கலைச் சொல்லகராதிகள் உருவாக்கம், பாடநூல் வெளியீடு ஆகிய பல்வேறு பணிகளிலும் ஈடுபடும்.

6. ஒரு மொழியின் மேம்பாட்டிற்கு மொழிபெயர்ப்பு ஒரு முதன்மையான களமாகும். தமிழ்ப் பல்கலைக்கழகம் மொழி பெயர்ப்பின் தேவையை உணர்ந்து தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகளின் இலக்கியங்களில் இலக்கணங்களில் பல்வேறு வெளியீடுகளைக் கடந்த காலத்தில் கொண்டு வந்துள்ளது. மொழிபெயர்ப்பில் செயலரங்குகள் நடத்தப்பட்டு அவற்றில் பல்வேறு அறிஞர்கள் பங்கு பெற்றுள்ளனர். தமிழிலுள்ள பல்வேறு அறநூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியைப் பல்கலைக் கழகம் திட்டமிட்டு நடத்தி வருகிறது. இம்மொழிபெயர்ப்புகள் 1999-2000 ஆம் ஆண்டில் வெளியிடப்பெறும்.

7. தென்னிந்தியாவில் உள்ள மொழிப் பல்கலைக்கழகங்களில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொன்மையானது. மொழிவளர்ச்சிக்கு ஒரு பொதுவான அணுகுமுறை தேவை என்று கருதப்படுகிறது. எனவே தென்னிந்திய மொழிப் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகங்களிடையே அறிஞர்களின் பரிமாற்றம், இலக்கிய ஆய்வுப் பரிமாற்றம் ஆகியவற்றிற்கு இவ்வமைப்பு துணைபுரியும். மொழி ஆராய்ச்சி, மேம்பாடு ஆகியவற்றில் அதிகமான இணை பல்கலைக்கழகத் திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.



**ஆய்வு மையங்கள்**

8. தொல்காப்பியப் பாவியல் ஆய்வு, தமிழகச் சமுதாய மொழியியல் வருணனை, தமிழில் நோக்கீட்டு இலக்கணம், தமிழகக் கடற்கரைத் தாதுப் பொருளாய்வு முதலியவை நடைபெற்று வருகின்றன. இந்திய அரசின் மாக்கடல் மேம்பாட்டுத் துறை இப்பல்கலைக்கழகத்தின் நில அறிவியல் துறையை ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கடற்கரைத் தாதுப் பொருளாய்வுக்கு ஓர் மையமாகத் தேர்வு செய்துள்ளது.

9. தமிழ்ப் பல்கலைக்கழகம் இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தையும் அதற்குத் தேவையான தொழில் நுட்ப வளர்ச்சித் தேவையையும் கருத்தில் கொண்டுள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் கணிப்பொறித் தகவல் சேவையும், நூலக இணையச் சேவையும் (இன்பிலிக் நெட்) முன்பே உள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் உலகப் பல்கலைக்கழகங்களின் தகவல் தொடர்புக்கேதுவாக 'இன்டர்நெட்' என்னும் 'இணையத்' தொடர்பு திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோன்று துறைகளிலும் கணிப்பொறியின் உதவியுடன் ஆய்வுகளை நவீனப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10. மொழித் திட்டமிடல் மையம் (Centre for Language Planning), நிகழ்கலைகள் மையம் (Centre for Performing Arts), வரலாற்று ஆய்வு மையம் (Centre for Historical Studies) ஆகிய 3 மையங்கள் தொடங்குவதற்கும் ஒவ்வொரு மையத்திற்கும் 2 விரிவுரையாளர்கள் வீதம் 6 விரிவுரையாளர்கள் பணியிடங்களை ஏற்படுத்தவும் ரூ.150 இலட்சம் பல்கலைக்கழக மானியக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பழங்குடியினர்/தாழ்த்தப்பட்டோருக்கான தனிப்பிரிவு ஏற்படுத்துவதற்குப் பல்கலைக்கழக மானியக் குழுவிற்குக் கருத்துரு அனுப்பப்படவுள்ளது.

11. பல்கலைக்கழக நிதி ஆதாரத்தைப் பெருக்கவும், தஞ்சை, திருச்சி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு இந்திய ஆட்சிப்பணி, இந்தியக் காவல் பணி இந்திய வனப் பணிகளுக்கு நுழைவுத் தேர்வு எழுதி வெற்றிபெற, தமிழில் பயிற்சி வகுப்புகள் 1999 முதல் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(ஊ) தொல் பொருள் ஆய்வு இயக்ககம்**

தொல்பொருளாய்வு இயக்ககம் 1961 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்தல் மற்றும் அக்

கல்வெட்டுகளை நூல்வடிவில் கொண்டு வருதல், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொள்ளுதல், அகழாய்வு நடைபெறும் இடங்களில் அகழ்வைப்பகங்கள் ஏற்படுத்துதல், நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொல்பொருட்களையும், பழங்கலைப் பொருட்களையும் பதிவு செய்தல், பழமையான மரபுச் சின்னங்களையும், தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பாதுகாத்தல், ஓலைச் சுவடிகளைச் சேகரித்தல், பாதுகாத்தல், அவற்றை நூல் வடிவில் கீழ்த் திசை ஓலைச்சுவடி, நூலகத்தின் வாயிலாக வெளியிடுதல் ஆகிய நோக்கங்களுடன் இயங்கி வருகிறது.

**மரபுச் சின்னங்களைப் பாதுகாத்தல்:**

2. இதுவரை தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் 82 மரபுச் சின்னங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்துறையால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் கீழ்க்காணும் சின்னங்கள் மதச் சார்பற்ற மரபுச் சின்னங்களாகும்:—

1. திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை,
2. அரண்மனைக் கட்டடப் பகுதிகள், தஞ்சாவூர்,
3. உப்பரிகை, சரபேந்திரராஜப்பட்டினம்,
4. இராமலிங்க விலாசம், இராமநாதபுரம்,
5. டேனிசுகோட்டை, தரங்கம்பாடி.

3. திருமலை நாயக்கர் அரண்மனையின் பழமையைப் பேணிகாக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இவ்வரண்மனையில் எந்தப் பகுதியில் உடனடியாகப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அப்பகுதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.76.30 இலட்சத்தில் ரூ.52 இலட்சத்திற்குப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரத்திலுள்ள இராமலிங்க விலாசத்தின் பழமையைப் பேணிக்காக்கும் பணிக்கர்கவும் அங்குள்ள ஓவியத்தைப் பேணிப் பாதுகாக்கவும் ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இராமலிங்க விலாசத்திலுள்ள சுவரோவியங்களைப் பேணிக்காக்கும் பணி, கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கல்வெட்டாய்வு:**

4. 1998 ஆம் ஆண்டில் 85 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. நான்கு ஊர்களில் கல்வெட்டாய்வு நடத்தப்பட்டது. ஆண்டுதோறும்



முதுகலைப் பட்டயப் பயிற்சி வகுப்பும், கோடைக்காலக் கல்வெட்டுப் பயிற்சியும் நடத்தப்படுகின்றது. இந்தியாவிலுள்ள மொத்தக் கல்வெட்டுகளில் பாதிக்கு மேலுள்ள கல்வெட்டுகளைக் கொண்டு திகழும் ஒரே மாநிலம் தமிழ்நாடாகும். தமிழ் நாட்டில் ஏறக்குறைய எழுபதாயிரம் கல்வெட்டுக்கள் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அதில் சுமார் ஐம்பதாயிரம் கல்வெட்டுகள் மத்திய அரசுத் துறைகளால் இதுவரை படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சுமார் இருபதாயிரம் கல்வெட்டுக்கள் அச்சாக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கல்வெட்டுக்களைச் சீரிய முறையில் கள ஆய்வு செய்து விரைவாகப் படியெடுக்க முதற்கட்டமாக ரூ.1 இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தொல்பொருள் ஆய்வுத் தொடர்பான கருத்தரங்குகள் நடத்த 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கல்வெட்டுச் சொல்லகராதி தயாரித்தல்:**

5. கல்வெட்டுகளில் காணப் பெறும் கலைச் சொற்கள் சேகரிக்கப்பட்டு அகராதி வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது. கல்வெட்டுகளில் காணப்பெறும் உயிரெழுத்துக்களில் தொடங்கும் சொற்களைத் தொகுத்து ஆங்கிலத்தில் பெயர்த்தெழுதி அவற்றுக்குரிய பொருள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளன. இப்பணிக்கு ஓர் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**நில அகழாய்வு:**

6. ஒவ்வோர் ஆண்டும் இத்துறை நில அகழாய்வு மேற்கொண்டு வருகிறது. இதுவரை 22 வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு நடத்தியுள்ளது. இவ்வகழாய்வுகளில் விலைமதிப்பற்ற அரிய தொல்பொருட்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம், தேரிருவேலி, கடலூர் மாவட்டம், மாளிகைமேடு ஆகிய இடங்களில் அகழாய்வு மேற்கொள்ள இத்துறை கருதியுள்ளது

**ஆழ்கடல் அகழாய்வு:**

7. பூம்புகாரில் இத்துறையும், கோவாவில் உள்ள தேசிய ஆழ்கடல் நிறுவனமும் இணைந்து இதுவரை நான்கு கட்டங்களில் அகழாய்வினை மேற்கொண்டன. இப்பணிக்காக அரசால் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.22 கோடியில் இதுவரை ரூ.56.74 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இவ்வாய்வில் கி.மு. 6-5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஐந்து கட்டடப்

பகுதிகளும் கி.பி. 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கடலில் மூழ்கிய கப்பல் ஒன்றும் கண்டறியப்பட்டுள்ளன.

**ஓலைச்சுவடிகள் மற்றும் தொல்பொருட்கள் சேகரித்தல்:**

8. மாவட்டந்தோறும் உள்ள தொல்லியல் அலுவலர்கள் அரிய ஓலைச் சுவடிகளையும், காசுகளையும், தொல்பொருட்களையும் சேகரித்துள்ளனர். இவை வேதியல் முறையில் சுத்தம் செய்யப்பட்டு இத்துறையின் அகழ்வைப்பகங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**அகழ்வைப்பகங்கள்:**

9. அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களையும் அவ்விடங்களுக்கு அருகிலுள்ள பகுதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தொல்பொருட்களையும் கொண்டு பொதுமக்கள் எளிதில் சென்று பார்த்துப் பயன்பெறும் வகையில், அகழாய்வு நடை பெற்ற இடங்களுக்கு அருகிலேயே அகழ்வைப்பகங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இவ்வகழ் வைப்பகங்களில் திங்கள்தோறும் தமிழ், தொல்லியல், பண்டைய வரலாறு ஆகியவற்றில் சிறந்து விளங்கும் வல்லுநர்களை அழைத்துத் திங்கள் பொழிவும், சிறப்புக் காட்சிகளும் நடத்தப்படுகின்றன. தஞ்சாவூரில் தமிழரின் பாரம்பரிய பண்பாட்டுக் காட்சியகம் அமைக்கப்படவுள்ளது. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அகழ்வைப்பக மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இரண்டு அகழ்வைப்பகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**பண்டையக் கலைப் பொருட்கள் பதிவு:**

10. 1998 ஆம் ஆண்டில் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பண்டைய கலைப் பொருட்களைப் பதிவு செய்வதற்காக 1,078 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. அவற்றில் 436 விண்ணப்பங்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதுவரை பழமையான பழம் பொருட்களைப் பதிவு செய்வதற்கு மொத்தமாக 47,266 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 34,239 விண்ணப்பங்களுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன. மேலும் சிலைத் திருட்டுத் தொடர்பான சான்றாதாரங்களை இத்துறையின் பதிவு அலுவலர்கள் வழக்குமன்றங்களுக்கு அளித்து வருகின்றனர். மேலும் பதிவு செய்யப்பட்ட சிலைகளைக் கண்காணிக்கும்பொருட்டு அவ்வப்போது உரிய கோயில்களுக்குச் சென்று அங்குள்ள பதிவேடுகளோடு ஒப்பிட்டு ஆய்வு செய்கின்றனர்.



**(எ) அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம்:**

இத்துறையின்கீழ் அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் சென்னைப் பல்கலைக்கழகம் வளாகத்தில் இயங்கி வருகிறது. இந்நூலகத்தில் 70,000-க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள் பல்வேறு தலைப்புகளில் தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளில் உள்ளன. இங்குள்ள ஓலைச்சுவடிகளைப் பேணிக்காப்பதற்காக ரூ.13.32 இலட்சத்தில் குளிர்சாதன வசதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 119 ஓலைச்சுவடிகள் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் 6 சுவடிகள் நூல் வடிவில் வெளியிட ரூ.4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நூலகத்திலுள்ள சுவடிகள் அனைத்தையும் நகல் எடுத்துப் பாதுகாக்க நுண்ஒளிப்படக் கருவி வாங்கப்படவுள்ளது.

**(ஏ) அரசு அருங்காட்சியகங்கள்:**

இந்தியப் பெருநாட்டை அணி செய்யும் அருங்காட்சியகங்களுள் பழமையும் பெருமையும் கொண்டது சென்னை அருங்காட்சியகமாகும். இவ்வருங்காட்சியகம் உயர்ந்த மற்றும் உயரிய கலைப் பொருட்கள் சேகரிப்பிற்கு பிரசித்து பெற்றது. தொல்பொருளியல், மானிடவியல், விலங்கியல், தாவரவியல், புவியியல், வளர்கலை, சிறுவர் அருங்காட்சியகம் முதலிய காட்சிக்கூடங்களை நிர்வகித்து வருவதுடன் பழங்காலப் பொருட்களைத் திரட்டுவதிலும், இவ்வருங்காட்சியகம் பெரிதும் ஈடுபட்டு வருகிறது. தேசிய மரபுச் செல்வங்களைப் பேணிக் காக்கும் காப்பகங்களாக இவ்வருங்காட்சியகம் செயற்படுகிறது. பல்வேறு மாநில மக்களும் வெளிநாட்டவரும் ஆர்வத்தோடு திரண்டு வந்து காணும் இந்தியக் காட்சியகங்களுள் ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக அதிக எண்ணிக்கையில் தொடர்ந்து பார்வையாளர்களை ஈர்த்து வரும் பெருமை இந்த அருங்காட்சியகத்திற்குரியது.

2. அரசு அருங்காட்சியகத் துறையின்கீழ் தற்பொழுது கீழ்க்காணும் 17 மாவட்டங்களில் மாவட்ட அருங்காட்சியகங்கள் இயங்கி வருகின்றன. 1. புதுக்கோட்டை, 2. சேலம், 3. மதுரை, 4. திருச்சி, 5. ஈரோடு, 6. வேலூர், 7. கோயம்புத்தூர், 8. கிருட்டிணகிரி (தர்மபுரி மாவட்டம்), 9. கடலூர், 10. உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்), 11. திருநெல்வேலி, 12. கன்னியாகுமரி, 13. பழனி (திண்டுக்கல் மாவட்டம்), 14. சிவகங்கை, 15. திருவாரூர், 16. நாகப்பட்டினம், 17. காஞ்சிபுரம்.

3. சென்னை அரசு அருங்காட்சியகம் கற்சிற்பங்கள் சேகரிப்பதற்கு மிகவும் பெயர் பெற்ற ஓர் அருங்காட்சியகமாகும். ஏறத்தாழ 450

கற்சிற்பங்கள் கூடங்களில் காட்சிக்கு அமைக்கப்பட்டுள்ளன தற்சமயம் மிகுதியாக சிற்பங்கள் (சேகரிக்கப்பட்டு வைப்பறையில் தரையில்) வைக்கப்பட்டுள்ளன. மேற்படி அறையில் தரை மற்றும் சுவர்கள் பழுதடைந்துள்ளபடியால் தரையைச் சீரமைக்கும் பணிக்கென ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள பல்வேறு பிரிவுகளுக்குப் புதிதாகப் புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ.1.50 இலட்சமும் இருப்பில் இல்லாத புத்தகங்களை மறு பதிப்பீடு செய்தல் மற்றும் புதிய நூல்கள் அச்சிடுதல் ஆகிய பணிகளுக்கென ரூ.5 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

4. சென்னை அரசு அருங்காட்சியகம் தன்னிடம் உள்ள அரும்பொருட்களின் தன்மைகளால் பல வகைகளாலும் உலக நிறுவனமாகி வருகிறது. இந்நிலையில் உடனடியாகத் தகவல்களை உலக அளவில் பிற நிறுவனங்களிலிருந்து பெற வழி செய்யும் வகையில் நிகரி, மின்னஞ்சல், இணையம் ஆகியவை ரூ.2.50 இலட்சத்தில் அமைக்கப்பட உள்ளது.

5. சென்னை அருங்காட்சியகக் கலையரங்கம் ஆசியாவிலேயே மிகச் சிறந்த, குளிர்சாதன வசதியுள்ள கலையரங்கமாக, அனைத்து ஒலி சம்பந்தப்பட்ட கூறுகளுடன் சிறந்து விளங்குகிறது. இக்கலையரங்கின் சீரமைப்புப் பணிக்கு ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஐ) கலை-பண்பாட்டு இயக்ககம்**

தமிழ், தொன்மை இலக்கியச் சிறப்பால் மட்டுமின்றி கலைச்சிறப்பாலும் பண்பாட்டுச் சிறப்பாலும் உலக முதன்மையும் உயர் தனிப் புகழும் உடையது. இத்தகைய கலை வடிவங்களையும் பண்பாட்டுச் சிறப்புகளையும் வளர்ப்பதற்கும் பரப்புவதற்கும் பேணுவதற்கும் வெவ்வேறு துறையின் கட்டுப்பாட்டிலிருந்த கலைத் தொடர்பான நிறுவனங்களும் அமைப்புகளும் 1991-இல் கலை-பண்பாட்டு இயக்ககத்தின் தனிக் கட்டுப்பாட்டிற்குக் கொணரப்பட்டுள்ளன. இவ்வியக்ககத்தின் கட்டுப்பாட்டில் 6 மண்டலப் பண்பாட்டு மையங்களும், 4 இசைக் கல்லூரிகளும், பத்து இசைப் பள்ளிகளும், 2 கலை-கைத்திறன் கல்லூரிகளும், ஒரு சிற்பக் கல்லூரியும் சென்னை மற்றும் 17 மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்களும், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமும் உள்ளன. இச்சார்நிலை கட்டமைப்புகளைத் தூண்களாகக் கொண்டு கலை-பண்பாட்டுத் துறை என்னும் கோபுரம் மேலோங்கி நிற்கிறது.





**மண்டலப் பண்பாட்டு மையங்கள்**

2. 1997-98 ஆம் ஆண்டில் துறையின் நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்காக 4 மண்டலப் பண்பாட்டு மையங்களும் 1998-99 ஆம் ஆண்டில் 2 மண்டலப் பண்பாட்டு மையங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இம்மையங்கள் கலை பண்பாட்டுத் துறையின் சார்பு அலுவலகங்களாக மட்டுமல்லாமல், தமிழ்நாடு சிறுவர் மன்றம், ஓவிய நுண்கலைக்குழு, இயல் இசை நாடக மன்றம் முதலியவற்றிற்கு மண்டலங்களில் உள்ள இணைப்பு அமைப்பாகவும் செயற்பட்டு வருகின்றன. கலைப்பயிற்சி முகாம்கள், விடுதலைப் பொன்விழா நிகழ்ச்சிகள், பொற்சுடர் ஓட்டம், இசை விழாக்கள், கலை விழாக்கள் கண்காட்சிகள் முதலியவை இம்மையங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டில் குறிஞ்சிக் கலைவிழா, முல்லைக் கலை விழா, நெய்தல் கலைவிழா, மருதம் கலைவிழா, ஐந்திணைக் கலைவிழா, நல்லிணக்கக் கலைவிழா, இசை விழா, நாட்டுப்புறக் கலைவிழா, செவியியல் கலைவிழா, சீர்காழி மூவர் இசைவிழா, மயிலாடுதுறை இசை விழா, மனிதநேயக் கலைவிழா, பண்பாட்டுப் பலகணி, முத்தமிழ் கலைவிழா எனப் பல்வேறு துறைகளில் மாவட்டச் சூழ்நிலைக்கேற்ப விழாவினை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 1998-99ஆம் ஆண்டில் இம்மையங்களின் சார்பாக மைசூரில் நடைபெற்ற அனைத்திந்திய நாட்டுப்புறக்கலை விழாக்களுக்கு குழுக்கள் அனுப்பப்பெற்றன. இந்நிதியாண்டில் தமிழ்நாட்டில் பல இடங்களிலும் தமிழ்நாட்டிற்கு அப்பாலும் மண்டலக் கலை விழாக்களும் கலை முகாம்களும் பயிலரங்குகளும் ரூ.16 இலட்சம் செலவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**இசைக் கல்லூரிகளும், இசைப் பள்ளிகளும்**

3. அரசு இசைக் கல்லூரிகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவையாறு ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. குரலிசை, வீணை, வயலின், குழலிசை, பரதம், நாட்டுப்புறக் கலை, நாகசுரம், முதலிய பல்வேறு கலைத் துறைகளில் இங்கு தவில் பயிற்சியளிக்கப்படுகிறது. 1949ஆம் ஆண்டு மைய கர்நாடக இசைக் கல்லூரி என்னும் பெயருடன் தொடங்கப்பட்டு, பின்னர் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி என்னும் பெயர் பெற்ற இதன் பொன்விழா நிகழ்ச்சிகள் இவ்வாண்டில் நடைபெற்று வருகின்றன. 1999ஆம் ஆண்டு முழுமையும் பொன்விழா நிகழ்வுகள் நடைபெறும் வகையில் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழிசைக் களஞ்சியத்திற்கென ஒதுக்கப்பட்ட ரூபாய் 2.42 இலட்சத்தில் இந்நூல் வெளியிடும் பணி செயற்பாட்டில் உள்ளது.

[1999 மே 6

4. தற்போது ஒரு சில இடங்களில் மட்டும் உள்ள இசை பயிலும் வாய்ப்பு மாற்றப்பட்டு பரவலாக்கப்பட்டுள்ளது. மாவட்டந்தோறும் இசைப் பள்ளிகள் உருவாக்கும் திட்டத்தின்கீழ் கடந்த ஈராண்டுகளில் பத்து மாவட்ட இசைப் பள்ளிகள் திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, கடலூர், கரூர், பெரம்பலூர், தூத்துக்குடி, விழுப்புரம் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகளில் குரலிசை, தேவாரம், பரதம், பெருவங்கியம் (நாகசுரம்), தவில் ஆகியவை பயிற்றுவிக்கப்படுகின்றன. இந்நிதியாண்டில் மேலும் ஐந்து மாவட்டங்களில் இசைப் பள்ளிகள் தோற்றுவிக்கப்படவுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் கல்லூரிகள் மற்றும் மாவட்ட இசைப்பள்ளி ஆசிரியர்களுக்கென நினைவுகூர் பயிற்சியும், தலைமையாசிரியர்களுக்காக அலுவலக நடைமுறை பயிர்ச்சியும் நடத்தப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டில் மயிலாடுதுறையில் மேதை வேதநாயகம் (பிள்ளை), கோபாலகிருட்டிண பாரதியார், பெரும்புலவர் மீனாட்சி சுந்தரம் (பிள்ளை) ஆகியோரின் இசைப் பணிகளை நினைவுகூறும் வகையில் தமிழிசை மூவர் விழா நடத்தப்பட்டது. சீர்காழியில் திரு. முத்துத்தாண்டவர், திரு. மாரிமுத்தாப்பிள்ளை, திரு. அருணாசலக் கவிராயர் ஆகியோரின் தமிழிசைத் தொண்டைப் போற்றும் வகையிலும், இசைப் பாக்களை பரப்பும் வகையிலும் தமிழிசை மூவர் விழா இவ்வாண்டு பிப்ரவரித் திங்களில் நடத்தப்பட்டது.

**அரசு கலை மற்றும் கைத்திறன் கல்லூரிகள்**

5. வண்ணக்கலை, காட்சித் தொடர்பு வடிவமைப்பு, சிற்பக்கலை, துகிலியல் வடிவமைப்பு, சுடுமண் வடிவமைப்பு, பதிப்போவியக் கலை முதலிய துறைகளில் பயிற்சி அளித்துவரும் இக்கல்வி நிறுவனங்கள் 150 ஆண்டு பழமை மிக்கதாகச் சென்னையிலும், 100 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமைமிக்கதாகக் கும்பகோணத்திலும் இயங்கி வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் சென்னையில் காட்சித் தொடர்பு வடிவமைப்பில முதுகலைப் பட்டப்படிப்பும், கும்பகோணத்தில் சிற்பக் கலையின முதுகலைப பட்டப்படிப்பும் தொடங்கப்பட்டுள்ளன. சென்னை, கலை மற்றும் கைத்திறன் கல்லூரிக்கு ரூ.3 இலட்சம் செலவில் கணினிக்கான பாகங்கள் வாங்கப்படவுள்ளது.



1999 மே 6]

**அரசு கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம்**

6. தனது சிற்பங்களால் நீண்ட நெடுங்காலமாகப் புகழ்மிக்கதாக விளங்கும் மாமல்லபுரத்தில் இக்கல்லூரி அமைந்துள்ளது. கோவில் கட்டடக் கலையும் கட்டடம் சார்ந்த சிற்பக் கலையும் தென்னிந்தியாவிலே இங்கு மட்டுமே பயிற்றுவிக்கப்படுகின்றன. கல்லூரிச் சுற்றுவளாகத்தில் தோட்டக்கலைப் பணியும் அமைக்கப்பட்டு வருகிறது. மாணாக்கர்களுக்கும் கலையார்வத்தினருக்கும் பயனளிக்கும் வகையில் "சிற்பச் செந்நூல்" இரண்டாம் பதிப்பிற்காக அச்சில் உள்ளது. இக்கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் படிப்புதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்**

7. 1978 இல் சென்னையில் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் முறையை (80) புதுக்கோட்டை (86) மதுரை (88) ஊரக மையம், பொன் புதுப்பட்டி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுத் தற்பொழுது 20 இடங்களில் இயங்கி வருகிறது. இந்நிதியாண்டில் அனைத்து சிறுவர் மன்றங்களிலும் திங்கள்தோறும் வினாடி வினா நிகழ்ச்சி, நகைச்சுவை அரங்கு, பட்டிமன்றம் போன்ற பல்வகைச் சிறப்புத் திட்டங்களைச் செயற்படுத்தத் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. மேலும், விடுமுறைக் காலங்களில் படைப்புத்திறன் கலைப் பட்டறைகளும், கலைப்பயிற்சி முகாம்களும் நடத்தவும் சிறுவர் அரங்கேற்றம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட சிறுவர் மன்றங்களுக்கு நூலக நல்கையும் அளிக்கப்படவுள்ளது. கல்விக் கூடங்களுக்கு அப்பாலும் கலை பயிலவும், மேடை ஏறவும் பிற மாநிலங்களிலும் பிற மாவட்டங்களிலும் நடைபெறும் விழாக்களிலும், முகாம்களிலும் பங்குகொள்ளவும் மாவட்ட/மாநில/தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றிவாய்ப்பைப் பெறவும் உலகளாவிய போட்டிகளில் பங்கேற்கவும் இச்சிறுவர் மன்றம் பெரிதும் துணை நிற்கிறது. 1998 நவம்பரில் புதுதில்லியில் இச்சிறுவர் மன்றத்தின் சார்பாக முதன்முறையாகத் தில்லி தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து விசையிசை (கீ போர்டு) தமிழ்ப் பாடல்களில் சுரக் குறிப்புரை அடிப்படையில் கற்பிக்கவும் அகவினைப் பயிற்சிகள் கற்பிக்கவும் பயிலரங்கம் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கவொன்றாகும். இவ்வாறு தமிழ்நாட்டிற்கு அப்பாலும் சிறுவர் மன்றத்தின் சார்பாகக் கலைப் பயிற்சிகள அளிக்கத் திட்டமிட்டு வருவதுடன், தேசிய அளவிலான பயிலரங்கம், கலைவிழா நடத்தவும் (செப்டம்பர் 1999) இரு மாநிலங்களுடன் இணைந்து கலைப் பரிமாற்ற நிகழ்ச்சிகள் நடத்தவும் திட்டமிடப்பட்டு வருகின்றன.

[1999 மே 6

### தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு

8. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு கவின்கலைகளை வளர்க்கவும், பரப்பவும் 1975 இல் தொடங்கப்பட்டாலும்கூட, இவ்வரசு அமைந்தபின்புதான் கூடுதலாகத் திட்டப் பணிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 1998-99ஆம் ஆண்டில் சிறபக் கல்லூரிகளிலும் கலை மற்றும் கைத்திறன் கல்லூரிகளில் பயிலும் தகுதிவாய்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கப்பட்டது. கண்காட்சி, கூட்டுக் கண்காட்சி, நடத்த நிதியுதவிகள் வழங்கப்பட்டன. புதுப்பாணிக் கலைக்காட்சி நடத்தி விருதுகள் வழங்கப்பட்டன. "கலைச்செம்மல் விருதுகள்" ஓவிய, சிற்பக் கலைக் கலைஞர் இருவருக்கு வழங்கப்பட்டன. 'நுண்கலை' இதழ் வெளியிடப்பட்டு வருகிறது. சேலம், காஞ்சிபுரம், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய இடங்களில் கலைக்காட்சி, கருத்தரங்கம், கலைப்பட்டறை, விருது வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இப்பணிகள் தொடர்ந்து சிறப்பாக நடைபெறத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டு ஓவிய சிற்பக் கலைஞர்கள் பற்றிய தொகுப்பேடு தமிழில் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 35 ஓவிய நுண்கலைக் கலைஞர்களின் விவரங்கள் கொண்ட முதல் பாகம் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பதிப்புப் பணி தொடர்கிறது. 1998 நவம்பரில் புதுதில்லியிலும், 1999 சனவரியில் கல்கத்தாவிலும் தமிழ்நாட்டு ஓவிய சிற்பக் கலைப் படைப்புக் காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

9. கலை-பண்பாட்டு இயக்ககத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மற்றுமொரு கலை தொடர்பான நிறுவனம் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றமாகும். நலிந்த கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல், மறைந்த கலைஞர்கள் குடும்பங்களுக்குப் பேணுகை நிதி வழங்குதல், புத்திளங் கலைஞர்களை ஊக்குவித்தல், நாட்டிய நாடக, தொழில் துறைக் குழுக்களுக்கு நல்கை வழங்குதல், மறைந்த கலை மேதைகளின் புகழ் [illegible] கலை நூல்களை வெளியிட நல்கை வழங்குதல், ஏழ்மை நிலையிலுள்ள கலை மாணாக்கர்களுக்குப் படிப்புதவி வழங்குதல், கலை வடிவங்களை ஆவணமாக்குதல், நாட்டுப்புறக் கலைஞர்கள்/ கலைக் குழுக்களுக்கு ஆடை அணிகலன்கள் கலைப் பொருட்கள் வாங்க நல்கையளித்தல், தன்னார்வக் கலைக் குழுக்களுக்கு நல்கை தருதல், பொம்மலாட்டக் கலைகளை ஊக்கப்படுத்தல், கலை பயிலும் சிறுவர் - சிறுமியர்களுக்கு உதவித் தொகை வழங்குதல், தமிழிசைக் கலைஞர்களுக்கு ஆராய்ச்சி உதவி தருதல், மாநிலங்களுக்கிடையே



1999 மே 6]

கலைப் பரிமாற்றம் நிகழ்ச்சி நடத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. மேலும், மன்ற வளாகத்தில் கலைக்கூடம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு நடந்தேறி வருகிறது. புகழ்மிகு திரைப்பட உரையாசிரியர் மறைந்த திரு. எம்.கே. தணிகாசலம் என்ற திரு. இளங்கோவன் குடும்பத்தினருக்கு ரூ.2.25 இலட்சம் நிதயுதவி வழங்கப்பட்டது. 1998 நவம்பரில் புதுதில்லியிலும், 1999 சனவரியில் கல்கத்தாவிலும் அங்குள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நாட்டுப்புறக் கலைக்குழு பற்றிய நூலினை பாளையங்கோட்டை தூய சவேரியர் கல்லூரியில் நாட்டுப்புற ஆய்வு மையத்துடன் இணைந்து வெளியிடும் பணி நடைபெற்று வருகிறது. அரிய தெருக்கூத்துக் கலையை ஆவணமாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காலாண்டு செய்தி மடல் வெளியிடப்பட உள்ளது. வரும் ஆண்டில் அனைத்திந்திய நாட்டுப்புறக் கலைவிழா ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

10. கலைமாமணி விருது, பொற்கிழி வழங்குதல், இந்திரவிழா நடத்துதல் ஆகிய திட்டங்களை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் நடத்தப்படுகின்றன. நலிந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்க்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்தின்கீழ், பயனாளிகளின் எண்ணிக்கையினை 300 லிருந்து 500 ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டு 500 பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டன. உதவித் தொகையும் ரூ.500/- என்ற அளவில் மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

221810

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.